# பெரியார் பல்கலைக்கழகம்

NAAC 'A++' Grade with CGPA 3.61 (Cycle - 3)

State University - NIRF Rank 56 - State Public University Rank 25

Salem-636011, Tamilnadu, India

## தொலைநிலை மற்றும் இணையவழி கல்வி மையம்

## இளங்கலைத் தமிழ்

முதலாமாண்டு இரண்டாம் பருவம்

## முதன்மைத்தாள் - 4

# தமிழ் இலக்கிய வரலாறு 24DUTA07

**2024 – ஆம் கல்வியாண்டு முதல் பயிலும்**

**மாணவர்களுக்குரிய பாடநூல்**

**Prepared By:**

**Centre for Distance and Online Education (CDOE)**
**Periyar University, Salem – 11.**

# தமிழ் இலக்கிய வரலாறு

## பாடத்திட்டம்

| அலகு | பாடத்திட்ட விளக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1 | செவ்வியல் இலக்கியங்கள் - சங்ககாலம் - சங்கம் மருவிய கால இலக்கியம் - சிலப்பதிகாரம் - மணிமேகலை | 4 – 65 |
| 2 | பக்தி இலக்கியம் - சைவம், வைணவம், பௌத்தம் - சமணம் - காப்பியங்கள் - கம்பராமாயணம் - மகாபாரதம் - பெரியபுராணம் | 66 – 97 |
| 3 | சிற்றிலக்கியங்கள் - சைவ தத்துவநூல்கள் - உரையாசிரியர்கள் - வைணவ உரைகள | 98 - 120 |
| 4 | பிற்கால அருள் நூல்கள் - தாயுமானவர் - அருணகிரிநாதர் - வள்ளலார் - உரைநடை இலக்கியங்கள் - இஸ்லாம் - கிறித்துவ இலக்கியங்கள | 121 - 148 |
| 5 | சிறுகதை - புதினம் - கட்டுரை - வாழ்க்கை வரலாறு - தன்வரலாறு - நாடகம் (கவிதை, உரைநடை) - மரபுக்கவிதை புதுக்கவிதை - சென்ரியூ - ஹைக்கூ - இலக்கிய ஆய்வுமுறைகள் - நாட்டுப்புறவியல் - மக்கள் தொடர்பியல் - தொடர்புடைய பிற துறைகள் | 149 - 184 |

## பொருளடக்கம்


| | |
|---|---|
| 1 | செவ்வியல் இலக்கியங்கள் - சங்ககாலம் - சங்கம் மருவிய கால இலக்கியம் - சிலப்பதிகாரம் - மணிமேகலை - |
| 2 | பக்தி இலக்கியம் - சைவம், வைணவம், பௌத்தம் - சமணம் - காப்பியங்கள் - கம்பராமாயணம் - மகாபாரதம் - பெரியபுராணம் |
| 3 | சிற்றிலக்கியங்கள் - சைவ தத்துவநூல்கள் - உரையாசிரியர்கள் - வைணவ உரைகள |
| 4 | பிற்கால அருள் நூல்கள் - தாயுமானவர் - அருணகிரிநாதர் - வள்ளலார் - உரைநடை இலக்கியங்கள் - இஸ்லாம் - கிறித்துவ இலக்கியங்கள் |
| 5 | சிறுகதை - புதினம் - கட்டுரை - வாழ்க்கை வரலாறு - தன்வரலாறு - நாடகம் (கவிதை, உரைநடை) - மரபுக்கவிதை புதுக்கவிதை - சென்ரியூ - ஹைக்கூ - இலக்கிய ஆய்வுமுறைகள் - நாட்டுப்புறவியல் - மக்கள் தொடர்பியல் - தொடர்புடைய பிற துறைகள் |

# அலகு - 1

## பாட நோக்கம்

- தமிழ் இலக்கிய வரலாற்றை கற்பித்தல்
- முச்சங்கங்கள் பற்றி அறிதல்
- சங்க இலக்கியத்தில் காணப்பெறும் வாழ்வியல் சிந்தனைகளை அறிதல்
- சங்க இலக்கியங்களின் வாயிலாக இல்லறம் மற்றும் வாழ்வின் அகமாண்புகளை அறியச் செய்தல்.
- புறவாழ்வு பற்றிய அறம்,கொடை,வீரம் முதலியனவற்றைத் தெளிவுறுத்தல்.

## இயலில் இடம்பெறுபவை

- செவ்வியல் இலக்கியங்கள்
- சங்ககாலம்
- சங்கம் மருவிய கால இலக்கியம்
- சிலப்பதிகாரம்
- மணிமேகலை

## 1.1 செவ்வியல் இலக்கியம்

மனித வரலாற்றின் தொடக்க காலத்தில் ஒரு மொழி என்பது உருவாகி, மிக நீண்டகாலம் பேச்சு வழக்கில் இருந்த பின்னரே, அதற்கான எழுத்து உருவாகிறது. தொடக்ககாலத்தில் ஒருமொழிக்கான எழுத்து உருவாக, மிக நீண்ட நெடியகாலம் ஆகிறது. ஆக தொடக்க காலத்தில் மொழிகளுக்கு எழுத்து உருவாகும் முன்னரே, பாடல் வடிவில் பழமொழிகளும், கதைகளும், புராணங்களும், தொன்மங்களும், மதம்சார்ந்த புனிதப் பாடல்களும், ஓரளவு இலக்கியங்களும் கூட உருவாகி, மொழி ஓரளவு முழு வடிவம் பெற்று விடுகின்றது. எனினும் எழுத்து உருவான பின்னரே ஒரு மொழி முழுமை அடைகிறது. அதன் பின்னரே அது வளர்ச்சி அடைந்து செழுமை அடைந்து செவ்வியல் இலக்கியங்களைப் படைக்கும் திறன் பெறுகிறது. எழுத்து வடிவம் இன்றி ஒரு மொழி செவ்வியல் இலக்கியங்களைப் படைக்க இயலாது. கிரேக்கம், இலத்தீன், சீனம் போன்ற செவ்வியல் மொழிகள் அனைத்துமே எழுத்து வடிவத்தைப் பெற்ற பின்னரே செவ்வியல் இலக்கியங்களை உருவாக்கின. ஒரு மொழி செவ்வியல் இலக்கியங்களைப் படைக்க எழுத்து உருவாவது ஓர் அடிப்படைத்தேவை. ஆனால் அது மட்டும் போதுமானதல்ல. வேறு பல பின்புலங்கள் இருந்தாக வேண்டும்.

## செவ்வியல் காலகட்டமே 'வரலாற்றுகால உயர்நிலைச் சமூகம்'

ஒரு மொழியில் செவ்வியல் இலக்கியங்கள் உருவாக அரசியல், பொருளாதாரம், வணிகம், தொழில், கலை, பண்பாடு ஆகிய பல துறைகளிலும் அம்மொழிக்கான சமூகம் ஓர் உயர் வளர்ச்சியை எட்டிய சமூகமாக இருந்தாக வேண்டும். ஒரு சமூகத்தின் பல துறையிலும் உயர் வளர்ச்சியடைந்த ஒரு காலகட்டத்தைப் பொற்காலகட்டம் என்று வரலாற்றில் குறிப்பிடுவர். நாம் இந்த பொற்காலகட்டம் என்பதை வரலாற்றுக்கால உயர்நிலைச் சமூகம் எனலாம். அதாவது ஒரு குறிப்பிட்ட வரலாற்றுக்காலகட்டத்தில் ஒப்பீட்டளவில் ஒரு மிக முன்னேறிய சமூகத்தையே இது குறிக்கும். அதுபோன்ற ஒரு வரலாற்றுக்கால உயர்நிலைச் சமூகத்தில் பல துறைகளோடு இலக்கியமும் வளர்ச்சியடைந்து செவ்வியல் தரத்தை அடைகிறது. இதையே வேறு விதத்திலும் குறிப்பிடலாம். ஒரு மொழியின் இலக்கியம் செவ்வியல் தரத்தை எட்டியுள்ளது என்றாலே, அக்காலகட்டத்தில் அம்மொழிக்கான சமூகம், அரசியல், பொருளாதாரம், வணிகம், தொழில், கலை, பண்பாடு, ஆகிய பல துறைகளிலும் ஒரு உயர் வளர்ச்சியை எட்டிய, ஒரு வரலாற்றுக்கால உயர்நிலைச் சமூகமாக அது இருந்துள்ளது என்பதாகிவிடும்.

ஆகவே பல துறைகளிலும் உயர் வளர்ச்சியடையாத ஒரு மொழிச்சமூகம் செவ்வியல் தரமுடைய ஓர் இலக்கியக் காலகட்டத்தைப் படைக்க முடியாது. எனவே வரலாற்றுக்கால உயர்நிலைச் சமூகங்களே செவ்வியல் தரமுடைய இலக்கியங்களைப் படைத்துள்ளன என்பதுதான் வரலாற்று விதியாக இருந்துள்ளது. செவ்வியல் இலக்கியங்களைப் படைத்த வரலாற்றுக்கால உயர்நிலைச் சமூகங்கள் சிலவற்றைப் பார்ப்போம்.

## தமிழ்-ஒரு செவ்வியல் மொழி

இந்த வரலாற்று விதியினை, இந்த வரலாற்றுப் படிப்பினையை, நமது தமிழ் மொழியின் செவ்வியில் இலக்கிய காலகட்டமான நமது சங்ககால கட்டச் சமுதாயத்துக்குப் பொருத்திப் பார்ப்போம். உலக மொழியியல் அறிஞர்கள் அனைவரும், சங்ககால இலக்கியங்களை செவ்வியல் இலக்கியங்களாக ஏற்று அங்கீகரித்துள்ளனர். தமிழின் சங்ககால இலக்கியம் குறித்த ஒரு சில மொழியியல் அறிஞர்களுடைய கருத்துக்களைக் காண்போம். இந்த அறிஞர்கள் அனைவரும் தமிழ், சமற்கிருதம், போன்ற செவ்வியல் இலக்கியங்களையும் ஆங்கிலம், பிரெஞ்சு போன்ற நவீன இலக்கியங்களையும் கற்றுத்தேர்ந்த உலகப் புகழ்பெற்ற மொழியியல் அறிஞர்கள் ஆவர்.

## சியார்ஜ் எல் ஆர்ட்

சான்றாக இங்கு ஆறாவது மதிப்புரையை வழங்கிய திரு சியார்ஜ் எல் ஆர்ட் அவர்கள் ஆர்வார்டு பல்கலைக்கழகத்தில் சமற்கிருதம் படித்து விட்டு, விசுகான்சின் பல்கலைக்கழகத்தில் சமற்கிருதப் பேராசிரியராகப் பணியாற்றியவர். காளிதாசர், மாகா, பாரவி, சிரீஅர்சர், ஆதிசங்கரர் ஆகியவர்களின் நூல்களையும், இரிக்வேதம், உபநிடதங்கள், மகாபாரதம் போன்றவைகளையும்

சமற்கிருத மூலத்திலேயே படித்தவர். 1963 முதல் சமற்கிருத மூல நூல்களைப் படிக்கத் தனது நேரத்தில் பெரும்பகுதியைச் செலவிட்டவர். அது போன்றே கிரேக்க, இலத்தீன் செவ்வியல் நூல்களை, அவைகளின் மூலத்திலேயே நிறையப் படித்தவர். இரசியன், பிரெஞ்சு, ஜெர்மனி போன்ற நவீன மேற்கத்திய மொழிகளைக் கற்று அவைகளின் இலக்கியங்களையும் விரிவாகப் படித்தவர். நவீன இந்திய மொழிகளான தெலுங்கு, இந்தி மொழி இலக்கியங்களை மொழிபெயர்ப்பு மூலம் விரிவாகப் படித்தவர். தற்பொழுது கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி வருபவர்.

### 1. பெஞ்சமின் கை பாயிங்டன்.

''பழந்தமிழ் எழுத்துக்களைப் பற்றிக் கூறும்பொழுது அவற்றின் மிகுந்த எளிமையைத்தான் நான் முதலில் குறிப்பிட வேண்டும். அந்த எளிமையும் வேறு சில தன்மைகளும்தாம் தமிழ்மொழி அளவிறந்த தொன்மை வாய்ந்தது என்பதை நிறுவுகின்றன. தமிழி வரிவடிவத்திலிருந்து (லிபியிலிருந்து) உருவாக்கப்பட்ட கிரந்த லிபியில்தான் தென்னிந்தியாவில் சமற்கிருதம் எழுதப்படுகிறது. தமிழ்மொழி, சமற்கிருதத்திலிருந்து முற்றிலும் மாறுபட்ட மொழி அமைப்பைக் கொண்டது. சமஸ்கிருதம் உருவான காலகட்டத்திலேயே உருவான தொன்மை உடையது.'' என்கிறார் பெஞ்சமின் கை பாயிங்டன்.

### 2. என்றி ஒய்சிங்டன்.

''செந்தமிழைவிடச் செறிவு, சொல்வளம், எக்கருத்தையும் வெளியிடும் ஆற்றல், இனிமை ஆகிய தன்மைகளைக் கொண்ட மொழி வேறு எதுவும் இருக்க இயலாது. தென்னிந்தியாவில் மொத்தம் ஏறத்தாழ இரண்டு மூன்று கோடி பேர் பேசும் தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம் மற்றும் சில மொழிகளைத் தோற்றுவித்தது தமிழே என்று கருதப்படுகிறது. ஆகவே தமிழைத் தென்னிந்தியத்(தொன்) மொழியாகவே கருதலாம்.'' என்கிறார் என்றி ஒய்சிங்டன் அவர்கள்.

### 3. ஆர்.ஈ.ஆசர்

''இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலான வரலாறு உடைய மிகச்சில மொழிகளில் தமிழ் ஒன்று. தமிழ் இலக்கியச் செல்வத்தை விட வளமான இலக்கியம் உலகில் வேறு எம்மொழியிலும் இல்லை. எனவே தமிழ் இலக்கியச்சிறப்பை உலகம் அறிந்துகொள்ள மொழிபெயர்ப்புப் பணி தேவை. சங்க இலக்கியம் முதல் கம்பராமாயணம் வரை உள்ள செவ்வியல் தமிழ் இலக்கியம், மனித இனச்சாதனைகளுள் மிகச்சிறந்தவைகளுள் ஒன்று. கருத்துக்கள், இலக்கிய அமைப்பு, சொற்களஞ்சியம் ஆகியவைகளுள் சங்க இலக்கியம், இன்றைய தமிழ்ப் படைப்புலகத்துக்கு ஒரு வற்றாத கருவூலமாக உள்ளது. தங்கள் படைப்பாற்றலை வியக்கத்தக்க அளவுக்கு மேம்படுத்தக் கூடிய செழுமையான பல்துறை

வளங்கள் சங்க இலக்கியக் கருவூலத்தில் உள்ளன என்பதை இன்றைய தமிழ்ப் படைப்பாளிகள் உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை.'' என்கிறார் ஆர்.ஈ.ஆசர்.

## 4. ஏ.கே. இராமானுசன்

''தொன்மையானவையே எனினும் இன்றும் உயிரூட்டம் உள்ளவையாய் இலங்கும் இந்தச் சங்க இலக்கிய அகப்பாடல்களைப் போன்ற நயம் வாய்ந்தவை இந்திய இலக்கியங்கள் வேறு எவற்றிலும் இல்லை. அப்பாடல்கள் கூறும் வாழ்க்கை நெறியிலும், விளக்கும் நிகழ்ச்சிகளிலும் சிறந்த செம்மொழி இலக்கியத்தின் பின்வரும் கூறுகள் உள்ளன: காதலோடு கனிவும் பண்பாடும் வெளிப்படைக் கூற்றுக்களோடு உள்ள உள்ளுறை இறைச்சி, அங்கதம் ஆகியவை தலைவன், தலைவி பெயர் சுட்டப்படாவிடினும் ஓவியம் போன்ற வர்ணனை அடிகள் சில, அவை சுட்டும் பொருளோ பெரிது தமிழர் அறிவுத்திறனின் மிகத் தொன்மையான எடுத்துக்காட்டு இவ்வகப் பாடல்கள் அது மட்டுமன்று கடந்த ஈராயிரம் ஆண்டு தமிழ் இலக்கியப் படைப்பில் இவற்றை விஞ்சுவன இல்லை.'' எனச் சங்க இலக்கியத்தின் பெருமையை வெளிப்படுத்துகிறார் உலகப் புகழ் பெற்ற மொழியியல் அறிஞர், இலக்கிய ஆய்வாளர் ஏ.கே. இராமானுசன்.

சங்ககாலம் என்பது வீரயுகக்காலம் எனக்கூறிய கைலாசபதி அவர்களின் கூற்றை, ஏ.கே இராமனுசன் அவர்கள், தனது காதலும் வீரமும் பற்றிய கவிதைகள் எங்கிற ஆங்கில நூலின் பின்னுரையில் அதனை மறுக்கிறார். கைலாசபதி ஒரு கவிதையையாவது கவிதையென்ற முறையில் விளக்கமாகப் பார்க்கவில்லையே என்று இராமனுசன் வருந்திக்காட்டுவார். பல புறநானூற்றுப்பாடல்கள் மறைந்துவிட்ட ஒரு காப்பியத்திலிருந்து பெறப்பட்ட துண்டுகள் (FRAGMENTS FROM THE LOST EPIC) என்ற கைலாசபதியின் கருத்தை மறுக்கும் இராமானுசன் ஒவ்வொரு புறநானூற்றுப் பாடலும் கலை நுட்பத்தோடு முழுமை பெற்றவை என்பார்(வுர்நு ளுஜபேடுநு POEMS ARE WELL-FORMED AND ARTISTICALLY TO BE FRAGMENTED. ப-294). இவைகளை எடுத்துக்கூறும் முனைவர் ப.மருதநாயகம் அவர்கள், ''கலித்தொகை, பரிபாடல், திருமுருகாற்றுப்படை ஆகியவற்றை நீக்கிவிட்டுப் பார்த்தோமானால் எஞ்சிய 2209 பாடல்களும் சங்ககாலத்தைச் சேர்ந்தவை என்பதில் ஐயமில்லை. இவற்றுள் 1705 அகப்பாடல்களாகும். கைலாசபதியின் கணக்குப்படியும் 391 பாடல்களே வீரர்களையும், வள்ளல்களையும் மற்றையோரையும் குறிப்பவை. இது சங்கப்பாடல்களில் 70 சதவீதத்துக்கும் மேலானவை வீரர்களைப் பற்றியவையன்று என்பதைத் தெளிவாக்கும். புறநானூற்றுப்பாடல்கள் மதிநுட்பம் நூலோடுடைய பெரும்புலவர்களால் எழுதப்பெற்றவை, அவை வாய்மொழி மரபைச் சேர்ந்தவை அல்ல. மனித வாழ்வின் எல்லாக் கூறுகளையும் நுட்பமாகப் பார்த்து அவை பற்றி ஆழமாகச் சிந்தித்துக் கலை நுணுக்கத்தோடு முதிர்ந்த அறிஞர்களால் எழுதப்பட்டவற்றை வாய்மொழிப்பாடல்களின் ஓரிரு கூறுகள் இருப்பதால் வீரயுகப்பாடல்கள் என அடையாளம்

காண்பது தவறாகும். தமிழ்ச் சமுதாய, இலக்கிய வரலாற்றில் வீரயுகம் என்பது சங்க இலக்கியங்களுக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னதாக இருந்திருக்க வேண்டும் என்பதைப் புறநானூற்றுப் பாடல்களும் ஏனைய சங்க இலக்கியங்களும் காட்டும் பண்பாட்டு முதிர்ச்சியிலிருந்து அறியலாம்'' என்கிறார்.

### 5. டாக்டர் கபில் சுவெலபில்

இரஷ்ய மொழியியல் அறிஞர் டாக்டர் கபில் சுவெலபில் அவர்கள், தொல்காப்பியம், ''மனித அறிவாற்றல் எவ்வளவு வியத்தகு உச்சநிலை எய்தக்கூடும்''(one of the finest monuments of human intelligence) என்பதைக் காட்டும் சிறந்த சான்றுகளுள் ஒன்று. இலக்கியக் கொள்கையில் வேறு எந்தப் பண்டைய மொழிகளிலும் இல்லாத சிறந்த கருத்துக்களைத் தொல்பொருள் செய்யுளில் தொல்காப்பியம் கூறுகிறது.

எட்டுத்தொகை பத்துப்பாட்டு நூல்கள் (மொத்தம் 2300 பாடல்கள்) அச்சிட்டு உலகின் பார்வைக்கு முதலில் 1880-1910 காலஅளவில் வந்தது. அவை வெளிவந்த அக்கணமே உலகின் சிறந்த செம்மொழிகளில் ஒன்றாகத் தமிழ் ஆகிவிட்டது. பிரெஞ்சு ஆசியவியல் அறிஞர் ''பியர் மெய்ல்''அவர்கள், ''கிரேக்க உணர்ச்சிப் பாடல்களின் தலைசிறந்த நவ மணிகளுக்கு இணையானவை இச்சங்க இலக்கியப் பாடல்கள் இந்தியாவில், ஏன் உலகிலுள்ள இலக்கியப் படைப்புக்களின் சிகரங்களில் ஒன்று சங்க இலக்கியம்'' என்று செய்துள்ள மதிப்பீட்டைச் சங்க இலக்கியப் பாடல்களை ஆழ்ந்து பயின்றுள்ள எவரும் ஏற்றுக் கொள்வர்.

இந்தியாவின் பிற எந்த மொழி இலக்கியத்திலும் இல்லாத சிறப்புக் கூறுகளைக் கொண்டது என்பது மட்டுமின்றி பண்டையத் தமிழ் இலக்கியம் உயரிய இலக்கிய நயமும் வாய்ந்தது. இந்திய மொழி இலக்கியங்களிலேயே தமிழ் இலக்கியம் மட்டுமே செவ்விலக்கியமாகவும், நிகழ்கால இலக்கியமாகவும் ஒரே நேரத்தில் இலங்கும் சிறப்பு வாய்ந்தது் அது சமஸ்கிருத இலக்கியம் அளவு தொன்மை வாய்ந்தது பண்டைய கிரேக்க மொழிச் செய்யுள்களை எப்படிச் செவ்வியல் இலக்கியம் என உலகம் கருதுகிறதோ அதே தன்மை வாய்ந்தது தமிழ்க் கழக இலக்கியம்.

தமிழ்ச் செவ்விலக்கியம் (சங்க இலக்கியம்) மக்களைப் பற்றிய இலக்கியம் மக்கள் உருவாக்கியது. ஆனால் ''நாட்டுப்புற'' இலக்கியமன்று. கழக இலக்கியங்கள் எக்காலத்துக்கும் பொருந்தும் அழகியல் கூறுகள், விழுமியங்கள் ஆகியவற்றை நிரம்பக்கொண்டவை. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் யாத்த அவ்விலக்கியங்கள், பிற்காலத்தில் (அண்மைக்காலத் திறனாய்வாளர்) வகுத்துள்ள இலக்கிய நயக்கோட்பாடுகளின் படியும் உயர்நிலையில் ஏற்கப்படுபவனவாக உள்ளன. பழந்தமிழ் இலக்கியமும் பண்பாடும் படைத்த, ''அகம்-புறம்''

கோட்பாடுகள் உலகிலேயே தனித்தன்மையும் சிறப்பும் வாய்ந்தவை. இவை இரசிய அறிஞர் டாக்டர் கபில் சுவெலபில் அவர்களின் கருத்துக்களாகும்.

## 6. சியார்ஜ் எல். ஆர்ட்.

முதலாவதாகத் தமிழின் தொன்மை குறிப்பிடத்தக்கது. இக்காலத்திய பிற இந்திய மொழி இலக்கியங்களுக்கு ஓராயிரம் ஆண்டு முன்னர் உருவான இலக்கியத்தைக் கொண்டது தமிழ்.

இரண்டாவதாகத் தமிழ் இலக்கியமரபு மட்டும்தான் சமற்கிருதத்திலிருந்து பெறப்படாத, இந்திய மண்ணுக்குரிய இலக்கிய மரபு ஆகும். தமிழ் தனக்கு எனத் தனி இலக்கியக்கொள்கை, இலக்கண மரபு, முருகியல் (aesthetics) உடையது இவைகளின் அடிப்படையைக் கொண்டத் தமிழ் செம்மொழி இலக்கியம், வேறு எம்மொழி இலக்கியத்துக்கும் இல்லாத தனித் தன்மைகளை (ரபெைரந) கொண்டது.

மூன்றாவதாக சமஸ்கிருதம், சீனம், பாரசீகம், அரபு ஆகிய மொழிகளின் இலக்கியங்களில் சிறந்தவற்றுக்கு இணையான தரம் வாய்ந்தது தமிழ்ச் செம்மொழி இலக்கியம். அது நுண்மாண் நுழைபுலம் மிக்கது பல்வேறு பாடுபொருள் கொண்டது(முற்கால இந்திய இலக்கியங்களில் பொது மக்களைப் பற்றி நிறையப் பாடியது தமிழிலக்கியம் மட்டுமே) மாந்த இனத்துக்குப் பொதுமையான விழுமியங்களைக் கூறியது. அவ்விலக்கியம் பாடித்துலக்கம் தராத மாந்த இனப்பட்டறிவு என ஒன்றும் இல்லை.

இறுதியாக இக்கால இந்தியப் பண்பாட்டையும் மரபையும் உணர்வதற்குப் பயிலவேண்டிய இலக்கியங்களில் தமிழ் இலக்கியம் முதன்மை வாய்ந்தது. உலகத்தின் சிறந்த செம்மொழிகளில் தமிழும் ஒன்று என்பது இத்துறையில் வல்ல அறிஞருக்கு உள்ளங்கை நெல்லிக்கனி போலத் தெரிந்த உண்மை ஆகும் என்கிறார் சியார்ஜ் எல்.ஆர்ட்.

தமிழ் மொழி ஒரு செவ்வியல் மொழி என்பதற்கு, சங்ககால இலக்கியம் ஒரு சான்றாதாரமாகத் திகழ்கிறது என்பதற்கு மேலே தரப்பட்ட மொழியியல் அறிஞர்களின் மதிப்புரைகளே போதுமானவைகளாகும். தமிழின் சங்கச் செவ்வியல் காலம் என்பது கி.மு. 6ஆம் நூற்றாண்டு முதல் கி.மு. 1ஆம் நூற்றாண்டு வரையான 6 நூற்றாண்டுகள் ஆகும்.

## தமிழ்ச் சமூகம்

நமது வரலாற்று விதிப்படி இவை படைக்கப்பட்ட கி.மு 6ஆம் நூற்றாண்டு முதல் கி.மு. 1 ஆம் நூற்றாண்டு வரையான சங்கச் செவ்வியல் காலத் தமிழ்ச் சமூகம் பல துறைகளிலும் உயர் வளர்ச்சி அடைந்த ஒரு சமூகமாக இருந்திருக்க வேண்டும். அரசியல், பொருளாதாரம்,

தொழில், வணிகம், கலை, பண்பாடு ஆகிய பல துறைகளிலும் உயர் வளர்ச்சி அடைந்த சமூகமாகத் தமிழ்ச் சமூகம் இருந்த காரணத்தால் மட்டுமே இது போன்ற உன்னதமான, உயர் தரமான, உலகளாவிய மனித விழுமியங்களைக் கொண்ட செவ்வியல் இலக்கியங்களைப் படைத்திருக்க இயலும் என்பதே நமது வரலாற்று விதி கற்பிக்கும் பாடமாகும்.

### செவ்வியல் மொழிகளும் எழுத்தும்:

ஒரு மொழியில் செவ்வியல் இலக்கியங்கள் உருவாவதற்கு இரண்டு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பே அம்மொழிக்கான எழுத்து முறை உருவாகி இருக்க வேண்டும் என்பதைப் பிற செவ்வியல் இலக்கியங்களின் வரலாறுகள் நமக்குக் கற்பிக்கின்றன. கிரேக்கச் செவ்வியல் இலக்கியங்களின் கால கட்டம் கி.மு 5ஆம், 4ஆம் நூற்றாண்டு என்றால், அதன் எழுத்து கி.மு 8ஆம் நூற்றாண்டில் தோன்றிவிட்டது. இலத்தீன் செவ்வியல் இலக்கியங்களின் கால கட்டம் கி.மு முதல் நூற்றாண்டு முதல் கி.பி 2ஆம் நூற்றாண்டு வரை என்றால், அதன் எழுத்து கி.மு 6ஆம் நூற்றாண்டில் தோன்றிவிட்டது.

சீனச் செவ்வியல் இலக்கியங்களின் கால கட்டம் கி.மு 8ஆம் நூற்றாண்டு முதல் கி.மு 3ஆம் நூற்றாண்டு வரை என்றால், அதன் எழுத்து கி.மு 15ஆம் நூற்றாண்டிற்கு முன்பே தோன்றிவிட்டது. சமஸ்கிருத செவ்வியல் இலக்கியங்களின் கால கட்டம் கி.பி 4ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 8ஆம் நூற்றாண்டு வரை என்றால், அதற்கான எழுத்தான அசோகன் பிராமியை, கி.பி 2ஆம் நூற்றாண்டின் நடுவிலேயே பயன்படுத்துவது துவங்கி விட்டது(அசோகன் பிராமி என்பது மௌரிய அரசர் அசோகரின் கல்வெட்டுகளில் பயன்படுத்தப்பட்ட எழுத்து முறை ஆகும். இதன் காலம் கி.மு 3ஆம் நூற்றாண்டு. இதற்கு முன் இந்திய மொழிகளுக்கு வேறு எழுத்து முறை இல்லை எனக் கருதப்படுகிறது).

## 1.2 சங்க காலம் (கி.மு.300 - கி.பி.250)

தமிழகம் மூவேந்தரது ஆட்சியிலும் குறுநில மன்னர்கள் ஆளுகையிலும் இருந்தது. மூவேந்தர்க்கிடையில் அடிக்கடி போர் நிகழ்ந்தது. இவர்கள் ஒற்றுமையுற்றிருந்த நிலை ஒரு சிலவே. அப்படி ஒன்றியிருந்த காட்சியை உளமகிழப் பாராட்டியுள்ளனர் புலவர்கள் (புறம் 58,367) இங்ஙனம் தமிழ் வேந்தர்கட்கு பகையும் பூசலும் இருந்ததே தவிர பிற நாட்டார் படையெடுப்போ, அதனால் மக்கள் அல்லலுறவோ இல்லை. மூவேந்தரின் போர்கூட அவர்கள் அளவில் நின்று நிலவியதே தவிர, நாட்டின் அமைதியைக் குலைக்கவில்லை. மன்னர் ஆட்சியில் மக்கள் களவாது களித்தே வாழ்ந்தனர். மன்னன் உயிர்த்தே மலர்தலையுலகமாக மாண்புற்றதுளூ அறம், பொருள், இன்பம் மூன்றும் முகிழ்ந்தன.

சமுதாயத்தில் பல்குடியினர், பல் பிரிவினர், பல் தொழிலினர் வேறுபாடின்றி ஒருமையுற்றிருந்தனர். பசியும் பிணியும் பகையும் நீங்கி, மக்கள் வசியும் வளனும் சிறக்க

வாழ்ந்தனர். சாதிப்பிரிவே இல்லை. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் எனும் பகுப்பும், பரதவர் எயினர் ஆயர் போன்ற குடிமுறையுமே நிலவின. பிற நாட்டினர் தமிழகத்தை நாடி வந்து வாணிகம் நடத்தும் அளவிற்கு வளம் கொழித்து விளங்கியது. உரிமை வாழ்வால் எல்லாத் துறைகளிலும் மக்கள் ஏற்றம் பெற்றனர்.

அரசியலுக்கோ அல்லது தனிமனிதனுக்கோ உரியதாக எச்சமயமும் ஏற்றமுறவில்லை. அவையவை தத்தம் முறையில் அமைதி பெற்றொளிர்ந்தன. சமயம் என்று ஒன்று தனித்து இயங்கவில்லை. தமிழர் வாழ்வோடு ஒன்றி நின்றது கடவுள் நம்பிக்கை, முருகன், இந்திரன், வேந்தன், திருமால் என நிலத் தெய்வங்கள் குறிக்கப் பெறுகின்றன. சமயம் பூசலும் மத மாறுபாடும் இல்லாத காலம், வடநாட்டுச் சமயங்கள் வந்திருந்தாலும் வேரூன்றாத வேளை.

தமிழ் அரசர்களால் புரக்கப்பட்டது, புலவர்கள், வேந்தர்களாலும் வள்ளல்களாலும் போற்றப்பெற்றனர். மக்களும், புவி மன்னர்களைப் போற்றியதை விட ஒருபடி மேலாகக் கவி மன்னர்களை மதித்தனர். புலமைக்கு மதிப்பு இருந்த - பிற மொழிச் செல்வாக்கு இல்லாத காலம்ளு அரசியல் தலைமை வகித்த காலம்ளு இங்ஙன சமூக பொருளாதார, அரசியல், சமயச் சூழல்கள் சிறந்திருந்த அமைதியான சூழ்நிலையால் அமர கவிதைகள் எழுந்தன.

இக்காலத்தில் இலக்கியங்கள் எட்டுத்தொகையும் (கலியும் பரியும் நீங்கலாக) பத்துப்பாட்டும், (திருமுருகாற்றுப்படை தவிர) பாடற் பொருள் காதலும் வீரமுமாக அமைந்தன. அனைத்தும் ‘சமுதாயப் பாடல்கள்’ புறமாகிய இயற்கைச் சூழலும், அகமாகிய அன்றாட வாழ்வு முறையும் நிலைபெறக் கொண்டு, அகம் புறம் எனும் இரு கரையினில் அமைந்தது. காட்சி நலனும் கருத்து வளனும் பெற்றொளிர்கிறது இக்கால இலக்கியம், அகப்பாடல்கள் காதற் கருத்துக் கருவூலம். புறப்பாடல்கள், வாழ்வியற் கருத்துக் களஞ்சியம், எல்லார்க்கும் எளிதே விளங்க, எல்லாவற்றையும் இனிதே எடுத்து விளக்க ஏற்றதன ‘அகவற்பாவே’ இக்காலப் பா. வஞ்சியும் உண்டு. இக்காலப் பிற்பகுதியில் எழுந்த இலக்கியங்கள்ளு திருக்குறள், சிலப்பதிகாரம், இடைச்சங்க இலக்கணமாகிய தொல்காப்பியமும் இங்கே இணைத்து எண்ணத் தக்கது. இக்கால இலக்கியம் பொற்கால இலக்கியம்ளு உணர்விலக்கியம் மிகுதிளு அறவிலக்கியம் மிகுதியில்லை. கடைச்சங்க காலத்தையே சங்க காலம், அச்சங்க இலக்கியமே சங்க இலக்கியம் என நாம் கொள்வது நினைவு கூறத்தக்கது.

சங்க காலம், அரசியல் தலைமை வகித்ததெனில், இக்காலம் ‘சமயத் தலைமை மிக்ககாலம்’. அரசர் தம் அரவணைப்பில் இருந்த அருந்தமிழ், சமயத்தின் கையில் சரணடைந்தது. கி.பி. 4-5 இல் பௌத்தமும், 5-6 இல் சமணமும் முறையே களப்பிரர், பல்லவர் ஆட்சியில் சிறந்தோங்கின. ஆதலின் இதனைச் ‘சமண-பௌத்த காலம்’ என்கின்றனர். ஆனாலும் ‘களப்பிரர் ஆட்சிக்காலம்’ வரை சமயங்கள் பகையின்றி அருகருகே இருந்து தத்தம் நெறியில்

தழைத்தன. அதன் பின்னரே சமயப் பூசல் தொடங்கியது. எனவேதான். இக்காலத்தைச் ‘சமயப்பொறை காலம்’ என்கின்றனர். இக்காலத்தில் அறவிலக்கியம் மிகுதி, உணர்விலக்கியம் குறைவு, வடமொழித் தொடர்பால் புதுமரபும், புராணக் கதைகளும் புகுந்தன. ஆதலின், சமண பௌத்த சமயங்களாலும் வடமொழியாலும் முறையே பெரும்பான்மை அறநூல்களும் சிறுபான்மை சமய நூல்களும் தோன்றின. இதனால் இக்காலத்தை ‘அறநூற்காலம்’ என்றும் அழைப்பர். தமிழிலக்கிய வரலாற்றில் முதன் முதலில் நீதிநூல்கள் தனியாக எழுதப்பெற்ற காலம் இதுவே. ‘வெண்பாவே இக்காலப் பா. இக்கால இலக்கியத்தில் கவிதைப் பண்பு குறைவுளூ வறட்சியும் வடசொல்லும் மிகுதி, இலக்கணப் பிழைகளும் எளிய நடையும் உடையவை.

எதிலும் நிறைவு குறைவு இரண்டும் இணைந்து இருக்கும். இருண்ட காலத்தில் இன்தமிழ் வளம் பெற்று விரிவடைய வில்லையாயினும், நலம் பெற்று நீண்டதெனலாம். பிற்காலக் கோவை போன்ற பிரபந்தங்கட்கு (கார் நாற்பது) வழிகாட்டியாகவும் துறைகள் பல தொடர்ந்து வரப் பல செய்யுட்கள் அமைத்துப் பாடும் தொடர்நிலைச் செய்யுள் வழக்கிற்குத் தொடக்கமாகவும், பக்தி இலக்கிய மரபினுக்கு விழிப்பை உண்டாக்கி, வழிகோலி வித்தாகவும், சங்க அகத்திணை புறத்திணை மரபுகளைப் பக்தி நெறியிற் பயன்படுத்தும் புதிய மரபினுக்குத் தோற்றுவாயாகவும், அறநெறிக்கு அடிகோலியும், சமய மறுமலர்ச்சிக்கு அடித்தளமிட்டும் விளங்கியது இக்காலம். சங்கம் மருவிய காலம் எனும் போது, இதனை இருண்ட காலம் என்பதற்கு வரலாற்றாசிரியர்களின் மருண்ட நிலைதான் காரணமாக, அல்லது ஏனைக் காலங்களை நோக்க இன்தமிழ் ஏற்றமுறாமையால் இங்ஙனம் இயம்பப்பட்டதா என்று ஐயமுறத் தோன்றுகிறது.

## தமிழ்ச் சங்கம்

பைந்தமிழ் பல்வகைச் சிறப்பினது. அவற்றில் ஒன்று சங்கம் வைத்து மொழி வளர்த்தமை. பிரெஞ்சுமொழி வளர்ச்சி கருதி, பிரெஞ்சு கல்விக் கழகம் (French Academ) பத்தாம் நூற்றாண்டில் தோன்றியது. ஆனால் தமிழிலோ பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே கழகம் இருந்தது. தொன்மைச் சிறப்பு மட்டுமன்று. இன்றும் கரந்தை, மதுரை, சென்னை,திருச்சி, தமிழ்ச் சங்கங்கள் எனச் செந்தமிழ் வளர்க்க சங்கங்கள் தோன்றிக் கொண்டிருக்கின்றன. தமிழகத்தில் மட்டுமன்று வடக்கே பம்பாய், டெல்லி, நாகபுரி, கல்கத்தா போன்ற இடங்களிலும் கடல் கடந்தும் பர்மா தமிழ்ச் சங்கம், லண்டன் தமிழ்ச்சங்கம் எனத் தரணியெங்கும் தமிழ்ச்சங்கங்கள் தோன்றியுள்ளன. தமிழர் எங்கெல்லாம் வருகின்றனரோ, அங்கெல்லாம் அருந்தமிழ் வளர்க்கப் பெருமன்றங்கள் பிறக்கின்றன. இது தமிழர் குருதியோடு கூடிய குணம்-சங்க மரபு-தமிழர்தம் மூச்சு எனலாம்.

மூவேந்தரும் முத்தமிழ் வளர்த்தனர்ளூ என்றாலும் சங்கம் வைத்துச் செந்தமிழ் வளர்த்த தனிப்பெருமை பாண்டியர்க்கே உரியது. தமிழகமெங்கினும் வாழ்ந்த புலவர்கள் மதுரையில் குழுமி செந்தமிழ் ஆய்ந்தனர்-அரங்கேற்றினர். அக்காலம் தமிழ் இலக்கிய வரலாற்றில் தலையாய

காலமாகத் திகழ்கிறது. பொற்காலமாகப் பொலிகிறது. உலகிலேயே முதன் முதல் சங்கம் நிறுவிய பெருமை நம்முடையதாக இருக்க, இன்று சங்கம் எல்லாம் கற்பனை எனக் கூறுமளவிற்கு வந்துள்ளது. எத்துணையோ சங்கங்கள் இருந்தனவாகக் கூறப்படுகிறது. ஆயினும் முச்சங்கம் பற்றியே பேசப்படுகிறது.

முதன்முதல் சங்கம் பற்றிய குறிப்பு கி.பி.7 ஆம் நூற்றாண்டைய நாவுக்கரசர் தேவாரத்தில் வருகிறது.

**'நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி**
**நற்கனகக் கிழிதருமிக் கருளி னோன்காண்'** (திருப்புத்தூர் திருத்தாண்டகம்-3)

சங்கம் பற்றிய முழு விவரமும் 11,12 ஆம் நூற்றாண்டையுடைய இறையனார் அகப்பொருள் - நக்கீரர் உரையான் அறிகிறோம். அது வருமாறு:

### தலைச்சங்கம்:

தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என மூவகைப்பட்ட சங்கம் இரீஇயினார் பாண்டியர்கள். அவருள் தலைச்சங்கமிருந்தார் அகத்தியனாரும் திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளும் குன்றெறிந்த முருகவேளும், முரஞ்சியூர் முடிநாகராயரும், நிதியின் கிழவனும் என இத்தொடக்கத்தார் ஐந்நூற்று நாற்பத்தொன்பதின்மர் (549) என்பர். அவர் உள்ளிட்டு நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர் (4449) பாடினர் என்பர். அவர்களால் பாடப்பட்டன எத்துணையோ. பரிபாடலும் முதுநாரையும், முதுகுருகும், களரியாவிரையும் என இத்தொடக்கத்தின. அவர் நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றியாண்டு (4440) சங்கமிருந்தார் என்பனர். அவர்களைச் சங்கம் இரீஇயினார் காய்சின வழுதி முதலாகக் கடுங்கோன் ஈறாக என்பத்தொன்பதின்மர் (89) என்பர். அவருள் கவியரங்கேறினார் எழுவர் (7) பாண்டியர் என்பர். அவர் சங்கம் இருந்து தமிழ் ஆராய்ந்து கடல் கொள்ளப்பட்ட மதுரை என்ப, அவர்க்கு நூல் அகத்தியம்.

### இடைச்சங்கம்:

இடைச்சங்கமிருந்தார் அகத்தியனாரும் தொல்காப்பியனாரும், இருந்தையூர்க் கருங்கோழியும், மோசியும், வெள்ளூர்க் காப்பியனும், சிறுபாண்டரங்கனும், திரையன்மாறனும், துவரைக்கோனும், கீரந்தையும் என இத்தொடக்கத்தார் ஐம்பத்தொன்பதின்மர் (59) பாடினர் என்ப. அவர்களால் பாடப்பட்டன கலியும், குருகும், வெண்டாளியும், வியாழமாலை அகவலும் என இத்தொடக்கத்தன என்ப. அவர்களுக்கு நூல் அகத்தியமும், தொல்காப்பியமும், மாபுராணமும் இசை நுணக்கமும், பூதபுராணமும் இவை யென்ப. அவர் மூவாயிரத்து எழுநூற்றியாண்டு (3700) சங்கமிருந்தார் என்ப. அவரை சங்கம் இரீஇயினர் வெண்டேர்ச் செழியன் முதலாக முடத்திருமாறன் ஈறாக ஐம்பத்தொன்பதின்மர் (59) என்ப. அவருள் கவியரங்கேறினார் ஐவர் (5)

பாண்டியர் என்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்து கபாடபுரத்தென்ப. அக்காலத்துப் போலும் பாண்டியநாட்டைக் கடல் கொண்டது.

**கடைச்சங்கம்:**

இனிக் கடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தார் சிறு மேதாவியாரும், சேந்தம் பூதனாரும் அறிவுடையனாரும், பெருங்குன்றூர்க்கிழாரும், இளந்திருமாறனும், மதுரையாசிரியர் நல்லந்துவனாரும், மருதனிளநாகனாரும், கணக்காயனார் மகனார் நக்கீரனாருமென இத்தொடக்கத்தார் நாற்பத்தொண்பதின்பார் (49) என்ப. அவருள்ளிட்டு நானூற்று நாற்பத்தொன்பதின்மர் (449) பாடினார் என்ப. அவர்களால் படப்பட்டன நெடுந்தொகை நானூறும், குறுந்தொகை நானூறும், நற்றினை நானூறும், புறநானூறும், ஐங்குறுநூறும், பதிற்றுப்பத்தும், நூற்றைம்பது கலியும் எழுபது பரிபாடலும், கூத்தும், வரியும், சிற்றிசையும், பேரிசையும் என்று இத்தொடக்கத்தன. அவருக்கு நூல் அகத்தியமும், தொல்காப்பியமும் என்ப. அவர் சங்கமிருந்து தமிழ் ஆராய்ந்தது ஆயிரத்தெண்ணூற்றைம்பதிற்றியாண்டு (1850) என்ப. அவர்களைச் சங்கம் இரீஇயினார் கடல்கொள்ளப்பட்டு போந்திருந்த முடத்திருமாறன் முதலாக உக்கிரப்பெருவழுதி ஈறாக நாற்பத்தொன்பதின்மர் (49) என்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது உத்தர மதுரை என்ப.

இங்ஙனம் முச்சங்கம் இருந்தமைக்கு இறையனார் களவியலுரை தவிர, வேறு சான்றில்லை. ஆயினும் சிலப்பதிகார உரையில் தலை, இடைச்சங்கம் பற்றிய குறிப்புகள் வருகின்றன. பாண்டிய நாட்டுச் செவ்வூர்ச் சிற்றம்பலக் கவிராயர் வீட்டு ஏட்டுப் பிரதியில் கண்ட ஓர் அகவற்பா வாயிலாக முச்சங்கம் வரலாறு தெரியவருகிறது. ஆனால் இவையிரண்டும் களவியலில் கூறியாங்கு கூறுகின்றன. ஆக, முச்சங்கங்களும் மூவேறிடங்களில் தோன்றிக் கடல் கோள்களால் அடுத்தடுத்து அழிந்ததையும் ஏறக்குறைய 197 அரசர்கள் காலத்தில் 10,000 யாண்டுகள் இருந்தமையும் அறியலாம். மேற்கூறியவற்றை அடிப்படையாகக் கொண்டு சங்கம் பற்றிப் பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன. அவற்றினை ஆய்வோம்.

**முச்சங்கம் இருந்தது உண்மையே**

பன்னெடுங் காலமாக முச்சங்கம் இருந்தனவாக மொழியப்பட்டு வருகிறது. உண்மையின்றி வழிவழியாக இதனை வாய்மையாக ஏற்பாரோ? இறையனார் களவியலுரையும் தமக்கு முன்னிருந்த செய்திகளை - இலக்கியக்கூற்றுகளை நிலைபெறக் கொண்டே முச்சங்கத்தை மொழிகிறது. வேண்டுமாயின் அனைத்தையும் வரையறுத்து வரலாற்று முறையான் வகுத்துக் கூறவில்லை என்று கூறலாதே தவிர மூன்று சங்கம் இல்லை என்று முடிவுக்கு வர இயலாது. பின் வந்த உரையாசிரியர்கள் அனைவரும் மறக்காது இவற்றினுக்கு அணி செய்து பேசுகின்றனர். சங்கப் பாடல்கள், பல இடங்களில் பல்வேறு காலங்களில் வாழ்ந்தோர் பாடியவை. இவை சங்கத்தில் படியெடுத்து வைக்கப் பெற்றிராவிடின். எங்ஙனம் தொகையாகவும் பாட்டாகவும் தொகுக்கப்பட்டிருத்தல் கூடும்? இந்நூல்களே, சங்கமிருந்தமைக்கு ஏற்ற சான்றாகும். இன்ன

பிறவற்றால் முச்சங்கம் உண்மையென்பர் டாக்டர் உ.வே.சா., கா.சு.பிள்ளை, கா.அப்பாத்துரையார், பாவாணர் போன்றோர்.

### சங்கம் இருந்தமைக்கு மூவகைச் சான்றுகள் உள:

1. பிற்காலச் சான்றுகள்
2. முற்காலச் சான்றுகள் (இவை அகச்சான்றுகள்)
3. பிறர் குறிப்பு, கல்வெட்டு போன்ற புறச் சான்றுகள்

### பிற்காலப் பனுவல்கள் தரும் சான்றுகள்:

முதன் முதல் அப்பர் தேவாரத்தில் குறிப்பு வந்ததாக முன்னர் கண்டோம். அது தொடங்கி ஒவ்வொரு நூற்றாண்டு நூல்களும் சங்கத் தொடர்பினைச் சாற்றியே செல்கின்றன.

1. **கி.பி.7 ஆம் நூற்றாண்டைய ஞானசம்பந்தர்:**
   **‘பட்டி மன்தென்னன்’**
   **‘புகலி ஞானசம்பந்தன் உரை செய்**
   **சங்கமலி செந்தமிழ்கள்’ (திருத்தேவூர்)**
   **‘அந்தண் மதுரைத் தொகையாக் கினானும்....**
   **பெற்றொன் றுயர்ந்த பெருமான்’** (7-2)

2. **கி.பி.8ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆண்டாள்**
   **‘சங்கத் தமிழ்’** (திருப்பாவை-30)

3. **கி.பி.6ல் வதிந்த திருமங்கையாழ்வார்**
   **‘சங்க மலி தமிழ்’**
   **‘சங்க முகத்தமிழ்’** (பெரிய திருமொழி 3:4,10)

4. **கி.பி.9ல் வாழ்ந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள்:**
   **‘பொய்யடிமை யில்லாத புலவர்க்கு மடியேன்’**

5. **கி.பி.9ஆம் நூற்றாண்டவரான மாணிக்கவாசகர்:**
   **‘உறைவான் உயர்மதிற் கூடலில் ஆய்ந்தவொண்**
   **தீந்தமிழின்**
   **துறைவாய் நுழைத்தனையோ’** (திருக்கோவையார்-20)

**2. முற்கால இலக்கியச் சான்றுகள்:**

1. **‘நிலந் தரு திருவிற் பாண்டின் அவையத்துத்**
   **தொல்காப் பியனெ னெத் தன்பெயர் தோற்றி’** (தொல்.பாயிரம்)

2. **‘தொல்லாணை நல்லாசிரியர்**
   **புணர்கூட் டுண்ட புகழ்சால் சிறப்பின்**
   **நிலந்தரு திருவின் நெடியோன்’** (மதுரைக் காஞ்சி.761-63)

இங்கே, ‘நல்லாசிரியர் புணர்’ புணர்ப்ப (சங்கம்) என்றது தம்முள் ஒத்து புணர்ந்த கலப்பினையுடைய அவை என்றபடி.

3. **‘தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்**
   **மகிழ்நனை மறுகின் மதுரை’** (சிறு பாணா: 66-67)

இவன், ‘தமிழ்நிலை பெற்ற மறுகின் மதுரை’ தமிழ் வீற்றிருந்த தமிழ்ப் புலவர் உறைந்த தெருவிளையுடைய மதுரையை உணர்த்தும்.

4. **பொத்த யாண்ட பெருஞ்சோ ழனையும்,**
   **வித்தை யாண்ட விளம்பழையன் மாறனையும்,**
   **வைத்த வஞ்சினம் வாய்ப்ப வென்று’** (பதிற்.9 ஆம் பத்து-பதிகம்)

இதில் ‘வித்தையாண்ட...... மாறன்’ என்பது முத்தமிழையும் ஆண்டு ஆய்ந்த மாறனாம் பாண்டியனைக் குறிக்குமென்க.

5. **இமிழ்குரல் முரசம் மூன்றுடன் ஆளுந்**
   **தமிழ்கெழு கூடல் தண்கோல் வேந்தே’** (புறம்.58:12-13)

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்.

**‘ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி**
**மாங்குடி மருதன் தலைவனாக**
**உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்**
**புலவர் பாடாது வரைகஎன் நிலவரை’** (புறம். 72:13-16)

என வஞ்சினம் சாற்றினான். இதனால் முத்தமிழ், மதுரையில் ஆளப்பட்டதும் பாண்டியன் பேரணைப்பில் புலவர் பலர், பெரும் புலவர் ஒருவர் தலைமையில் ஒத்து வாழ்ந்த உண்மையும் தெரியவருகிறது.

## 1.3 சங்க இலக்கியம்

முச்சங்க நூல்களில், முதல் சங்க நூல்கள் எவையும் கிடைக்கவில்லை. இரண்டாம் சங்க இலக்கியங்கள் ஒன்றும் கிடைத்தில: இலக்கண நூலாகிய தொல்காப்பியம் ஒன்றே கிடைத்துள்ளது. கடைச்சங்க நூல்கள் பெரும்பான்மை கிடைத்தன. சங்க நூல்கள் ஆயினமையின், இவை சங்க இலக்கியங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

### தோற்றமும் தொகுப்பும்:

தெள்ள தமிழ்ப் பாக்களை அள்ளிப் பருகி அக மகிழ்ந்த நல்லிசை புலவோர் சிலர், அப்பாக்கள் அனைத்தும் குறைந்தும் மறைந்தும் வருதலைக் கண்டு உளம் வெதும்பினர், உதிரியான பாக்கள் அனைத்தும் ஒன்றுபட்டால்தான் அவற்றிற்கு உண்டு வாழ்வென உணர்ந்தனர்: அங்ஙனம் ஒன்று திரட்டும் பொறுப்பும் பணியும் தமதெனத் தெளிந்தனர். உள்ளம் உணரவே ஊக்கத்தோடும் உறுதியோடும் ஒன்று திரட்டினர்: அடியையே அளவாக, அகத்தையும் புறத்தையுமே எல்லையாக: பா வொப்புமையே வரம்பாகக் கொண்டு தொகை தொகையாக வகை செய்தனர். கவியரசர் கவிதைகளைத் திரட்டவே, புவியரசரும், போற்றித் துணை நின்றனர்: இங்ஙனம் காவலர் போற்றப் பாவலர் தொகுத்தனவே இன்று நாம் காணும் எட்டுத் தொகையும் ஏனைய பிறவும். இதனால் சங்கப் பாடல்கள் தோன்றிய காலம் வேறு, தொகுக்கப் பெற்ற காலம் வேறு என்றறியலாம். தோன்றிய காலம் முதல் தொகுக்கப் பெற்ற காலம் வரை அமைந்த நல்ல பாடல்களின் தொகுதிகளே பாட்டும் தொகையுமாகும். சங்கப் பாக்களின் தொகை 2381: பாடிய புலவர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 500, பெயர் தெரியாப் புலவர் 102 (இவற்றில் பரிபாடல் கலித்தொகை, திருமுருகாற்றுப்படை மூன்றும் பிற்காலத்தன என்பர் சிலர்) தொல்காப்பியம், திருக்குறள், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை இவை சங்க இலக்கியமெனச் சான்றோர் செப்புவர்.

## 1.4 பாட்டும் தொகையும்

சங்கச் செய்யுட்கள் குறைந்த அடிகளைக் கொண்டவை. நிறைந்த அடிகளையுடையவை எனத் தனித்தனியாகத் தொகுத்தனர்: அவை, முறையே எட்டுத்தொகை, பத்துப்பாட்டு எனப் பெறும். இரண்டும் இணைந்த 18 நூல்களே மேற்க்கணக்காம். மேல்-பெரிய, கணக்கு-நூல், பன்னிருபாட்டியல் இதன் இலக்கணம் பகர்கிறது.

**ஐம்பது முதலா ஐந்நூறு ஈறா**
**ஐவகை பாவும் பொருள் நெறிமரபின்**
**தொகுக்கப் படுவது மேற்கணக் காகும்.**

இதனால், மிகுந்த அடிகளை-நான்கடிக்கு மேல் இயன்றனவான பேரெல்லை அடிகளைக் கொண்ட பாடல்களையுடையது. ‘மேற்கணக்கு’ என்பது பெற்றோம். இப்பதினெண் பனுவல்களும்

தொகை, பாட்டு என இரு முறையில் அமைந்து, அகம் புறம் என இரு வகையான இயன்று, அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு உறுதிகளையும் நன்கியம்புவன. சிலவாய மொழிகளில் பலவாய கருத்துக்களைப் பல்வகைத் துறையில் சொல்லிச் செல்வன.

மேற்க்கணக்கில் முதற்கண் தொகுக்கப் பெற்றது எட்டுத் தொகையே. அவை இன்னின்ன என்பதைப் பழம் பாட்டொன்று.

**நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு**
**ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்**
**கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறமென்று**
**இத்திறத்த எட்டுத் தொகை.**

எனப் பேசுகிறது. தொகுப்பட்டமையால் இது தொகை எனப்படுகிறது. ‘எண் பெருந் தொகை’ எனவும்படும். இப்பெயரிட்டு எவர் எப்போது அழைத்தார் என்றறியுமாறில்லை. நன்னூல் மயிலை நாதர் (சூ.387) உரையிலும், தொல், பேராசிரியர் உரையிலும் வருகின்றன. அடியளவு, பொருட்போக்கு, பாவகை எனும் முத்திறத்தது. அகம் பற்றியன. 5. புறம் பற்றியன 2. இரண்டும் கொண்டது என்ற மூவகையது. அக நூல்கள் அனைத்தும் சிதையாது முழுமையுடன் கிடைத்துள்ளன: புறநூல்களோ சிதைந்தும் குறைந்தும் பாடபேதம் மிகுந்தும் உள்ளன.

எட்டுத்தொகையில் கிட்டத்தட்ட காணும் 2360 பாக்களையும் பாடியோர் 500 புலவர்கள், பல ஊரினர்: பலவாய தொழிலினர்: பல்வேறு காலத்தவர். அரசப் புலவோர் பலர்: பெண்பாற் புலவோர் சிலர். இத்துணை பேர் பாடிய அத்துணை பாடல்களும் அகம் புறமெனும் இரு திணையில் அமைந்து, ஒருவரே பாடினாற் போன்ற பாங்கும் பொற்றொளிர்கின்றன. ஒரே வகை மரபு, ஒரு திற இலக்கியப் போக்கு, ஒரு நெறியாய நாகரிகம், இன் தமிழ் நாட்டில் ஒளிர்ந்த ஒண்மையினை இ.்.துணர்த்துகிறது. பரியும் கலியும் போக, எஞ்சிய ஆறு நூல்களும் ஆசிரியப் பாவானும் சில கால் வஞ்சியானும் இயன்றும் வருவன. ஆசிரியம் 3 அடிச் சிறுமையும், பல நூறு அடிப்பெருமையும் உடையது.

இத்தொகை, பல்வகைப் பொருள் பற்றியது. மன்னர் மறம், மகளிர் திறம், மக்கள் வழக்கமும் பழக்கமும், அறநெறி, ஐந்திணை அருமை, ஆட்சிமுறை, வள்ளண்மை, வாழ்வுநெறி, வரலாற்றுக்கூறு, புராணச் செய்தி, போர்முறை, பண்பு நிலை போன்ற புகட்டும். இனி, எட்டின் இயல்பும் ஏற்றமும் எண்ணுவாம்.

**1.நற்றிணை:**

400 அகவற் பாக்கள் கொண்டது. ‘நற்றிணை நானூறு’ என்றும் வழங்கும். 9-12 அடிகளையுடையது. தொகுப்பித்தவன், பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழி, தொகுத்தவர் பெயர் தெரியவில்லை. பாடிய புலவர்கள் 175, பாரதம் பாடிய பெருந்தேவனாரின் திருமால் பற்றிய பாடல், கடவுள் வாழ்த்தாக அமைகிறது. எட்டுத்தொகையில் முதற்கண் வைத்தெண்ணப்படுவது. அகப்பொருட் பரிவுகளில் ஒன்றான திணையும், நல் என்ற அடைமொழியும் சேர, இந்நூல் பெயர் பெற்றுள்ளது.

நினைக்கத்தக்க நற்கருத்துக்கள்: ‘செல்வம் எது?’ என்பதனை எத்துணை அழகுபட மொழிகிறது ஒரு பாடல்! பிறர் நம்மைச் சிறப்பித்துக் கூறும் புகழுரைகளோ விரைந்து செல்லும் சிறப்புமிக்க ஊர்திகளோ செல்வம் ஆகா, அவை அவரவர் செய்த நல்வினையின் இம்மைப் பயன். சான்றோர் செல்வமெனச் செப்புவது, தன்னைச் சார்ந்தோர் மனம் புண்படுத்தாத-அவர்கள் துன்பம் கண்டு நெஞ்சம் நெக்குருகும் தன்மையேயாம் என இலக்கணம் வகுக்கும் பாடல் இதோ:

**‘நெடிய மொழிதலும், கடிய ஊர்தலும்,**
**செல்வம், அன்று, தன் செய்வினைப் பயனே**
**சான்றோர் செல்வம் என்பது, சேர்ந்தோர்**
**புன்கண் அஞ்சும் பண்பின்**
**மென்கண் செல்வம் செல்வம் என்பதுவே’** (210)

ஓரறிவுயிர்களிடத்தும் உறவு கொள்ளும் - உலகத்துயிர்களிடத் தெல்லாம் அன்பு செலுத்தும் ஒண்மை உணர்த்துகிறது ஒரு பாட்டு (172). தலைவன் தன் காதலியால் காதற் குறும்பு மொழி பேசுகின்றான். இ.்.தொன்றும் புதியதன்று, என்றும் போலத்தான் அன்றும் பேசினான். ஒரு புன்னை மரத்தின் கீழ் நின்று! ஆனால் அந் நங்கையோ நாணம் மிகக் கொண்டு நழுவிச் சென்றாள். தலைவனுக்கு ஒன்றும் புரியவில்லை. காரணம் என்னவென்று அறிந்தான். அந்தப் புன்னை மரம் சாதாரணப் புன்னை மரமன்றாம் தன் காதலிக்குத் தமக்கை முறையாம்! தன் காதலியின் தாய் சின்னஞ்சிறு வயதில் விளையாடும் போது வெண்மணலில் மறந்து விட்டுச்சென்ற புன்னைக் கொட்டை முளைத்துச் செடியாக நின்றது. நாளும் நீரும் பாலும் நெய்யும் ஊற்றிப் பிள்ளை போல் வளர்த்தாள். செடியும் மரமாகியது சேயிழைக்கும் மணமாயிற்று பெண் குழந்தை ஒன்றும் பிறந்தது. அக்குழந்தை வளர்ந்து பருவமடைந்து காதல் நிலையுற்றது. அக்குழந்தையே தன் காதலி, அவளிடம் அவள் தாய் அடிக்கடி கூறியுள்ளாளாம் ‘இப்புன்னை உன் தமக்கை’ என்று. ஆக தன் தாய் வளர்த்திட்ட அன்புன்னை மரம் தனக்கு அக்காள் முறை, அக்காள் முன்பாக தங்கை தன் காதலனோடு நகையாடி நிற்கலாமா? என்னே கவிஞனின் இதயப் பாங்கு? என்னே பழந்தமிழனின் இயற்கை ஈடுபாடும் நெருக்கமும்!

காதலி சுவரிலே கோடிட்டு காதலன் வரவை எண்ணும் வழக்கம் 324 ஆம் பாட்டில் வருகிறது. இறப்பதற்கு அஞ்சேன். மறு பிறப்பில் தலைவனை மறக்க நேருமோ என்றுதான் அஞ்சுகிறேன் எனும் உண்மைக் காதலின் ஒண்மை, ‘சாதல் அஞ்சேன்! அஞ்சுவல் சாவில் பிறப்புப் பிரிதாகுவதாயின் மறக்குவன் கொல் என் காதலன் எனவே’ (397) எனப் பேசப்படுகிறது. கற்புடைய பெண்டிர், புக்ககம் எவ்வளவுதான் வறுமையுற்று வாடினும், ஏற்றமுடைய வளம் மிக்க பிறப்பகத்தை நினையாள் எனும் பண்பு, ‘கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக் கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்’ என்றும், தேர்க் கால்களில் நண்டுகள் அகப்பட்டு நசுங்கா வண்ணம் தேரைச் செலுத்திய அருள் உயர்வினை. ‘ஆழி மருங்கின் அலவன் ஓம்பி, வலவன் வள்பாய்ந்தூர் (11) என்றும், இரவில் விருந்துவரின் உவக்கும் இனிய பண்பும் (142) குறிக்கப்படுகின்றன. கண்ணகி கதை குறிப்பதாக ஒரு சங்கப்பாடல் உண்டு நற்றிணையில்தான் வருகிறது. ‘ஏதிலாளன் கவலை கவற்ற, ஒரு முலை அறுத்த திருமா உண்ணி’ உளங்கவர் உவமைகள் சில் ‘பலர் கொள் பலகை போல’(30) ‘தேய்புரிப் பழங் கயிறு போல (284) நின்ற கொல்லர் (Man of words) செயல்படு மனத்தார் (a man of action) நீடுதோன்றினியார் (A beautiful personality) போன்ற சொற்கள் இயன்று வருகின்றன. பிற்காலத் தூது இலக்கியங்களுக்கு வாயிலாகக் குருகு, நாரை, கிளி போன்ற தூது விடப்படும் மரபும் நற்றிணையில் உண்டு. முந்தையிருந்து நட்டோர் கொடுப்பின், நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்’ (355) நாடி நட்பினல்லது, நட்பு நாடார் தம் ஒட்டியோர் திறத்தே’ (327) என்பன. 580, 791 ஆகிய குறட்பாக்களைத் தழுவி நிற்கின்றன. தனி மகனார், தேய்புரிப் பழங்கயிற்றினார், விழிக்கட் பேதைப் பெருங்கண்ணனார் எனப் பாடலால் பெயர் பெற்ற புலவர்கள் உளர்.

## 2.குறுந்தொகை

400 அகவல்கள் கொண்டது. ‘குறுந்தொகை நானூறு’ என்றும் வழங்கும், 4-8 அடிகள் உடையது. தொகுப்பித்தவன் பூரிக்கோ தொகுத்தவர் உப்பூரி குடிகிழார் ஆகலாம். பாடியோர் 205 கடவுள் வாழ்த்து, பாரதம் பாடிய பெருந்தேவனாரின் முருகவேள் பற்றிய பாட்டு 380 பாடல்கட்கும் பேராசிரியரும், எஞ்சிய 20 பாக்களுக்கு நச்சினார்க்கினியரும் உரை எழுதியதாகச் சிந்தாமணிச் சிறப்புப் பாயிரத்தில் நச்சர் குறிக்கிறார். ஆனால் அவை கிடைத்தில. குறுகிய அடிகளால் ஆன பாடல்களின் தொகுப்பாதலின் இப்பெயர் வந்தது.

‘நல்ல’ என்ற அடை மொழி பெற்ற சிறப்பும், உரையாசிரியர்களால் மிகவும் மேற்கோள் காட்டபட்ட மாண்பும் தொகை நூல்களில் முதலில் தொகுக்கப் பெற்ற பெருமையும் உடையது. அ.ஃ.றிணை உயிர்களைக் கொண்டு ஆறறிவு மாந்தர் தம் அக நிலையினைப் படம் பிடித்துக்காட்டும் இணையற்ற பனுவல். இறையனார் தருமிக்கு எழுதிக் கொடுத்த கீரனோடு வாதிட நேர்ந்த கொங்குதேர் வாழ்க்கை எனும் பாடல், இந்நூலில்தான் இம் பெற்றுள்ளது. ஆதிமந்தியார் போன்ற காவியத்தலைமையும் வரலாற்றுச் சிறப்பும் மிக்கோர் பாடல்களும்

இங்கேதான் உள. அணிலாடு முன்றிலார், காக்கைப் பாடினியார், குப்பைக் கோழியார், விட்ட குதிரையார், மீனெறி தூண்டிலார் எனப் பாவால் பெயர் பெற்றோர் பலருளர்.

**நெஞ்சகலா நற்செய்திகள்:**

குறுந்தொகை பாடல்கள் அனைத்தும் சுவையூட்டும் தரத்தன. இரு நெஞ்சங்கள் எக்காரணமுமின்றி இணைந்து ஒன்றும் இயல்பினை, 'யாயும் ஞாயும்...' எனத் தொடங்கும் பாடலும் (40) புதுப்பெண் மோர்க்குழம்பு வைத்துத் தலைவனிடம் பாராட்டுப் பெறும் பாங்கினை, 'முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்.....' என்ற பாட்டும் (107) இற்செறிக்கப்பட்டுக் காம நோயால் வெதும்பும் தலைவியை, 'குப்பைக் கோழித்தனிப்போர் போல, விளிவாங்கு விளியின் அல்லது களைவோர் இலையான் உற்ற நோய்க்கே (305) என்றும் தலைவியின் மென்மை நெஞ்சும்.

ஆண் குரங்கு இறந்துபட, மலை முகடேறி வீழ்ந்து உயிர் மாய்க்கும் மந்தியின் மனத்தைவிட மென்மையது (69) எனவும் நயம்படச் சித்திரிக்கிறது. 'வினையே ஆடவர்க்கு உயிரே மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர் (125) உள்ளது சிதைப்போர் உளர் எனப்பாடார்' போன்ற அரிய உண்மைகள் அளவின்றியுள்ளன. மனைவிக்குத் தக ஆடும் ஆடவன் (ர்நடீநஉமநன ர்ரளடியனெள) 'கையும் காலும் தூக்கத் தூக்கும் ஆடிப் பாவை போல் (8) என்றும் தன்பால் தோன்றிய காம நோயினைக் காத்தற்கியலாத் தலைவன், கையில் ஊமன் கண்ணிற் காக்கும் வெண்ணெய் உணங்கல் போல' (58) என்று உவமிக்கப்படும் அழகு நெஞ்சை உருக்கும் நீர்மையது. யாய் (My mother), ஞாய் (Your mother) எந்தை (My father), நுந்தை(Your Father) என்ற சொற்செட்டும் செறிவும் அனுபவிக்கத் தக்கன.

## 3.ஐங்குறுநூறு

ஐந்து திணைக்கும் தனித்தனியே நூறு நூறு பாடல்கள் கொண்டு, குறைந்த அடிகளையுடைய பாவால் இயன்றமையான் இப்பெயர் பெற்றது. 3-6 அடிகளையுடையது. ஒவ்வொரு நூறும் பத்துப் பத்தாகப் பிரிக்கப்பட்டு, அதன் பொருளமைதியாலோ, பயின்றுவரும் சொல்லாலோ பெயரிடப்பட்டுள்ளது. பாரதம் பாடிய பெருந்தேவனாரின் சிவன் பற்றிய பாடல் கடவுள் வாழ்த்தாகக் காட்சியளிக்கிறது. தொகுத்தவர், புலத்துறை முற்றிய கூடலூர் கிழார். தொகுப்பித்தவன், யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை, பழைய உரை ஒன்றுண்டு, எழுதியவர் பெயர் தெரியவில்லை. ஐந்து திணைகளும் ஐவேறு புலவர்களால் பாடப்பட்டமை.

**மருதம்ஓ ரம்போகி, நெய்தல்அம் மூவன்**
**கருதும் குறிஞ்சி கபிலன் - கருது**
**பாலைஓ லாந்தை, பனிமுல்லை பேயனே**
**நூலைஓ துஐங்குறு நூறு.**

எனும் படைய வெண்பாவால் தெளியலாம். 500 பாடல்கள் ஐந்தாக வகுக்கப் பட்டு, ஒவ்வொரு நூறும் பப்பத்தாகப் பகுக்கப்பட்ட நுண்மையும், மருதத்தை முதற்கண் கொண்டொளிரும் மாண்பும், மூன்றே அடிகளில் முதல், கரு, உரி முப்பொருளையும் குறைவறக் கூறும் முதன்மையும், பறவை விலங்கினங்களைக் கொண்டே ஐந்திணையை அருமையாக விளக்கும் அழகும், இயற்கை எழிலையும் உலகப் பொருள்களின் இயல்பையும் சில சொல்லால் எடுத்துரைக்கும் ஏற்றமும் தமிழ்ச்சுவை இனிமையும் ஒருங்கே கொண்டொளிரும் உயரிய நூல்.

### மறக்கவியலாத பகுதிகள்:

தலைவியை உடனழைத்துச் சென்று தன்னூரில் திருமணம் செய்து கொள்கிறான் தலைவன். தலைவியின் பெற்றோர் இருவரையும் தம்மூருக்கு அழைத்தனர். அவர்களும் வந்தனர். இதுகாறும் தலைவியைப் பிரிந்த தோழி அவளைத் தழுவி, அவளது புதுவாழ்வினைப் பற்றி அறிய அவா மிகக் கொண்டு செய்தியை வாங்குவதற்காக, 'ஆமாம் தலைவி! உன் தலைவர் நாட்டகத்து உண்ணுநீர்கூட இல்லையாமே? உன்னால் அங்க எப்படி வாழ முடிந்தது?' என்றாள், தலைவியும், 'ஆம் தோழி நீ செப்பிய உண்மையே! ஆங்கு வகையான நீர்நிலைகூட இல்லை! இருப்பவை கூட, இலை தழை வீழுந்தமையால் அழுகியும், மான் போன்ற விலங்குகள் குடிப்பதால் கலங்கியும் இருக்கின்றன. இருப்பினும் அந்த அருவருக்கத்தக்க எச்சில் நீரும் எத்துணை இனிமையுடையது தெரியுமா? நம் தோட்டத்துத் தேனினைத் தீம்பாலுடன் கலந்து உண்டால் எப்படி இருக்கும். அப்படி இனித்தது! எனப் பதிலிறுத்தாள். காதலன்பு கனிந்திருக்குமிடத்தில், வேறு எப்பொருள் இருந்தால் என்ன? இல்லாவிட்டால்தான் என்ன? எல்லாம் இருப்பதாகவன்றோ இதயம் மகிழும்! அன்பின் திறம்தான் என்னே! இதோ அவ்வினிய பாடல்.

**அன்னாய் வாழிவே டன்னைநம் படப்பை**
**தேன்மயங்கு பாலினும் இனிய அவர்நாட்டு**
**உவலைக் கூவற் கீழ்**
**மானுண் டெஞ்சிய கலுழி நீரே** (203)

இந்திர விழா (62) மார்கழி நீராடல் (84) தொண்டி (171) கொற்கை(185) பற்றிய செய்திகளும் வருகின்றன.

### 4.அகநானூறு

'அகம் 'அகப்பாட்டு' எனப்படும். நீண்ட அடிகளான் ஆனமையின் 'நெடுந்தொகை' எனப்பெறும். ஆயினும் அவ்வொழுக்கத்தாலேயே அழைக்கப் பெறுவது இதன் சிறப்புணர்த்தும் 13-31 அடிகளையுடையது. தொகுத்தோன் மதுரை உப்பூரி குடிகிழான் மகன் உருத்திர சன்மன்

தொகுப்பித்தவன் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி, வில்லவதரையன் பாடிய பாயிரம் என்று இது பாரதம் பாடிய பெருந்தேவனாரின் சிவன் பற்றிய கடவுள் வாழ்த்து உள்ளது.

### பாடல்களின் வைப்பு முறை:

ஒற்றை எண்பட வருவன பாலை - 200 பாக்கள் 10,20,30 என வருவன நெய்தல் 40 பாடல்கள் 4,14 என 4 எனும் எண்ணைப் பெற்று வருவன முல்லை 40 செய்யுட்கள், 2,8,12,18 என 2,8 எனும் எண்கைக் கொண்டு வருவன குறிஞ்சி 80 பாடல்கள் 6,16,26 என 6 எனும் எண்ணைப் பெற்று வருவன மருதம் 40 பாடல்கள் செறிவு மிகு பாடல்கள்: செந்தமிழ் இன்பம் சிந்தும் செய்யுட்கள். பழைய குறிப்புரை ஒன்றுண்டு அதுவும் முதல் 90 பாடல்கட்கே. இந்நூல் முப்பிரிவினையுடையது. 1-120 பாடல்கள் 'களிற்றியானைநிரை' இப்பகுதியின் நடையும் பிறவும், களிறு போன்ற கம்பீரத் தோற்றமுடன் காணப்படுதலான் இங்ஙனம் இயம்பப்படுகிறது. 121-300 'மணிமிடைபவளம்' இப்பகுதி, மணியும் பவளமும் கலந்தாற் போன்ற நடையும் நலமும் பொலிவும் கொண்டமையான் இப்பெயர் பெற்றது. 301-400 'நித்திலக்கோவை' இப்பகுதி முத்துக் கோர்த்தாற்போல சீரான பொருளும் சரளமான நடையும் கொண்டொளிர்தலான் இப்பெயர் ஏற்றது. பாடிய புலவர்கள் 145. ஊட்டியா, நோய் பாடியார் எனப் பாவால் பெயர் பெற்றோரும் உளர்.

### அகமகலா அரிய செய்திகள்:

பரத்தை மனையிலே நிகழும் திருமணத்திற்குத் தேரேறிச் சென்றுகொண்டு இருந்தான் தலைவன். இதனைக் கண்டு இதயம் நொந்து தன் மைந்தனோடு வருந்தியிருந்தாள் தலைவி. தேரின் மணியோசை கேட்டுச் சிறுவன் தெருவைக் கடந்து சென்றான். புதல்வனைக் கண்ட தலைவன் இறங்கி ஆவலோடு எடுத்து, 'வீட்டினுள் செல்க' என்றான். புதல்வன் அழுது நின்றான். எனவே அவனைத் தோளில் தூக்கிக்கொண்டு வீட்டினுள் வந்தான். மறைந்திருந்து இதனைக் கண்ட தலைவி, தலைவன்மேல் இருந்த ஆத்திரத்தைப் பிள்ளைமேல் காட்டினாள். இவரைப் போகவிடாமல் தடுத்தனனே இக்கொடியவன் என கடிந்தாள் கோலோச்சினாள், தலைவன் அடி விழாதபடி தோளோடு அணைத்துக்கொண்டான். அது போது பரத்தை வீட்டு மணவிழா முழக்கம் கேட்டது. மண நேரம் நெருங்கியும், மகப்பாசத்தால் தலைவன் ஆங்குச் செல்லாது நின்றான். 'தோழி, பலரும் இயம்பும் பழமொழி உண்மையாவதை இதுபோது உணர்ந்தேன். பகைவரும் விரும்பும் கள்ளமிலாக் குழந்தைகளைப் பெற்றவர்கள் இம்மையில் மட்டுமல்லாது, மறுமையிலும் குற்றமற்று விளங்குவர் என்பது வாய்மையே! தலைவி கூறுவதாக அமையும் பாடல் இதோ.

**இம்மை உலகத்து இசையொடும் விளங்கி**
**மறுமை யுலகமும் மறுவின்றி எய்துப**
**செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சிச்**
**சிறுவர்ப் பயந்த செம்ம லோரெனப்**
**பல்லோர் கூறிய பழமொழி யெல்லாம்**
**வாயயொகுதல் வாய்த்தனம் தோழி!** (667)

பண்டைத் தமிழர் திருமணமுறை 86, 136 பாடல்களில் விளக்கப்பட்டுள்ளது. இத்திருமணத்தில் தீ வளர்த்தலோ, தீ வலம் வருதலோ, தட்சணை பெறப் புரோகிதர் புகுதலோ இல்லை இவை முற்றும் தமிழர்க்கே உரிய மணமுறையாம் என்கிறார் சீனிவாச ஐயங்கார். தினைப்புனங்காக்கும் பெண் குறிஞ்சிப் பண்பாட, உண்ண வந்த யானை ஒன்றும் செய்யாது செயலற்று உறங்கியது (102) பங்குனி விழா (137) கார்த்திகை விளக்கு, சிறு பிள்ளைகளுக்குக் காத்தற் கடவுளான திருமாலின் ஐந்து படைகளின் உருவங்களும் பொறித்த ஐம்படைத்தாலி அணிவித்தல் (54) வற்றிய வயிறும் நீராட உடலும் உடைய சமணத் துறவிகள் இருந்தனர் (123) போன்ற செய்திகள் வருகின்றன.

அகம் பற்றியதேயாயினும் அரிய பல வரலாற்றுக் குறிப்புகள் கொண்டுள்ளது. கங்கர், பாணர், திரையர் பற்றிய செய்திகளும், (மகதநாட்டு) நந்தர்கள் தம் செல்வத்தைக் கங்கையாற்றினடியில் புதைத்து வைத்திருந்தமை (265,251) மௌரியர் படையெடுப்பு (69,281,375) 'யவனர் தந்த வினைமாண் நன்கலம், பொன்னொடு வந்து கறியொடு பெயரும்' (148) ஆதிமந்தி (76) குடவோலைத் தேர்தல் முறை (77) தித்தன், மத்தி, நெடுஞ்செழியன் முதலியோர் பற்றிய குறிப்புகள் போன்ற சிறந்த கூறுகள் சிதறிக் கிடக்கின்றன.

### 5.கலித்தொகை

முன்னவை நான்கும் அகவற் பாவில் அமைய இ∴தொன்று மட்டும் முழுதும் கலிப்பாவால் ஆனது. தரவு, தாழிசை, சரிதகம், தனிச்சொல் எனும் அமைப்பினது. 150 பாடல்கள்,

**பெருங்கடுங் கோன் பாலை, கபிலன் குறிஞ்சி**
**மருதனின் நாகன் மருதம் - அருஞ்சோழன்**
**நல்லுருந் திரன்முல்லை, நல்லந் துவனெய்தல்**
**கல்விவலார் கண்ட கலி.**

என்ற வெண்பாவான் ஐந்திணைகளையும் ஐவர் பாடினார் என்றறிகிறோம். ஆனாலும் சிவராஜ பிள்ளை போன்றார் ஒருவரே பாடியிருக்க வேண்டும் என்கின்றனர். முன்னதே பலர் முடியாகும். கடவுள் வாழ்த்து பாடி முதலில் வைத்து, இதனைத் தொகுத்தவர் இந்நூல் நெய்தற் பகுதி பாடிய நல்லந்துவனார். கலிப்பாட்டு ஒவ்வொன்றையும் வைத்து ஒரு கதையே புனைந்துவிடலாம். நாடகமே இயற்றி விடலாம். 'கற்றறிந்தார் ஏத்தும் கலி' எனும் அடைச்சிறப்பு பெற்றது 'திருத்தகு மாமுனி சிந்தாமணி, கம்பன் விருத்த கவிவளமும், வேண்டோம்-திருக்குறளே கொங்குவேள் மாக்கதையே கொள்ளேம் நனி ஆர்வம் பொங்கலி இன்பப் பொருள்' எனப் புலவர்களால் பாராட்டப்படும் பெருமையது.

ஆயினும் இது சேர, சோழ நாடுகள் பற்றி எக்குறிப்பும் இல்லாது, பாண்டி நாடு, மன்னன் பற்றியே பேசுகிறது. ஒருபாற் காதல், பொருந்தாக்காதல், ஏவலர், அடிமைகள் பற்றிய உறவுகள், புராணக் கூறுகள் மிகவும் கொண்டு நடைமிடுக்கின்றி ஒரே துறை பற்றிப் பல பாடல்கள் வரச் சுவையற்றுச் செல்கிறது. இதனால் எட்டுத்தொகையில் காலத்தால் பிந்தியது இஃதென்பர். சங்க இறுதியாகிய கி.பி.300 இதன் காலம் என்பர் கலை முனைவர் இராசமாணிக்கனார்.

## இனிய பகுதிகள்:

பாலைக்கலி 35 பாடல்கள். தலைவன் பிரிவைத் தடுப்பதாக அமைகிறது. ‘உண்ணீர் வறப்பப் புலவர்வாடு நாவிற்குத் தண்ணீர் பெறாஅத் தடுமுற்றருந்துயரம் கண்ணீர் நினைக்கும் கடும் காடு’ எனப் பாலையின் கொடுமை குறிக்கப் பெறுகிறது. கடன் வாங்கும் போது மகிழ்ச்சியும், அதனைத் திருப்பிக் கொடுக்கும்போது துயரமும் தோன்றும் இதனை,

**‘உண்கடன் வழிமொழிந் திரக்குங்கால் முகனும்தாங்**
**கொண்டது கொடுக்குங்கால் முகனும் வேறாகுதல்**
**பண்டுமிவ் வுலகத்து இயற்கை அஃதின்றும்**
**புதுவ தன்றே புலனுடை மாந்திர்’** (22)

எனக் குறிக்கப் பெறுகிறது.

## குறிஞ்சிக்கலி:

29 பாக்கள், தலைவனை விரைந்து மணம் முடிக்க வேண்டுவதாக அமைவது, தலைவனிடம் பொய் தோன்றாது, அப்படிச் தோன்றுமேல் சந்திரனிடம் தீ தோன்றுவது போன்றாம் எனத் தலைவன் உயர் பண்பினை உணர்த்துகிறது. உண்ண நீர் கேட்டு வந்து பெண்ணின் கரம் பிடிக்க அவள் அய்யோ முறையோவென, தாய் ஓடிவர விக்கியதாகக் கூறித் தலைவி சமாளிக்க, பெண்ணைப் பெற்றவளே தன்னைப் புறம் நீவ, கடைக்கண்ணால் காதலியை நகை செய்துவந்த தலைவன் கதையும் (குறி15) தொழுநோய் பிடித்த பார்ப்பான் தனித்து நின்று பெண்ணொருத்தியிடம் இச்சகம் பேச, அவள் ஏதும் பேசாதிருக்க பேயோ பிசாசோ என இவன் அலறிப் புடைத்துக்கொண்டு ஓடிய அரிய கதையும் (குறி29) இங்கே வருகிறது.

## மருதக்கலி:

பாடல்கள் 35, பரத்தைபால் சென்று மீண்ட தலைவன் தலைவியின் ஊடல் தீர்க்கத் தவிக்கும் பகுதி, பரத்தையைத் தலைவி பழித்துக் கூறும் பகுதிகள் நகை விளக்கும் நீர்மையன.

## முல்லைக்கலி:

17 கலிகள், ஏறு தழுவுதலை எடுத்து மொழிவது கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும் புல்லாளே ஆய மகள்’ எனின், பண்டைக் காலப் பெண்டிரின் வீரம் விழையும் திறமென்னே!

### நெய்தற்கலி:

33 பாடல்கள், பரிவாற்றாத தலைவி புலத்தல், மடலேறுதல் போன்றன கூறுவது. மாலைப்பொழுது மாண்புடன் வருணிக்கப்பட்டுள்ளது. பண்புகள் பற்றிய செறிவுமிகு விளக்கங்கள் சிந்தைகொள்ளும் சிறப்பின.

**'ஆற்றுதல்' என்பது ஒன்று அலர்ந்தவர்க் குதவுதல்**
**'போற்றுதல்' என்பது புணர்ந்தாரைப் பிரியாமை**
**'பண்பு' எனப் படுவது பாடு அறிந்து ஒழுகுதல்**
**'அன்பு' எனப்படுவது தன்கிளை செறா அமை**
**'அறிவு' எனப்படுவது பேதையார் சொல்நோன்றல்**
**'செறிவு' எனப்படுவது கூறியது மறாஅமை**
**'நிறைவு' எனப் படுவது மறைவிறர் அறியாமை**
**'முறை' எனப் படுவது கண்ணோடாது உயிர்வவ்வல்**
**'பொறை' எனப் படுவது போற்றாமைரப் பொறுத்தல்** (நெய்.16)

மார்கழி நோன்பு (59) தமிழச் சங்கம் (35) காமன் (94) இராவணன் கயிலையைப் பெயர்த்தது (38) வீமன் துரியனைத் துடையில் அடித்தது (52) துச்சாசனன் நெஞ்சைப் பிறந்தது (101) கண்ணன் (108) போன்ற குறிப்புகள் வருகின்றன. உவமைகளோ கணக்கற்றன.

### 6.பரிபாடல்

'பரிபாட்டு' என்றலம் உண்டு. பரிந்து செல்லும் ஓசையுடைய செய்யுட்களான் அமைந்த ஒருவகைச் செய்யுளாம். பல்வகைப் பாக்களும் பலவாய அடிகளும், பரிந்து வரும் பாட்டாகும். காமமே கருத்தாகக் கொண்டு, சிற்றெல்லை 25, பேரெல்லை 400மாக அடிகளைப் பெற்றிருக்கும் என்பர் தொல்காப்பியர். ஆதலின் இலக்கண முறைமையில் அகவிலக்கியமே. ஆனால் இதுபோதுள்ள பரிபாடல் நூலில் வையை, முருகன் பற்றிய பாடல்களே அகப்பொருள் அமைதியன. பக்தி நெறியும் பாண்டியர் வழியும் பெரிதும் பேசப்படுகின்றன. ஆதாலல் இது புறப்பொருள் போக்கும் பெற்றிருக்கிறது. எனவே இதனை அகமும் புறமும் இணைந்த நூல் என்றே இயம்பலாம். முழுதும் அகத்திலும் சேர்க்க வியலாது ஐந்திணைகளையும் நிலைபெறக் கொண்டு அகப்பொருள் கூறப்பெறவில்லை. முற்றிலும் புறத்திலும் இணைக்கவும் இயலாது. புறச்செய்தி புகலுவதே நோக்காக இல்லாது இறைவனைப் பற்றிய வழிபாட்டு நிலையும். அதன் வாயிலாக மதுரை, வையை அப்படியே பாண்டியர் தொகுப்பாக விளங்கிய இந்நூலில் இன்று 22 பாக்களே உள்ளன. அவையும் திருமால், முருகன், வையை ஆகியனபற்றி முறையே 6,8,8 என்ற நிரலில் அமைகின்றன. இவற்றைப் பாடியோர் 13 புலவர்களால் வகுக்கப்பட்ட பண்கள் இடம் பெறுகின்றன. பரிமேலழகரின் சீரிய உரையுளது.

மதுரை, திருப்பரங்குன்றம், திருமாலிருஞ்சோலை, வையை இவற்றின் சிறப்பும் நிலையும் குறிக்கப் பெறுகின்றன. அக்கால உணவு, ஆடை, அணிகள் கடவுள்கள், வழிபாடுகள், விழாக்கள் விளக்கப்பட்டுள்ளன. புதுப்புனல் விழாவும் மார்கழி நீராட்டு விழாவும் இனிதோ தரப்பட்டுள்ளன. மதுரையின் அமைப்பு, தாமரை மலருக்கு ஒப்பிடப்பட்டுள்ள அழகே அழகு.

**மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்**
**பூவொடு புரையுஞ் சீறூர் பூவின்**
**இதழகத்து அனைய தெருவம், இதழகத்து**
**அரும் பொகுட்டு அனைத்தே அண்ணல் கோயில்**

(திரட்டு7 நெய்தல், குவளை, ஆம்பல், சங்கம் என நீண்ட காலங் குறிக்கும் பேரெண்களும் (பா.2) ஒருகை இருகை நூறாயிரம் கை என எண்களும் (பா.3) பிறதொகை நூல்களில் இடம் பெறாப் புராணக் கதைகளும் வருகின்றன. இதன் காலம் கலித்தொகையோடு ஒட்டிய (3 ஆம் நூற்றாண்டின் இறுதி) காலம்.

**7.பதிற்றுப்பத்து:**

புறப்பொருள் நூல் சேர மன்னர் பதின்மரைப் பற்றிப் பத்துப் புலவர்கள் பாடியது.

**8.புறநானூறு:**

புறப்பொருள் பற்றிய 400 பாடல்கள் உடைமையின் இப்பெயரினது. ‘புறம்’ ‘புறப்பாட்டு’ ‘புறம் நானூறு’ என்றும் வழங்கும் ஆசிரியப் பாவான் இயன்றது. வஞ்சியடிகளும் விரவி வரும். பாரதம் பாடிய பெருந்தேவனாரின் சிவன் பற்றிய கடவுள் வாழ்த்து, முகப்பாக அமைகிறது. முரஞ்சியூர் முடிநாகராயர் தொடங்கி, கோவூர்க்கிழார் ஈறாக 160 புலவர்களால் பாடப்பெற்றது. தொகுத்தார் தொகுப்பித்தார் அறியுமாறில்லை. ஊன் பொதி பசுங்குடையார் தொடித்தலை விழுத்தண்டினார் போன்ற பாடற்றொடரான் பெயர் பெற்ற புலவர்களும் உளர். 4-40 அடிகள்.

அரசர் புலவர், பெண்பாற் புலவர் கவித்திறம், மூவேந்தர் ஆட்சியும் மாட்சியும், கடையெழுவள்ளல்கள் கொடைமடம், கபிலபரணர் போன்றார் பெருமை. அவ்வை அதியமான், கபிலர் பாரி, பெருந்தலைச் சாத்தனார் குமணன் பிசிராந்தையார் கோப்பெருஞ்சோழன் இவர்களின் நட்பின் திறம், பண்டை உணவு, உடை, வாழ்வு முறையும் பிறவும் அறியலாம். பாரதப்போரில் இரு கட்சிகட்கும் பெருஞ்சோற்று உதியன் சோறிட்டமை. 2.புரவலனைக் காட்டினும் புலவர் சிறந்தவராகக் கருதப்பட்டமை (அசரன் ‘அவன்’ என்றும் புலவர் ‘அவர்’ என்றும் குறிப்பிடப்படுவது காண்க) அஞ்சாது அரசனை இடிந்துரைத்து அறிவு கொளுத்தியமை (கோவூர்க் கிழார், வெள்ளைக்குடி நாகனார் போன்றார் பாட்டு) புலவர்களால் பாடப்பெறுதலைப் பெருமையாக அரசர்கள் கருதல் (நெடுஞ்செழியன் போன்றார் வஞ்சினம் நோக்குக) பண்டைத் தமிழரின் வானநூற் புலமை (30.229) ‘பீடின் மன்னர்ப் புகழ்ச்சி வேண்டிச் செய்யா கூறிக்கிளத்தல்

எய்யாதிகன்று எம்சிறு செந் நாவே' 'பெட்பின் றீதல் யாம் வேண்டலே' என்ற புலவர் பெருமிதம், 'நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே மன்னன் உயிர்த்தே மலர்தலையுலகம்' எனும் மக்கள் போக்கு 'மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர், தம்புகழ் நிறீஇத் தாமாய்ந்தனரே'ளூ 'புகழெனில் உயிரும் கொடுக்குவர் பழியெனில் உலகுடன் பெரினும் கொள்ளாலர்' எனும் பழந்தமிழர் பாங்கு போன்றன மறக்க வொண்ணாச் செய்திகள். புறப்பாட்டுதான். ஆனால் அதில்தான் எத்துணை அறநெறிக் கருத்துக்கள்! அவற்றில் சில செப்புவாம்.

'செல்வத்துப் பயனே ஈதல்' (புற.189) 'யாதும் ஊரெ யாவரும் கேளிர்' (புற 192) 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தாரோ' (18) 'அறநெறி முதற்றே அரசின் கொற்றம்' 'நல்லது செய்தல் ஆற்றீராயினும் அல்லது செய்தல் ஒம்புமின் (புற.195) 'வாழ்தல் வேண்டிப் பொய்கூறேன்ளூ மெய் கூறுவல்' 'பெரியோரை வியத்தலு மிலமே சிறியோரை இகழ்தல் அதனினு மிலமே' (192) 'இன்னா தம்ம இவ்வுலகம்ளூ இனிய காண்க அதன் இயல்புணர்ந்தோரே' (புற 194)

நிலையாமையை நன்குணர்த்தும் பாட்டு 242 ஒவ்வொருவர் கடமையும் உணர்த்துவது 312 மறத்திலும் அறம் கடைப்பிடித்தமை காட்டுவது 9 அகங்கவரும் அருமையது 320 பண்டைத் தமிழரின் பண்பு பளிச்சிடுகிறது இப்பாட்டில். வரலாற்று உண்மைகளை உள்ளடக்கிய வண்டமிழ்ப் பெட்டகமாக விளங்குகிறது இ∴து. தொல்காப்பிய இலக்கணத்தோடு பொருந்தாச் செய்யுட்கள் சில இதன்கண் இடம் பெறுவது கொண்டு இதனைத் தொகை நூல்களின் முதற்கண் தொகுக்கப்பட்டதாகும் என்கிறார் சிவராஜ் பிள்ளை. போப் ஐயருக்குத் தமிழன்பு தோன்றக் காரணமான நூல்களில் இதுவும் ஒன்று. ஒவ்வொரு ஆங்கில வருடப் பிறப்புதோறும் ஒரு புறப்பாட்டினை ஆங்கிலத்தில் பெயர்த்து மகிழ்ந்துள்ளார் அவர்.

பரிசில் வாழ்க்கை (47) அமரில் அறத்தாறு (9) நன்றி கொன்றார்க்கு நரகம் (34) பாமழை பொழிந்து நுண்ப∴றுளியினும் வாழிய! பலவே(34) நன்னீர்ப் ப∴றுளி மணலினும் பலவே(9) என வாழ்த்தும் புதுமுறை போன்றன அறியத் தக்கவை. 'எவ்வழி நல்லவர் ஆடவர், அவ்வழி நல்லை வாழிய நிலனே(187) என்று கருத்து இதிலேதான் வருகிறது

## 1.5. பத்துப்பாட்டு

பதினெண் மேற்கணக்கு நூல்களில் ஒரு பிரிவு இ∴து நெடும் பாடல்கள், பத்திணைக் கொண்டது, அவற்றை,

**முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை**
**பெருகு வளமதுரைக் காஞ்சி - மருவினிய**
**கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டிப்**
**பாலை கடாத்தொடும் பத்து**

என்கிறது பழம் பாடல், அனைத்தும் ஆசிரியப்பாவான் இயன்றவை. சிலவற்றில் வஞ்சியடிகள் விரவி வருதலுமுண்டு. ஆற்றுப்படைகள்5ளு திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை (மலைபடுகடாம்) இவ்வாற்றுப்படை மரபு வேறு எம் மொழியிலும் இல்லாததுளூ தமிழுக்கே உரிய தனிச் சிறப்பினது. அகப்பொருளான 3. முல்லைபாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, புறப்பொருளது 1. மதுரைக்காஞ்சி, அகமும் புறமும் தழுவியது1. நெடுநல்வாடை, பத்தையும் பாடியவர் எண்மர். நக்கீரர் முருகாற்றுப்படை நெடுநல்வாடையும் உருத்திரங்கண்ணனார் பட்டினப்பாலை பெரும்பாணாற்றுப்படையும் ஏனையோர் ஒவ்வொன்றும் பாடியுள்ளனர். பாடப்பட்டோரும் எண்மரே. கரிகாலன், பொருநாற்றுப்படை பட்டினப்பாலை இரண்டின் பாட்டுடைத் தலைவன் பாண்டியன் நெடுஞ்செழியன் நெடுநல்வாடை, மதுரைக்காஞ்சி சிறியது முல்லைப்பாட்டு, அனைத்தும் செறிவு மிகுந்தவை. கடின நடையின் பொருத்தமில் கற்பனைகளோ, பொருளற்ற உவமைகளோ காணலரிது பண்டைத் தமிழகத்தைப் படம் பிடித்துக் காட்டும் பான்மையன. வேந்தர் ஆட்சி முறையும், மக்கள் வாழ்வு வகையும் விளக்குவன. இயல் வாய்மையும் இயற்கை வளமையும் மிக்கன.

குறிஞ்சிப்பாட்டு, பொருநராற்றுப்படை, பட்டினப்பாலை, பெரும்பாணாற்றுப்படை ஆகியன கரிகாலன் காலத்தில் கி.பி.1.ஆம் நூற்றாண்டின் இறுதி இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தோன்றியன. மதுரைக்காஞ்சி, மலைபடுகடாம், நெடுநல்வாடை, முல்லைப்பாட்டு நான்கும் கி.பி.3ஆம் நூற்றாண்டின். சிறுபாணாற்றுப்படை 3ஆம் நூற்றாண்டின் இடையில் எழுதியிருக்கலாம் என்பர். ஆக பத்துப்பாட்டு தோன்றிய காலத்தில் திருமுருகாற்றுப்படை இருக்கக் கண்டோர் அது கடவுள் பற்றியதாகவும் சங்ககால நடையினை ஒட்டியதாகவும் இருக்கவே, அதனை முதலில் வைத்துத் தொகுத்தனர் போலும்! ஷேக்ஸ்பியர் படைப்புகளின் தொகுப்பு நூலில் (Complete work of shakesppeare) gpd; dhisa Tempest நாடகம் முதலில் அமையுமாறு போன்றது.

இறையனாரகப் பொருளுரையில் காணப்பெறும் கடைச்சங்க நூற் பெயர்ப் பட்டியலில் இத்தொகுதி இடம் பெறவில்லை. 12ஆம் நூற்றாண்டவரான இளம்பூரணரும் பத்துப்பாட்டுக்களையும் தனித்தனியே குறிப்பிடுகின்றாரே ஒழிய ‘பத்துப்பாட்டு’ என்றாரில்லை. 13ஆம் நூற்றாண்டினரான பேராசிரியர் ‘பாட்டு’ எனக் குறிக்கிறார். ஆனாலும் ‘பத்துப்பாட்டு’ என முதன் முதல் வருவது நன்னூல் 387 வது நூற்பா மயிலைநாதர் உரையில்தான்! ஆகலின் பத்துப்பாட்டு எனும் தொகுப்பு. 13-14 ஆம் நூற்றாண்டிற்குப் பின்னரே எழுந்திருக்க வேண்டும் எனலாம். இனி அவற்றின் விவரம் காண்போம்.

## 1. திருமுருகாற்றுப்படை

317 வரிகளை, ‘முருகு’ ‘புலவராற்றுப்படை’ எனவும்படும். ஆசிரியர் நக்கீரர், வீடு பேற்றுக்குச் சமைந்தானோர் இரவலனை, வீடு பெற்றான் ஒருவன் முருகனிடத்தே ஆற்றுப்படுத்துவதாக அமைவது. ஏனை ஆற்றுப்படைகள் ஆற்றுப்படுத்தக் பேறுவோனால் பெயர் பெற, இவ்வாற்றுப்படை, யாரிடத்தில் ஆற்றுப்படுத்தப்பட்டதோ அவர் பெயரான் வழங்குகின்றது! அங்ஙனமின்றி முருகனை ஆற்றுப்படுத்துவது என்பதாகவும் சிலர் செப்புவர். ஆறு பகுதிகளாக அமைகிறது.

**முதற் பகுதி:**

முருகனின் உருவம் அவனது மலைச்சிறப்பு, சூரர் மகளின் செயல்கள், சூரபதுமன் அழிதல், மதுரையின் மாண்பு, திருப்பரங்குன்ற இயற்கை வளம் முதலியன குறிக்கப் பெறுகின்றன.

**இரண்டாம் பகுதி:**

முருகனின் யானை இயல்பு, ஆறு முகங்களின் அருட்செயல், பன்னிரு கரங்கள் புரிவன, சீரலை வாயிலில் எழுந்தருளியுள்ளமை இயம்பப்படுகின்றன.

**மூன்றாம் பகுதி:**

வழிபட வரும் முனிவர் ஒழுக்கம், மகளிர் அழகு, திருவாவினங்குடித் தோற்றம் கூறப்பட்டுகின்றன.

**நான்காம் பகுதி:**

வழிபடும் அந்தணர் இயல்பும், வழிபடும் வளதியும் திருவேரக இருக்கையும் இயம்பப்படுகின்றன.

**ஐந்தாம் பகுதி:**

குன்றக் குரவை நிகழ்ச்சி, ஆடு-பாடு மகளிர் இயல்பு, முருகனின் ஆடை அணி அருஞ்செயல், குன்று தோராடல் வருகின்றன.

**ஆறாம் பகுதி:**

எழுந்தருளிய ஏனைய இடங்கள், அவனை வழிபடு முறைகள், அருள் பெறும் வழிகள், அவன் அருள்புரியும் வகை, அடியார் திறம், பழ முதிர்சோலைச் சிறப்பு சித்தரிக்கப்படுகின்றன. பக்திப் பனுவலாகவும் இயற்கைப் பெருங்காப்பியமாகவும் இலங்கும் இது, பண்டைத் தெய்வங்கள் திருவிழாக்கள், நாகரிகம் அறியவும் உதவுகிறது.

**இருஞ்சேற்று அகல்வயல் விரிந்துவாய் அவிழ்ந்த**
**முட்டாள் தாமரைத் துஞ்சி வைகறைக்**
**கட்கமழ் நெய்தல் ஊதி எல்படக்**
**கண்போல் மலர்ந்த காமரு சுனைமலர்**
**அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்.** (72-76)

என்ற இயற்கை வருணனை இணையற்றது. அருவிக் காட்சியும் (296-317) அருமையுடைத்து. இவ்வாற்றுப்படை சங்க காலத்திற்குப் பின்பு கி.பி 300-600க்கு இடையில் எழுந்தாதல் வேண்டும். பத்துப்பாட்டு தொகுக்கப்பட்ட காலத்தில், கடவுள் பற்றிய ஆற்றுப்படையானதால் இதனை முன்னே வைத்துத் தொகுத்தனர் போலும்! பத்துப்பாட்டு தொகுப்புக்குக் கடவுள் வாழ்த்தென அமைகிறது. 11ஆம் திருமுறையிலும் சேர்க்கப்பட்டுள்ளமை சிந்திக்கற்பாலது. சைவர்களும் நாளும் பாராயணம் செய்யும் பனுவல் இது.

## 2.பொருநராற்றுப்படை

அடிகள் 248, முடத்தாமக்கண்ணியார் பாடியது. பரிசில் பெற்ற (போர்க்களம் பாடும்) பொருநன், பரிசில் பெறத் துடிக்கும் இன்னொரு பொருநனைக் கரிகாற் சோழனிடம் ஆற்றுப்படுத்தியது. கரிகாற் பெருவளத்தான் சிறப்பு, வீரம், ஈரம், வள்ளண்மை, சோணாட்டு வளமும் வனப்பும், காவிரியின் பெருமை கூறப் பெறுகின்றது. யாழ் (4-22), பாடினி (25-47) வருணனைப் பகுதிகள் சிறப்பானவை. தமிழர் தம் விருந்தோம்பும் பண்பு விளக்கமுறுகிறது. அரவுரியன்ன அறுவை, அக்காலத்தில் நெய்யப்பட்டமை, உண்ணுமுன் காக்கைக்குச் சோறிடும் வழக்கம் குறிக்கப்படுகின்றன.

‘அரவுரியன்ன அறுவை’ கொட்டைக் கரையுடைய பட்டுடை’ என நெய்தற் கலையைச் சிறப்பிக்கின்றனர். செல்வத்தின் சிறப்பும் வறுமையின் வாட்டமும் நன்கு விளக்கப்பட்டுள்ளன.

## 3.சிறுபாணாற்றுப்படை

269 வரிகள், பரிசு பெற்ற பாணன், பரிசில் பெறவிருக்கும் பாணன் ஒருவனை ஓய்மா நாட்டு நல்லியக்கோடனிடம் வழிப்படுத்துவது, சிறிய யாழைக்கொண்ட பாணனை ஆற்றுப்படுத்தியதுஐ சிறு பாண் குடியினனை ஆற்றுப்படுத்தியது. குறைந்த அடிகளையுடைய பாணாற்றுப்படை சில பண்ணறிந்தமை ஆகிய காரணங்களான் இது சிறுபாணாற்றுப்படை எனப்படுகிறது. விறலி வருணனை, வஞ்சி, மதுரை, உறையூர்ச் சிறப்புக்கள், கடையெழு வள்ளல்கள் கொடைத்திறம், சிறுபாணர் வறுமை நிலை, நெய்தல் முல்லை, மருத நில வியல்பு, யாழ் விளக்கம், நல்லியக் கோடன் கொலுவிருக்கை, அவனது பண்பும் பரிசில் திறமும் கூறப்பட்டுள்ளன. அடுக்கடுக்காக விறலியின் அழகை உவமையால் உணர்த்தும் உயர்வு (12-31) பாணனின் வறுமைக்கொடுமை (130-140) கடையெழு வள்ளர்கள் (84-113) மூன்றும் மறக்க முடியாப் பகுதிகள் பாடியவர் நல்லூர்நத்தத்தனார்.

**நோன்பகட் டுமணர் ஒழுகையோடு வந்த**
**மகாஅர் அன்ன மந்தி மடவோர்**
**நகாஅ ரன்ன நளிநீர் முத்தம்**
**வாள்வாய் எருத்தின் வயிற்றகத் தடக்கித்**
**தோள்புறம் மறைக்கும் நல்கூர் நுசுப்பின்**
**உளரியல் ஐம்பால் உமட்டியர் ஈன்ற**
**கிளர்பூண் புதல்வரோடு கிலுகிலு' யாடும்** (55-62)

என்ற இனிய பகுதி இதயங்கனிவிருக்கும் இயல்பினது. இப்பாட்டினை 'சிறப்புடைத்தான சிறுபாணாற்றுப்படை' எனத் தக்கயாகப் பரணியுரை குறிக்கிறது.

## 4.பெரும்பாணாற்றுப்படை

500 அடிகள் 'பாணாறு' என்ற பெயருமுண்டு. கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடியது. பரிசில் பெறவிருக்கும் பெரும் பாணனைப் பரிசில் பெற்ற பாணன், தொண்டைமான் இளந்திரையனிடம் செலுத்தியது. பெரும் பாண்குடி, பேரியாழ் கொண்டமை, பெருவாரியான பண்கள் பாடும் பாணன், அதிக அடிகளைக் கொண்ட பாட்டு ஆகிய காரணங்களான் பெரும்பாணாற்றுப்படை எனப்படுகிறது. இளந்திரையன் கொடை, வீரம், செங்கோற் சிறப்பு, ஐந்து நில மக்களின் வாழ்வும் விருந்தோம்பலும், மகளிர் கழங்கு-பந்து ஆடுதல், பொன்னைக் கல்லில் உரைத்து மாற்றுப் பார்த்தல், நெல்லரிசி கொண்டு மதுபானம் செய்தல், காஞ்சி நகர்ச் சிறப்பு, ஊறுகாய், கலங்கரை விளக்கம் போன்றன விளக்கப்படுகின்றன. வணிக மகளிர் மடியில் குழந்தையுடன் உப்பு வண்டிகளை ஓட்டிச் செல்லல் வணிகர்கள் மிளகுப் பொதியினைக் கழுதைமேற் ஏற்றிச் செல்வது போன்ற அரிய செய்திகள் காணப்படுகின்றன.

## 5.கூத்தராற்றுப்படை

583 அடிகள், பரிசில் பெற்ற கூத்தனொருவன் பெறவரும் கூத்தனை நன்னன் சேய் நன்னனிடம் அனுப்புவது. பாடியவர் பெருங்கௌசிகனார். 'மலை'யை உவமிக்க யானையைக் கூறி அதனின்று பிறந்த ஓசையைக் 'கடாம்' எனக் குறித்தமையான் 'மலைபடுகடாம்' என்றே இது வழங்குகிறது. மலை, படு கடாம் - மலையிடத்து உண்டாம் மதநீர் ஓசை என்ற பொருளில் வரும் 'மலை படு கடாம்' என்ற சொற்றொடரான் தலைப்பினைப் பெற்றுள்ளது. இசைக் கருவிகள் பெயர்கள், முழவு போன்ற பலாப்பழம் என்பன போன்ற எளிய உவமைகள், மலைகளிடையே கேட்கும் பல்வகை ஒலிகள், குறவர் கனிவு, வேடர் இயல்பு, பிரிந்து செல்லும் வழிகளில் அடையாளத்திற்காகப் புல்லை முடிந்து வைத்தல், கணவர் புண்ணால் படும் துயரைக் குறமகள் பாட்டுப் பாடித்தணிப்பது போன்ற செய்திகள் காணப்படுகின்றன.

எல்லரி, குறுந்தூம்பு, தட்டை, பதலை, பாண்டில், கரடிகை போன்ற புதிய இசைக் கருவிகள் வருகின்றன.

### 6. முல்லைப்பாட்டு

103 வரிகள், ‘முல்லை’ என்றே அழைக்கப்படுவதும் உண்டு. பத்துப்பாட்டில் மிகச்சிறியது. நப்பூதனார் பாடியது. போரின் பொருட்டுத் தலைவன் பரிந்தமை ஆற்றாத தலைவி அவன் வருமளவும் ஆற்றியிருந்த கற்புநிலை கழறுதலான் (கற்பிற்கு முல்லை அடையாள மாதலால் முல்லை ஒழுக்கம் பற்றிய பாட்டு ஆயினமையின்) இப்பெயர் பெற்றது. பாசறை -பள்ளியறை அமைப்புகள், தலைவியின் துயர், காட்டு வழிக் காட்சிகள் குறிப்பிடத்தக்கன. கார்காலத் தோற்றம் கற்போரைப் பிடித்திழுத்துக் கனி தமிழின் சுவையூட்டும் வண்ணம் உளது.

**செறியிலைக் காயா அஞ்சனம் மலர**
**முறியிணர்க் கொன்றை நன்பொன் காலக்**
**கோடற் குவிமுகை அங்கை அவிழ்த்**
**தோடார் தோன்றி குருதி பூப்ப**

அமைந்தன கான் வழியிலே, கலையும் பிணையும் கலந்து மகிழக் கார்காலம் வந்ததாம்! கார்கால ஒலியும் தலைவன் வருகை யொலியும் இரண்டும் ஒருங்கே இணைய இப்பாட்டு முடியும் ஏற்றம் ஈடற்றது. பிரிந்த தலைவன் வரக்கூடிய சகுனத்தை முதுபெண்டியர் பார்த்தல், அரசர்தம் பள்ளியறை மிலேச்சராலும் ஊமையராலும் காவல் காக்கப்பட்டமை. நேரத்தைக் கண்டறிய நாழிகை வட்டில் வைத்திருந்தமை, பாகர்கள் யானையுடன் பேசிப் பழகும் பான்மை போன்றன தெரிய வருகின்றன. பத்துப்பாட்டில் இ∴தொன்றனுக்கு மட்டும் பாட்டுடைத் தலைவர் குறிக்கப்பெறவில்லை என்பது அறியத்தக்கது. ஆனால் சிலர் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனே குறிக்கப்படுவதாகக் கூறுவர். முல்லைத் திணையைப் பாடும் எல்லாப் பாடல்களிலும் இப்பாட்டே நுட்பமும் நயமும் கொண்டது.

### 7.பட்டினப்பாலை

301 வரிகள், காவிரிப்பூம்பட்டின வளமுணர்த்தலான் இப்பெயரிடப்பட்டது. (பட்டினத்தைப் பாராட்டிக் கூறிய பாலைத் திணைப் பாடல் பட்டினப் பாலையாயிற்று) சோழன் கரிகாற் பெருவளத்தான் பெருமை கூறுவது. கடியலூர் உருத்திரங்கண்ணனார் இயற்றியது. தலைவியைப் பிரிய நினைத்த தலைவன் தன் நெஞ்சை நோக்கி ‘முட்டாள் சிறப்பின் பட்டினம் பெறினும், வாரிருங் கூந்தல் வயங்கிழை ஒழிய’, ‘வாரேன் வாழிய நெஞ்சே!’ எனக்கூறிய அடிகளே, இப்பாட்டின் பெயர் பொருளுணர்த்தும், சோணாட்டின் சிறப்பு காவிரிப் பூம்பட்டினத்தின் பெருமை, கரிகாலன் பெருவீரம், பரதவர் பொழுது போக்கு, வணிகரியல்பு, சங்கப் பொருள்களின் மீது

சோழன் புலிப்பொறி பொறிக்கப்படுவது. பல்வகைக் கொடிகள், கடல்வணிகம் போன்றன தரப்பட்டுள்ளன.

**வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்,**
**குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்,**
**தென்கடல் முத்தும், குணகடல் துகிரும்,**
**கங்கை வாரியும், காவிரிப் பயனும்ளூ**
**ஈழத் துணவும், காழகத் தாக்கமும்,**
**அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி**
**வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகு** (187-193)

எனப் பன்னாட்டுப் பொருள்கள் வந்து குவிந்த வகையினை மொழிகின்றார். இவற்றை வாங்கவும் விற்கவும் செய்யும் வணிகர் நடுநிலை பிறழாதவர், கொள்வது மிகை கொளாது. கொடுப்பதும் குறை கொடாது ஒரே விலை கூறிய பழியஞ்சி வாழ்ந்த பான்மையினை,

**நெடு நுகத்துப் பகல்போல நடுவுனின்ற நன்னெஞ்சினோர்**
**வடுவஞ்சி வாய்மொழிந்து தமவும் பிறவும் ஒப்ப நாடி.**

என்கிறார். சோறு வாக்கிய கொழுங்கஞ்சி, யாறு போலப் பரந்ததொழுகிக் கிடக்கிறது. மகளிர் நெல்லைக் காய வைக்கின்றார். அதனைக் கவர வருகின்றன கோழிகள். அவற்றை விரட்டத் தம் பொற்குழைகளை எறிகின்றனர். அவை நாலாப் பக்கங்களும் சிதறிக் கிடந்து சிறுவர் உருட்டி வரும் தேர்களைத் தடுக்கின்றன. (20-26) ‘வான் பொய்ப்பினும் தான் பொய்யா மலைத்தலைய கடற் காவிரி’ ‘வேலினும் வெய்யகானம் அவன் கோலினும் தண்ணிய தடமென் தோளே’ ‘காடு கொன்று நாடாக்கிக் குளந்தொட்டு வளம் பெருக்கி’ போன்ற பகுதிகள் இதயம் நெகிழ்விப்பன. பரதவர் கடலாடிய பின், மேற்படிந்த உப்பு நீங்க ஆற்றில் குளிப்பர் என்ற கருத்து ‘தீது நீங்கக் கடலாடியும், மாசு போகப் புனம் படிந்தும்’ என வருகிறது. இப்பாட்டினைக் கேட்டுப் பதினாறு நூறாயிரம் பொன் பரிசளித்தானாம் கரிகாலன்.

## 8. குறிஞ்சிப்பாட்டு

261 வரிகள், ‘பெருங்குறிஞ்சி’ என்ற பெயருமுண்டு. ஆரிய அரசன் பிரகதத்தன் என்பானுக்குத் தமிழ் கற்பிப்பதற்காக (தமிழின் சுவையும் சிறப்பும் உணர்த்த) இதனைக் கபிலர் இயற்றினார். களவொழுக்கத்தைச் சிறப்பித்துக் கூறுவது குறிஞ்சித்திணை, அதனை அடியொற்றியதால் இப்பெயர் ஏற்றது. தலைவியின் களவொழுக்கத்தைத் தோழி செவிலியிடம் கூறித் திருமணத்திற்கு ஏற்பாடு செய்யும் போக்கில் அமைவது. தலைவன் - தலைவி சந்திப்பு, இருவரின் காதலுணர்வு, தலைவன் நாய் - களிறு இவற்றான் தலைவிக்கு நேர்ந்த ஏதம் நீக்கல்,

மாலைக்காலத்தில் பல்லுயிர்களின் செயல்கள், குறிஞ்சி நிலச்சிறப்பு, மணம் புரிந்து இல்லறம் நடத்தும் இனிமை. வஞ்சினம் கூறும் வகை முதலியன கூறப்பட்டுள்ளன. நீராடிய தலைவியும் தோழியும் பறித்துப் பாறையின்மீது குவித்தாக 99 மலர்கள் கூறப்பட்டு அவற்றின் தன்மையும் தரப்படுகிறது. கபிலர் இயற்கையை எடுத்து மொழிவதில் வல்லவர். இப்பாட்டும் இயற்கையின் எழிலோவியமாக விளங்குகின்றது. மாலைக்கால வருணனை மனத்தைக் கவர்கிறது பாருங்கள்.

கதிரவன் மறையும் காலம், மானினங்கள் மரத்தடிகளில் கூடி அசைபோடுகின்றன. கறவைக் கூட்டங்கள் கன்றுகளை நினைத்துக் கனைத்தபடி கொட்டில்களுக்குச் செல்கின்றன. அன்றிற் பறவைகள் பனை மீதிருந்து தம் துணைகளைக் கூவி அழைக்கின்றன. பாம்புகள் மாணிக்க மணிகளை உமிழ்ந்து வைத்து அவ்வொளியில் இரைத்தேடிச் செல்கின்றன. ஆயர்கள் குழல் ஊதவும் அல்லியரும்புகள் கட்டவிழவும் சரியாக இருக்கிறது. அந்தணர்கள் அந்திக் காலக் கடமைகளை ஆற்ற முற்படுகின்றனர். கானவர்கள் பரண் மீதேறிக் காட்டு விலங்குகளை ஓட்டத் தீப்பந்தங்களைக் கொளுத்துகின்றனர்...' எனப்படம் பிடித்துக் காட்டுகின்றார். கபிலர் 30க்கும் மேற்பட உவமைகள் வருகின்றன. முத்து முதலியவற்றால் ஆன அணிகலன்கள் கெடின் செப்பனிட்டுப் பண்டுபொல் செய்யலாம். ஆனால் சால்பு முதலிய பண்புகள் கெடின், அவற்றை மீண்டும் பெற்று புகழை நிலைநாட்டுதல் அறவோர்க்கும் எளிதன்று (13-18) என்கிறது.

### 9.மதுரைக்காஞ்சி

782 அடிகள், பத்துப்பாட்டிலேயே பெரியது, மதுரை காஞ்சி எனும் இரும் சொற்கள் இணைய, மதுரை யாண்ட மன்னனுக்கு நிலையாமை கூறியது என்ற பொருளமைதியான் பெயர் பெற்றது. காஞ்சி என்பது நிலையாமை, பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு வீடுபேறு நிமித்தம். பல்வகை நிலைமையை எடுத்து மொழிந்து நன்னெறிப்படுத்துவதாக அமைகிறது. இந்நெடும் பாட்டு, இதனால் வாழ்வை வெறுத்துத் துறவு புகட்டுவதாக இப்பாட்டினை எண்ணிவிடக் கூடாது. உலகத்தை உள்ளவா றுணர்ந்து, வாழ்நாளை இனிது கழிக்குமாறு வாழ்த்தும் வகையே இப்பாட்டில் உள்ளது. பாடியவர் மாங்குடி மருதனார்.

பாண்டி நாட்டின் ஐந்திணை வளம், மதுரை மாண்பு, அங்காடிகள் விவரம், மக்கள் செயல், தலையாலங்கானத்தில் நெடுஞ்செழியன் சேர, சோழ ஐம்பெருவேளிரை வென்றமை, வென்று கொணர்ந்த பொருள்களை நண்பர்கட்கும் புலவர்கட்கும் வாரி வழங்கலம், மன்னன் கடமைகள், மலையில் பரத்தையர் செயல், இரவில் கள்வர் களவாட முயல்தலும் அதனைக் காவலர் காக்கும் திறனும், விடியலில் வேதம் ஓதும் அந்தணரியல்பும் பிறவும் அழகாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன. மதுரை, திருப்பரங்குன்ற விழாக்கள், ஓண விழா போன்ற பல விழாக்கள் குறிக்கப்படுகின்றன. 'செங்கோல் ஆட்சி நாட்டில் கோள்கள் பிறழா' போன்ற கருத்துக்கள் வருகின்றன. ஒருநாள் காலை முதல் மறுநாள் மாலை வரை மதுரையில் நடைபெறும் நிகழ்ச்சிகளை நேரில் காண்பது போல் அப்படியே படம் பிடித்துக்காட்டுகின்றார். போர்

செய்வதிலேயே மூழ்கிய உலக இன்பங்களில் தன்னையே மறந்த மன்னனிடம், எடுத்த எடுப்பிலேயே நிலையாமையைக் கூறாது. அவனது முன்னோரின் அரசியல் திறம், ஆட்சிச் சிறப்பு ஆகியவற்றை அவன் மனம் மகிழக் கூறி, முடிவில் என்றேனும் ஒருநாள் அவனும் ஏனைய முடி மன்னர்கள்போல மண்ணகம் விட்டு மறைய வேண்டியதுதான் எனப் படிப்படியே கூறி, இறுதியில் வீடு பேற்றின் சிறப்பினை இயம்பும் அழகும் திறமும் அருமையுடைத்து, அறிவுரை கூறும் பகுதி சாலச் சிறப்புடைத்து. அகத்தியர் இராவணனைத் தமிழ் நாட்டுப் பக்கம் வராது விலகச் செய்ததும் மகளிர் ‘புலி புலி’ என வேங்கை மரம் தாழ்ந்து கொடுத்தலும் குறிக்கப்பெறுகின்றன. ‘திரையிடு மணலினும் பலரே உரை செல மலர்தலை யுலக மாண்டு கழிந்தோரே’ என நிலையாமை சுட்டும் அடிகள் நினைவு கூறத்தக்கன. தெருவழகு’ ஆறு கிடந்தன்ன அகன் நெடுந்தெரு’ எனப்படுகிறது.

## 10. நெடுநல்வாடை

188 அடிகள், நக்கீரர் பாடியதுளூ முருகாற்றுப்படை நக்கீரரினும் வேறானவர் என்பர் ஆய்வாளர். பாண்டியன் நெடுஞ்செழியனைப் பற்றியது. பாட்டில் பாண்டியன் பெயரோ, ஊரோ குறிக்கப் பெறவில்லை. ஆயினும் நச்சினார்க்கினியர், நெடுஞ்செழியன் பற்றியது என்கிறார். பகைமேற் சென்றுள்ள தலைவன் பிரிவால் வருந்தும் தலைவியின் துயர் தீர, அவன் பகை வென்று வருவானாக என்று அரசவைப் பெண்டிர் கொற்றவையை வழிபடுவதாக அமைவது. நெடிதாகிய நல்வாடை என விரிகிறது தலைப்பு. எவருக்கும் பொதுவாய் வாடைக்காற்று பிரிவுத் துயருறும் தலைவிக்கு நெடிய வாடையாகவும் போர்ச் செயலில் சிந்தை மறந்த தலைவனுக்கு நல்ல வாடையாகவும் விளங்குகிறது. பாட்டில் எவ்விடத்தும் எவர் பெயரும் வரவில்லை. அகப்பொருள் கெழுமிய பாட்டுதான். ஆயினும் ‘வேம்புதலை யாத்த நோன்காழ் எ∴கம்’ என்ற வரியில் பாண்டியனின் வேப்பம் பூ கூறப்பட்டிருத்தலான் இதனைப் புறப்பாட்டாகக் கருதினர். ஆனால் ஆய்வாளர்கள் இதனை அகப் பாட்டே என அறுதியிட்டு நிறுவியுள்ளனர்.

கூதிர் காலக் குளிரின் கொடுமை, அரண்மனை அமைப்பு, கட்டிலின் அழகு, தலைவியின் பிரிவுத் துயர், அது போக்கத் தோழியரும் செவிலியரும் ஆற்றும் செல்கள், கோப்பெருந்தேவி கற்பு, பாண்டியன் வீரர் மாட்டுக் கொண்ட பரிவும் பிறவும் பேசப்படுகின்றன. கூதிர் காலத்தில் மாவும் புள்ளும் மக்களும் குளிரால் துயருறும் பகுதி (45-70) பாண்டிமாதேவி பிரிவால் வருந்திப் படுக்கையில் புரண்டு கிடக்கும் புனையா ஓவியம் (137-147) போர்க் காலத்தில் நள்ளிரவில் மழையென்றும் பனியென்றும் பாராது குளிரில் கண் துயிலாது புண்பட்ட வீரர்களைக் கண்டு ஆறுதல் கூறுவது. பூ மலர்தலைக் கொண்டு பொழுதினை அறிவது. மாலைக்காலத்தை மகளிர் கொண்டாடும் முறைமைளூ தலைவரைப் பிரிந்திருக்கும் காலங்களில் தலைவியர் தம்மை ஒப்பனை செய்து கொள்ளாதிருக்கும் கற்பு நிலை ஆகியன அழகொழுகச் சித்தரிக்கப்பட்டுள்ளன. யவனர் இயற்றிய பாவை விளக்கும், மிலேச்சர் நகரினைக் காவல் புரிவதும் குறிப்பிடுகின்றன. இப்பாட்டான பழந் தமிழரின் செல்வச் செழுமை நன்கறியலாம். மொத்தத்தில் கலையழகும்

இலக்கிய நயமும் மிக்க இப்பாட்டு பத்துப்பாட்டிலேயே தலை சிறந்த பாட்டு எனலாம். இதன் சுவை கண்டு பேராசிரியர் சுந்தரம் பிளளை வியந்து பாராட்டியுள்ளார். பள்ளியறைக் காட்சி மாட்சி மிக்கது.

ஆக. பத்துப் பாட்டு இலக்கியக் கருவூலமாகவும், வரலாற்றுக் களஞ்சியமாகவும், மொழிவளம் மிக்க பெட்டமாகவும் விளங்குகின்றது. எனவேதான் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை இலக்கணத்தோடு இயைந்த இதன் கற்பனைத் திறனை,

**'பத்துப்பாட் டாதிமனம் பற்றினார் பற்றுவரோ**
**எத்துணையும் பொருட்கிசையும் இலக்கணமில் கற்பனையே'**

என்பதோடு, The Idyles are as the name implies, richly wriugh discriptive poems in the most finished style. They are charming portraits of nature in some of her pleasnat and striking moods and for soberness of thought and accuracy of representation they will bear comparison with any thing in the whole realm of literature, எனவும் பாராட்டுகின்றார்.

உரையாசிரியர்களும் முத்திறத்த தொகை நூல்களின் முன்மொழிவது பத்துப் பாட்டையே! 'ஆன்றோர் புகழ்ந்த அறிவினிற்றெரிந்து சான்றோருரைத்த தண்டமிழ்த் தெரியல் ஒருபது பாட்டும்' எனும் நச்சர் உரைப் பாயிரத்தான் இதன் உயர்வு அறியலாம். இப்பாட்டு, ஆசிரியத்தான் ஆனதுளூ பட்டினப்பாலை போல வஞ்சியும் கலந்து வருதலுண்டு. 'தீனின் அன்ன ஒண்செங்காந்தள்' எனும் மலைபடுகடாம் அடிக்கு, நச்சர் கூறும் உரையான், இப்பாட்டு கடைச்சங்கப் புலவர்களாலேயே தொகுக்கப்பெற்றமை தெரியவருகிறது. ஆயின் தொகுத்தார் தொகுப்பித்தார் தெரிதற்கில்லை.

### அகம் - புறம் பகுப்பு

சங்க இலக்கியம் அகம், புறம் எனும் இரு பெரும் பிரிவில் அமையும், சங்கச் சான்றோர், தம் செய்யுட்களுக்குப் பொருளாக மக்கள் வாழ்வினை அமைத்த போது, அதனை அகத்திணை, புறத்திணை என வகுக்கலாயினர். அகம் என்பது காதலொழுக்கத்தையும், புறம் என்பது போர் முதலான பிற ஒழுக்கங்களையும் குறிக்கும். முன்னது வீட்டு வாழ்வினையும் (ர்ழஅந) பின்னது வெளியுலக - நாட்டு வாழ்வினையும் (World) உணர்த்தும் இதனையே டுழளநி்ழநவசலஇ றுயச poetry, Esoteric poerty and Ezoteric poetry, poetry of Noumenon poetry of the phenomenoெ என்பர், இப்பகுப்பு இன்தமிழுக்கே உரியது. ஏனைய மொழிகளிலெல்லாம் எழுத்துக்கும் சொல்லக்குமே இலக்கணமாக அமைய, நந்தமிழில் பொருளாகிய வாழ்வினுக்கும் இலக்கணம் அமைந்துள்ளது.

அறம், பொருள், இன்பம் என்ற மூன்றனுள் அகத்தில் இன்பமும், புறத்தில் ஏனை இரண்டும் எடுத்தோதப் படுகின்றன. இலக்கிய வழக்கில் மட்டுமன்றி, உலகியல் வழக்கினும் காதலையும் வீரத்தையும் பெரிதும் போற்றி வந்தனர். என்பது சங்கவிலக்கியங்களால் அறியலாம். ஆதலின் சங்க இலக்கியம் போல, வேறு எக்கால இலக்கியத்திலும் காதலும், வீரமும் போற்றப் பெறவில்லை எனலாம். இவ்விரண்டையும் இரு கண்களாக எண்ணினர். கூர்ந்து நோக்கின், வாழ்வே இவ்விரண்டில்தானே அடங்கி விடுகின்றது�ளூ வாழ்வாகிய காசின் இரு பக்கங்களாக இவை இலங்குகின்றன. கிரேக்கப் பெருங் கவிஞர் ஹோமர் கூட,

**Two things greater than all things are**
**One is Love and the other is war.**

என்று தானே இயம்பியுள்ளார். காதலும் வீரமும் கட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகள் (கலைஞர் மு.கருணாநிதி)

**அகம்:** ‘‘ஒத்த அன்பான் ஒருவனுக்கு ஒருத்தி கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம், அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவருக்கொருவர் தத்தமக்கு புலனாக இவ்வாறு இருந்தது எனக் கூறப்பட்டாததாய், யாண்டு உள்ளத் துணர்வே நுகர்ந்து இன்பம் உறுவதோா பொருளாகலின், அதனை அகம் என்றார்’’ (தொல். அகத்திணை. சூ.1. நச்சர் உரை) காதலா் வாழ்வு காலம் இடம் எனும் பின்னணியில் இயற்கைச் சூழலில் பல்வித ஒழுக்கங்களைக் கொண்டு நிகழ்ந்தது. இதனையே முதல் கரு, உரி என்கிறது இலக்கியம், நிலமும் பொழுதும் சேர்ந்து முதல் நிலம் ஐவகையாகவும், பொழுது ஆறவகைச் சிறுபொழுதுளூ பெரும்பொழுதுகளாகவும் வகுக்கப்பட்டன. தெய்வம் முதலான பதினான்கு பொருள்களும் கரு, வாழ்வு நெறிக்கும் வாழ்ந்த நிலத்துக்கும் உள்ள உறவினை உணர்த்துவதை உரி, கூடலும் கூடல் நிமித்தமும் குறிஞ்சிளூ இருத்தலும் இருத்தல் நிமித்தமும் முல்லைளூ ஊடலும் ஊடல் நிமித்தமும் மருதம்ளூ இரங்கலும் இரங்கல் நிமித்தமும் நெய்தல்ளூ பிரிதலும் பிரிதல் நிமித்தமும் பாலை, பாலை எனத் தனி நிலம் இல்லை, Desert ஐயம் குறிக்காது. ‘முல்லையும் குறிஞ்சியும் முறைமையிற்றிரிந்து நல்லியல் பிழந்து, நடுங்குதயர் உறுத்துப் பாலை என்பதோர் படிவங் கொள்ளும்’ (சிலம்பு) நானிலம் என்ற வழக்கு நோக்குக. இவ் ஐவகை நிலமும் அவ்வந் நிலங்களில் சிறப்பாக காணப்பெற்ற மரம்-மலர்களால் பெயர்பெற்றன. தொடக்கத்தில் நிலத்தையும் மக்களையும் குறித்த இத்திணைகள், நாளடைவில் மக்கள் ஒழுக்கத்திணையும் உணர்த்தின.

புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் ஐந்தும் அன்பின் ஐந்திணை எனச் சிறப்பிக்கப்படும். இவற்றிற்குப் புறமாகக் கைக்கிளை பெருந்திணை அமைகின்றன. முன்னது ஒருதலைக்காமம்ளூ பின்னது பொருந்தாக் காமம் ஆக அன்பினைந்திணையும், அகப் புறமான கைக்கிளை பெருந்திணை இரண்டும் சேர அகத்திணை ஏழு ஆகும்.

**புறம்:** ஐந்து நிலத்துக்கும் காதலைந்திணை வகுத்த அன்றையச் சான்றோர் போரொழுக்கத்தினை வெட்சி, வாகை, வஞ்சி, உழிஞை, தும்பை எனப் பகுத்து அவற்றை முறையே குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம் நெய்தல் எனும் ஐந்நிலத்திற்கும் புறவொழுக்கங்களாகப் போற்றினர். அவ்வந்நில மக்கள் வாழ்விற்கு ஏற்ப இவை அமைகின்றன. இவற்றோடு புறப் புறமாக காஞ்சித் திணை பாடாண்திணை இரண்டும் இணைய புறத்திணை ஏழு ஆகிறது. இவையிரண்டும் அகத்தில் அமையும் கைக்கிளை- பெருந்திணை இரண்டுக்கும் நேராகப் புறத்தில் அமைவன. இவை அவ்வக் குழுக்கள் சூடிய மலர்களான் பெயர் பெறுவன. இதனால் அகவாழ்வும் புறவாழ்வும் அமைந்த சங்க மரபு அறியலாம்.

## சங்க காலம் - பொற்காலம்

தமிழக வராற்றில் சங்க காலம் ஒரு பொற்காலம் என்பதற்கும், தமிழிலக்கிய வரலாற்றில் சங்க இலக்கியம், பொற்கால இலக்கியம் என்பதற்கும் மாறுபாடுளது. முன்னது வரலாற்றுப் போக்கினது. வாழ்வு வளம் பற்றியது. பின்னது இலக்கிய நோக்கினது. இலக்கிய நலம் பற்றியது. இரண்டும் இருவெறு திறத்தாயினும் இரண்டிற்குமிடையே இணைப்பும் பிணைப்பும் மிகவுண்டு. முன்னது நிலம் என்றால், பின்னது பயிர்ளூ மண்ணைப் பொறுத்தே பயரின் செழிப்பும் அமையும். அது போன்றே வாழ்வினை ஒட்டியே வளமார் இலக்கியங்கள் நலம் பெறும். இம்முறையில்தான் தமிழிலக்கிய வரலாற்றில் தலைசிறந்த காலப் பகுதியாக பொற்காலமாக, சங்க காலம் விளங்குகிறது.

வாழ்வில் - வாழ்வு நிலையில் ஏற்றத் தாழ்வின்றி அனைவரும் வளதியுடன் வாழ்ந்தார்கள். உயர்வு தாழ்வின்றி எல்லோரும் இன்புற்றிருந்தார்கள். ஓர் ஊரில் மண் குடிசைக்கிடையே மாளிகை என்றால் அவ்வூர் ஒப்புரவு வாழ்வு உடையதாமோ? ஒன்று அனைவரும் மாடி வீட்டினராகவோ அன்றி மச்சுவீட்டினராகவோ இருத்தல் வேண்டும். அதுவே சமதர்ம சமுதாய உயிர் வாழ்வாம். அம்முறையில் சங்க காலத்தில் அத்துணை பேரும் நிகராக விளங்கினர்.

அதுபோன்றே மன்னர் முதல் மக்கள் ஈறாக அனைவரும் எவ்வித வேறுபாடுமின்றிக் கல்விச் செல்வத்தைப் பெற்றிருந்தனர், புலமை ஒருவருடைய சொத்தாக இல்லாது. பொதுச் சொத்தாக இருந்தது. பாரதி கூறுமாப் போல கல்வி சிறந்த தமிழ் நாடாக இருந்தது. அதுமட்டுமின்றி புவியரசர்க்கு எத்துணை சிறப்பிருந்ததோ அத்துணை செல்வாக்கு கவியரசர்க்கும் இருந்தது இன்னும் சொல்லப் போனால் ஒரு படி மேலாகவே உயர்ந்து ஒளிர்ந்தனர். அரசர் அரசோச்சினர் என்பதை விட அறிவு அரசு வீற்றிருந்தது. மறத்தைவிட அறத்திற்கே உயர்வு தரப்பட்டிருந்தது எனலாம். அதுவே பொற்காலத்தின் பாங்கு அதியன் அவ்வைக்கு அருநெல்லிக் கனி கொடுத்தமை, மோசி கீரனார்க்குச் சேரலாதன் கவரி வீசியமை போன்றன. இதனை நிறுவும், தொண்டைமானிடம் அவ்வை தூது சென்றமை, நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி இருவரிடையேயும்

கோவூர்கிழார் சந்து செய்தமை. வரி கொள் முறையைப் பிசிராந்தையார் மட்டுமன்று, புரலவர்கள் பலவர்களால் பாடப்பெறுதலைப் போறாகக் கருதினர் என்றால், சங்க காலத்தில் பொருட் செல்வத்திலும் அறிவுச் செல்வம் போற்றப் பெற்றது புரியவரும். இத்தகைய நிலைதான் உச்சநிலை (Zenith) இந்த உச்சநிலை சங்ககாலத்தில் இருந்தது. அதனால் அக்காலம் பொற்காலமாகப் போற்றப் பெறுகிறது.

அறிவும் திருவும் இணைந்த காலம் சங்க காலம். ‘திருவேறு தெள்ளியராதலும் வேறு’ என்றார் வள்ளுவர். ஆனால் சங்க காலத்தில் புவிச்செல்வம் மிக்க புரவலர்கள் கவிச்செல்வம் கொண்டவர்களாகக் காட்சியளித்தனர். பூரிக்கோ, மாறன் வழுதி, இளம் பெருவழுதி, பெருங்கடுங்கோ, அறிவுடைநம்பி, நெடுஞ்செழியன், நல்லுருத்திரன் போன்றோர் சான்றாவர். அது போன்றே கவிச் செல்வமிகு புலவர்கள் வறுமையில் இருப்பினும் சென்ற மாத்திரத்திலே - கேட்ட பொருளும் பெற்றனர். அதிலும் பொறுப்பின்றி ஈவதை ஏற்காத பெருமிதம் உடையோராகவும் ஒளிர்ந்தனர்.

காவலர் பாவலரிடையே இருந்த உறவு உளமொன்றிய ஒன்றாக இருந்தது. அவ்வை அதியன், கபிலர் பாரி, கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையார் போன்றோர் அதன்பின் பிணைப்பை எண்ணுக, புலமையினூடே காழ்ப்பு எப்போதும் இருக்கும்ளூ சங்க காலத்தில் அத்தகு நிலை இல்லை. நல்லிசை கபிலன், புலனழுக்கற்ற அந்தணாளன், மோசி பாடிய ஆய்’ என்றெல்லாம் பாராட்டியுள்ளனர். கபில பரணர் என்ற வழக்கு கருதுக.

பெண்மை போற்றப்பெற்ற காலமேள பொற்காலம். அவ்வையார், ஆதிமந்தியார், ஒக்கூர்மாசாத்தியார், காக்கைபாடினியார், நல்வெள்ளியார், வெள்ளிவீதியார் என 30க்கும் மேற்பட்ட பெண்பாற் புலவர்கள் புலமைச் செல்வியராய் விளங்கினரென்னில் அக்காலம் பொற்காலமின்றி எக்காலமாம்?

இவற்றிற்கெல்லாம் மேலாக, வணிகர், வேளாளர், குறவர், பாணர், மருததுவர், சோதிடர் போன்ற பல்வேறு துறையினர், தொழிலினர், நிலையினர் அனைவரும் தமிழில் புலமை பெற்றிருந்தனர். கவிபாடும் வளம் கொண்டிருந்தனர். பெரும் புலவர் ஒருவர் பிறரெல்லாரும் அவர் வாய் பார்த்திருந்தனர் என்னும் நிலையில்லாது, சங்க காலத்தில் 600க்கும் மேற்பட்ட புலவர்கள் பெருமை பெற்று விளங்கினர். இற்றை நாளில் குடியாட்சி, எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்கிறோம். சங்க காலத்தில் மக்கள் கருத்துக் கொத்த முடியாட்சி நிலவியது - குடியாட்சியினும் சிறப்புற்று விளங்கியது.

வாழ்வின் முதற்படியாகிய உணவு, உடை, உறையுள் என்ற மூன்றையும் கடந்து உள்ளத்தை நோக்கி நின்ற உயரிய வாழ்வு-பண்பட்ட வாழ்வு சங்க கால வாழ்வு. உடலைப்

பற்றிய வாழ்வாக இல்லாது. உள்ளம் பற்றிய ஆன்மீக (Ideal) வாழ்வு வாழ்ந்தனர். அந்த வாழ்வின் விளைவே சங்க இலக்கியம் என்றால் அவ்விலக்கியம் எவ்வித வளமையது என்று கண்டுகொள்க. இன்ன பிற காரணங்களால், சங்க காலம் தலைசிறந்த காலம் என்பளூ அக்கால இலக்கியம் பொற்கால இலக்கியம் என்பதில் எத்துணையும் ஐயமுண்டோ?

இனிப் பொற்கால இலக்கியத்தைப் புரிந்து கொள்ள 1. காலங்காட்டும் கண்ணாடியா? 2. தலைசிறந்த நூல்கள் உண்டா? 3. தலைசான்ற புலவர்கள் உளரோ? 4.சிறந்த குறிக்கோள் உடையனவா? 5. ஒருவகை யாப்பு உயர்ந்துள்ளதா? 6.செறிவு நிறைவு பண்பட்ட பழுத்த (சனிந றழசனள) சொல்வள முடையதா? 7.உண்மை அழகு உயர்வு உடையதா? 8.அரசியல் சிறப்புடைத்தா? 9.சமுதாயச் சிறப்புடைத்தா? 10.ஆன்மீக வாழ்வின் உச்சாணிக் கட்டத்தை எட்டியதா? என்பன போன்றன அளவு கோல்களாக அமையும். அம்முறையில், சங்க இலக்கியம் பொற்கால இலக்கியமாகப் பொலிகிறது.

## 1.6. சங்கம் மருவிய காலம் (கி.பி.100-600)

மதுரை மாநகரிலே நிலவியிருந்த கடைச்சங்கத்தின் நூற்றாண்டின் இறுதிக்காலத்திற்குப் பின்னரும், ஆறாம் இறுதியிலும், சிறப்பாக ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் தோன்றிய பல்லவர்கள் ஆட்சிக் காலத்திற்கு முன்னரும், இடைப் பட்ட ஒருகாலப் பகுதியினைச் சங்கம் மருவிய காலம் என்பர். சங்க காலத்தில் முடியுடைய மூவேந்தராலும், வேளிர் முதலான சிற்றரசர்களாலும் ஆளப்பட்டுவந்த தமிழ் கூறும் நல்லுலகம், கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் அயலார் ஆட்சிக்குட்பட்டது. சோழ நாட்டையும் பாண்டிய நாட்டையும் களப்பிரர்களும், நடுநாட்டையும் தொண்டை நாட்டையும் பல்லவர்களும் கைப்பற்றி ஆண்டார்கள். இவர்கள் தாய்மொழி தமிழாய் அமைந் திருக்கவில்லை. களப்பிரர்கள் பாலிமொழியினையும், பல்லவர்கள் பிராகிருத மொழியினையும் ஆதரித்தனர். ஆதலால், தமிழர்தம் மொழி, கலை, நாகரிகம் முதலியவற்றில் சில கூறுகளை இழக்கும்படி நேரிட்டது. இக்காலத்தில் ஏற்பட்ட அயலாரின் ஆட்சியிலே தமிழ்மொழி ஆதரிக்கப்படாமல் தாழ்த்தப்பட்டு வளர்ச்சி குன்றிப் போற்றுவாரற்று விளங்கியதால், தமிழ் மொழியில் பெருமளவிலும் சிறப்பான முறையிலும் நூல்கள் தோன்றுவதற்கு இயலாமற் போய்விட்டது. எனவே, தமிழ் இலக்கிய வரலாற்றிலே இக் காலப்பகுதியினை “இருண்டகாலம்” என்று குறிப்பர்.

### பதினெண்கீழ்க்கணக்கு

அறம், பொருள், இன்பம் எனும் மூன்றையோ, அன்றி ஒன்றையோ ஐந்தோ அல்லது அதனினும் குறைந்த அடிகளிலோ வெண்பா யாப்பில் விளம்புவதாம். ‘பன்னிரு பாட்டியல்’ இதற்கு இலக்கணம் பகர்கிறது.

**அடிநிமிர் பில்லாச் செய்யுட் டொகுதி**
**அறம்பொருள் இன்பம் அடுக்கி யவ்வத்**
**திறம்பட உரைப்பது கீழ்க கணக்காகும்.** (248)

கணக்கு - நூல்ளு கீழ் - சிறிய என்பதாம் (தாழ்ந்தது என்பதாகாது) தொல்காப்பியரும் 'அம்மை' எனும் வனப்பில் அமைக்கின்றார்.

**'சின்மென் மொழியாற் றாய பனுவலின்**
**அம்மை தானே அடிநிமிர்பு இன்றே'** (செய்:235)

நச்சரும், பேராசியரும் இதனுக்கு எடுத்துக்காட்டாகப் பதினெண்கீழ்க்கணக்கினைச் சுட்டுகின்றமையானும் இதனியல்பு உணரலாம். இத்தொடர் முதன் முதலாக 13,14 ஆம் நூற்றாண்டைய நன்னூல் மயிலை நாதர் உரையிலும் தொல். பேராசிரியர் (470,542) உரையிலும் வருகிறது. கீழ்க்கணக்கு நூல்கள் இன்னின்ன என்பதை,

**'நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்**
**பால்கடுங் கோவை பழமொழி மாமூலம்**
**இந்நிலைய காஞ்சியோ டேலாததி என்பவே**
**கைந்நிலைய வாங் கீழ்க் கணக்கு'**

எனப் பழம் பாட்டொன்று பதினெட்டாகப் பேசுகிறது. இதில் முப்பால் என்பதை கே.என்.சிவராசப்பிள்ளை, சி.வை.தாமோதரனார் போன்றோர் திருக்குறளைக் குறிக்காது. அ∴தொரு தனி நூல், ஆதலின் குறள் கீழ்க்கணக்கில் சேர்க்கப்படவில்லை என்று இயம்புவர். பெரும்பான்மையினர் (கா.சு.பிள்ளை) முப்பால், குறளையே குறிக்கும் என்பர். சங்க நூலாகிய குறள் பின் என் சங்கம் மருவிய நூலாகிய கீழ்க்கணக்கில் இடம் பெறுகிறதென்றால் தொகுத்தவர் குறளை நீதி நூல் எனக் கருதி இணைத்தார் என்க. வெண்பாவின் பின்னிரண்டு அடிகளில் உள்ளது போலக் கொண்டால், 'கைந்நிலை'யும் இன்னிலை எனக் கொள்ளின் 'இன்னிலை' என்ற நூலும் விளங்கக் காணலாம். வ.உ.சி அவர்கள் இன்னிலை என்றொரு நூலைப் பதிப்பித்துள்ளார். பதினெட்டில், கைந்நிலையா? இன்னிலையா? என்பது இன்னும் கருத்து வேறுபாட்டிற்குரியதாகயுள்ளது. கைந்நிலையே என்பது பலர் கருத்து 'பிரபந்த தீபிகை'யும் பதினெண் பாக்களை வரிசைப்படுத்துகின்றது.

கீழ்க்கணக்கு, தொகையால் ஒன்று: வகையால் பதினெட்டு, பாடியோர் பதின் மூவர், காலத்தால், இடத்தால் வேறுபட்டவர்கள். சமயத்தால், குலத்தால் மாறுபட்டவர்கள், அகம் பற்றியன6ளு புறம் பற்றியன12ளு அதிலும் அறம் பற்றியன 11, போர் பற்றியது 1. இதனைத்

தொகுத்தார், தொகுப்பித்தர் பெயரோ காலமோ தெரியவில்லை. பதினெட்டில் ஒரு மறை. இரு நானூறு. மும்மருந்து, நானாற்பது ஐந்திணை, மணி மொழிக் கோவை உளளூ அறம், திணை, காலம், இடம், மருந்து எனும் ஐந்திறத்தனவாம்.

இக்கீழ்க்கணக்கு நூல்களைச் சங்க இலக்கியம் என்பாரும் உளர். நுவலும் பொருளானும் நடையானும், யாப்பானும் வேறுபட்டிருப்பதால், சங்கம் மருவிய கால நூலென்பதே சாலம். களவியலுரைகாரர் இதனைக் குறிப்பிட்டாததாலும் உரையாசிரியர்கள் பிற்காலச் சான்றோரென இந் நூலாசிரியர்களைக் குறிப்பிடுவதாலும் சங்கத்திற்கும் மிகமிகப் பிற்பட்ட காலத்தில் என்பதே பொருந்தும். சங்கம் மருவிய காலத்தவை என்பதே வழி வழியாக வரும் கருத்து. சிலர் மேற்கணக்கு நூல்களைத் தொகுத்த சங்கத்தினும் வேறான சங்கத்தில் வச்சிரநந்தியால் நிறுவப் பெற்ற நான்காம் சங்கம் காலத்தில் தொகுக்கப் பெற்றிருக்கலாம் எனக் கருதுகின்றனர். இப் பதினெட்டனுள்ளும் தொகை நூல்கட்கு முன்னும் பின்னும் தோன்றிய நூல்கள் உள. தொகுக்கப்பட்ட காலம் வரை எழுந்த நூல்களும் இடம் பெறுமல்லவா?

கீழ்க்கணக்கு நூல்கள் மேற்கணக்கு நூல்கள் போல, செறிவும் நுட்ப திட்பமும் கொண்டு வாழ்வு நெறிகாட்டும் வளமையன. கீழ்க்கணக்கில் முக்காற் பகுதி ஒழுக்கம் உணர்த்துவன. இவற்றில் பெரும்பாலான சமணர் செய்தவை அதனைப் பின் பற்றித் தமிழ்ச் சமயங்கள் நீதி நூல்கள் இயற்றின. இவ்வற நூல்களை இலக்கிய நூல்களாகக் கொண்டு இலக்கிய வரிசையில் வைத்த சிறப்பு வளர் தமிழுக்கே உரியதுளூ வேறெம் மொழியிலும் இத்திறம் இல்லை. அற நூல்கள் இயற்றுவதனை விளையாட்டாகப் பொழுது போக்காக் கொண்டிருந்தனர் தமிழர் எனப் போப் ஐயர் போன்றோர் போற்றுமளவிற்கு நீதி நூல்கள் குறிக்கோள் நிலையினையும், அகப்பொருள் நூல்கள் கற்பனைச் சூழலும் கொண்டவை. அக நூல்கள் ஒழுக்கங்களை ஒன்றன் பின் ஒன்றாக ஒது முறை, பிற்காலக் கோவை போன்ற அகப்பொருட் பிரபந்தங்கட்கு வழிகாட்டியாக விளங்குகின்றது.

மாந்தர் துன்பமின்றி வாழ்ந்து சிறக்க வேண்டும் என்பதே இவற்றின் நோக்கம். தேவையற்ற நியதிகளும் தரப்பட்டுள்ளன. கூறியது கூறல் என்பது போல, ஒரு நூலைப் பார்த்தாற் போல் எல்லாம் பெரும்பாலும் சில கருத்துக்களைத் திரும்பத் திரும்பக் கூறுகின்றன. திரிகடுகம், ஏலாதி, சிறுபஞ்சமூலம் போன்றன இதனுக்குச் சான்றாம். வாழ்வின் நிலையாமை, அறம் செய்யத் தூண்டுதல், வினை போன்ற பொதுத் தன்மைகள் இவற்றினூட் நிழலாடிச் செல்வதைக் காணலாம். பின்னெழுந்த நீதி நூல்கள் இவற்றை எளிமைபடுத்திக் கூறுவனவாகவே உள்ளன. இனி, இப்பதினெட்டின் பான்மை பகர்வோம்.

### 1.அகம் பற்றியன: (6)

**1.ஐந்தினை ஐம்பது:** அகப்பொருள் தழுவியது. முல்லை, குறிஞ்சி, மருதம், பாலை, நெய்தல் எனும் வைப்பு முறையது. திணைக்குப பத்தாக 50 பாடல்கள் உளளூ இதனால்

இப்பெயர், இயற்றியவர் மாறன் பொறையனார்ஞு கி.பி.4ஆம் நூற்றாண்டினர். செறிவும் சீரிய நடையும் மிக்க சிறந்த பனுவல் ‘இதனை ஓதாதார் செந்தமிழ் சேராதார்’ என்கிறது இதன் பாயிரம். களிறு பிடியைக் குளிப்பாட்டல் (32) காலை, பிணையை நீருண்ணச் செய்தல் (36) பிரிவாற்றாமையால் வளை கழலல் (36) யானை புலிக்கு வெருவுதல் (16) போன்ற அரிய கருத்துகளும், கொல்லர் தெருவில் ஊசி விற்றல் எனும் பழமொழியும் காணப்படுகின்றன. புண்ணிற்கு வெங்காரம் இடுதல் (21) மணலில் கூடல் இழைத்து எதிர் கால மறிதல், குழல், கொண்டை, சுருள், பனிச்சை, முடி எனும் ஐந்து வகையில் கூந்தலை முடித்தல் போன்ற பழக்க வழக்கங்கள் காணலாம். அருமையான பாட்டு ஒன்று,

**கனைவாய்ச் சிறுநீரை எய்யா தென்றெண்ணிப்**
**பிணைமான் இனிதுண்ண வேண்டிக் - கலைமாத்தன்**
**கள்ளத்தின் ஊச்சும் சுரமென்பர், காதலர்**
**உள்ளம் பாடர்ந்த நெறி.** (38)

**2.ஐந்திணை எழுபது:** திணைக்கு பதினான்காக 70 வெண்பாக்களையுடைய அகநூல், குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம் எனும் முறை வைப்பு, பாடியவர் மூவாதியார், சமணர் கி.பி.5ஆம் நூற்றாண்டினர். பிரிந்தர்க்கு மாலைப் பொழுது, கொல்வது போன்றது எனும் (1224) குறட்கருத்து

**புல்லுந ரில்லா நடுங்கச் சிறுமாலை**
**கொல்லுநர் போல வரும்** (17)

என வருகிறது. மகளிர்க்கு இடக்கண் துடித்தல், தும்மல் வருதல், ஆந்தை அலறல், நற்கனவு காண்டல் இவற்றை நன்னிமித்தங்களாகக் கருதினர். மணக்காலத்தே தலைவன் கூறும் உறுதி மொழிகளைத் தலைவி எழுதிப் பெறுவது போன்ற பண்டைப் பழக்கங்கள் வருகின்றன.

**3.திணைமொழி ஐம்பது:** ஐந்திணை நுவலுவது, குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் எனும் முறையது, திணைக்கு 10 வெண்பாக்களை உடையது. ஐந்திணை ஐம்பது போன்று சொற்பொருள் நயம் சான்றது. கி.பி.5ஆம் நூற்றாண்டைய கண்ணன் சேந்தனார் பாடியது. அருவியழகு அழகாகப் புனையப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக ஒரு பாட்டு,

**பவளமும் முத்தும் பளிங்கும் விரைஇப்**
**புகழக் கொணர்ந்து புறவடுக்கும் முன்றில்**
**தவழ்திரைச் சேர்ப்பன் வருவான் கொல் தோழி**
**திகழும் திருவமர் மார்பு** (50)

**4.திணைமாலை நூற்றைம்பது:** அகப்பொருள் நூல்ளூ திணைக்கு 30 வெண்பாக்கள் உள. குறிஞ்சி, நெய்தல், பாலை, முல்லை, மருதம் என்ற முறையில் அமைகிறது. ஆசிரியர் கணிமேதாவியார் (ஏலாதி இயற்றியவர்) திருமணத்திற்குப் பொருள் வாங்குதல் நன்றன்று என்கிறார். திண்ணிய முயற்சியின் பலனை இம்மையிலேயே அடையலாம் என்கிறார்(123) இயற்கையழகு இனிது சித்தரிக்கப்பட்டுள்ளது. தலைவியின் கற்பு நிலை காண்க.

**ஒருகை இருமருப்பின் மும்மதமால் யானை**
**பருகுநீர் பைஞ்சுனையில் காணாது - அருகில்**
**வழிவிலங்கி வீழும் வரையத்தம் சென்றார்**
**அழிவில ராக அவர்**

மதிபோன்ற முகமுடை தலைவியும், சூரியன் போன்ற சுடர் வேலேந்திய தலைவனும் சுரத்தினை செல்லும் காட்சி 'ஒரு சுடருமின்றி யுலகுபாழாக இரு சுடரும் போந்தன' வென்றார்.

**5.கார் நாற்பது:** தலைவனைப் பிரிந்த தலைவி ஆற்றியிருந்த அருமையினை இயம்பவது. ஆற்றியிருத்தல் முல்லைக்குரிய உரிப்பொருள் அத்திணைக்குப் பொழுது கார். அக்கார் வருணனை கொண்டு இருத்தலை இயம்புதலானும், ஒவ்வொரு பாட்டிலும் கார்காலம் பற்றிய குறிப்பு வர 40 பாடல் உள்ளமையானும், இப்பெயர் வந்தது. இயற்றியவர் கி.பி.5ஆம் நூற்றாண்டைச் சார்ந்த மதுரைக் கண்ணன் கூத்தனார். வேள்வி, கார்த்திகை விளக்கு, முதல், கரு, உரிப்பொருள்கள் உவமையாக வருதல் குறிக்கத்தக்கன. காலத்தால் பெயர் பெற்ற பனுவல், கார்காலச் சிறப்பினை முல்லைத்திணை நிகழ்ச்சியோடு இணைத்து இயம்பும் திறம் பாராட்டற்பாலது. உயரிய உவமைகள், வளமான வருணனைகள்ளூ வளமான பாட்டு ஒன்று,

**கல்பயில் கானம் கடந்தார் வரஆங்கே**
**நல் இசை ஏறொடு வானம் நடுநிற்பச்**
**செல்வர் மனம்போல் கவின்ஈன்ற, நல்கூர்ந்தார்**
**மேனிபோல் புல்லென்ற காடு**

தலைவன், தலைவி, தோழி, பாகன்-நால்வர் கூற்றாகவே பாடல்கள் உள. தலைவியின் ஏக்கம், அது தீர்க்க வரும் தலைவன் வேகம், கார்தரும் வேதனை இவை மூன்றும் இந்நூல் நுண்ணிதின் விளங்குகிறது.

**6.கைந்நிலை:** அகவிலக்கியம், திணைக்குப் பன்னிரண்டாக 60 வெண்பாக்களை உடையது. குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் எனும் வரிசையது. கை -ஒழுக்கத்தின், நிலை-தன்மை என்னப் பொருள் தந்து கை (ஐ) ஐந்திணை ஒழுக்கமும் உணர்த்துவதால், இப்பெயர்

பெற்றது. இயற்றியவர் புல்லங்காடனார் சில பாடல் சிதைந்துள்ளன இதனை ‘ஐந்திணை அறுபது’ என்பர். தலைவியின் நெஞ்ச நிலை நவில்வது.

**பொன்னிணர் வேங்கைப் புனம்சூழ் மலைநாடான்**
**மின்னின் அனைய வேல் ஏந்தி இரவினில்**
**இன்னே வரும் கண்டாய் தோழி! இடையாமத்து**
**என்னை இமைபொரு மாறு.**

## 2.புறம் பற்றியது

**7.களவழி நாற்பது:** போர்க்களத்தை நிலைக் களனாகக் கொண்டு பாடப்பட்ட 40 வெண்பாக்கள் உடமையின் இப்பெயர். பெரும்பாலும் பாடல்கள் ‘களம்’ என முடிகின்றது. புறப்பெருள் நூல், சோழன் செங்கண்ணனுக்கும் சேரமான் கணைக்கால் இரும்பொறைக்கும் நடந்த போரில், வெற்றி பெற்ற சோழன் குடவாயிற் கோட்டத்தில் சேரனை சிறை வைக்க, அவனை விடுதலை செய்ய பொய்கையார் பாடிய பனுவலாகும். சங்ககாலப் பொய்கையாரே, ஆழ்வாரில் ஒருவரோ அல்லர் ஆசிரியர். போர்க்கள இயல்பு, போரின் கொடுமை, நாற் படையின் நற்றிறம், சோழன் பெருவீரம், கார்த்திகை விழா (17) பற்றியன அறியக் கிடக்கின்றன. உவமைகள் ஒண்மை சான்றவை (20,32)

**கடிகாவில் காற்றுஉற்று எறிய வெடிபட்டு**
**வீற்று வீற்று ஓடும் மயிலினம் போர் நாற்றிசையும்**
**கேளிர் இழந்தனர் அலறுபவே செங்கண்**
**சினமால் பொருத களத்து** (29)

பெருமன்னன் ஒருவன் விடுதலைக்காகப் புலவர் மேற்கொண்ட முயற்சியும், விடுதலை பெற்றுத் தந்த தமிழ்க் கவிதையின் திறத்திணையும் பனுவலில் காணலாம். பாண்டவர் சண்டையால் கீதை பிறந்தது. சோழனுக்கும் சேரனுக்கும் நிகழ்ந்த போரின் விளைவாக வளர்தமிழ் பெற்ற வண்டமிழ் நூல் இது. முற்காலப் புறப்பாடல்களில் ஊற்றுநிலை பெற்று, பிற்காலப் பரணி இலக்கியத்திற்குக் கால் கோளாக விளங்குவது இந்நாற்பது.

## 1. அறம் பற்றியன: (11)

**8.இன்னாநாற்பது:** இன்னின்ன துன்பம் பயக்கும் எனப் பாடல் ஒன்றுக்கு நன்நான்கு கருத்துக்கள் வர, 40 வெண்பாக்கள் உடமையின் இப்பெயர் பெற்றது. ஆசிரியர் கபிலர். சிலர் சங்க காலத்தவர் என்றும், வேறு சிலர் பிற்காலக் கபிலதேவ நாயனாரே என்றும் கூறுவர். இருவரினும் வேறானவர் என்று நிறுவியுள்ளார் பண்டாரத்தார். உலகம் இன்பத்தையே விழைகிறது. துன்பத்தை எண்ணுவது கூட இல்லை. இதனை யுணர்ந்து துன்பங்களைத் தொகுத்துக் கூறி,

அவற்றை விலக்கின் இன்பநிலை தானே வந்தெய்தும் எனும் நோக்கில் எழுந்த நூல், குறளின் சாரமோ எனுமளவிற்குக் குறட் கருத்துக்களைக் கொண்டுள்ளது. 164 இன்னாச் செய்திகள் இடம் பெறுகின்றன. சங்க நூற் கருத்துக்கள் காணப்படுகின்றன. மணியில்லா யானைமீது மன்னன் செல்லின் அவனுக்கு ஏதும் ஏற்படும் (14) மதுவும் மாமிசமும் வெறுக்கப்பட்டன. பெற்ற தாயைக் கண்ணெனக் காத்தல், அந்தணர் வீட்டில் கோழியும் நாயும் புகுதல் கூடா போன்ற அக்காலப் பழக்கங்கள் தெரிகின்றன.

**9.இனியவை நாற்பது:** இன்னின்னவை இனியவை என்று 40 பாடல்களில் இயம்புதலால் இப்பெயர், பாடியவர் பூதஞ்சேந்தனார். கி.பி.5ஆம் நூற்றாண்டு. ஒவ்வொரு வெண்பாவிலும் 3,4 இனிய பொருள்கள் இயம்பப்பட்டுள்ளன. ‘ஊனினைத் தின்று ஊனைப் பெருக்காமை, கடன் படா வாழ்வு, வருவாய்க்கேற்ற செலவு போன்ற நன்குணர்த்தப் பெற்றுள்ளன. இன்னா இனிய இருநாற்பதும் ஒருவராலேயே செய்யப்பட்டவை என்று எண்ணும் அளவுக்கு நெருங்கிய ஒற்றுமை இரண்டிற்கும் உளளூ இன்னா நாற்பதின் மறு பதிப்பெனலாம். ஆயினும் சொற்சுவை மிக்கது. குறட் கருத்தும் சொல்லும் பயின்று வருகின்றன. பெண்ணடிமை இக்காலத்தில் தான் தலையெடுக்கத் தொடங்கியது போலும்,

**தடமென் பணைத்தோள் தளிரிய லரை**
**விடமென்று றுணர்தல் இனிது** (38)

பிரமன் வழிபாடு இக்காலத்தில் இருந்தது.

## 10.திரிகடுகம்

மருந்தின் பெயர். திரிமூன்று கடுகம் காரமுள்ள பொருள். சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்றும் சேர்ந்த மருந்து உடல் நோய் நீக்குமாய் போல, உளம் திருந்தும் ஒழுக்க நெறிகள் மூன்றினை ஒவ்வொரு வெண்பாவும் உள்ளடக்கியது. ஆதலில் இப்பெயர். 100 பாடல்கள். பாடியவர் நல்லாதனார். வைணவர், கடனின்றி வாழ்தல், வருவாயில் காற்பகுதியை அறஞ்செய்தல் (21) குளித்த பின்னே உணவு கொள்ளுதல் (27) கொடுங்கோலரசன், பொய்யான், கூடா ஒழுக்கதினர். இவர்களால் மழை பெய்யாமை (5) வேள்வியின் பொருட்டு கூடக் கொலை கூடாது (36) பழகினும் பார்ப்பாரைத் தீப்போல் ஒழுக வேண்டும் (42) போன்ற உயரிய கருத்துக்கள் ஒளி வீசுகின்றன. இருமையும் பயக்கும் முப்பெரும் உண்மைகள் இதயம் பதியும் வண்ணம் இயம்பப் பட்டுள்ளன. கணவனும் மனைவியும் எங்ஙனம் வாழ்தல் வேண்டுமென்பதை 35 பாடல்களில் குறிக்கிறார். நூறு பாக்களில், நன்மை தருவனவாக 66ம் தீமை பயப்பனவாக 34ம் கூறியுள்ளார். இவ்வுலகில் சிறந்திட நாம் கொள்ள வேண்டுவன இவை, கைவிட வேண்டியன இவை என்றுரைப்பதோடு வீடு பேற்றிற்குரிய வழியும் கூறுகிறது.

### 11.ஏலாதி

மருத்துவப் பெயர். ஏலம், இலவங்கம், சிறுநாவற்பூ (அல்லது தக்கோலம்) சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய ஆறு மருந்துகளின் கலவை உடல் நோய் தீர்க்கும் மருந்தாதல் போன்று, இந்நூல் வெண்பாக்களில் விளங்கும் நீதிகள் அறியாமையாகிய நோயைப் போக்கும். ஆதலின் இப்பெயர் பற்றது. பாடல்கள் 80, பாடியவர் கணிமேதாவியார் (இவரே திணைமாலை நூற்றறைம்பது பாடியவர்) வடமொழிப் புலமை மிக்கவர்ளூ சமணராகலாம். பிள்ளைகளின் வகையினை 30, 31 பாடல்களில் நன்கு விளக்குகிறார். கொல்லாமையை வலியுறுத்துகிறார். அன்புடையார் செயல்கள் (86) அழகுற சித்தரிக்கப்பட்டுள்ளன. மன்னர்குரிய மாண்புகளை 21 பாடல்களும், வீடுபேறு பற்றி 7 பாக்களும் எடுத்தோதுகின்றன. ‘உணவு கொடுப்பதே உயர்வான அறம்’ என்கிறது ஏலாதி. நல்லொழுக்கம் சான்றவர். விண்ணவரின் சிறந்து மண்ணுலகில் மன்னராய்ச் சிறந்தொளிர்வர். பாலன் பொல்லாதவன், ஆதலின் வீடு பேற்றினை விரைந்து பெறுக’ என்று கூறுகிறது.

### 12.சிறுபஞ்சமூலம்

மருந்தின் பெயர், மூலம்-வேர், பஞ்ச-ஐந்து, கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, சிறுநெருஞ்சி ஆகியவற்றின் வேர்களினின்று செய்த மருந்து நோய் தீர்க்கும். அதுபோல உயிருக்கு நலம் பயக்கும் ஐந்து உண்மைகளை ஒவ்வொரு வெண்பாவிலும் உடைமையால் இப்பெயர் வந்தது. 100 பாடல்கள். இயற்றியவர் காரியாசான். கணிமேதாவியாருடைய ஒரு சாலை மாணாக்கர், சமணர், ‘கொன்றுண்பான் நாச்சாம், தோற்கன்றைக் காட்டிப் பால் கறக்கும் வழக்கு (44), ஞானத்தாலேதான் வீடுபேறு கிடைக்கும்.

**தானத்தாற் போகம், தவத்தால் சுவர்க்கமாம்**
**ஞானத்தால் வீடாகும் நாட்டு** (34)
**‘மயிர் வனப்பும், கண்கவரும் மார்பின் வனப்பும்,**
**உகிர் வனப்பும், காதின் வனப்பும் - செயிர்தீர்ந்த**
**பல்லின் வனப்பும், வனப்பல்ல, நூற்கியைந்த**
**சொல்லின் வனப்பே வனப்பு’** (35)

போன்ற முண் கருத்துக்கள் நிறைந்துள.

### 13.ஆசாரக்கோவை:

ஆசாரம் - ஒழுக்கம், கோவை-அடுக்கிக் கூறல், ஆகலின் இப்பெயர். வெண்பாக்கள் 100. மக்கள் கொள்ள வேண்டியனவும் தள்ள வேண்டியனவும் நெறிகளை நவில்கிறது. வடமொழியை அடியொற்றிய நூல், சுக்ர ஸ்மிருதியினின்றும் ஆசாரங்கள் சிலவற்றைக் கூறுகிறதென்றும்,

தௌமியர் பாண்டவர்க்குக் கூறிய உபதேசத்தை ஒட்டியது என்றும் கூறப்படுகிறது. மூலம்-ஆரிடம் எனும் வடமொழி நூல். இன்றைய நாளில் எல்லோரும் ஏற்கும் கருத்தாகப் பல இல்லை. ஆரியக் கலப்பால் வந்த பழக்கங்கள் சில பேசப்படுகின்றன. அன்றாட வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய நெறிகளை நவில்கிறது. நீராடல்(14) உண்ணல்(21) தொழுதல்(16) உறங்கல்(30) உடுத்தல்(36) பற்றிய நெறிகள் நன்கு உணர்த்தப்பட்டுள்ளன. பாடியவர் பெருவாயின் முள்ளியார். ஆசாரம் என்றால் நல்ல முறையில் நடத்தலாம். உள்ளும் புறமும் தூய்மையுடன் உறைதலை உணர்த்துவதே ஆசாரமாம். வடக்குத் திசையில் தலை வைத்துப் படுக்கக்கூடாது என்கிறது. அது அறிவியல் முறையில் இன்று உண்மையெனப்படுகிறது. அங்ஙனம் படுப்பின் மூளைக்கோளாறு வருவதாகக் கூறப்படுகிறது.

### 14.நான்மணிக்கடிகை:

கடிகை-துண்டு எனும் பொருளது. நான்கு மணிகளின் துண்டுகள் இணைந்த மாலை போல, ஒவ்வொரு வெண்பாவிலும் நான்கு நீதிமணிகள் வரப் பாடியமையின் இப்பெயர் வந்தது. நான்கு மணியான கருத்துக்களைக் கொண்ட பாடல்களையுடைய அணி போல்வது என்றும் இயம்புவர். நன்மக்கள் எக்குடியிலும் பிறப்பர்(6) கல்வியின் பயன்வீடு(29), கொலை தீது(94) எருதுடையான் வெள்ளாளன், ஏலாதான் பார்ப்பான்(54) போன்ற பல கருத்துக்கள் வருகின்றன. எழுதியவர் விளம்பிநாகனார். பாடல்கள்104 வடமொழி வாடை வீசுகிறது. எல்லாம் பொருளில் பிறந்து வடும். இந்நிலத்து மன்னுதல் வேண்டின் இசை நடுகஊ வெல்வது வேண்டின் வெகுளிவிடல், தன்னொடு செல்வது வேண்டின் அறம் செய்க, மனைக்கு விளக்கம் மடவாள், மடவாள் தனக்கு தகைசால் புதல்வர், மனக்கினிய காதற் புதல்வர்க்குக் கல்வியே, கல்விக்கும் ஓதின் புகழ்சால் உணர்வு என்றெல்லாம் இனிய கருத்துக்களை அள்ளித் தரும் தெள்ளிய நூலாகத் திகழ்கிறது.

### 15.முதுமொழிக்காஞ்சி

நிலையாமையை யுணர்த்தும் உலகியல் அனுபவம் உணர்த்ததலால் இப்பெயர் உடைத்து, பத்துப் பாடல்களையுடைய பத்து பிரிவுகள் உள. ஒவ்வொரு பத்தும் ‘ஆர்கலி யுலகத்து மக்கட்கெல்லாம் என ஒரே மாதிரி தொடங்குகின்றது. அவ்வப்பத்தில் எல்லாப் பாடல்களின் இறுதியில் பயின்றுவரும் ஒரே மாதிரி சொற்களைக் கொண்டே அறிவு பத்து, அல்ல பத்து என ஒவ்வொரு பத்தும் தலைப்பினைப் பெறுகிறது. குறள் வெண் செந்துறையால் இயன்ற 100 பாடல்கள் உள. ஆசிரியர் கூடலூர் கிழார், ஐங்குறுநூற்றைத் தொகுத்தவரும் இவரும் ஒருவரா? கல்வியினும் ஒழுக்கமே உயர்ந்தது (1-1) கொடையைவிட வாய்மையே சிறந்தது. (34) உணர்விலார்க்கு வாழ்வும் சாவே. சேரா நட்பு உதவியின் அறிப. இசையில் பெரியதோர் எச்சமில்லை. போரில் பிறந்தமை ஈரத்தில் அறிய போனற் அரிய கருத்துக்கள் மிளிர்கின்றன. நீதி நூல்களில் இ:.தொன்றே சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் வளமையதெனலாம்.

## 16.பழமொழி

ஒவ்வொரு வெண்பாவின் இறுதியிலும் பழமொழி வர 400 பாடல்கள் உடமையான் இப்பெயர் பெற்றது. பழமொழி நானூறு எனப்படும். கரிகாலன், கொற்கைப் பாண்டியன், பாரி, பேகன், மனுநீதி சோழன் போன்றோரின் வரலாற்றுக் குறிப்புகள் கொண்டுள்ளதால், வரலாற்று ஆராய்ச்சிக்கு உற்ற துணையாகிறது. எழுதியவர் முன்றுரைஅரையனார். சமணர். நாய்காணின் கல்காணாவாறு, கல்லாமல் பாகம்படும், முறைமைக்கு மூப்பு இல். நிறைகுடம் நீர் தளும்பல் இல், திங்களை நாய் குரைத்தற்று, நுணுலும் தன் வாயால் கெடும் போன்ற பழமொழிகள் குறிப்பிடத்தக்கன. பழமொழியினையே பகரும் பனுவல்களின் தொன்மையும் தலைமையும் சான்று. இந்நூல், கல்வி, ஒழுக்கம், ஊழ், நட்பு, அரசியல், இல்வாழ்வு, வீடுபேறு ஆகிய அனைத்தையும் வகுத்துக்கூறும் நன்னூலாம். இதலிரண்டடிகள் கூறவெடுத்துக் கொண்ட பொருளையும், மூன்றாமடியில் முன்னிலை விளியும், நான்காமடியில் பழமொழியும் கொண்டது. நாடோடிப் பழமொழி போலாது. இலக்கியப் பழமொழியாக இலங்குகிறது. பண்டைத் தமிழர் பண்பாடு காட்டும் கண்ணாடியாக விளங்குகிறது. குறள், நாலடி கருத்துக்கள் பயின்று வருகின்றன.

## 17.நாலடியார்

வெண்பாக்கள் அனைத்தும் 4 அடிகளால் அமையுமாற்றான் நாலடி என்றும்ளூ சிறப்பு கருதி ஆர் விகுதி சேர்ந்து (சிவஞான சித்தியார் போல) நாலடியார் எனவும் 400 பாக்கள் உள்ளமையின் ‘நாலடி நானூறு’ எனவும் வழங்குகிறது. அறத்துப்பால் (13) பொருட்பால் (24) காமத்துப்பால் (3) எனும் முப்பிரிவும் 40 அதிகாரங்களும் கொண்டது. துறவறவியல் முதற்கண் பிறநாடு சென்ற சமணப் புலவர்கள் ஒவ்வொரு பாட்டை எழுதி வைத்துச் சென்றனர். அங்ஙனம் எண்ணாயிரம் ஏடுகள் இருந்தன. இவற்றை வைகையில் எறியுமாறு பாண்டியன் வேண்ட, அவற்றில் 400 பாடல்கள் எதிரேறிக் கரையில் ஒதுங்கின. அவற்றின் தொகுதியே இ∴தென்பர். வச்சிரநந்தி தோற்றிய சங்கத்துப் புலவர்கள் பாடிய தனிப்பாடல்களின் திரட்டே இந்நூல் என்பர் சிலர். சிலர், பலரால் பாடப்பட்டதன்று, ஒருவராலேயே உருவாக்கப்பட்ட நூல் என்றும் செப்புவர். இந்நூலுக்குக் கடவுள் அமைத்து இயல் வகுத்துத் தொகுத்தளித்தவர் பதுமனார். குறட் சொற்களும் பலவிடங்களில் வந்துள்ளன. வடசொற்கள் வருகின்றன. எச்சமயமும் வலியுறுத்தப் பெறவில்லை. முத்தரையர் பற்றி 200, 296 பாடல்களில் குறிப்பு வருதல் கொண்டு கால ஆராய்ச்சி செய்து, இந்நூல் 7ஆம் நூற்றாண்டையது என்பர். கி.பி.300-750க்கு இடைப்பட்ட தென்பர்.

## நூற்பெருமை

திருக்குறளோடு இயைத்துப் பேசப்படும் பெருமையது. (நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி, பழகு தமிழ்ச்சொல்லருமை நாலிரண்டில்) பரிமேலழகர், நச்சர், அடியார்க்கு நல்லார் போன்ற உரையாசிரியர் பலரால் மேற்கோளாகக் காட்டப் பெறுவது. போப்பையரால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. வாழ்வு நெறி விளக்கும் வளமார் வழிகட்டி, நீதி நூலே யாயினும்,

இலக்கியச் சுவையும் கொண்டது. செறிவும் மிக்கது. உவமையழகு உடையது. மேன் மக்களியல்பு (70) நண்பர் திறம் (75) காமத்தின் கொடுமை(90) கல்வியழகு(131) மனமாட்சி (382).

**யானை யனையவர் நண்பொரீஇ நாயனையார்**
**கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும் - யானை**
**அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும், எறிந்தவேல்**
**மெய்யதா வால்குழைக்கும் நாய்.**

என்பன போன்ற இடங்கள் இதயந்தொடுவன.

நண்பனும் மனிதன்தானே. அவனிடத்தும் குறைகள் இருக்கத்தான் செய்யும் என்பதனை ‘நெல்லும் உமியுண்டு, நீர்க்கு நுரையுண்டு, புல்லிதழ் பூவிற்கும் உண்டு’என்று விளக்குகிறது. ‘நாவின் கிழத்தி உறைதலால் சேராளே பூவின் இருவர் நட்பு’ ‘மகனறிவு தந்தையறிவு’ எனும் பழமொழிகளும், பாற் சோற்றில் நெய்பெய்துண்டல், எருமைக் கடாவினைப் பூட்டி ஏறுதழுவுதல், பிறன்மனை விழைந்தார்க்குக் கொலை தண்டனை பிணத்தைச் சுடுதல், நாரினால் கட்டி இழுத்தல், தூய்மை செய்து புதைத்தல், கண்டவிடத்து எறிதல் போன்ற முறைகளும், பழக்கங்களும் தெரியவருகின்றன.

## 18.திருக்குறள்:

நூல்: அறம், பொருள், காமம் ஆக 3 பால்களும், பாயிரம் ஒன்றும்ஞ இல்லறம், துறவறம், அரசியல், அங்கவியல், ஒழிபியல், களவு ஆகிய 7 இல்களும், 133 அதிகாரங்களும், அதிகாரத்திற்குப் பத்தாக 1330 குறட்பாக்களும் கொண்டது. தூய தமிழ்ச் சொற்களால் இயன்றது. 12000 சொற்களைப் பெய்து பாடப்பட்ட குறளில் 50க்கும் குறைவான வடசொற்களே விரவி வந்துள. குறள் வெண்பாக்களால் ஆயினமையின் இப்பெயர் வந்தது. சிறப்பு கருதி ‘திரு’ எனும் அடைமொழி பெற்றது. ‘திருக்குறள், முப்பால், உத்தரவேதம், தெய்வநூல், பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, தமிழ்மறை, பொதுமறை, திருவள்ளுவப்பயன், திருவள்ளுவம்’ எனும் பத்துப் பெயர்களானும் வழங்கும், புறப்பாட்டு ‘அறம்’ என்றே இதனைக் குறிக்கிறது. மல்லர், பரிப்பெருமாள், களிங்கர்’ ஆகிய பதின்மர் உரை கண்டுளார். இராமாநுஜ கவிராயர், சரவண பெருமாளையர், தண்டபாணி, அரசஞ் சண்முகனார், திரு.வி.க, நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை, புலவர் குழந்தை, பாரதிதாசன் போன்றாரும் உரைகள் செய்துள்ளனர். பரிமேலழகர் உரையே பெருமைக்குரியதாகக் கருதப்பட்டு வருகிறது.

தமிழிலக்கியத்தில் மிகக் குறுகிய அடிகளான ஒன்றே முக்கால் அடிகளில் இயன்ற ஒரே நூல் இதுவே. சமணர், பௌத்தர், சைவர், வைணவர் அனைவரும் எங்கள் ஒரே நூல் எனப் போற்றும் பெருமைக்குரிய பொதுமை நூல். ஒரு நாட்டிற்கோ, ஒரு காலத்திற்கோ, ஓர் இனத்திற்கோ உரியதாகாது. எந்நாட்டவர்க்கும், எக்காலத்தினர்க்கும் முக்காலத்துக்கும்,

எத்திறத்தார்க்கும் உரிய நூலாக மிளிர்கிறது. அதனாற்றன் கல்லாடனார். 'எப்பாவலரும் இயைபவே வள்ளுவனார் முப்பால் மொழிந்த மொழி' என்றார். இது தனித்தமிழ் முதல் நூல். தமிழ் மறையாகக் கருதப்படுகிறது. இதனை, மாங்குடி மருதனார், 'ஓதற்கு எளிதாய, உணர்வதற்கு அரியதாகி, வேதப்பொருளாய் மிக விளக்கி' என்றும், செய்கண்ணனார், 'வேதப் பொருளை விரகால் விரித்தும்' எனவும், வண்ணக்கஞ் சாத்தனார், 'ஆரியம் வேதம் உடைத்து, தமிழ் திருவள்ளுவனார் ஒது குறட்பா உடைத்து' என்றும் குறிப்பிடுவது காண்க. இந்நூலில் எல்லாப் பொருளும் இதன் பாலுள' இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லையால்' என்கிறார் தமிழ் நாகனார்.

இருளகற்றும் கைவிளக்காக இந்நூல் இலங்குகிறது. இதனாற்றான் அறம் பொருள் இன்பம் எனும் முப்பிரிவில் இயன்றுள்ளது என்கிறார் நம்பாலத்தனார். 'அறம் தகளி, ஆன்ற பொருள் திரி, இன்பு சிறந்த நெய், செஞ்சொல் தீதண்டு நீக்கும் விளக்கு' 'இந்நூலை முற்றிலும் ஓதிய பின் வேறு நூல் பயிற்சி வேண்டா, மன்னு தமிழ்ப் புலவராய் வீற்றிருக்கலாம்' என்கிறார் நத்தத்தனார் என்றால் இதன் செறிவும் சிறப்பும் எளிதே யுணரலாம்.

**இயல்பும் ஏற்றமும்:** உலக அரங்கில் இந்நூல் புகழ் பெற்றது போல, வேறு எந்த இன்தமிழ் நூலும் இந்த அளவுக்கு ஏற்றம் பெற்றதில்லை. திருக்குறளின் உயிரோட்டமாக 'உலக ஒருமை-ஒரு குடைக் கீழ் ஆட்சி' என்ற கொள்கை ஊடுருவி நிற்கிறது. தனி மனிதன் பயன்படும் வாழ்வு இன்ப வாழ்வுளூ பயப்படுமிடம் பொருளியல் வாழ்வு என்பதைப் புலப்படுத்துகிறது. அறமே அனைத்திற்கும் அடிப்படை, 'மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்து அறம்' 'அறத்தான் வருவதே இன்பம்' என்று கூறி, அறவழி நின்று பொருள் ஈட்டி அதனைக் கொண்டு இன்புறுதலே வாழ்வுளூ ஆக பொருளியலாகிய பொதுவாழ்வுக்கும் இன்பியலாகிய தனி வாழ்வுக்கும் அடிப்படை அறமே (Virture being the moral basis of life) என்ற போக்கினை நோக்கக் கொண்டுளது.

## 1.7. இரட்டைக்காப்பியங்கள்

**அமைப்பும் அமைதியும்:** தமிழிலுள்ள காப்பியங்களில் பழமையானது ஐம்பெருங் காப்பியங்களில் காலத்தால் முந்தியது. கடைச்சங்க காலத்தைச் சார்ந்தது. செங்குட்டுவன் இளவல் இளங்கோவடிகள் யாத்தது. முந்நாடு, முந்நகர், மூவேந்தர் பற்றி, முக்காண்டங்களில் மூவர் (கோவலன், கண்ணகி, மாதவி) வரலாற்றை, மூன்றுண்மைகள் விரவ, முத்தமிழ் பரவ, முச்சுவை பொது. முக்கலை மிக்க முப்பது காதைகளில் அமைவது. 'இயல் இசை நாடகப் பொருட்டொடர் நிலைச் செய்யுள்' (அடியார்க்கு நல்லார் - உரைப்பாயிரம்) 'உரையிடை இட்ட பாட்டுடைச் செய்யுள்' (பதிகம்) 'நாடகக் காப்பியம்' 'முத்தமிழ்க் காப்பியம்' என்று வழங்கும்

5001 வரிகளையுடையது. பின்னர் வந்தோரால் எழுதி இணைக்கப் பெற்ற பதிகம் முன்னே உள்ளது. சில காதைகளில் இறுதியில் வளம்மிகு வெண்பாக்கள் விளங்குகின்றன. கோவலன், கர்ணகை, மாதகி என்ற பெயரமைய, புகழேந்திப் புலவரால் அம்மானையாகப் பாடப்பட்ட 'கோவில்கதை' உளது. வைசிய புராணம் 32 ஆம் சருக்கம் கண்ணகி கதையைக் கூறுகிறது. நற்றிணை 216ஆம் பாட்டும் (ஒருமுலை அறுத்த திருமாவுண்ணி) யாப்பருங்கல விருத்தியுள் காணப்பெறும் - கொலையுண்ட கணவர் கதறும் நிலை கண்டு கதறும் பத்தினிச் செய்யுளும் புறநானூற்றில் வரும் கண்ணகியும், கண்ணகி கதை குறிக்கின்றன என்பர். இதனை நோக்க, சங்க காலத்துக்கும் முன்பே உண்மையில் நடந்த நிகழ்ச்சி வளர்ந்து அழகும் சிறப்பும் பெற்று, வழிபடு நிலைக்கு வர அதனை இளங்கோவின் கை வண்ணம் ஏற்றமிகு இன்தமிழ்க் காப்பியமாக்கியது எனலாம். சிலம்பின் கதை செப்பவும் வேண்டுமோ? செந்தமிழர் எவரும் அறிந்தன்றோ?

**சிலம்பு தரும் செய்திகள்:** 1.திருமணம் முடிந்ததும் நம் தம்பதிகள் தனிக்குடித்தனம் வைக்கப்பட்டனர். 2.யானை மீது ஏந்திழையார் சென்று திருமணச் செய்தியை மக்களுக்குப் பரப்புவர். 3.மண முடிவில் அரசனையும் சேர்த்து வாழ்த்துவர். 4.மகளிர் அறவோர்களித்தல், அந்தணர்ரோம்பல், விருந்தெதிர் கோடலைச் செய்வர். 5.மழை தவறினும், மன்னுயிர் வருந்தினும் மன்னன் வெறுக்கப்படுவான். 6.வஞ்சிமாநகரில் பன்னாட்டு ஒற்றர்கள் உலவினர். 7.முடங்களல் முத்திரையிடப்படுதல் 8.பாண்டியர், சேரர் அரண்மனைகளில் கூன், குருடு, ஊமை, பேடி போன்றார் பணியாளராக இருந்தனர். 9.மதுரைக்குச் செல்ல மூன்று நெறிகள் இருந்தன. 10.இந்திர விழா இருபத்தெட்டு நாட்கள் நடைபெறும், இறுதி நாளில் அனைவரும் கடலாடுவர். 11. சமய வாதிகள் தத்தங் கொள்கைகளை எடுத்தோதுவர். 12.கண்ணகி திருமணத்தில் மாமுது பார்ப்பான் மறைவழி காட்ட, மணமக்கள் தீ வலம் வந்தனர்: முளைப்பாரிகை வைக்கப்பட்டிருந்தது.

13. **அரைசியல் பிழைத்தோர்க் கறங்கூற் றாவதும்**
**உரைசால் பத்தினிக் குயர்ந்தோர் ஏத்தலும்**
**ஊழ்வினை உருத்துவந் தூட்டும்**

என்ற மூன்று உண்மைகளை உணர்த்துகிறது.

14. ஆம்பலங்குழல், கொன்றையங்குழல் போன்ற துளைக் கருவிகளும், மகர, சகோட, பேரி, செங்கோட்டியாழ் முதலான நரம்புக் கருவிகளும், சல்லிகை, ஆவஞ்சி, இடக்கை, கரடிகை போன்ற தோற்கருவிகளும், பண்களும் அறிகின்றோம். 15.அகக்கூத்து, தேசிகக் கூத்து என கூத்து பல வகைப்படும். அரங்க அமைப்பும், ஒருமுக பெருமுக, கரந்துவரல் எழினிகளும், விதானம், ஓவியமும் தெய்வ உருவங்களும் கொண்டிருத்தல் தூண்களின் நிழல் விழாவண்ணம் பிளக்கமைத்தல் ஆகியன 'அரங்கேற்று காதை' அறிவிக்கிறது. 16.சூரியன், பலராமர், ஐயனார் கோட்டங்கள் இருந்தன. மதுராபதி, சம்பாபதி போன்ற தெய்வங்கள் நகர்களைக் காவல் காத்தன. பழம் பிறப்பு உண்டு. இதந்த உயிர் இன்னொருவர் மேல் தோன்றிப் பேசுதல், இறந்தோர் உயிர்

பெற்றெழல், தெய்வங்கள் கற்புடையோர் ஏவியபடி இயங்கும்: கடல்கோல் நிகழ்ந்தது. சேரர் விற்பொறியை இமயத்தில் பொறித்தமை போன்ற தெரிகின்றன. 17.குறிஞ்சியும் முல்லையும் முறைமையில் திரிந்து பாலையென்பதோர் படிவம் கொள்ளும். 18. முற்பகல் செய்யின், பிற்பகல் தானே வந்து விளையும். 20. வேத்தியல் பொதுவியல் எனுட் இருதிறத்து கூத்து 21.பசியும் பிணியும் பகைமையும் நீங்கி, விசயும் வளனும் சுரக்கென வாழ்த்துவர். 22.ப.்.றுளி யாற்றுடன் பன் மலையடுக்கத்துக் குமரிக்கோடும் கொடுங்கடல் கொண்டது. 23.புகார் நகரம், மருவூர்ப் பாக்கம், பட்டினப் பாக்கம் என்ற இரு பகுதிகளாக இருந்தமை. 24.நாளங்காடி, அல்லங்காடிகள் இருந்தன. கடைகளின் வகையறிய கொடிகளும் விளக்குகளும் பொருத்தப்பெற்றிருந்தமை. 25.ஐம்பெருங்குழுவும் எண்பேராயமும் இணைந்து நின்று அரசர்க்குத் துணைபுரிந்தன. ஐவகை மன்றங்களின் அற்புதச் செயல்க்ள, அணிவகைகள், புகாரில் இருந்த கோட்டங்கள், நவமணிகளின் இலக்கணம், புகாரிலிருந்த பத்தினிப் பெண்டிர் எழுவர் போன்ற அரிய பல செய்திகள் மண்டிக் கிடக்கின்றன.

**சிலம்பின் சிறப்பு:** 1.தமிழில் அமையும் முதற் காப்பியம் 2. உலகக் காப்பியங்களோடு ஒருங்கு வைக்கத் தகும் ஒண்மையது. 3.தமிழில் உள்ள காப்பியங்களில் தலையாயது- உலகத்தலையாதது. நிலையாயது. 4.பெண்ணுக்கு பெருமை தரும் அருமையது. 5.முந்நாட்டை இணைத்து, மூவேந்தரைப் பிணைத்துச் செல்லும் பெற்றிமை சான்ற ‘ஒற்றுமைக்காப்பியம்’ 6.உலகக் காப்பியங்களுக்கெல்லாம் கடவுள், தேவர், அரசர் ஆகியோர் பற்றியே அமைய, எளிய மக்களுக்குத் தலைமை தரும் ‘குடிமக்கள் காப்பியமாக’ இலங்குகிறது. இ.்.து 7.சங்கப் பாக்கள் சிறு நிகழ்ச்சிகள் கூறும் சின்னஞ்சிறு தன்னுணர்ச்சிப் பாடல்களாக அமைய, ஒருவரின் முழுக்கதையை ஊரும் பேரும் உறவும் கூறும் ஒரு பெரு நூலாக ஒளிர்கிறது. 8.தமிழில் தோன்றிய முதல் ‘நாடகக் காப்பியம்’ 9.இயல், இசை, கூத்து இயைந்து ‘முத்தமிழ்க்காப்பியம்’ 10.குன்றக் குரவை ஆய்ச்சியர் குரவை, வேட்டுவவரி, கடலாடு காதைகள் முறையே குறிஞ்சி முல்லை, பாலை, மருத நில மக்கள் வாழ்வினையும், புகார், மதுரை, வஞ்சி நகர் வருணனையான் நாகரிக நகர வாழ்வினையும், பண்டைத் தமிழகக் கலை நிலை, நாகரிகம் சமயச்சூழல் சமூக நிலை ஆகியவற்றை வடித்துக்காட்டும் வரலாற்றுக் காப்பியமாக (Historical Epic) விளங்குகிறது. 11.இக்காலத்து வழங்காத எண்வகை இசைப்பாடல்கள் இதன்கண் வருகின்றன. கானல்வரி போன்ற வரிப்பாக்களும், குரவைப்பாட்டு, வள்ளைப்பாட்டு போன்றனவும் வருகின்றன. அரங்கேற்று காதையில் இசையாசிரியன் இயல்பு மொழியப்படுகிறது. இசைத்தமிழ் வரலாறு அறிய நமக்குள்ள பழமையான பனுவல் இ.்.தொன்றே என்னுமளவிற்குத் தமிழிசை மறுமலர்சசியடைய, ‘யாழ்நூல்’ போன்ற நூல்கள் தோன்ற அடிப்படையான இசைத்தமிழ்க் களஞ்சியமாக இலங்குகிறது. 12.தமிழ் உரைநடை வரலாற்றின் உண்மையுணர உதவிடும் பண்டை நூல். 13. காலில் கிடக்கும் சிலம்பையே காப்பியத் தலைப்பாகக் கொண்டு ஒப்பற்ற சிறப்பினது. து'யந்தனின் கணையாழியையும், ஓதெல்லாவின் கைக்குட்டையையும் வைத்து, நாடகம் யாத்த காளிதாசரும், சேக்ஸ்பியருங்கூட அவற்றினுக்குக் ‘கணையாழி என்றோ

கைக்குட்டை' என்றோ பெயரிட்டார்களில்லை. வடமொழியில் 'ரத்னாவளி' என்றுதான் உளது. புகார்க் காண்டத்தில் இருசிலம்பு, மதுரைக் காண்டத்தில் ஒற்றைச் சிலம்பு ஒலி கேட்போம். வஞ்சிக் காண்டத்திலோ அவ்வொலிகூடக் கேட்கவில்லை. அந்தச் சிலம்பை அடிப்படையாகக் கொண்ட காப்பியமாதலான், சிலப்பதிகாரம் என்று பெயரிட்டார் இளங்கோ, இத்திறம் எம்மொழி இலக்கியத்திலும் இல்லை. 14. தமிழக அனைத்தையும் பன்னிருப்படலம் வணிகர், வேடுவர், ஆயர், அரசர் ஆகிய அனைவரும் இணையும் கண்ணகி சிலை இமயத்தில் பிறந்து, கங்கையில் நீராடி சேர நாட்டில் நிலைபெறும் 'தேசீயக் காப்பியமாகத்' (National Epic) திகழ்கிறது. 15. காப்பிய ஆசிரியரும் ஓர் உறுப்பினராக அதுவும் பத்தினியை ஏத்தும் இடத்தில் அமையும் சிறப்புடையது. 16.சிறந்த கவித்துவமும், செவ்விய நடையும், செறிவும் மிக்கது. 17ஆசிரியர் சேரர், சமணர், இருப்பினும் ஏனைச் சோழ பாண்டி நாடுகளையோ மன்னர்களையோ போற்றும்போதும் சரி, பிற சமயங்களைப் பேசும் போதும் சரி, காய்தல் உவத்தல் காழ்ப்பு இன்றி நடுநிலை நின்று காப்பியம் இயற்றப்பட்டுள்ளது. 18.உவகை, அவலம், வீரம் முதலிய ஒன்பான் சுவைகளும் ஒருங்கே உடையது. 19.வீரட்கட்குரிய நடுகள் வழிபாட்டு முறையினை வீரக்கற்பு மிகு வீராங்கனைக்குரியதாகும் 'புதுமைக் காப்பியமா'கப் பொலிகிறது. 20. பிற காப்பியங்கள் தத்தம் சமயக் கடவுளை ஏத்திச் செல்ல, இக்காப்பியம் சாதி, சமய, கால இடக்கட்டுப்பாடுகளைக் கடந்து போற்றப்பெறும் 'கன்னித் தமிழ்க் கோயிலாகக்' காட்சியளிக்கிறது. 22.கம்பராமாயணம், சிந்தாமணி போன்றில்லாது, தமிழகத்தில் நடந்த தமிழக கவிஞனே செய்த முதல் நூல் இது: வழி-சார்பு நூலன்று. 23.பல்வகைப் பாக்களும், உரையும் பாட்டும் விரவும் கூட்டு நடைகொண்டு விறுவிறுப்பாகச் செல்லும் வளமையது. 24.எப்போதோ நடந்த கதையொன்று எள்ளளவும் எண்ண இடமின்றி கண்முன் நடப்பது போன்ற காட்சியின்பமும் (Spectacular appeal) இயல் வாய்மையும் (realism) கொண்டது. 25.பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் கலந்த - எல்லோர் உள்ளத்தையும் அள்ளும் இலக்கியத் சுவை பிலிற்றும் செந்தமிழ்க் கவியமுது. 26.தமிழிலக்கிய வரலாற்றில் தனியிடம் வகிக்கிறது: சிறுசிறு தனிநிலைச் செய்யுட்களைக் கண்ட நாம், முதற் கண் கானும் தொடர்நிலைச் செய்யுள் இதுவே, பண்டை வண்டமிழ் வழக்குக்கும் பிற்றை நாள் பைந்தமிழ் வளப்பங்கட்கும் நடுவணமைந்து நற்றமிழ்க் கலங்கரை விளக்கமாய் நின்ற இருபுறமும் ஒளிவீசி உண்மை யுணர்த்தும் ஒண்மையது. பண்டை இலக்கியத்தில் பின்னெல்லையாகவும் அமைகிறது. அதனால் இது வரலாற்றுச் சிறப்புமிகு காப்பியமாகவும் (Historical Epic) விளங்குகிறது. 27.ஐந்திணைச் செய்திகள், இந்திரவிழா வூரெடுத்த காதை, கானல்வரி, வேட்டுவவரி, ஆயச்சியர் குரவை, குன்றக் குரவைகளில் வருதலான் அகத்திணையும், வஞ்சிக்காண்ட காதைகள், குட்டுவன் வடநாட்டுப் போர் போன்றவற்றால் புறத்திணையும் புரிய வருகின்றன. இன்ன பிறவற்றால், 'சங்க இலக்கியப் பிழிவாக' சிலம்பு இலங்குகின்றது. 28.தமிழ் இலக்கியப்பெரு வழியின் திருப்புமையமாகத் (வுரசநெைபெ ீழைவெ) திக்கிறது. 29.எக்காப்பியத்திலும் ஏன்? உடன் எழுந்த மேகலையில் கூட இல்லை எனும் வண்ணம், இறைவர்களை ஏத்தாது இயற்கையை வணங்கும் வளமையது. 30.மண், பெண், பொன் பற்றியே

பிற காப்பியங்களெல்லாம் எழ, இக்காப்பயிம் 'நம்மை மறந்தாரை நாம் மறக்கமாட்டோமால்' எனும் பண்பில் பிறந்த அன்புக் காப்பியம். 31. உலகிலேயே பொய்மையும் புனைவும் குறைந்த காப்பியம் இ∴தொன்றே. 32. முப்பது காதைகளும் சேர்ந்திருந்து செந்தமிழின்பம் அளிக்குமாப் போன்றே, தனித்தனியே தன்னிறைவு பெற்றுத் திகழும் அணிகளாக மிளிர்கின்றன. எனவே தான், மணிகளால் ஆன மணியாரமாக அணி செய்கிறது அடிகள் வழங்கிய அற்புதக் காப்பியம், 33. நல்லிசைப் புலவோர் (கற்பனையில் கண்ட) நாடு நகர் முறைக்கு உயிர் நிலையாக ஒளிர்கிறது. 34.இளங்கோவை இன்தமிழிலக்கிய வோர்ட்ஸ்வொர்த் எனுமளவிற்கு இயற்கையை எழில்படம் படைக்கும் இயற்கைச் சுரங்கமாக, இலங்குகிறது. 35.நாடகத் தமிழின் தொன்மையறிய அரசியல் புளவும், சமய பூசலும்: உடலுக்கும் அளவுண்டு. கலை, விலைமகளிர்க்கே உரியதன்று, குலமகளிர்க்கும் வேண்டுவது. எல்லோர் வாழ்விலும் கலை மணம் கமழ்தல் நன்று என்றெல்லாம் இயம்பும் 'எச்சரிக்கைக் காப்பியமாகவும்' இருக்கிறது. 37.கம்பராமாயணம் வைணவத்தையும், பெரியபுராணம் சைவத்தையும், மணிமேகலை பௌத்தத்தையும், சிந்தாமணி சமணத்தையும் சார்ந்தது போல் சிலம்பு, சமயச் சார்போ - புறசமயங்களைச் சாடுதலோ இன்றி, திருக்குறள் போல் சமரசப் பொதுமை நெறி சாற்றுகிறது. 38.நாடகங்கள் எனும் ஊழஅநனைநளஇ வுசயபநனைநளஇ ர்ளைவழசலைஉயட முத்திறத்தன. இம்மூன்றும் இதில் ஒன்றி இணைந்து ஒளிர்கின்றன. 39. தமிழ் இலக்கியத்தைக் கண்ணோட்டம் செலுத்தி கதை பகரும் முதல் நூலும் இதுவே. 40. தற்காத்து தெய்வம் தொழாது, தன் கொண்டானைப் பேணித் தொழுது, தகை சான்ற சொற்காக்கும் வள்ளுவரின் இலட்சியப் பெண்ணை இலக்கியப் பெண்ணாக்கிய கணவனைத் தொழிலும் காப்பியம் எழிலும் என்ற ஏற்றமுடையது. 41.புத்தன் துறந்தான்: பௌத்தம் பிறந்தது, பாரதப்போர் கீதை பிறக்கச் செய்தது: கலிங்கப் போர், பரணி தந்தது: சோழ-சேர பெருங்சண்டை, களவழி நாற்பது நல்கியது அது போன்றே இளங்கோவின் துறவு தூய தமிழ்க் காப்பியத்தை அளித்தது. துறவு தந்த அறக்காப்பியமாக அமைகிறது. 42.உலகிலேயே சூழ்ச்சியும், கொடுமையும் குறைந்த நன்மை நிறைந்த நல்ல காப்பியம் இதுவே. 43.புதின உறுப்பும் உருவும் பொதுளிய முதல் தமிழ் செய்யுள் நவீனமாக நிலவுகிறது. (அகிலன்) 44.காலம் (கார்நாற்பது) இடம் (களவழி நாற்பது) ஊர் (மதுரைக்காஞ்சி) நிலம்(முல்லைப்பாட்டு) பா (கலித்தொகை) பாவடி (குறள்) பாடியோன் (கம்பராமாயனம்) மலர் (குறிஞ்சிப்பாட்டு) பொருள் (புறம்) திணை (நற்றிணை) அடி (குறுந்தொகை) பாட்டுடைத் தலைவன் (சீவகசிந்தாமணி) தலைவி (மணிமேகலை) இவர்களால் இலக்கியங்கள் எழ, சிலப்பதிகாரமோ காற்சிலம்பு காரணமாகத் தோன்றிய நூற்சிலம்பாக நிற்கிறது. 45. காப்பியத்தில் சிலம்பு ஆற்றல் காட்டுமாப் போன்றே, தலைப்பிலும் சிலம்பு அதிகாரம் தான் சிலப்பதிகாரம் ஆகிறது. அதிகாரம் தவிர எது எச்சொல் இணைந்தாலும் சிலம்பு என்றே நிற்கிறது. பெயர்ச்சிறப்பு பெருமிதப் படுமாறுளது. 46.மொழி (தமிழ்) இனம் (தமிழன்) நாடு (தமிழகம்) மூன்றுக்கும் முதன்மை தந்து இணைத்துக் குழைத்து வடித்த இனிய காப்பியம் இது. 47.மாதவி மகிழ்வு, கண்ணகி துயர், சோழ பாண்டிய அவைகளில் ஆடல், மாதவியின் இரு முடங்கல்கள் என்றெல்லாம் ஒப்பிட்டு உண்மை உணர்த்தும் ஒப்புமைக் காப்பியமாக (Epic of Contrast) ஒளிர்கிறது. 48.ஏனைக் படித்துக் பின்

சிலம்பினைத் துய்ப்பின் இது தனித் தன்மையும் சிறப்பும் (Uniqueness) கொண்டொளிர்வது காணலாம். 49.சேக்ஸ்பியர் நாடகங்கள் இன்றும் கவர்ச்சி குன்றாதிருப்பது போன்று, சிலம்பும் செழுமையும் சீர்மையும் குன்றாது தற்காலத்தன்மை (ஆழனநசளைஅ) பெற்றொளிர்கிறது. 50.தமிழ் மரபும், தொல்காப்பிய இலக்கணமும், குறள் நெறியும் கொண்ட தனித்தமிழ் காப்பியம். 51. இவற்றிலெல்லாம் அடக்க முடியாது - பகுத்துணர இயலா பான்மை கொண்டு, இனம்புரியா - இன்னதென எடுத்துரைக்க இயலா வண்ணம் நெஞ்சையள்ளும் நலம் கொண்டுள்ளது. எனவேதான் டாக்டர் உ.வே.சா இதனைச் சிலப்பதிகாரம் என்பதைவிடச் ‘சிறப்பதிகாரம்’ எனச்சாற்றலே ஏற்றது என்கிறார். 52.புரிதல் இம்பமாம் சிற்றின்பத்தின் வாயிலாகப் புரியா இன்பமாம் பேரின்பத்தினைத் தெரிந்து திளைத்தற்கு வித்திட்ட முதற்பனுவல். குன்றக் குரவையே இதனை நன்குணர்த்தும். 53.தமிழ்ச் சமுதாயத்தில் இழிந்த நிலையில் பழிமலைந்திருந்த பரத்தைப் பெண்ணைப் பெருங்கற்புக்குரியளாக வைத்துச் சேற்றில் மலர்ந்த செந்தாமரையாக்கும் - கற்பின் செல்வி கண்ணகிக்கு நிகரான் பொற்பின் செல்வியாகச் சிறந்திடச் செய்த ‘புரட்சிக் காப்பியம்’ (Revolutionary epic) 54.கண்ணகி அரசோடும் மாதவி சமுதாயத்தோடும் எதிர்த்துப் போராடும் (external) புறப்போராட்டமும் தத்தம் மனத்துள் போராடும் (internal) அகப்போராட்டமாகவும் அமையும். ‘போராட்டக் காப்பியம்’ (Epic of conflict) 55.சங்க இலக்கியச் சாறாகவும் பிற்கால இலக்கியங்களின் ஊற்றாகவும் அமைந்து, கால் வழியாகவும், காப்பிய வழிகாட்டியாகவும் இருந்து, இருதிறமும் ஒருமித்த ஒரு பெருந்திருக்காப்பியமாகத் திகழ்கிறது.

தனக்கு முன்னைய சங்க இலக்கியத்துக்கும், பின்னைய காலப் பேரிலக்கியங்கட்கும் பாலமாக நடுவண் அமைந்து, ஒரு முக்கியமான கால கட்டத்தினைச் சாலப்படம் பிடித்துக்காட்டி கொண்டிருக்கிறது. முற்கால இலக்கியங்களின் சாயலையும் சிலம்பில் தோற்றமுறக் காண்கிறோம். பிற்காலப் பனுவல்களின் ஊற்றையும் தேற்றமும் காண்கிறோம். சங்ககால விரிவினை ஆங்காங்கு அறிகிறோம்: காப்பிய கால வித்தினையும் ஆங்காங்கு தெளிகிறோம்.

சங்கப் பாங்கும் காப்பியப் போக்கும், சிலம்பும் நாணயத்தின் இருபுறங்களாக அமைகின்றன. முற்காலத்தின் முடிவு, பிற்காலத்தின் தொடக்கமும், காற்சிலம்புக் காப்பியத்தில் சற்றே நிழலாடுகின்றன. தமிழிலக்கிய வரலாற்றில் சிலம்பு சிங்க நோக்காக அமைந்து முந்தைய இலக்கிய மணத்தையும், பிந்தைய இலக்கிய குணத்தையும் கோடி காட்டி, நல்லதொரு நந்தா விளக்கமாக நிலவுகிறது.

உண்மையும் செறிவும் மிக்க சங்கப் பாக்கள்: புனைவும் நெகிழ்வும் தொக்க பிற்காலப் பாக்கள்-இவற்றிடையே சிலம்பு நடுநாயகமாக நின்று, இரு நிலையினையும் இணைக்கும் ஒரு கலைக் காப்பியமாக உலவுகிறது-பாலமாக நிலவுகிறது. First follow and example, then set an example என்னுமப் போல, சங்கப் பாங்கினைக் காட்டாகக் கொண்டு காப்பியமாக உருவெடுத்து, தன்னைப் பின்பற்றிப் பிற்கால இலக்கியங்களில் பரிணமிக்கும் வண்ணம் எடுத்துக் காட்டாகவும்

இலங்கி, இருவேறு போக்கின கூடுமிடமாகவும், ஒன்று முடிந்து மற்றொன்று தொடங்கும் மையமாகவும் மிளிர்கிறது முத்தமிழ்க் காப்பியம்.

இன்ன சிறப்புகளான குறள் போன்று இருபதுக்கும் மேற்பட்ட ஆராய்ச்சிகளையும், பத்துக்கும் மேற்பட்ட மொழிபெயர்ப்புகளையும் பெற்று உலக அரங்கு நோக்கி சென்றுகொண்டிருக்கிறது - சிந்தையள்ளும் சிலப்பதிகாரம்

**மணிமேகலை**

**அமைப்பு:** 'மணிமேகலை துறவு' என்றும், கூறுப: 4286 அடிகளை உடையது, சங்க காலம் சார்ந்த நூல்களில் இறுதியானது: அகவலால் ஆகியது. தொல்காப்பியர் செப்பும் இயைபு எனும் நூல் வகையினது. 30 காதைகளைக் கொண்டது. சிலப்பதிகாரத்தோடு கதைத் தொடர்புடையது.

**கதை:** கோவலன் கொலையுண்ட செய்தியறிந்து, மணிமேகலையோடு பௌத்தம் சேர்ந்தாள் மாதவி. ஒருநாள் மலர் பறிக்க உவவனம் சென்ற மணிமேகலை உதயகுமாரன் கண்டான்: அஞ்சி பளிங்கறையினுள் புகுந்தாள். ஆனாலும் அவன் அழகு அவளை மயக்கியது. அவளை கண்ட பின், மணிமேகலா தய்வம் மணிமேகலையை மணிபல்லவத்தில் கொண்டு போய் விட்டது. புத்தபீடிகையால் பழம் பிறப்பு புணர்ந்து, தீவதிலகையின் உதவியால் அமுதசுரபியும் பெற்று, ஆகாய வழி பூம்புகார் வந்து அறவணஅடிகளிடம் அறமுணர்ந்தாள். ஆதிரையிடம் அமுதுபெற்று உணவளிக்க முற்பட்டாள். அரசன் அகந்திருந்தி சிறைக்கோட்டத்தை அறக்கோட்டமாக்கினாள்.

தன்னையே சுற்றித் திரியும் உதயகுமரனுக்கு உயரிய நீதி யுணர்த்தினாள் பலனில்லை. காயசண்டிகையின் உருவில் உலவினாள். அப்போதும் பின் தொடர்ந்தான் இளவரன். இதுபோது அவன் போந்த காயசண்டிகையின் கணவன், தன் மனைவியிடம் இளவரசன் தகாத முறையில் பழகுவதாக எண்ணி வாளால் வெட்டி வீழ்த்தினான். இராசமாதேவி மணிமேகலையைச் சிறையிட்டாள். சித்திரவதை செய்தாள். பின் உண்மையுணர்ந்து மன்னிக்க வேண்டினாள். 'எவ்வுயிரிடத்தும் அன்பாய் இரு' எனச் சொல்லி வஞ்சி மாநகர் சென்று அறவணடிகளின் அருளுரை கேட்டு, தவம் புரிந்து வாழ்ந்ததாள். இதுவே மணிமேகலை கதை.

**மேகலை மாட்டி:** 1.வேறெக் காப்பியத்தை விட எளிமை மிக்கது, பேச்சு நடையும் இலக்கிய நடையும் இணைந்த காப்பியம் எனவே கல்லார்க்கு எளிதில் விளங்கிக் கற்றார்க்குச் சுவையுடன் இலங்கி வருகிறது. 2.எக்காலத்திற்கும் ஏற்ற 'அறக்காப்பயிம்' 3.மதுவொழிப்பு சாதி ஒழிப்பு, சிறையொழிப்பு, பரத்தை யொழிப்பு கொலை களவு ஒழிப்பு போன்றன புகட்டும் 'சீர்திருத்தக் காப்பியம்' 4.இன்று நாம் மேற்கொள்ள வேண்டிய யாவற்றிற்கும் வழி காட்டியாக விளங்குகிறது. 5.காலம், இடம், இனம் கடந்த 'குறிக்கோள் இலக்கியம்' 6.தமிழில் முதன் முதல் தோன்றிய

‘சமயக் காப்பியம்’ 7.வடசொற்கும், சமயசொற்கும் தமிழ்ச் சொல் கண்ட கலைக் சொல்லாக்க காப்பியம். 8.கிளைக்கதைகள் மிக்க ‘கதைக் களஞ்சியம்’ 9.பரத்தைப் பெண்ணை உலகை உய்விக்கும் காப்பியத் தலைவியாக்கிய ‘புரட்சிக் காப்பியம்’ 10.பசிப்பிணி ஒழிக்கும் பேரறத்தை இந்நூல் போல் எந்நூலும் இன்தமிழில் வற்புறுத்தவில்லை. 11.சங்க இலக்கியத்துள் உவமையணியே ஒளிர மடக்கு, தொனி சிலேடை போன்ற அணிகளை முதன்முதல் கொண்ட காப்பியம் 12.அறங்களில் சிறந்தது அன்பறம் என்றது. 13.பௌத்தம் பரப்பப் பிறந்ததே யாயினும், எண் சுவையும் இயற்கை வருணனையும் இணைந்த பொதுக் காப்பியமாகப் பொலிகிறது. 14.சிவப்பிரகாசர், ‘மந்தாகினியாணி வேணிய பிரான்வெங்கை மன்னவ! நீ. கொந்தார் குழல் மணிமேகலை நூல் நுட்பம் கொள்வதெங்கள்?’ எனத் திருவெங்கைக் கோவையில் பாராட்டுகிறார். 15.எவரையும் திருத்த முடியும் என நிறுவும் காப்பியம். 16.சமய வேறுபாடில்லாத சங்க காலத்தையடுத்த சமய வளர்ச்சிக்குத் தோற்றுவாயாக திகழ்வது. 17.பிறசமய - பல்சமயக் கருத்துக்களையும் நல்ல தமிழில் நவில்வது. நவின்றிட முடியும் என்று நிலவுவது. 18.தனித்தமிழ் முதல் நூல்: தமிழகத்தில் நடந்த கதை: தமிழ்ப் புவனே தமிழில் தந்தது. 19.பசுவின் பெருமையினை, பாங்குடன் பகர்வது 20.பிறப்பால் பெருமையில்லை, ஒழுக்கத்தால் உயர்வுண்டு 21.தமிழின் முதற் காப்பியம் உலகின் பொதுக்காப்பியம் 22.ஒருசான் வயிறே இல்லாட்ட இந்த உலகினில் ஏது கலாட்டா? என்றான ஒரு கவிஞன். ‘தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் இந்த உலகினை அழித்திடுவோம்’ எனச் சாடுகின்றான் பாரதி. ‘இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின்’ பரந்து கெடுக இவ்வுலகியற்றியான்’ என்றியம்புகிறான் வள்ளுவன். அத்தகு கொடிய பசிப்பிணி, முழுதும் அறவேண்டுமென்ற முதலறத்தை முன்வைத்து உலகு தழுவிய ஒரு பெரும் உன்னத நோக்கினை உலகிலேயே முதன் முதல் அறைகூவிய அறக்காப்பியம். 23.வாழ்வினை வளமூட்டுவதுதான் நலமான இலக்கியம். அந்த வகையில் பசி, பால் உணர்வு, உணவு, உடை, உறையுள், மருந்து, கல்வி போன்ற வாழ்வின அடிப்படைத் தேவைகளையும் அன்றாடத் தேவைகளையும் (Conventional necessities and necessaries of life) நிலைபெறக்கொண்டெழுந்த நற்காப்பியம் 24.சொல்லின்பம் சொட்டும்: பொருளின்பம் பிலிற்றும் கலையின்பம் குலவும், கவிஇன்பம் குவியும், சுவையின்பம் செறியும், அறிவின்பம் ஆறாகப்பெருகும் அத்தகு வித்தகு அமுது. 25.கடுமை மிக்க புத்த மதக்கோட்பாடுகளையும், கொள்கைகளையும், இனிய எளிய சொற்களில் எத்துணை அழகுடன் பொருத்தமாகப் பெயர்த்துக் கூறுகிறது. மொழி பெயர்ப்புக்கு ஓர் எடுத்துக்காட்டு, கலை சொல்லாக்கத்திற்கு ஒரு திறவுகோல், மணிமேகலை ஓர் அணிமேகலை எல்லாமே கலைதான்! 26.சமயக் காப்பியமாயினும் அஃதெழுந்த காலத்தில் கண்ணாடியாக அரிய வரலாறாக அமைவது. 27.துறவு தந்த-துறவில் பிறந்த காப்பியம் ‘துறவுக்காப்பியம்’ மணிமேகலை துறவு என்ற பெயரும் உள்ளமை உன்னுக. 28.சிக்கலில்லாச் சீரிய நடை (சிடுக்கில்லாத நடை கி.வா.ஜ) இயல்பான இயற்கை வருணனை இனிய எளிய உரையாடல்கள் கொண்டது. 29. நகர் அமைப்பு (Town planning) விழா எடுத்தல், ஓவியம் போன்ற கலைகள் பற்றிய ‘கலைக்காப்பியம்’ 30.பாரதம் ஒரு பெரும் நீதிக் களஞ்சியம் என்பர்.

அ.ஃது இதிகாசம். மணிமேகலையும் தன்னவில் தள்ளரிய பெரு நீதிகளைப் பேரறங்களைத் தெள்ளிய முறையில் தெவிட்டா வகையில் சுவையுடன் நயமுடன் அள்ளித்தரும் அறக்களஞ்சியம். நீதி இலக்கியம். 31.பேரழகுச் செல்வி மணிமேகலையை -ஒரு பெண்ணை பேரறவுச் செல்வியாய்ப் பிறங்க வைத்து, பொதுநலச் செல்வியாய் நடமாடவிட்டு, மாதவச் செல்வியாய் மிளிரச் செய்து, பேரறச் செல்வியாய் சேவைச் செல்வியாய் - தியாகத் திலகமாய்த் திகழச் செய்து - காப்பியத் தலைமகளாக்கி, அக்காப்பியத் தலைப்புகுரியவளாகவும் உயர்த்திய பெண்மை போற்றும் பெருங்காப்பியம். 32.திருவள்ளுவரைப் ‘பொய்யில் புலவன்’ எனவும், திருக்குறளை ‘பொருளுரை என்றும் முதன் முதல் காப்பியத்தில் வைத்துப் போற்றும் முதற் பனுவல் 3 மரபுக்கேற்ப பிறசொற்கள் மாத்தமிழுடன் கலந்ததால் மாண்புறும் என்பதைனைச் சுட்டியும் காட்டியும் செல்லும் வழிகாட்டி நூல். 34.சமயமும் தமிழும் சால்புடன் கலந்து மகிழ்ந்து பிறந்த காப்பியம். சமயத்திற்கும் தமிழுக்கும் பிறந்த மணியான (குழந்தை) மேகலை. 35.ஒழுக்கமுடைய சமுதாயம் உருவாக, உள் நின்று உடற்றும் பசிப்பிணியினைப் போக்க வேண்டும் என்பன போன்ற தத்துவங்களைத் தந்த காப்பியம். தத்துவத்தை இலக்கியமாகத் திகழ்வது. 36.இக்காப்பியத்துள் எத்துணையோ சமய வாதங்களும் தத்துவக் தாக்கங்களும் சிதறிக் கிடக்கின்றன. இந்த உதிரி மணிகள், பிற்காலக் குண்டலகேசி, நீலகேசி வகையில் கிளைக் கதைகளின் (நுிளைழனநள) முனையாக உள்ளது. 37.பிற்காலப் பனுவல் கட்குக் ‘கேசி’ ‘கேசி’ எனப் பெண்டிரே தலைவிகளாக அமைய வழிகோலியது என்பன போன்ற எண்ணரிய வண்ணங்களைக் கொண்ட நுண்ணிய சிறப்புகள் கொண்டது.

மேகலை தரும் மாண்புறு செய்திகள்: இன்னின்னார்க்கு உணவளித்தல் வேண்டும் அங்ஙன் உணவளித்தலின் உயர்வு என்பனவற்றை.

**‘காணார் கேளார் கால்முடப் பட்டோர்**
**பேணுநர் இல்லோர் பிணிநடுக் குற்றோர்**
**யாவரும் வருகவென்று இசைததுடன் ஊட்டி’**
**‘மண்டினி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்**
**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத் தோரே’**

என்கிறார். அறத்தின் திறத்தைச் சமவுடைமை மூலம் சாற்றுகின்றது பாருங்கள்.

**‘அறம் எனப்படுவது யாதெனக் கேட்பின்,**
**மறவாது இதுகேள்! மன்னயிர்க்கு எல்லாம்**
**உண்டியும் உடையும் உறையுளும் அல்லது**
**கண்டது இல்!’**

மக்களுக்குச் செய்யும் தொண்டே மாபெரும் தொண்டு - தவம் இறைவர்க்குச் செய்யும் இனிய வழிபாடு என்கிறது.

**விடுநில மருங்கின் படுபுல் ஆர்ந்து**
**நெடுநில மருங்கின் மக்கட்கு எல்லாம்**
**பிந்தநாள் தொட்டும் சிறந்ததன் தீம்பால்**
**அறந்தரு நெஞ்சோடு அருள்சுரந் தூட்டும்**

எனப் பசுவின் பெருமை பேசுகிறது. குலத்தால் பயனில்லை: குணமும், ஒழுக்கமும் அறப்பணியுமே ஆண்டவன் விழைவன். அதனானே வீடு பேற்றினைப் பெறலாம் என்பதை ஆபுத்திரன் மணிமேகலை வாயிலாக விளக்குகின்றது. இ∴துணர்த்தும் இன்னொரு செய்தி: ஆருயிர் மேல் அன்பு கொண்டு, அறம் செய்து ஐம்புலங்களை அடக்கி, அறிவுடன் வாழ்ந்து, இன்னா செய்தாரையும் அன்புடன் திருத்துக என்பது.

**அறிவன:** மக்கள் திரை கடலோடி திரவியம் தேடினர். மகளிர், கற்பினைக் கண்ணினும் உயர்வாகக் காத்தனர். கணிகையர், கலைகளில் வல்லவராக விளங்கினர். சாதி வேற்றுமைடையச் சாடியும், வேள்விக்காக்கூட பசுக்கொலை புரிதலை எதிர்த்தும் பௌத்த மதம் 'பிரசாரம்' செய்தது. காவிரிப் நீத்த மலர் எனப்படுகின்றனர் (18:17-22) மூவகை பத்தினிப்பெண்டிர் (2:114-120) மக்கள் யாக்கையில் இயல்பு (4:113-121) பசிப்பிணியின் கொடுமை (11:76-80) அரசனுக்கு அறிவுரை (7:8-12) தீயன பத்து (24:125-130) என்பன எவரும் அறியத்தக்கன. குற்றம் செய்த கணிகை ஏழு செங்கல் சுமந்து அரங்கினைச் சுற்ற வேண்டும். (18:33-34)

**குடிப்பிறப் பழிக்கும், விழுப்பங் கொல்லும்,**
**பிடித்த கல்விப் பெரும்புணை விடுஉம்**
**நாணணி களையும் மாணெழில் சிதைக்கும்,**
**பூண்முலை மாதரோடு புறங்கடை நிறுத்தும்,**
**பசிப்பிணி யென்னும் பாவி** (11:76-80)

எனப் பசியின் கொடுமை பேசப்படுகிறது. இங்ஙனம் எண்ணரிய கருத்துக்களின் ஊற்று நிலையாக ஒளிர்கிறது மணிமேகலை.

## தொகுப்புரை

- வாழ்வியல் அறங்கள் மற்றும் வரலாற்றுச் செய்திகளை இலக்கியங்கள் கூறுகின்றன.
- சங்க இலக்கியங்களில் உள்ள அழகியல் கூறுகளை உணர்வர்.
- சங்க அகப்புற பாடல் மரபுகள் பழமையானது
- பழந்தமிழ் இலக்கியங்களில் அரசியல் அறிவு குறித்த செய்திகளைப் பதிவாகியுள்ளன.

- அற வழி சிந்தனைகளின்வழி தமிழர்கள் வாழ்ந்துள்ளனர்

## அருஞ்சொற்பொருள்

1. யாக்கை – உடல்
2. கேண்மை – நட்பு
3. ஞாலம் - உலகம்
4. மாதர் - பெண்
5. பிரசாரம் - பரப்புரை

## பயிற்சி வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. எட்டுத்தொகையில் அகநூல்கள் எத்தனை?
   அ) 5 ஆ) 4 இ) 3 ஈ) 2
2. நெடுந்தொகை எனும் பெயர் பெற்ற நூல் எது?
   அ) அகநானூறு ஆ) புறநானூறு இ) கலித்தொகை ஈ) குறுந்தொகை
3. சேரமன்னர்களைப் பற்றி மட்டுமே பாடும் நூல் எது?
   அ) பதிற்றுப்பத்து ஆ) கூத்தராற்றுப்படை இ) கலித்தொகை ஈ) மதுரைக்காஞ்சி
4. பத்துப்பாட்டில் அளவில் மிகப் பெரிய நூல் எது?
   அ) பெரும்பாணாற்றுப்படை ஆ) மதுரைக்காஞ்சி இ) கூத்தராற்றுப்படை ஈ) அகநானூறு
5. மலைப்படுகடாம் - வேறு பெயர் யாது?
   அ) கூத்தராற்றுப்படை ஆ) பதிற்றுப்பத்து இ) புறநானூறு ஈ) குறுந்தொகை

## விடைகள்

1. அ) 5
2. அ) அகநானூறு
3. அ) பதிற்றுப்பத்து
4. ஆ) மதுரைக்காஞ்சி
5. அ) கூத்தராற்றுப்படை

## பயிற்சிகள்

1. இரட்டைக்காப்பியங்களில் காணலாகும் கதைமாந்தர்களுக்கும் அவர்களின் பண்புநலன்களுக்கும் அட்டவணை ஒன்றைத் தயார் செய்க.

## குறுவினாக்கள்

1. சங்கங்களின் வரலாறு குறித்து எழுதுக.

2. சங்கம் இருந்தமையை உணர்த்தும் இலக்கியத் தொடர்களைக் கூறுக.
3. இடைச்சங்கத்தில் இருந்த புலவர்கள் யார்?

## நெடுவினாக்கள்

1. சங்கம் இருந்தமைக்கான காரணங்களையும் இல்லை என்று சொல்வார் கூறும் காரணங்களையும் கூறுக.
2. பத்துப்பாட்டில் ஆற்றுப்படை நூல்கள் குறித்து விளக்குக.
3. எட்டுத்தொகையில் அமைந்த அகநூல்கள் பற்றி விளக்கி வரைக.

## பார்வை நூல்கள்


1. சமூகவியல் நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு,முனைவர் பி.செல்வக்குமாரன், லெட்சுமி பிரிண்டர்ஸ், திருச்சி – 620 002, பத்தாம் பதிப்பு- ஜீலை 2017.
2. தமிழ் இலக்கிய வரலாறு, சி.பாலசுப்பிரமணியன்,பாவை பப்ளிகே‘ன்ஸ், சென்னை – 600 014 இரண்டாம் பதிப்பு – 2016,
3. தமிழ் இலக்கிய வரலாறு, மு.வரதராசனார்,சாகித்திய அகாதமி,புது தில்லி- 110 001,முதல் பதிப்பு – 1972


## இணைய இணைப்புகள்

1. https://WWW.tamilvu.org.
2. https://WWW.keetru.com

# அலகு – 2

## நோக்கம்

- சமய இலக்கியத் தோற்றத்திற்கான வரலாற்றுப் பின்புலத்தை அறிவித்தல்
- தமிழ் சைவ வைணவ இலக்கியங்களை அறிமுகப்படுத்துதல்.
- பக்தி இலக்கியங்களின் மூலம் நிலையாமையை உணரவைத்தல்.
- சமயங்கள் குறித்த அறிவினை வளர்த்தல்
- தமிழ் இலக்கியத்திற்கும் சமூகத்திற்கும் பக்தி இலக்கியலாளர்கள் செய்த தொண்டுகளையும், பக்தியின் மேன்மைகளையும் அறிந்து கொள்ளச் செய்தல்.

## இயலில் இடம்பெறுபவை

- பக்தி இலக்கியம்
- சைவம், வைணவம், பௌத்தம் ,சமணம்
- காப்பியங்கள்
- கம்பராமாயணம்
- மகாபாரதம்
- பெரியபுராணம்

## 2.1 பக்தி இலக்கியம்

தமிழக வரலாற்றில் கி.பி. 600 முதல் கி.பி. 900 காலப்பகுதியைப் பக்தி இயக்கக் காலம் என்பர். இக்காலத்தில் தமிழகத்தில் நிலைபெற்றிருந்தது பல்லவர் ஆட்சியாகும். பக்தி இலக்கியம் பெருமளவில் தோன்றியது பல்லவர் காலத்திலேதான். வேறு எம்மொழியிலும் தமிழில் தோன்றிய அளவு பக்தி இலக்கியம் தோன்றவில்லை. இக்காலத்தில் எழுந்த பக்தி இலக்கியம் இருவகைப்பட்டது. தனித்தனிப் பதிகங்களால் பக்தி அனுபவங்களை வெளிப்படுத்துதல், பிரபந்தங்களாக வெளிப்படுத்துதல் என அவை இருவகையாக உள்ளன.

தமிழ்நாட்டுப் பக்தி இயக்கம் சைவம், வைணவம் எனன்னும் இரு கிளைகளாக ஓங்கியது.பக்தி இயக்கத்தைத் துணைக்கொண்ட சைவமும் வைணவமும் புறச்சமயங்களான சமண, பௌத்தத்தைத் தோற்கடித்தன. தமிழ்நாட்டில் செழித்திருந்த சமண பௌத்தங்களுக்கு எதிராகத் தமிழகத்தின் தொன்மைச் சமயங்களான சைவமும் வைணவமும் தொடங்கிய தத்துவ போராட்டமே பக்தி இயக்கம்.

## 2.2. பன்னிரு திருமுறைகள்

| திருமுறை | நூல்கள் | ஆசிரியர்கள் |
|---|---|---|
| முதலாம் திருமுறை | தேவாரம் | திருஞானசம்பந்தர் |
| இரண்டாம் திருமுறை | தேவாரம் | திருஞானசம்பந்தர் |
| மூன்றாம் திருமுறை | தேவாரம் | திருஞானசம்பந்தர் |
| நான்காம் திருமுறை | தேவாரம் | திருநாவுக்கரசர் |
| ஐந்தாம் திருமுறை | தேவாரம் | திருநாவுக்கரசர் |
| ஆறாம் திருமுறை | தேவாரம் | திருநாவுக்கரசர் |
| ஏழாம் திருமுறை | தேவாரம் | சுந்தரர் |
| எட்டாம் திருமுறை | திருவாசகம் திருக்கோவையார் | மாணிக்கவாசகர் |
| ஒன்பதாம் திருமுறை | திருவிசைப்பா, திருப்பல்லாண்டு | ஒன்பது பேர் பாடியது |
| பத்தாம் திருமுறை | திருமந்திரம் | திருமூலர் |
| பதினோராம் திருமுறை | பிரபந்தமாலை | பன்னிருவர் பாடியது |
| பன்னிரெண்டாம் திருமுறை | திருத்தொண்டர் புராணம் | சேக்கிழார். |

### 2.2 நாயன்மார்கள்

### 1.திருஞானசம்பந்தர்:

சோழநாட்டில், சீர்காழியில் அந்தணர் குலத்தில் சித்திரை - திருவாதிரை நாளில் பிறந்தவர். பெற்றோர், சிவபாத இருதயர் - பகவதி அம்மையார். பெயர் ஆளுடையப் பிள்ளை. மூன்று வயதாக இருந்தபோது, கோவில் குளக்கரையில் விட்டு விட்டுச் சிவபாதர் குளத்தில் மூழ்கவே தந்தையைக் காணாது பசியும் மேலிடக் குழந்தை அழுதது. அதுபோது அம்மையப்பர் காட்சி தந்து, பாலெடு ஞானத்தையும் கலந்தூட்டி மறைந்தனர். கையில் கிண்ணமும், வாயில் பால் வயவும் கண்ட தந்தை, 'யார் கொடுக்கப் பாலுண்டனை' என்று அதட்டவே, 'தோடுடைய செவியான்...' எனப் பாடி அம்மையப்பரைச் சுட்டிக்காட்டியது பாலுண்ட மாத்திரத்தானே ஞானத் தொடர்புற்றமையான் 'ஞானசம்பந்தர்' எனப்பட்டார். தந்தையின் தோளில் அமர்ந்தவாறே சிவத்தலங்கள் பலவற்றிற்கும் சென்று திருப்பதிகங்கள் பாடிப் பணிந்தார்.

திருக்கோயில் பொற்றாளமும், திருவாயிலறத் துறையில் முத்துச் பந்தரும், திருவாவடுதுறையில் பொற்கிழியும், திருவீழிமிழலையில் வாசிமிகு படிக்காசும் திருவருளால் பெற்றார்.

**நிகழ்த்திய அற்புதங்கள்:** திருமறைக்காட்டுக் கோயில் திருக் கதவங்கள் மூடவும், காவிரியில் ஓடம் தானே இயங்கவும், மயிலையில் அரவம் தீண்டிச் சாம்பராக இருந்த பூம்பாவை குடத்தினின்றும் உயிர் பெற்றெழவும், திருப்பாச்சிலாச்சிரமத்தில் மழவன் மகளுடைய முயலகன் எனும் நோய் நீங்கவம் செங்கன்றூரில் அடியார் குளிர் போகவும், திருமருகலில் பாம்பு தீண்டிய வணிகனது விடம் நீங்கவும், மதுரையில் சமணர் வைத்த தீ கூன் பாண்டியர்க்கு வெப்பு நோய் மாறும், மீண்டும் மங்கையர்க்கரசியரும், குலச்சிறையார் அன்பிற் கிணங்க. நீறு பூசி அந்நோய் மங்கையர்கரசியார் குலச்சிறையார் அன்பிற் கிணங்க நீறு பூசி அந்நோய் தணியவும் கூன் நிமிரவும்: வதுக்கழைத்த புத்த நந்தியின் தலை துண்டாகவும் உபநயனத்தின் போது காயத்தி மந்திரம் போதிக்க வந்தார்க்குப் பஞ்சாட்சர மந்திரத்தை உபதேசித்தும், திருவொத்தூரில் ஆண் பனையைப் பெண் பனையாக்கியும், சமணரோடு புரிந்த வாதில் நெருப்பிலிட்ட எடு எரியாதும், புனலில் போட்ட ஏடு எதிர்த்து நிற்கவுமாகப் பல சித்துக்கள் புரிந்தார். அப்பரைப் பலமுறை சந்தித்துள்ளார். திருத்தொண்டர், திரு நீலகண்ட யாழ்ப்பாணர் போன்றாரையும் சந்தித்துள்ளார்.

மணவினை நடைபெற்ற ஞான்று, தீ வலம் வருமாறு கூற, ஆண்டவனையே வலம் வரவேண்டுமென விளம்பித் திருப்பெருமணநல்லூர் சென்று ஆங்கே ஒளிப்பிழம்பாக நின்ற இறைவனோடு வைகாசி மூலநாளில் இரண்டறக் கலந்தார். வையத்தில் வாழ்ந்த காலம் 16 ஆண்டுகள். ஏழாம் நூற்றாண்டின் இடையில் வாழ்ந்தவர்.

இவர் பாடியன 16000 பதிகங்கள்: (பதிகம்-பத்து அல்லது பதினோரு பாடலின் தொகுதியாம்) இதுபோது 383 பதிகங்களே, 4213 பாடல்களே கிடைத்துள. கல்வெட்டின் மூலம் கிடைத்தது (தஞ்சை மாவட்ட) திருவிடை வாய்ப் பதிகமாகும்! சேர, சோழ, பாண்டிய, தொண்டை நாட்டுப் பதிகள் அனைத்தும் சென்று பதிகம் பாடியுள்ளார். இவையே முதல் மூன்று திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன. 136,122,125 என்ற முறையில் திருப்பதிகங்கள் திகழ்கின்றன.

நாளும் இன்னிசையால் தமிழும் சைவமும் பரப்பிய பெருமையர், யாழ்முரி இவருக்கே உரியதுளூ ‘திராவிட சிசு’ என்றழைக்கிறார் சங்கரர். பெரிய புராணம் ‘பிள்ளை பாதி புராணம் பாதி’ என்று இவர் வரலாற்றுக்கே சிறப்பிடம் தந்துளது. ‘ஞானத்தின் திருவுரு’ ‘நான் மறையின் தனித்துணை’ எனப்படுகிறார்.

**சம்பந்தர் தேவாரம்:** ஒவ்வொரு பதிகத்திலும் 8வது பாட்டில் இராவணனை இயல்பியம், 9வது பாட்டில் அயன் அரிகளிலும் மேம்பாடுடையவன் அரன் எனக் கூறியும். 10வது பாட்டில் சமணத்தையும் சாக்கியத்தையும் போலிச்சமயங்களெனச் சாற்றியும். தம் பெயரை முத்திரையிட்டு பாடுவதும் இவர் தேவாரத்தின் இயல்புகளாம். இறைவனைத் தலைவனாகவும் தம்மைத் தலைவியாகவும் அமைத்துப் பாடும் அகப்பொருள் அழகுடைத்து, காட்டு,

**சிறையாரும் மடக்கிளியே! இங்கேவா தேனொடுபால்**
**முறையாலே உணத்தருவன, மொய்ப்பத் தொடுதரளம்**
**துறையாடும் கடற்றோணிபுரத் தீசன் துளங்குமிளம்**
**பிளையாளன் திருநாமம் எனக்கொருகால் பேசாயே!**

இயற்கைப் புனைவுகள் மிகுந்துள்ளனளூ இத்திறத்தில் றுழசனள-றழசவா ஒத்திருக்கிறார். எடுத்துக்காட்டுகள் சில,

**‘வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர மழையென் றஞ்சி**
**சிலமந்தி அலநம்து மரமேறி முகில் பார்க்கும் திருவை யாறே**
**‘வாவிதோறும் வண்கமலம் முகங்காட்ட, செங்குமுதம் வாய்காட்ட’**
**காவியருங் கருங்குவளைக் கருநெய்தற் கண்காட்டும் கழுமலமே.**

‘சிவநாம’ ஈடுபாட்டைக் காட்டும் செய்யுளும் இதோ:

**‘காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி**
**ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது**
**வேத நான்கினு மெய்ப்பொருள் ளாவது,**
**நாத னாமநமச்சிவா யாவே.’**

எளிமை, கற்பனையழகு மிக்க இவர் பாடல்கள் ‘வேத சாரமாய்’ விளங்குபவையாகும், திரிபு, ஏகபாதம் போன்ற சொல்லணிகளும் கொண்டவை. பெருமித நடையின. தென் மொழியிலும் வடமொழியிலும் அர்ச்சனை செய்தமை, இசைக் கருவிகள், சோதிடக் குறிப்புகள் போன்றன வருகின்றன. புறச் சமயத்தாக்குதல் மிகவுண்டு. ‘மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்..’ மந்திரமாவது நீறு... ‘சிறை யாரும் மடக்கிளி..’ ‘தொண்டரஞ்சு...’ போன்றன சிறந்தன.

சம்பந்த கிரியை எனும் சத்புத்ர மார்க்கத்தினர். பக்தி இயக்கத்தின் முன்னோடியாகவும் தமிழ்த் தத்துவ-தெய்வீகப் புரட்சி புரிந்தவராகவும் பேசப்படுகிறார். இவரை ‘இன்தமிழ் ஏசுநாதர்’ எனவும் இயம்புவர்.

## 2.திருநாவுக்கரசர்

ஒரு நாட்டில் திருமுனைப்பாடியைச் சார்ந்த திருவாமூரில், வேளாண் குடியில் பிறந்தவர். தந்தை: புகழனார், தாய்: மாதினியார், உடன்பிறப்பாட்டி திலகவதியார். பெயர்: மருள் நீக்கியார், சமணத்தில் சேர்ந்து தருமசேனர் என்ற பெயரில் சைன முனிவர்களின் தலைவராக இருந்தார். தமக்கை, மீண்டும் இவரைச் சைவத்திற்குக் கொணர இறைவனருள் வேண்ட, சூலை நோய் உண்டாக்கியது. அவரது ஐந்தெழுத்து போதனையால், நோய் நீங்கிச் சைவம் சார்ந்தார். இதுகண்டு பொறாத சமணர், அரசனைத்தூண்டி யானையை ஏவியும் நீற்றறையில் இட்டும், நஞ்சு ஊட்டியும், கல்லில் கட்டிக்கடலில் எறிந்தும் துன்புறுத்தினார். 'நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்' நற்றுணையாவது துன்புறுத்தினார். எனப்படி உயர்ந்தார். இறைவனருளிய பெயர் திருநாவுக்கரசர் 'வாசீகர்' என்ற பெயரும் உண்டு அப்பர் என்ற பெயரினை அளித்தவர் சம்பந்தர்.

**ஆற்றிய அற்புதங்கள்:** பாம்பு கடித்து மாண்ட அப்பூதியடிகளின் மைந்தனைப் பதிகம் பாடி எழுப்பினர். மறைக்காட்டுக் கதவும் திறந்தார். உழவாரப் படை கொண்டு பணி செய்து ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்கினார் படிக்காசு பெற்றார். மகேந்திர பல்வனைச் சைவனாக்கினர். கைலாயக் காட்சியினை ஐயாற்றில் கண்டார்ளு 81வது அகவையில் திருப்புகலூரில் சித்திரைத் திங்கள் சதய நாளில் இறைவனோடு இரண்டறக்கலந்தார். மூவரில் நீண்ட காலம் வாழ்ந்தவர் இவரே. 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' எனும் கொள்கையர். 6ஆம் நூற்றாண்டின் இறுதி 7ஆம் நூற்றாண்டின் முதலிலும் வாழ்ந்தவர். முதல் மகேந்திரவர்மன் காலத்தவர்.

**அப்பர் தேவாரம்:** இவரியற்றிய 4900 இல், 312 பதிகங்களே 3066 பாடல்களே கிடைத்துள்ளன. இவையே 4,5,6 திருமுறைகளாக வகுக்கப் பெற்றுள்ளன. பத்துவகை பண்கள், திருக்குறுந்தொகை, திருத்தாண்டகம் என்ற வகையில் முறையே அமைகின்றன. தாண்டகம் பாடினமையால் 'தாண்டகவேந்தர்' எனப்படுகிறார்.

சிவனே அனைத்து சமயங்களுக்கும் ஆண்டவன். அவனே தென்மொழி வடமொழிகளாய் இருப்பவன். அவனை எவர் துணையுமின்றி நாமே வழிபடலாம் என்ற குறிப்புகளும், பழமொழிகளும், சாதிக் கொடுமையைச் சாடும் சமூக சீர்திருத்தக் கருத்துக்களும், இசைக்கருவி பற்றிய செய்திகளும் இவர் பாடல்களில் காணலாம். தத்துவப் பொருளை நயம்பட உரைத்திடும் திறமும், கடவுளைக் கணவனாகவும், ஆன்மாவை மனைவியாகவும் கொண்டுபாடும் வழக்கும், மூவேந்தர், பல்லவர் பற்றிய குறிப்புகளும் தெரிய வருகின்றன. எல்லோரும் ஓர் குலம் எனும் எண்ணமும், பிறசமயக் காழ்ப்பும் பளிச்சிடுகின்றன. அனுபவ முதிர்ச்சியையும் காணலாம். நகைச் சுவைமிக்க பகுதிகளும் நிரம்பியுள்ளன.

'நண் பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி நற்கனகக்கிழி தருமிக்கருளினோன் காண்' எனத் தமிழ்ச் சங்கத்தை இவரே முதன் முதலாகச் சுட்டுகிறார். 'மாசில் வீணையும்...' 'குனித்த புருவமும்' 'முன்னம் அவனுடைய நாமங்கேட்டாள்..' 'அத்தா உன்னடியேனை...' நிலைபெறுமாறு

எண்ணிதியேல்' 'அல்லலென் செயும்' போன்ற பாடல்கள் தலையாயவை. அப்பர் சாரியை அல்லது தாச மார்க்கத்தவர்.

### 3.சுந்தரர்

தொண்டை நாட்டுத் திருநாவலூரில் ஆதி சைவ அந்தணர் மரபில் 'சடையனார் - இசைஞானியாருக்குப் பிறந்தவர். 'ஆரூரர்' என்றும் பெயர். 'திருநாவலூார்' எனவும் படுவார். மணப்பந்தலில் தன்னடிமை எனக்கூறி, இறைவனால் தடுத்தாட் கொள்ளப்பட்டவர். அதனால் 'வன்தொண்டர்' என்ற பெயராயிற்று. இதனையொட்டிப் 'பித்தா பிறை சூடி....' எனப் பாடலாயினார். அழகாலும், முன்னம் கயிலையில் ஆலால சுந்தரராய் இருந்தமையாலும் 'சுந்தரர்' எனப்பட்டார். தில்லை தரிசனத்தின்போது 'தம்பிரான் தோழரானார்' பெரிய புராணத்தின் பெருந்தலைவராய்ப் விளங்கும் பெருமையர்.

**புரிந்தவை:** திருப்புகலூரில் தலைக்கு வைத்த செங்கல் தங்கக் கல்லாகக் கண்டு வியந்தார். பன்னீராயிரம் பொன்னை மணி முத்தாற்றில் போட்டு கமலாலயத்தில் எடுத்தார். திருவாரூரில் பரவையாரையும் திருவொற்றியூரில் சங்கிலியாரையும் மணந்தார். இரு கண் பார்வை இழந்து, காஞ்சியிலும் ஆரூரிலும் ஒவ்வொரு கண் பெற்றார். இவர் பொருட்டுப் பரவையிடம் தூது சென்றான் இறைவன்ஓ இவருக்காகக் காவிரியாறு இரு கூறாகி நின்றதுஓ அவிநாசியில் முதலையுண்ட பாலனை எழுப்பினார். சேரமான் பெருமாள் நாயனாரோடு, வெள்ளையானை மீதமர்ந்து கயிலை சென்றார்ஓ 81வது வயதில் ஆடிச் சுவாதி நாளில் இறைவனோடு கலந்தார். காடவர்கோன் கழற்சிங்கர், நந்திவர்ம பல்லவன் (2ஆம் நரசிம்மன்) காலத்தவராதலால், 8ஆம் நூற்றாண்டினர். 9ம் நூற்றாண்டின் தொடக்கம் என்பாரும் உளர். இவருடன் சந்திப்பு கொண்டிருந்தவர் திருமங்கையாழ்வார்.

**சுந்தரம் தேவாரம்:** இவர் பாடியன 38000, இப்போது 100 பதிகங்களே 1028 பாடல்களே கிடைத்துள. 18 பண்களில் இயன்றுள. இவை 7ஆம் திருமுறையாக அமைகின்றன. 'பேயோடாயினும் பிரிவு ஒன்று இன்னாது' போன்ற பல பழமொழிகளும், வரலாற்றுக் குறிப்புகளும் இயற்கை வருணனைகளும், 'வாழ்வாவது மாயம் மண்ணாவது திண்ணம்' போன்ற உண்மைகளும் வருகின்றன. எளிமை, நகைச்சுவை, இயற்கையழகு நிரம்பியவை. இனிய சொல்லான் இயன்றவை. சமண சமய எதிர்ப்புணர்ச்சி காண்டலரிது.

அப்பரையும் சம்பந்தரையும் போற்றியுள்ளார். இவர் பாடிய 'திருத்தொண்டத் தொகையே' பெரிய புராணத்திற்கு அடிப்படையாகும். 'கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூறினும் கொடுப்பாரில்லை' எனப் பாரியின் பெருமை பேசுகிறார். இவருடைய 'பொன்னார் மேனியனே..' 'ஏழிசையாய்..' அந்தணாளன் உன்றன்... 'மான்றிகழுஞ் சங்கிலியை..' 'பொன்னும் மெய்

பொருளுந்..' 'நாளுமின் னிசையால்..' என்பன எவருமறிந்த பாடல்களே. இவர் நெறி, சகமார்க்கம் எனும் யோக முறையாம்.

**மூவர் தேவாரம்:** முற்கூறிய அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகியோர் 'மூவர்' 'தேவார மூவர்' சமயக் குரவர் மூவர் 'மூவர் முதலிகள்' என்றழைக்கப் பெறுவர். ஏழு, எட்டு ஒன்பது நூற்றாண்டுகளில் வாழ்ந்தவர்கள். இவர்கள் பாடியனவே தேவாரம் எனப்பெறும். தே-கடவுள், வாரம்-அம்பு இறைவனை அன்பினால் ஏத்தும் பாடல் என்றும், இறைவனை வாரம் எனும் செய்யுளியக்கத்தில் இசையோடு பாடுவது எனவும் பெருள்படும். தேவு ஆரம்ளூ தெய்வத்திற்கு ஆக்கிய பாமாலை, தே-இனிய ஆரம்-தமிழ்மாலை என்னும் பொருள்படும். விருத்தப் பாக்கள் முதற்கண் பெரிதும் எடுத்தாளப் பட்டுள்ளமை தேவாரத்தில்தான். இசைத் தமிழும் ஆக்கம் பெற்றது தேவாரத்தாலேயே இற்றைநாள் இசைத்தமிழுணர்ச்சி, தேவாரப்பண், தாளம் ஆகியவற்றாலேயே திறம் பெற்று வருகின்றது. மூவர் தமிழையும் முறையே கொஞ்சுதமிழ், கெஞ்சுதமிழ், மிஞ்சுதமிழ் எனக் குறிக்கிறார். கி.வா.ஜ.

### 4.மாணிக்க வாசகர்

பாண்டி நாட்டுத் திருவாதவூரில் ஆதி சைவ மரபில் சம்புபாதசாரியார்-சிவஞானதியாருக்குப் பிறந்தவர். ஊரையொட்டி வாதவூர். வாதவூரடிகள் என்ற பெயர்கள் உண்டே தவிர, பெற்றோரிட்ட பெயர் தெரியவில்லை. கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கியமையால் அரிமர்த்தன பாண்டியன் 'தென்னவன் பிரம்மராயன்' எனும் பட்டத்தைக் கொடுத்து முதலமைச்சராக அமர்த்திக் கொண்டான். குதிரைப்படையைப் பெருக்க விழைந்த பாண்டியன் இவரைக் குதிரை வாங்கிவர அனுப்பினான். சிவத்தையே நாடும் சிந்தை கொண்ட அமைச்சர், திருப்பெருந்துறையில் குருந்த மரத்தடியில் முனிவரிடம் (இறைவனே இவ்வுரு தாங்கி இவர் பொருட்டு அங்கிருந்தார்) உபதேசம் பெற்று உலகியல் மறந்தார். குதிரை வாங்கும் அப்பணத்தைச் சிவப்பணிக்கே செலவிட்டார். பாணடியன் சிறையிலிட்டான். இறைவன் நரிகளையெல்லாம் பரிகளாக்கிக் கொண்டு வந்து அரசனிடம் விட்டுச் செல்ல, பரிகளெல்லாம் நள்ளிரவில் நரிகளாகிக் கானகம் புகுந்தன. வெகுண்ட பாண்டியன், வாதவூரர் முதுகில் கல்லை ஏற்றி வையையின் நடுவண் நிறுத்த, அதனைப் பொறாத ஆண்டவன் வெள்ளப் பெருக்கை உண்டாக்கினான். அரசு கட்டளைக் கேற்ப அனைவரும் உடைப்புகளை அடைக்க உதவலாயினர். வந்தியின் பொருட்டு பிட்டினைக் கூலியாகப் பெற்று, கூலியாளாக வந்தான் ஆண்டவன், வேலை செய்யாதிருப்பது கண்ட பாண்டியன் பிரம்பால் அடிக்க, இறைவன் மேல்பட்ட அடி எல்லோர் மேலும் பட்டது. இறைவன் திருவருள் இதுவென உணர்ந்த பாண்டியன் தன் பிழையுணர்ந்து வாதவூராரை விடுவித்து மீண்டும் அமைச்சாரக்கினான். சிவத்தையே நாடும் அவரோ, பதவியை வெறுத்துத் தலம் பல சென்று பரமனுக்குப் பாமாலை பாடி மகிழ்ந்தார்.

ஊமைப் பெண்ணைப் பேச வைத்தது போன்ற விந்தைகள் பல நிகழ்த்தித் தில்லைக்கு வந்தார். பாண்டியநாட்டுப் பதிகளில் பாடிய பாடல்களை மீண்டும் பாடுமாறு பணித்து, அவற்றைத் தம் திருக்கரத்தாலேயே எழுதி வைத்துக் கொண்டார் இறைவர் அதுவே திருவாசகம் அப்பாடல்கள் மாணிக்கம் போன்று அமைந்தமையான் அவருக்கு ‘மாணிக்க வாசகர்’ என்று பெயரிட்டார். பின்னர் ‘பாவை பாடிய வாயால் கோவை பாடுக’ என வேண்டி ஏடெழுதிப் பொன்னம் பலத்தில் வைத்துக்கொள், தில்லை வாழந்தணர்கள் அதற்கு உரை கூறுமாறு வேண்ட, மாணிக்கவாசகர் ஆடலரசைக் காட்டி அவரே இதற்குப் பொருளாவார் என்று கூறிக் கூத்தப் பெருமானோடு ஒன்றிக் கலந்தார். ஆனி மகநாளில் இவ்வுலகில் இருந்து நிகழ்த்திய காலம் 32ஆண்டுகளே! முன்னைய மூவரோடு இவரையும் இணைத்துச் சமயக் குரவர் நால்வர் என்ப. நால்வரில் தனிச்சிறப்பு குரியவர் இவர் ‘ஞான மார்க்கத்தவர்’

**திருவாசகம்:** மாணிக்கவாகர் பாடிய பாடல்கள் திருவாசகம் எனப்பெறும் திரு-அழகு. தெய்வத்தன்மை, விரும்பப்படும் வளமையது எனப் பொருள் படும் திருவசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்’ வான் கலந்த மாணிக்க வாசக! நின் வாசகத்தை நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ்சாற்றினிலே தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்து ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பதுவே’ (இராமலிங்க அடிகள்) ‘தொல்லை இரும்பிறவிச் சூழும் தளை நீங்கி அல்லறுத் தானந்த மாக்கியதே, எல்லை, மருவர் நெறியளித்திடம் வாதவூ ரெங்கோன் திருவாசமென்னுந் தேன்’ ‘திருவாசகம் இங்கு ஒருகால் ஓதின், கருங்கல் மனமும் கரைந்து உகக் கண்கள் தொடுமணற் கேணியிற் சுரந்து நீர்பாய், மெய்ம்மயிர் பொடிப்ப விதிர் விதிப் பெய்தியன்ப ராகுநாக ரன்றி மன்பதை யுலகில் மற்றைய ரிலரே’ (நால்வர் நான்மணிமாலை) என்ப இதன் பெருமை யுணர்த்தும், ‘தமிழ் வேதம்’ எனத்தகுவது ‘சைவ வேதம்’ எனப்படுவது. இது சிவபுராணம் தொடங்கி, அச்சோப்பதிகம் வரை 51 பரிரிவுகளில் 4அகவல்களும், 652 விருத்தங்களுமாக 656 பாடல்கள் கொண்டது. அம்மானை, திருப்பூவல்லி, திருப்பொற்கண்ணம் போன்ற பெண்கள் பாடும் பகுதிகள். திருப்பள்ளியெழுச்சி நாளும் காலையில் பாடும் பான்மையது. தீருவெம்பாவை மார்கழி மாதம் வைகறையில் ஓதுதற்குரியது. ‘காலமுண்டாகவே காதல் செய்து உய்மின்’ ‘விடுமின் வெகுளி’ போன்ற அறிவுரைகள் பொதுளியுள்ளன. இவ்வாசகம் இராமலிங்க அடிகளார், தாயுமானார் போன்றோர்க்கு வழி காட்டியாக அமைந்த வளமையது. ‘அம்மையே அப்பா ஒப்பில்லா மணியே…’ பால் நினைத்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து…’ ‘காதார் குழையாட…’ ‘விண்ணகத்தேவரும்..’ ‘நெக்கு நெக்குள் உருகி…’ முதலியன முக்கியமான பாக்களாம். திருவாசகம் ‘சிவானுபவம்’ உடையார்க்கே புரியக் கூடியது. தமிழில் வழிபாடு நிகழ்த்துவதற்கு இவரது ‘போற்றித் திருவகவல்’ ஏற்றதாகும்.

**திருக்கோவையார்:** கோவைப் பிரபந்தங்களில் முதலில் தோன்றியது. முதன்மை சான்றது. ஏனைக் கோவைகளெல்லாம் பாட்டுடைத் தலைவன் அல்லது தலம் பற்றி பெயர் பெற, இது கோவை என்ற பெயரானே விளங்குவது இதன் பெருமை யுணர்த்தும் திருக்குறள் போல 'திரு' எனும் அடையும், நாலடியார் சிவஞான சித்தியார் போன்ற 'ஆர்' என்னும் சிறப்பு விகுதியும் ஒரு சேரப் பெறும் உயர்வு உன்னக. 'திருச்சிற்றம்பலக் கோவை' எனவும்படும். இதனை மாணிக்க வாசகர் பாடவில்லை அல்ல அவர் தான் பாடினார் எனும் இருவேறு கருத்துக்கள் உள. 25 பகுதிகளில் 400கட்டளைக் கலித்துறைகளில் இறைவனைத் தலைவனாகவும், உயிரைத் தலைவியாகவும் கொண்டு பாடப்பட்டது. திருவாசகம் போலாது, இது எல்லோர்க்கும் எளிதே விளங்கக் கூடியது. நயமான நடையும் நல்ல சொல்லாட்சியும் உடையது. சிற்றின்ப – பேரின்பக் கருத்துகள் செறிந்து விளங்கும் சீரிய பனுவல். 'ஆரணம்' 'ஏரணம்' 'எழுத்து' 'காமநூல்' என்றெல்லாம் ஏத்தப்பெறுவது.

மாணிக்கவாசகர், கி.பி முதல் நூற்றாண்டையர் என்பர் சிவக்கொழுந்து பிள்ளை கி.பி 13,14 நூற்றாண்டவர் என்கிறார் ராஸ்ட், மறைமலையடிகள், கா.சு.பிள்ளை, நவநீதகிருட்டிண பாரதியார் போன்றார் கி.பி.3ஆம் நூற்றாண்டு என்கின்றனர். சங்கரரின் மாயாவாதக் கொள்கையை மறுப்பதாலும் மூவர் முதலி குறிக்கப்பெறும் வரகுண பாண்டியன் 9 நூற்றாண்டின ஆனாலும், சுந்தரர் அப்பரையும் சம்பந்தரையும் குறித்து, இவரை மட்டும் குறியாது செல்வதாலும், இவர் கி.பி.9ம் நூற்றாண்டிற்குப் பிந்தியவர் என்பது பலர் கருத்து.

இத் திருவாசமும் திருக்கோவையாரும் இணைந்து 8ஆம் திருமுறையாக கருதப்படுகிறது. கோவையாரைச் சேர்க்காது, திருவாசகம் 8ஆம் திருமுறை என்பர் சிலர்.

தேவரா மூவரோடு மணிவாசகரையும் 'சமயக் குரவர் நால்வர்' என்ப, நால்வரில் சம்பந்தர், சந்தரர் தோழன், வாசகர் மாணவர், நால்வரில் சம்பந்தர் பிள்ளை, சுந்தரர் தோழன், வாசகர் மாணவர். நாவரசர் தொண்டர் எனும் நிலையில் இறைவனுடந் தொடர்பு கொண்டமை எண்ணற்பாலது. நால்வர் பாடியன நான்கும் சைவ நான் மறைகள் என்றேத்தப்படும்.

சமயக் குரவர் வேறு சந்தானக் குரவர் வேறு, மெய்கண்ட தேவர், அருள் நந்திதேவர், மறைஞான சம்பந்தர், உமாபதியார் நால்வருமே சந்தானக் குரவர் சமயக் குரவர்களின் நூல்கள், வேதங்களின் சாரமான உபநிபத்துக்களாகவும், சித்தாந்தம், ஆகமத்தின் முடிந்த ஞானமான வேதாந்தத்தின் தெளிவாகவும் கருதப்பெறும்.

**5.ஒன்பதின்மர்:**

இவர்கள் பாடியன திருவிசை பாவும், திருப்பல்லாண்டுமாகும். இவையிரண்டுமே 9ஆம் திருமுறை. மொத்தப் பதிகங்கள் 29, பாடல்கள் 301, என்ற பண்ணை இதில் காண்கிறோம். சிதம்பரம் பற்றிய பதிகங்களே (16) மிகுதி. 10,11 நூற்றாண்டு எனலாம்..

**1.திருமாளிகைத்தேவர்:** திருவாவடுதுறையினர், போக முனிவரின் மாணவர். கருவூர்த்தேவரோடு உடன் பயின்றவர். சேந்தனாரின் சமகாலத்தவர். இவருடன் இணைந்து, தில்லையில் ஓடாதிருந்த தேரை, வடமின்றி ஓடச்செய்தாராம். மதில் நந்திகளை உயிரூட்டி பிணத்தை நடக்கச் செய்து வெந்த பயிற்றை முளைக்கச் செய்தாராம். இறைவன் வழிபாட்டினர். பாடியன 4 பதிகங்கள், பாடற்றொகை 45, மூன்று பதிகம் சிதம்பரம் மகேந்திர மலை பற்றியன. நான்காம் பதிகம் புறச் சமயங்களைக் கடிவது. இவரது கோயில் திருவாவடுதுறை மடத்திலுளது.

**2.கருவூர்த்தேவர்:** கருவூர் கொங்கு நாட்டிலுள்ளதா, சேணாட்டிலுள்ளதா என்று தெரியவில்லை. கருவூர் பிரான், கருவூர்ச்சித்தர் என்ற பெயர்களுமுண்டு. தஞ்சை பெருவுடையார் திருக்கோயிலில் இலிங்கம் நிறுவப்படுவதில் இன்னல் நேர்ந்த அன்று இவரது சித்து காரணமாகச் சிவலிங்கம் சரியாக நிறுத்தப்பட்டது. இறைவி வழிபாட்டினர். 10 பதிகங்கள் 105 பாடல்கள் தஞ்சை கோயிலில் இவர் கோயில் உளது.

அறிஞர் மு.அருணாசலனார், கருவூர்த்தேவர் வேறு, கருவூர்ச்சித்தர் வேறு தேவருக்கும் சித்தருக்கும் வேறுபாடு தெரியாது – கால இடையீட்டையும் உணராது இருவரையும் ஒருவராகவே கருதிவிட்டனர் காலப்போக்கில் முன்னவர் காலம் 11ஆம் நூற்றாண்டு பின்னவர் காலம் 16ஆம் நூற்றாண்டு என்கிறார். சித்தராயினமையில் காயசித்தி பெற்று ஒருவரே இத்துணை ஆண்டுகள் வாழ்ந்தாரா?

4. **சேந்தனார்:** திரு வீழிமிழலையில் இருந்தவர். திருவெண் காட்டிற்கு அண்மையதான நாங்கூரைச் சேர்ந்தவர். பட்டினத்தடிகளின் காரியத்தராய் இருந்து, அவர் விரும்பியாங்கு அவர் பொருளைத் தாம் செய்ய, அதனால் இவரை அரசன் சிறையிலிட அடிகள் இவரை விடுதலை செய்தார். பின் தில்லையிலிருந்து விறகு விற்று, வரும் ஊதியம் கொண்டு சிவனடியாரை உண்பித்து வந்தார். சிவபிரான் நள்ளிரவில் இவர் மனை ஏகி, கூழுண்டு இவரது அன்பின் திறத்தை அகிலமறியச் செய்தாராம். திருவாதிரையில் களி செய்து முதன் முதல் படைத்தவர் இவரே. தில்லையில் வடமின்றித் தேரோடப் பல்லாண்டு பாடினாராம் (திருப்பல்லாண்டு சேர்ந்து) பதிகங்கள் 47 பாடல்கள் திருவிடைக்கழிப் பதிகம் முருகனைப் பற்றியது; ஏனை மூன்றும் சிவனைப் பற்றியன.

5. **பூந்துருத்தி காடவ நம்பி:** திருப்பூந்துருத்தி, ஆதி சைவ மரபினர். திருவாரூர், சிதம்பரம் பற்றி 2 பதிகங்கள் பாடியுள்ளார். 12 பாடல்கள் இவரே ‘சாளரபாணிப்பண்’ பாடியவர்.

**6.கண்டராதித்தர்:** சோழர், 10 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியினார். தந்தை முதல் பராந்தகச் சோழன், மனைவி செம்பியன் மாதேவியார் தில்லை பற்றி பதிகம் (10 பாடல்கள்) பாடியுள்ளார்.

**7.வேணாட்டடிகள்:** தென் திருவாங்கூரினர், சேர மரபினராகலாம். சிதம்பரம் பற்றிப் 1 பதிகம் பாடியுள்ளார்.

**8.திருவாலியமுதனார்:** ஊர் சோழநாட்டுத் திருவாலி, மயிலையில் வாழ்ந்தவராகலாம். 'மயிலை மறைவ வாலி' எனத் தம்மைக் குறிக்கிறார். அமுதனார் பெயராகலாம். 4 பதிகங்கள் (42 பாடல்கள்) பாடியுள்ளார். சுந்தரரைக் குறிப்பிட்டுள்ளார். இறைவனைப் பாதாதிகேச வருணனையில் புகழ்கிறார். 10ஆம் நூற்றாண்டினர்.

**9.புருடோத்தமநம்பி:** வேதியர், தில்லை பற்றி 2 பதிகங்கள் 22 பாடல்கள் பாடியுள்ளார். அகத்துறை அதிகம், நம்பியாண்டார் நம்பிக்கு முந்தியவராகலாம்.

**10.சேதிராயர்:** திருக்கோவிலூர் பகுதியிலுள்ள சேதி நாட்டு மன்னர் மரபினர். நம்பியாண்டாருக்கு முந்தியவர். பாடிய பதிகம் 1 சிதம்பரம் பற்றியது, அகப்பொருள் நலத்தது.

## 6.திருமூலர்

யோகி, தென்னாட்டுத் தலங்களைத் தரிசித்து வருங்காலை, திவாவடுதுறைக் கருகிலுள்ள சாத்தனூரில் இடையன் ஒருவன் இறந்துகிடக்க அவனைச் சுற்றி ஆடுமாடுகள் வருந்துகின்ற காட்சி கண்டு கழிவிரக்கம் கொண்டு, தன் கூடுவிட்டு அவன் உடலில் புகுந்து ஆடு மாடுகளை மேய்த்து, திருவாவடுதுறை அரச மரத்தடியில் யோகிருந்ததாகவும், ஆண்டுக்கொருமுறை விழித்து ஒவ்வொரு மந்திரமாக எழுதி, மூவாயிரம் ஆண்டுகாலம் 3000 மந்திரங்களை எழுதி வீடுபேறடைந்ததாகவும் இயம்புவர். இடையன், மூலன், அவனுடலில் புகுந்திருந்தமையான் மூலர் எனப்பட்டார். திரு சிறப்பு அடை.

இவரியற்றிய பாடல்கள் திருமந்திரம், 'திருமந்திரமாலை' 'தமிழ் மூவாயிரம்' என வழங்குகின்றது. இதுவே பத்தாம் திருமுறை 9 தந்திரங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. 7 பாடல்களையுடய சிறப்புப் பாயிரம், திருமூலர் வரலாறு இளமை, செல்வம், உயிர் ஆகியவற்றின் நிலையாமை, கொல்லாமை, கள்ளுண்ணாமை, அறம். அன்பு கல்வி, கேள்வி போன்ற எச்சமயத்தார்க்கும் பொதுவான அறங்கள் பேசப்படுகின்றன. இரண்டாவது தந்திரம் அன்பர்கட்டு ஆண்டவன் அருள் புரிந்தமை, ஐந்தொழில், சில பல புராணக் கதைகள் இடம் பெறுகின்றன. மூன்றாம் தந்திரம் அட்டமா சித்தி, அட்டாங்க யோகம், சோதிடம் யோகப் பயிற்சி பற்றிய செய்திகள், வீட்டு நெறிக்குரிய வழிகள் விளம்பப்படுகின்றன. நான்காம் தந்திரம் மந்திர நூற் கருத்துக்கள், சக்கரங்கள் கூறப்படுகின்றன. சிவசக்தி வழிபாடு சிறப்பிக்கப்பபட்டுள்ளது. ஐந்தாம் தந்திரம் சரியை கிரியை யோகம் ஞான மார்க்கங்கள் பற்றிய செய்திகள். சைவ சமய பேதங்கள் காணப்படுகின்றன. சைவ சித்தாந்தம் என்னும் சொல் வருகிறது. ஆறாம் தந்திரம் சிவகுரு தரிசனம், திருவடிப்பேறு, ஞானோபதேசம், துறவு, தவம், வேடம், நீறு ஆகியன விளக்கப் படுகின்றன. ஏழாம் தந்திரம், சிவபூசை, குருபூசை, மகேசுரபூசை, அடியார் பெருமை, போசன விதி, இந்திரிய அடக்கம், சமாதி, சற்குரு பற்றியது.

**ஒன்றே குலம் ஒருவனே தேவனும்**
**நன்றே நினைமின் நமனில்லை நாணாமே**
**சென்றே புகும்கதி இல்லைநும் சித்தத்து**
**நின்றே நிலைபெய நீர்நினைந் துய்ம்மினே.**

என்ற பாட்டு இங்கேதான் வருகிறது. எட்டாம் தந்திரம்: காம, வெகுளி, மயக்கமாகிய முக்குற்றம் பக்தியுடைமை, புறங்கூறாமை போன்றன பகரப்பட்டுள்ளன. தத்துவமசி, (அது, நீயாய், இருக்கிறாய்) எனும் மொழி இதிலே இடம் பெறுகிறது. ஒன்பதாம் தந்திரம்: ஐந்தெழுத்தின் பேதங்கள், சிவதரிசனம், சித்தி மார்க்கம் முக்தி மார்க்கம் பற்றியன குறிக்கப்பெறுகின்றன.

திருமந்திரச் செய்யுட்கள் வெண்டளை பயின்று வெண்பாவுக்கு விருத்தத்திற்கும் இடைப்பட்டது இதன் யாப்பு. நூல் முழுதும் ஒரேவகைப் பாட்டினால் இயன்றது. சித்தாந்த சாத்திரம் தோன்றுதற்கு முன் சைவசமய முதல் நூலாக விளங்கியது இதுவே: சிறந்த ஆகமமாகச் சைவரால் போற்றப்பெறுவது. இந்நூல் தேவார மூவர்க்கும் முந்தியதாகக் கருதப்படுகிறது. ஞானசம்பந்தர் ஆவாடுதுறைக்குச் சென்று ஞான்று கொடிமரத்தின் கீழிருந்து தமிழ் மணம் வர, அங்கிருந்து திருமந்திரம் வெளிப்பட்டது என்றும் கூறப்படுகிறது. ஆகலின், இது சம்பந்தருக்கு முந்தையாதாகும்.

### 7.பன்னிருவர்:

இவர்கள் 40 நூல்கள் பாடியுள்ளனர். இவற்றின் தொகுதியே பதினோராம் திருமுறையாகும்.

**1.திருவாலவாயுடையார்**: மதுரைச் சொக்கலிங்கப் பெருமான், பாணபத்திர வறுமை போக்கிப் பொருள் வழங்க. சேரமானுக்கு எழுதிய பாசுரம் பதினோராம் திருமுறையில் முதலில் அமைகிறது. அக்கால முடங்கல் அமைப்பும் அமைதியும் அறிய உதவுகிறது. 6ம் நூற்றாண்டில் எழுதப்பட்டிருக்கலாம்.

**2.காரைக்கால் அம்மையார்:** சேணாட்டுக் காரைக்காலில் பிறந்தமையால் இங்ஙனம் அழைக்கப்பட்டார். பிள்ளைப் பெயர் புனிதவதி, நாகை பரமதத்தனை மணந்தார். அவர் கொடுத்த இரு மாங்கனிகளில் ஒன்றை அடியார்க்குப் படைத்துவிட்டமையால், கணவர் கேட்டபோது இறைவனை வேண்டி ஒரு மாங்கனி பெற்றுத் தந்தார். சுவை மிகுதி கண்ட கணவர் ஏதெனவினவ, உண்மை கூறிய அம்மையாரை இன்னொரு பழம் பெற்றுத் தருமாறு பணிக்க அதனையும் அவ்வாறே இறையருளால் பெற்றார். இவ்வினோதம் கண்ட பரமதத்தன் தெய்வமெனக் கருதி இவரைப் பிரிந்து மதுரையில் வேறு ஒருத்தியோடு வாழ ஆண்டவனை வேண்டி பேயுருப்பெற்று, கயிலை மீது தலையாலேயே நடந்து, ஆண்டவனால் ‘அம்மையே’ என்றழைக்கப் பெறும் பேறு பெற்றுத் திருவாலங் காட்டுக்கு மீண்டு இறவாநிலை யெய்தினார்.

அறுபத்துமூவரில் ஒருவர், ஏனையோர் ஆலயங்களில் நின்ற கோலத்தில் இருக்க, இவர் மட்டும் அமர்ந்த கோலத்தில் காணப்படுவது ஒன்றே இவரது பெருமையுணர்த்தும்.

திருவாலங்காட்டிற்குச் சம்பந்தர் வந்த போது அம்மையார் தலையால் நடந்து சென்ற ஊரென உணர்ந்து அப்பகுதி மிதியாது பழையனூரிலேயே தங்கியதாகக் கூறப்படுகிறது. ஆகலின் இவர் சம்பந்தருக்கு முற்பட்டவர் எனத் தெரிகிறது. பாடியன 4. திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் 2.திருவிரட்டை மணிமாலை 1அற்புதத் திருவந்தாதி1 ஆக 43 பாடல்கள் இவர் பாடல்கள் மூத்த திருப்பதிகம் என்றிருப்பதும் எண்ணத்தக்கது. கூத்தப் பெருமான் ஆடற் சிறப்பும், சுடலை வருணனையும் பெரிதும் பேசப்படுகின்றன. சித்தாந்தக் கருத்துக்கள் சிறந்துள்ளன.

**3.கல்லாட தேவ நாயனார்:** சங்க காலக் கல்லாடரினும் வேறானவர். கல்லாடம் செய்தவரும் இவரும் ஒருவரா என்பதும் ஐயமே, மலையாளத்தைச் சேர்ந்த கல்லாடம் ஊராகலாம். பாடியது திருகண்ணப்பர் திருமறம். இணைக் குறளாசிரியப்பாவால் 38 அடிகளில் கண்ணப்பர் வரலாறு கூறுவது.

**4.நக்கீரதேவ நாயனார்:** சங்க கால நக்கீரரல்லர் 6ஆம் நூற்றாண்டினராகலாம். டாக்டர் சாமிநாதையர் இவரைச் சங்க காலத்தவராகவே கருதுவர். இயற்றிய நூல்கள் பத்து 1.**திருமுருகாற்றுப்படை** இவருடைய பத்துப்படைப்புகளில் இ∴தொன்றே சங்கத் தமிழ்ப்பாங்கோடு அமைவது (விவரம் பத்துப்பாட்டு எனும் தலைப்பில் கண்டறிக) 2.**கைலைபாதி காளத்திபாதியந்தாதி** கயிலையும் காணத்தியும் மாறி மாறி வர 100 வெண்பாக்களாலாயது. நக்கீரர் விரிசடைக் கடவுளுடன் வாதாடித் தொற்றுக் குட்ட நோய் பெற்று அது தீர காளத்தி சென்று அங்கிருந்து கயிலையைப் பாடியதாகத் தெரிகிறது. இந்நூலில் ஐந்தெழுத்தருமை அறிய வருகிறது. 3.**திரு ஈங்கோய்மலை எழுபது:** ஈங்கோய் மலை பற்றி 70 பாடல்கள் கொண்ட நூல். சங்க இலக்கிய நடையில் சாயல் கொணடது. இயற்கையழகினை அள்ளித் தெளிக்கும் ஆழகு நூல் திருச்சி மாவட்ட முசிறிக்கு அருகில் உள்ளது மலை. 4. **திருவலஞ்சுழி மும்மணிக்கோவை:** குடந்தையை அடுத்துளது திருவலஞ்சுழி. 30 பாடல்கள் கொண்ட நூல்: இதுபோது இடையிலுள்ள பாடல்கள் மறைய 15 பாடல்களே கிடைத்துள. 5.**திருவெழுகூற்றிருக்கை:** இணைக்குறளாசிரியப் பாவான் இயன்றது. 7 கூறுகளைக் கொண்டது 55 அடிகள் தேர் போல அமைந்து ஒவ்வோர் எண் குறைந்தும் மிகுந்தும் எண்ணழகு பொருந்த அமைவது. இறைவனின் ஆடற் குறிப்புகள் அடங்கியுள்ளன. 6.**கோபப் பிரசாதம்:** இறைவனின் சினந்தணியப் பாடியது. 99 அடிகளுடையது. இணைகுறளாசிரியப்பாவில் அமைவது. பழமொழிகளும் புராணக் கதைகளும் பயின்று வருகின்றன. 7.**காரெட்டு:** மேகம் பற்றிய 8 வெண்பாக்களை கொண்டது. **8.போற்றிக் கலி வெண்பா:** 90 அடிகளையுடையது. பிரமன் இறைவனது முடிகாண அன்னமாய்ச் சென்றதாக இதுவரை நாமறிய இந்நூல் கழுகு உருவில் சென்றதாகக் கழறுகிறது. **9.திருக்கண்ணப்பதேவர் திருமறம்:** கண்ணப்பர் கதை கூறுவது அவரது மறச்செயல் கிளத்துவதால் திருமறம் ஆயிற்று. 10.**பெருந்தேவ பாணி:** இணைகுறளாசிரியப்பா. நக்கீரர் இறைவனை எதிர்த்த குற்றத்திற்கு ஆளாகி, அதனை மன்னிக்கப் பாடியது.

**5.கபிலதேவநாயனார்:** சங்கச் சான்றோரல்லர். இயற்றின மூன்று 1.மூத்த நாயனார் இரட்டை மணிமாலை: வெண்பாவும் கலித்துறையும் கலந்து வருவது. 200 பாடல்கள்: விநாயகர் பற்றியது.

2.சிவபெருமான் இரட்டைமணி மாலை: அந்தாரி அமைப்பில் 20 பாடல்களே இருத்தல் வேண்டும். இதில் அவ்வமைப்பு இல்லை: 37 பாடல்கள் உள. இவர் பாடியதா என்று ஐயமுளது. 3.சிவபெருமான் திருவந்தாதி: வெண்பா யாப்பினது. கட்டுக்கோப்பும் செறிவும் மிக்கது. இவர் 11ஆம் நூற்றாண்டினராகலாம்.

**6.பரணதேவ நாயனார்:** சங்க காலப் பரணரல்லர். 10ஆம் நூற்றாண்டவராகலாம். டாக்டர் ஐயர், சங்கத்தவராகச் செப்புவர். பாடியது சிவபெருமான் திருவந்தாதி 101 வெண்பாக்கள். பல தலங்கள் அடியார்கள் பற்றிப் பேசப்படுகிறது.

**7.அதிரா அடிகள்:** துறவி, 7ஆம் நூற்றாண்டிற்கும் பிற்பட்டவர். மூத்த பிள்ளையார் திருமும்மணிக்கோவை பாடியுள்ளார். அகவல், வெண்பா, கலித்துறை மூன்றும் கலந்து 3 பாடல்கள் உடையது. 23 பாடல்களே உள்ளன. விநாயகர் பற்றியது.

**8.எம் பெருமானடிகள்:** துறவி, நம்பியாண்டார் நம்பிக்கு முற்பட்டவர் என்ப. பாடியது:சிவபெருமான் திருமும்மணிக்கோவை. 30 பாடல்கள்.

**9.ஐயடிகள் காடவர்கோன்:** 63வரில் ஒருவர். பல்லவ மரபினர். சுந்தரர்க்கு முந்தியவர். நூல்: சேத்திரத் திருவெண்பா. 24 படல்கள். ஒவ்வொரு வெண்பாவிலும் ஒரு தலம் குறிக்கப்பெறும். இரு பாடல்கள், எத்தலமும் குறிக்க வில்லை.

**10.சேரமான் பெருமாள் நாயனார்:** சேர மன்னர், மலை நாட்டுக் கொடுங்கோளுரினர், 63வரில் ஒருவர். சுந்தரர் நண்பர். பெயர் பெருமாக்கோதையர் அனைத்துயிர்கள் பேசுவன அறியும் ஆற்றலர்: ஆதலால் கழறிற்றார் என்ற சேரவரசராதலின் சேரமான் பெருமாள் எனவும் அழைக்கப்பெறுவர் திருநீறு தரித்தார்மாட்டு நட்பு பாராட்டும் நீர்மையர். ஒரு முறை வண்ணான் ஒருவன் உவர் மண் உடலேடு வரக்கண்டு, சிவனடியார் என்றெண்ணி யானையை விட்ட இறங்கி வணங்கினாரென்றால், இவரது அன்பை என்னென்பது? குதிரையினி காதில் ஐந்தெழுத்து மந்திரம் ஓதி அதன் வலிகொண்டு விண்வழிச் சென்று சுந்தரரோடு கயிலையடைந்தவர். ஆங்கு பாடியன: 1.திருக்கயிலாய ஞான உலா, தமிழில் அமையும் முதல் உலா, ஆகலின் இஃது 'ஆதி உலா' எனப்பெறும். வெண்பாவில் 394 அடிகளுடையது. 2.பொன் வண்ணந் தந்தாதி: முதற்பாடல் பொன்வண்ணம் எனத் தொடங்கி அச்சொல்லாலேயே முடிவதால் இப்பெயர் பெற்றது. கட்டளைக் கலித்துறைகள் 101 கொண்டது. 3.திருவாரூர் மும்மணிக்கோவை: 30 பாடல்களுடையது.

**11.பட்டினத்தார்:** காவிரிப்பூம்பட்டின வணிகர், இயற்பெயர் 'திருவெண்காடர்' இவரிடமே சேந்தனார் கணக்கராக இருந்ததால் மகன் மருதவாணன் மூலம் உலக நிலையாமை யுணர்ந்து துவரத் துறந்தார். திருவிடை மருதூரில் பத்திரகிரியாரொடு உறைந்து, திருப்பதிகள் பல தரிசித்து திருவெற்றியூரில் சமாதியானவர். இவரியற்றியன: 1.கோயில் நான்மணிமாலை: மக்கள் வாழ்வு,

கடலில் செல்லும் கப்பல் போன்றது. அதனை முத்தியாகிய கரையில் சேர்க்க வேண்டுமெனப் பாடுவது இது. சண்டேசுவரர் சிறுத்தொண்டர் பற்றிய குறிப்புகள் வருகின்றன. 2.திருக்கழுமல மும்மணிக்கோவை இல்றத்திலிருந்தே முக்தி பெறுவது தவம் செய்வார் திறம் உமையவன் சிறப்பு. வரகுணபாண்டியன் அன்பின் திறம் ஆகிய பேசப்படுகின்றன. அன்பின் திறம் ஆகியன பேசப்படுகின்றன. 4.திருவேகம்முடையார் திருவந்தாதி: காஞ்சி ஏகம்பார் மீது 100 கட்டளைக் கலித்துறைகள் 5.திருவொற்றியூர் ஒருபா ஒருப.்.து ஆசிரியப்பாவில் அந்தாதித் தொடையில் 10 பாடல்கள் கொண்டது. இறைவன் பெருமை. படைப்புப் பொருள்கள் அவன் மேனியாகமிளிர்தல் போன்றன காணலாம்.

இப்பட்டினத்தடிகள், ‘திருவேகம்ப பாமாலை’ பாடிய பட்டினத்தடிகளினின்றும் வேறாவர். எனவே இவரைத் ‘திருமுறை பட்டினத்தடிகள்’ எனலாம். இவர் நம்பியாண்டார்க்கும் முந்தியவர். 10ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாகும்.

**12.நம்பியாண்டார் நம்பி:** தில்லைக்கு அணித்தாய திருநாரையூரில் ஆதி சைவ அந்தணர் மரபில் பிறந்தவர். அவ்வூரிலுள்ள பொள்ளப் பிள்ளையார் எனும் விநாயகரை, நைவேத்திய உணவை உண்ணுமாறு செய்தவர். இராசராசனின் வேண்டுகோட்கிணங்க தில்லையில் மூவர் தேவாரத்தை எடுத்து அத்துடன் பின்னெழுந்தவற்றையும் சேர்த்து 11.திருமுறைகள் வகுத்தார். ஏழு வகைப்படுத்தியமை போன்றே இவரும் திருமுறைகளை வகுத்தளித்தமையான் ‘தமிழ் வியாசர்’ எனப்படுகிறார். அரசனது வேண்டுகோட்கிணங்க இவரியற்றிய 9நூல்கள் பதினோராம் திருமுறையிலே சேர்க்கப்பட்டன. கோயிற்றிருப் பண்ணியர் விருத்தம்: தில்லை நடராசர் மீது அந்தாதித் தொடையால் 70 பாடல்களில் பாடப்பட்டது. 2.திருத்தொண்டர் திருவந்தாதி: 63வரின் வரலாற்றையும் சுருக்கித் தருவது. 86 பாடல்களையுடையது. பெரிய புராணத்திற்கு முதல் நூல் - இரண்டாவது துணை நூல் 3.ஏகாதச மாலை நாவுக்கரசர் மீது 11 விருத்தத்தில் பாடியது. 4.ஆளுடைப் பிள்ளையார் திருவந்தாதி. 5.திருச்சபை விருத்தம் 6.திருமும்மணிக்கோவை. 7.திருவுலாமாலை 8.திருக்கலம்பகம், 9.திருத்தொகை ஆகியன சம்பந்த பற்றியன. பொள்ளாப் பிள்ளையார் மீது வெண்பாவும் விருத்தமுமாகப் பாடப்பட்ட 20 பாடல்களையுடையது விநாயகர் இரட்டை மணிமாலை.

திருமுறைகளைத் தொகுப்பித்தவன் இராசராசன் எனப்படுகின்றான், தில்லையில் பொன்வேய்ந்த அநபயன் குலசேகரன், ஆதித்த கரிகாலன், இராசராசன் என்றெல்லாம் அழைக்கப்பெறும் இரண்டாம் ஆதித்த சோழனே திருமுறை கண்டவன் என்பார். இராசராசன் என்ற பெயர் ஒப்புமை கருதி இராசராச சோழனே திருமுறை வகுக்கச் செய்தவன் என்றும் கூறுப.

**8.சேக்கிழார்:**

தொண்டை நாட்டுக் குன்றத்தூரில் வேளாண் மரபில் தோன்றியவர். பிள்ளைப் பெயர்: ‘அருண்மொழித்தேவர்’ மன்னன் அநபாயனின் (2ஆம் குலோத்துக்க சோழன்) முதலமைச்சர், மன்னன் சீவக சிந்தாமணியில் சிந்தை மறந்திருந்தமையறிந்து, அவனுக்கு சிவனடியார் வரலாற்றினை விளக்கினார். பின்னர் அவன் வேண்டியாங்கு. அவ்வரலாறுகளைத் தில்லைக் கூத்தப் பெருமான் ‘உலகெலாம்’ என அடியடுத்துக் கொடுக்கத் திருத்தொண்டர் புராணமாகப் பாடினார். இதனால். இவர் ‘தொண்டர்சீர் பரவுவார்’ எனப்பட்டார். ‘உத்தம சோழப் பல்லவன்’ ‘தெய்வப் புலவர்’ எனவும் படுகிறார். இப்பெரிய புராணமே 12 ஆம் திருமுறையாகும். (இது பற்றிய விளக்கத்தைக் காப்பிய வரிசையில் காண்க)

இப்பன்னிரண்டுமே சைவத் திருமுறைகளாம். அனைத்தும் சைவத் துதிப்பாடல்கள். பெரிதும் அடியார் வரலாறே அளிக்கினும், இடையிடையே துதிப் பாடல்கள் பொதுளி வருதலின் பெரியபுராணம் துதிப்பாடல் வரிசையில் இடம் பெறுகிறது. ஆக, 6ஆம் நூற்றாண்டைய திருமந்திரம் முதல், 12ஆம் நூற்றாண்டச் சேர்ந்த பெரியபுராணம் முடிய ஆறு நூற்றாண்டுகளில் அரும்பிய சைவ நூல்கள் பன்னிரு திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. தமிழெழுத்துகளில் உயிரெழுத்துக்கள் 12 போல சைவத்தின் உயிர் நிலையாக ஒளிர்வன இப் 12 திருமுறைகள். தமிழ் வேதமாகத் திருமுறைகளைச் சைவர் கருதுகின்றனர்.

## 2.3. நாலாயிரதிவ்ய பிரபந்தம்

வைணவம் உலகைக் காக்கும் கடவுளாகிய திருமாலை முழு முதல் தெய்வமாகக் கொண்டது. மாயோன் மேய காடுறை உலகம்’ என தொல்காப்பியமும்,‘மாயோன் மேய ஓண நன்னாள்’ என மதுரைக்காஞ்சியும் திருமாலின் பெருமைகளைக் கூறுகிறது. பதினெண் கீழ்க் கணக்கு நூல்களுள் நான்மணிக்கடிகை, கார்நாற்பது, களவழி நாற்பது, திரிகடுகம் என்பன வைணவம் சார்ந்தவையாகும்.

**ஆழ்வார்கள்**

இறைவனின் திருக்கல்யாண குணங்களில் ஆழ்ந்தவர்கள் ஆழ்வார்கள். பன்னிரு ஆழ்வார்களும் திருமாலின் பெருமைகளைப் பாசுரங்களாகப் பாடினார். பசு தன் கன்றை நினைத்தும் பால் பொழிவது போல, திருமாலை மனதில் நினைத்ததும் தோன்றும் பாடல் பாசுரமாகும். நாதமுனிகள் இவற்றை தொகுத்து **நாலாயிர திவ்விய பிரபந்தம்** என்று ஆக்கினார்.

| ஆழ்வார்கள் | நூல்கள் | பாடல்கள் |
|---|---|---|
| பொய்கையாழ்வார் | முதலாம் திருவந்தாதி | 100 |

| | | |
|---|---|---|
| பூதத்தாழ்வார் | 2ம் திருவந்தாதி | 100 |
| பேயாழ்வார் | 3ம் திருவந்தாதி | 100 |
| திருமழிசையாழ்வார் | நான்முகன் திருவந்தாதி | 96 |
| | திருச்சந்த விருத்தம் | 120 |
| நம்மாழ்வார் | திருவிருத்தம் | 100 |
| | திருவாசிரியம் | 7 |
| | பெரியதிருவந்தாதி | 87 |
| | திருவாய்மொழி | 1102 |
| குலசேகராழ்வார் | பெருமாள் திருமொழி | 105 |
| திருமங்கையாழ்வார் | பெரியதிருமொழி | 1084 |
| | திருக்குறுந்தாண்டகம் | 20 |
| | திருநெடுந்தாண்டகம் | 30 |
| | பெரியதிருமடல் | 78 |
| | சிறியதிருமடல் | 40 |
| | திருவெழுக்கூற்றிருக்கை | 1 |
| தொண்டரடிப்பொடியாழ்வார் | திருப்பள்ளி எழுச்சி | 10 |
| | திருமாலை | 45 |
| திருப்பாணாழ்வார் | அமலனாதி பிரான் | 10 |
| பெரியாழ்வார் | திருப்பல்லாண்டு, திருமொழி | |
| ஆண்டாள் | நாச்சியார் திருமொழி | 143 |
| | திருப்பாவை | 30 |
| மதுரக்கவியாழ்வார் | கண்ணிநுண்சிறுதாம்பு | 11 |

## 2.4. பன்னிரு ஆழ்வார்கள்

**1.பொய்கையாழ்வார்:** பொய்கையினின்று பிறந்தமையான் இப்பெயர் ஏற்றார். காஞ்சிபுரத்தில் ஐப்பசித் திங்கள் திருவோண நட்சத்திரத்தில் பாங்சசந்நியம் எனும் சங்கின் அம்சமாகப் பிறந்தார்.

**2.பூதத்தாழ்வார்:** திருமாலை 'பூதம்' எனப் பல இடங்களில் பாடியிருந்தலான் இப்பெயர் பெற்றார். திருக்கடல் மல்லையில் (மகாபலிபுரம்) ஐப்பசி – அவிட்ட நட்சத்திரத்தில் கதாயுதத்தின் அம்சமாகத் தோன்றினார்.

**3.பேயாழ்வார்:** பக்தி மேலிட்டால் அழுது சிரித்து ஆடிப்பாடிப் பேய் பிடித்தவர்போல் பிறங்கியமையால் இப்பெயரிட்டனர், மயிலப்பூரில் ஐப்பசி – சதய நட்சத்திரத்தில் நந்தகம் எனும் வாளின் அம்சமாகப் பிறந்தார்.

இம்மூவரும் ஒரே காலத்தவர். காலத்தால் மற்ற ஆழ்வார்க்கு முந்தியவர். ஒரே மாதத்தில் அடுத்தடுத்து பிறந்தமை. தாமரை, குருக்கத்தி, செவ்வல்லி ஆகிய மலரினின்றும் தோன்றியமை போன்ற ஒப்புமையும் உடையவர்கள். ஆதலின் இவர்களை 'முதலாழ்வர் மூவர்' என்றழைப்பர். இவர்கள் சந்திப்பு விந்தையானது. பொய்கையார் ஒருமுறை திருக்கோவலூரில் ஒரு வீட்டின் இடைக்கழியில் துயில, அதுபோது பூதத்தார் அவன் சென்று இடம் வேண்ட, பொய்கையார் 'இங்கே ஒருவர் படுக்கலாம்' 'இருவர் இருக்கலாம்' என்று கூறி இடந்தர, இருவரும் இருந்தனர். அத்தருணம் பேயாழ்வர் ஆங்கு வந்து இடம்தேட, இருவரும், இங்கு ஒருவர் படுக்கலாம். இருவர் இருக்கலாம். மூவர் நிற்கலாம்' என்று கூறி, மூவரும் நின்று மாலின் திறம் பேசி மகிழ்ந்திருந்தனர். அக்காலம் இருட்காலம். இம்மூவரிர்க்கும் இடையில் யாரோ நெருக்குவர் உணர்ந்து யாரென எண்ண, திருமாலென அறிந்து மகிழ்ந்து,

**வையந் தகளி வார்கடலே நெய்யாக**
**வெய்ய கதிரோன் விளக்காக – செய்ய**
**சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொன்மாலை**
**இடராழி நீங்குகவே என்று** **- என்று பொய்கையாரும்**

**'அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக,**
**இன்புருகு சிந்தை இடுதிரியா-நன்புருகி**
**ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு**
**ஞானத் தமிழ்புரிந்த நான்'** **- எனப் பூதத்தாழ்வாரும்**

**'திருக்கண்டேன், பொன்மேணி கண்டேன், திகழும்**
**அருக்கன் அணிநிறம் கண்டேன் - செருக்கிளம்**
**பொன்ஆழி கண்டேன், புரிசங்கம் கைக்கண்டேன்,**
**என்ஆழி வண்ணன்பால் இன்று'** **- என்று பேயாழ்வாரும் பாடினர்.**

இந்நிகழ்ச்சி முதல் திருவந்தாதி 86ஆம் பாசுரத்தில் குறிக்கப்படுகிறது. இம்மூவரும் பாடிய நூறு நூறு வெண்பாக்களின் தொகுதியே (முறையே) முதல், இரண்டாம், மூன்றாம் திருவந்தாதிகளாம். இவர்கள் 8ஆம் நூற்றாண்டின் முற்பகுதியினர் என்றும், 6ஆம் நூற்றாண்டினர் எனவும் இருவேறு கருத்துக்கள் உள.

**4.திருமழிசை ஆழ்வார்:** தொண்டை நாட்டு திருமழிசையில் தை – மக நட்சத்திரத்தில் சக்கரத்தின் அம்சமாகப் பிறந்து பெற்றோரில்லாமையால் திருவாளன் எனும் தாழ்க் குலத்தவன் மனையில் வளர்ந்தவர். ஊரால் பெயர் பெற்றார். 'பத்திரசாரர்' என்ற பெயருமுண்டு. கடுமையான வைணவர். உருத்திரனையே வென்றாராம். கோயிலில் பணிபுரிந்துவரும் நாளில், ஒரு முதியவர் தள்ளாடி வேலை செய்வது கண்டு இரங்கி, திருமாலிடம் முறையிட்டு அருள் புரிய வேண்ட, அதன்படி அவரும் முதுமை நீங்கி இளமை எய்தினார் இச்செய்தி எங்கும் பரவியது. மன்னன் ஆழ்வாரின் சீடன் கணிக்கண்ணனிடம் குருவை அரண்மனைக்கு அழைத்து வருமாறு வேண்டினான். 'எம் ஆசிரியர் எங்கும் எழுந்தருளார்' எனச் சீடன் சாற்ற, தன்னைப் பாடுமாறு அரசன் பணிக்க 'நாராயணனைப் பாடுவேனேயல்லால் நரனைப் பாடேன்' என்றார் கணிக்கண்ணர். வெகுண்ட வேந்தன் கணிக்கண்ணரை உடனே ஊரை விட்டு வெளியேற உத்தரவிட்டான். சீடரும் நடந்ததைக் குருவிடம் கூற, 'நீயே செல்லும் போது எனக்கும் பெருமாளுக்கும் இங்கென்ன வேலை' என்று கூறி

**கணிக்கண்ணன் போகின்றான் காமருபூங் கச்சி**
**மணிவண்ணா! நீ கிடக்க வேண்டா – துணிவுடைய**
**செந்நாப் புலவன் போகின்றேன், நீயுமுன்றன்**
**பைந்நாகப் பய்சுருட்டிக் கொள்.**

எனப் பெருமாளிடம் பாட, அவரும் பாம்பணையுடன் பின் சென்றார். கோயிலில் இறைவனில்லாமை யுணர்ந்த அரசன் தன் தவறுணர்ந்து வேண்டிக்கொள்ள 'செந்நாப் புலவனும் போக்கொழிந்தேன் நீயுமுன்றன் பைந்நாகப் பாய் விரித்துக் கொள்' என மாற்றிப் பாடவே. பண்டுபோல் பெருமாளும்கிடப்பாராயினர், இதனால் அப்பெருமாளும் 'சொன்ன வண்ணம் செய்த பெருமாள்' என்றழைக்கப்படுகின்றனர். இதனைப் 'பைந்தமிழ் பின்சென்ற பச்சைப் பசுங்கொண்டலே' எனப் பாராட்டுகிறார் குமரகுருபரர். உலக முதற்பொருள் இன்னதென்று உண்மையிலேயே உணரவேண்டுமெனக் கருதி, சமணம் வாக்கியம் சைவ சமயங்களுக்கெல்லாம் மாறி, இறுதியில் பேயாழ்வாரிடம் ஞானோபதேசம் பெற்றார். இவர் காலம் 7ஆம் நூற்றாண்டு இவர்

பாடியன திருச்சந்த விருத்தம், நான்முகன் திருவந்தாதி, இரண்டுமே இலக்கியச்சுவை அவ்வளவாக இல்லாதவை, தத்துவமும், மிடுக்கும் மிக்கவை சான்று ஒன்று.

**தன்னுளேதி ரைத்தெழும் தரங்கவெண்த டங்கடல்**
**தன்னுளேதி ரைத்தெழுந் தடங்குகின்ற தன்மைபோல்,**
**நின்னயேபி றந்திறந்து நிற்பவும் திரிபவும்**
**நின்னுளேய டங்குகின்ற நீர்மை நின்கண் நின்றதே.**

'பூநிலாய...' எனும் பாட்டு தத்துவ நிலை பரந்தாமனே எந நிலை நாட்டுகிறது.

**5.நம்மாழ்வார்:** ஆழ்வார்களில் தலைமை சான்றவர். இவரை உடலாகவும் ஏனையோரை உறுப்புகளாகவும் வைணவர்கள் கருதுகின்றனர். பாண்டி நாட்டில் திருக்குருகூரில் (ஆழ்வார் திருநகரி) வேளாண் மரபில் கரியர்க்கும் உடைய நங்கைக்கும் பிரமாதி வருடம் வைகாசித் திங்கள் பௌர்ணமி திதியில் பிறந்தவர். பிறந்தது முதல் பேசாதிருந்தமையான் பெருமாள் கோயில் புளியமரத்தடியில் இருந்து தவமியற்றிய திருமாலின் திருவருள் பெற்றார் – பேசினார். இவர் சடம் எனும் வாயுவைச் சினந்தமையான். சடகோபா என்றும் அரங்கப் பெருமானால் 'நம் சடகோபன்' என்றழைக்கப்பட்டமையால் 'நம்மாழ்வார்'எனவும், உலகியலுக்கு மாறாக இருந்தமையால் மாறன் என்றும் பிற சமயமாம் யானைகட்கு அங்குமசமாக அமைந்தமையான் 'பாரங்குசர்' எனவும் அழைக்கப்பெறுவர்.

சைவத்திற்கு மாணிக்கவாசகர் எப்படியோ, அப்படியே வைணவத்திற்கு நம்மாழ்வார், மாலையே சிறப்பாக வழிபடினும், பொதுவாக மும்மூர்த்திகளையும் வழிபடுகின்றார். அனைத்தையும் ஆண்டவனாகவே காணும் ஆழ்ந்த உள்ளத்தார். மாலையை 'நெடுமால்' என்றும், மழையை 'நாராயணன் வருகை' எனவும், நிலவை 'ஒளிமணிவண்ணா' என்றும் பாடுகின்றனர். உண்ணும் சோறும் பருகும் நீரும், தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன் எம்பெருமானே, என்கிறார். திருவாசகப் போக்கினையும், தேவார சொற்றொடர்களையும் எடுத்தாண்டுள்ளார். கண்ணனே எப்பொருளுமாக இயங்குகின்றான் என்று வலியுறுத்துகிறன்றார். 'வாய்கொண்டு மானிடம் பாடவந்த கவியேனல்லேன்' என்கிறார். சாதி பேதத்தைச் சாடுகின்றார். (திருவாய் 2971) காலம் 9ஆம் நூற்றாண்டின் தொடக்கம்.

**பாடியன**: திருவாசிரியம், திருவாய்மொழி, திருவிருத்தம், பெரியத்திருவந்தாதி இந்நான்கையும் வைணவர்தம் சமயத்திற்குரிய 'சதுர்மறைகளாச்' சிறப்பிப்பர். நம்மாழ்வர் படல்கள் திருவாய்மொழி எனப்படும் ஏனையோர் பாடியன திருமொழி என்றே அழைக்கப்படும். திருவாய்மொழி 'திராவிடவேதம்' எனப்பெறும். ஒவ்வொரு பத்தும் முதல், இரண்டு என எண் பெறுகிறது. 10

பத்துக்களைக் கொண்டது: உட் பத்துக்கள் ஒவ்வொன்றும் அவ்வப்பத்தின் தொடக்கச் சொற்களைத் தலைப்பாக கொண்டு இறுதிப் பாடல்கள் ‘சடகோபன் சொன்னது’ என முத்திரை பெற்றும் செல்கின்றன. ‘உயர்வற’ (முதற்பத்து ‘அவரவர்..’ (முதற்பத்து – உயர்வு 1,5) ‘வீடுமின்..’ ‘சேர்த்தடத்..’ (வீடுமின் 1,11) ‘ஒன்றெனப்பலவென..’ (பத்துடை-7) ‘ஒரு நாயகமாய்..’ (நான்காம்பத்து-1) ‘ஒன்றுத் தேவும்..’ ‘கண்ணன் கழலிணை..’ ‘முனியே, நான்முகனே..’ ‘அவாவறச்..’ (பத்தாம் பத்து) போன்றன சிறப்பான பாசுரங்களாம்.

**6.மதுரகவியாழ்வார்:** நம்மாழ்வாரின் சீடர் அந்தணர். திருக்குருகூரையடுத்த திருக்கோளூரில் ஈசுவர ஆண்டு சித்திரை (மாதம்) நட்சத்திரத்தில் கருடாழ்வார் அம்சமாகத் தோன்றினார். காதுக்கினிய கவிகள் பாடினமையான் இப்பெயர் பெற்றார். வடதிசை சென்றவர் அயோத்தியில் ஓர் ஒளிப் பிழம்பு கண்டு அதனைத் தொடர்ந்து திருக்குருகூரை அடைந்து அவ்வொளி நம்மாழ்வாரே எனத்தெளிந்து அவரைக் கண்டவர், அவரையே ஞானாசிரியராகவும் கொண்டவர். அவர் பாடல்கள் அனைத்தையும் எழுத்தெண்ணித் தம் கையாலேயே எழுதி மகிழ்ந்தவர். அவரையே வழிபாடு கடவுளாகக் கருதி உருவமைத்து ‘ஐம்பதாண்டுகள்’ வழிபட்டவர். இவர் பாடிய திருமால் பற்றியனவல்ல, அனைத்தும் (14பாடல்கள்) நம்மாழ்வார் பற்றியன. முதற் பாடல் ‘கண்ணி நுண் சிறுத்தாம்பு’ எனத் தொடங்குவதால் அப்பதிகம் இப்பெயரானே வழங்குகின்றது. நம்மாழ்வார் காலத்தவர்.

**7. குலசேகராழ்வார்:** சேரநாட்டுத் திருவஞ்சைக் களத்தில், பல வருடம் மாசித் திங்கள் புணர்பூசம் நட்சத்திரத்தில் கௌத்துப (மணி) அம்சமாகப் பிறந்தவர். அரியணை துறந்து வைணவத் தொண்டரானவர். வடமொழியும் தென் மொழியும் தெளிந்தவர். இராமனிடத்து மிக்க ஈடுபாடுடையவர். ஒரு சமயம் இராமாயணச் சொற்பொழிவில், இராமன் தன்னந்தனியே கர தூடணர்களுடன் போர் புரிந்தான் என்ற கட்டத்தைப் புராணிகர் கூறியபோது, அந்நிகழ்ச்சியில் நெஞ்சம் ஒன்றியவராய் அப்பொழுது நடப்பதாக நினைத்து இராமனுக்குத துணை செய்வேன் எனத் தம் சேனையுடன் கிளம்பிவிட்டார், இராமன் அவர்களை வென்றான்’ என்று சாமர்த்தியமாய்ப் புராணிகர் சமாளிக்கவே திரும்பினார். இவர் பாகவதர்களிடம் பேரன்பு செலுத்துவது கண்டு அழுக்காறு கொண்டு இரத்தினாபரணத்தை ஒரு பாகவதர் திருடிவிட்டதாக கூற , அதனை நம்ப மறுத்து குடத்தில் பாம்பை இட்டு பாகவார் திருடியிருந்தால், பாம்பு என்னைத் தீண்டட்டும் என்று கூறிக் கையை விட்டுப் பாம்பு கடிக்கா திரும்பதனைக் காட்டினார். இவர் தமிழில் பெருமாள் திருமொழியும், வடமொழியில் முகுந்த மாலையும் செய்துள்ளார். திருவேங்கடமுடையானிடமும், கண்ணபிரானிடமும் காண்தகு காதல் கொண்டு பாடியுள்ளார். வேங்கடத்தில் படியாய்க் கிடந்து மகிழ விரும்பினார். இன்றும் அங்கு படிகள் ‘குலசேகரன் படி’ என்று கூறப்படுகின்றன. திருவரங்கத்தில் மூன்றாம் மதிலை இவர் கட்டினாராம். 9ஆம் நூற்றாண்டு.

**தருதுயரம் தடாயேலுள்ள சரணல்லால் சரணில்லை**
**விரைகுழவு மலர்ப்பொழில்சூல் வித்துவக்கோட் டம்மானே!**
**அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும், மற்றவள்தான்**
**அருள் நினைத்தே யழும்குழவி அதுவேபோன் றிருந்தேனே.**

என்னும் பாசுரம் ஏற்றமிகு ஒன்று. இவர் திருமொழி 10 பிரிவுகளும், ஒவ்வொரு பிரிவும் முதற்பாட்டின் முதற்றொடரைத் தலைப்பாகவும் இறுதிப் பாடல்கள் கோழியர் கோன் குலசேகரன் சொன்ன' என முத்திரை பெற்றும் அமைகின்றன.

6. **பெரியாழ்வார்:** ஸ்ரீவில்லிபுத்தூரில் ஆனித் திங்கள் சுவாதி நட்சத்திரத்தில் கருடாம்சமாக வேதியர் குலத்தில் தோன்றினார். பூமாலை கட்டிப் பெருமாளுக்குப் பணிபுரிந்ததோடு, பாமாலை பாடியும் பணிந்தவர், திருப்பல்லாண்டு பெரியாழ்வார் திருமொழி இரண்டும் பாடியுள்ளார். கண்ணனின் பிள்ளைப் பருவத்தினைப் பிள்ளைத் தமிழில் பாடியுள்ளார். பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தத்திற்கு ஊற்றுநிலையும் தொடக்கமாகவும் இவர் நூல் விளங்குகிறது. குழந்தை உணர்வினைக் கொட்டிக் கவி புனைவதில் கைதேர்ந்தவர். மதுரை மன்னன் வல்லபதேவனிடம் வைணவத்தை நிலைநாட்டிப் பொற்கிழி பெற்றவர். 'விட்ணு சித்தன்' என்றும், 'பட்டர் பிரான்' எனவும் அழைக்கப்படுகிறார்.

**மாணிக்கங் கட்டி வயிரம் இடைகட்டி**
**ஆணிப்பெண் ணாற்செய்த வண்ணச் சிறுதொட்டில்,**
**பேணி யுணக்குப் பிரமன் வீதந்தான்**
**மாணிக் குறளனே! தாலேலோ!**
**வைய மளந்தானே! தாலேலோ!**

என்ற திருத்தாலாட்டும், 'வாழாட்பட்டு..' எனும் பல்லாண்டும், 'ஆசைவாய்' எனும் பகுதியிலமையும் பத்துப் பாசுரங்களும் வைணவர் போற்றுவர். ஸ்ரீவல்லபதேவன் காலமாதலால் 9ஆம் நூற்றாண்டினர்.

**9. ஆண்டாள்:** பெரியாழ்வார் நந்தவனத்தில் பயிரிட்ட துளசிப் பாத்தியில் ஆடித்திங்கள் பூர நட்சத்திரத்தில் பூமகள் அமிச்சமாய்த் தோன்றியவர். இவரைப் பெரியாழ்வார் பெற்றெடுத்த பைங்கொடி என்றேத்துவர் வைணவர். கோதை என்பது பெயர். நாளும் பெருமாளுக்கு கட்டிய மாலையைத் தந்தைக்குத் ஓயாது சூடிக் கண்ணாடியில் கண்டு மகிழ்ந்து பின் கழற்றி வைத்துவிடுவார். ஒருநாள் இதனை அறிந்த பெரியாழ்வார் வேறு மாலை தொடுத்துச் சாத்து மெனக் கனவில் கூற, அங்ஙனமே செய்து கோதையையும் பெருமாளுக்கே திருமணம் செய்து

கொடுத்தார். ஆண்டவனையே ஆண்டவன் என்றமையால், 'ஆண்டாள்' என்றும், சூடிக் கொடுத்தார். ஆண்டவனையே ஆண்டவள் என்றமையால் 'ஆண்டாள்' என்றும் 'சூடிக்கொடுத்த நாச்சியார்' என்றும் கோதையை அழைக்கலாயினர்.

**படியன:** திருப்பாவை, முப்பது பாடல்களையுடயது, பாவைநோன்பு பற்றியது. மார்கழி திங்கள் வைகறையில் வைணவர்களால் பாடப்படுவது. நாச்சியார் திருமொழி: 10 பாடல்களையுடைய 14 திருமொழிகள். இதில் மாயனை மணப்பதாகக் கனவு கண்டு தோழிக்கு உரைக்கும் பகுதிகள் இன்பம் மிக்கவை. சுவையளிப்பவை. காலம், பெரியாழ்வார் காலமே.

'மார்கழி திங்கள்..' 'ஓங்கியுலகளந்த..' 'மாலே மணிவண்ணா..' 'சிற்றிஞ்சிறுகாலை..' போன்ற பாடல்கள் நெஞ்சம் நெகிழ்விப்பவை.

**வாரள மாயிரம் சூழவ லம்செய்து,**
**நாரண நம்பி நடக்கின்றா னென்றெதிர்,**
**பூரண பொற்குடம் வைத்துப் புறமெங்கும்**
**தோரணம் நாட்டக் கனாக்கண்டேன் தோழீநான்..'**

போன்ற இடங்கள் இதயந் தொடுவன.

**10. தொண்டரடிப் பொடியாழ்வார்:** சோணாட்டுத் திருமண்டங்குடியில், மார்கழித் திங்கள் கேட்டை நட்சத்திரத்தில் வனமாலை அமிச்சமாய் – சோழிய பிராமணர் மரபில் தோன்றியவர். இயற்பெயர் 'விப்ரநாராயணன்' திருவரங்கத்திலே திருமாலுக்கு மாலை சாத்தப் பூந்தோட்டம் அமைத்துக் கொண்டு புரிந்து வந்தார். ஆங்கு 'தேவதேவி' எனும் விலைமாதின் வயப்பட்டு, வழிபாட்டினை மறந்துப் பின் சிறைப்பட்டார். அரங்கன் தன் அடியானை விடுதலை செய்தார் தன் தவறுணர்ந்து – தன் பாவம் போக்க தொண்டர் அடிப்பொடியை தூயவரானார். அதுபற்றி இவர் தொண்டகர் அடிப்பாடி ஆழ்வார் ஆயினர். பாடியவை: 1.திருப்பள்ளியெழுச்சி (10பாடல்கள்) மாணிக்கவாசகரின் திருப்பள்ளியெழுச்சியே போல நயமும் நலனும் நிறைந்தது. 2.திருமாலை 45 பாடல்கள் உடையது. 'ஆடிப்பாடி அரங்காவோ என்றழைக்கும் தொண்டரடிப் பொடி' என்க குறிக்கிறார் குலசேகராழ்வார்.

**'பச்சைமா மலைபோல் மேனி, பவளவாய் கமலச் செங்கண்**
**அச்சுதா! அமரரேறே! ஆயர்தம் கொழுந்தே! என்னும்**
**இச்சுவை தவிர யான் போய் இந்திரலோக மாளும்,**
**அச்சுவை பெறினும வேண்டேன், அரங்கமா நகருளானே!'**

எனும் பாடல் எவருமறிந்தது. ‘ஊரிலேன் காணியில்லை..’ எனும் பாட்டும் குறிப்பிடத்தக்கது. குலசேகரர், திருமங்கையாழ்வார் காலத்தவர்.

**11. திருப்பாணாயாழ்வார்:** சோணாட்டு உறையூரில் துன்மதி யாண்டு கார்த்திகைத் திங்கள் ரோகிணி நட்சத்திரத்தில் ஸ்ரீவத்ஸம் எனும் திருமருவின் அமிச்சமாய், நெற்கழனியில் தோன்றியவர். பாண் குடியினரால் வளர்க்கப் பட்டமையால் இப்பெயர் பெற்றார். இழிகுலமாதலால் திருவரங்கக் கோயிலினுள் செல்ல இயலாது காவிரிக் கரையிலிருந்தே இசைபாடி எம்பெருமானை ஏத்துவாராயினர். ஒருநள் பெருமாளுக்கு நீர் முகந்து செல்ல வந்த அர்ச்சகர் எட்டச் செல்லுமாறு கூற கேளாது, பாடவே கற்களை எறிந்து காயப்படுத்தினார். இதனைக் காணச் சகியாத பெருமாள் தம் நெற்றியினின்று குருதி கொட்டினார். உலோக சாரங்கர் என்பாருடைய கனவில் தோன்றி அப் பக்தனைத் தோளில் சுமந்து வரப் பணித்தார். திருவரங்க நாதன் திருவுருகண்ட திருப்பாணாழ்வார் காதல் கொண்ட பாங்கிலே அமைந்த பனுவல் இது. ஆழமும் எளிமையும் அழகும் மிக்கது. இவரிதய உறுதி காட்டும் பாட்டு இதோ.

**கொண்டல் வண்ணகைக் கோவலனாய் வெண்ணெய்**
**உண்ட வாயன்என் னுள்ளம் கவர்ந்தானை,**
**அண்டர் கோன்அணி அரங்கன்என் அமுதினைக்**
**கண்ட கண்கள், மற்றொன்றினைக் காணவே**

காலம் 9ஆம் நூற்றாண்டு

**12. திருமங்கையாழ்வார்:** சோழப் பெருநாட்டில் திருமங்கை நட்டில் திருவாலித்திரு நகரிக்கு அருகிலுள்ள திருக்குறையலூரில் கள்ளர் மரபில் நளவருடம், கார்த்திகைத் திங்களில் வில்லின் அமிச்சமாய்த் தோன்றினார். நீலி எனும் படைத் தலைவனின் மகனென்பார். நீல நிறத்தினன் - நீலியன் மகன் ஆதலாலே நீலன் எனப்பட்டார். சோழ மன்னனின் தானைத் தலைவராகத் திகழ்ந்து பகைவரை வென்றார். ‘பரகாலன்’ எனும் பெயர் பெற்றார். ‘திருமங்கை நாட்டுக்கு மன்னராக்கினான் சோழ மன்னன் ஆகலின் ‘திருமங்கை மன்னன்’ ஆயினார். குமுதவல்லி என்பாளை மணந்து அவள் விழைந்தாங்கு வைணவ அடியார்க்குப் பணியாற்றினார். சோழனுக்குக் கட்ட வேண்டிய கப்பம் பொருளைக்கூட அடியார்கட்கே செலவிட்டார். அரசனால் சிறைப்பட்டு அரங்கனருளால் சிறை மீண்டார். திருமாலும் இலக்குமியும் வழிப் போக்கராக வந்த காலை, அவர்களிடம் கொள்ளையடித்து பொருள்களைக் (கால் விரலணியைக் கூடக் கடித்தெடுத்துத்) கட்டித் தூக்க முடியாமல் திண்டாடிப் பின் இறைவன் திருக்காட்சி கண்டு எட்டெழுத்து மந்திரமுணர்ந்தார். நற்கவிபாடும் நல்லாற்றல் பெற்றவர். பின் நாகை பௌத்த விகாரத்தை கொள்ளையிட்டுத் திருவரங்கத்தில் மூன்றாம் மதில் திருப்பணியை செய்தார். காலம் 9ஆம் நூற்றாண்டு.

**இயற்றியன:** பெரிய திருமொழி, திருக்குநற்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருஎழுகூற்றிருகை, சிறிய திருமடல், பெரிய திருமடல் என்பன. இவ்வாறையும் நம்மாழ்வாரின் நான்மறைக்கு ஆறங்கமாய் அமைத்து மகிழ்வர் வைணவர். இயற்கையழகும், அகப்பொருள் நலமும், தித்திக்கும் சித்திரக் கவி வளமும், சொல்லினிமையும் மிக்க இவர் பாடல்கள் உளமுருக்கும் ஒண்மையன.

**"குலந்தருஞ், செல்வந் தந்திடும், அடியார்**
**படுதுயர் ஆயின வெல்லாம்**
**நிலந்தரஞ் செய்யும், நீள்விசும் பருளும்**
**அருளொடு பெருநில மளிக்கும்**
**வலந்தரும், மற்றுந் தந்திடும் பெற்ற**
**தாயினும் ஆயின செய்யும்**
**நலந்தருஞ் சொல்லை நான்கண்டு கொண்டேன்**
**நாராய ணாவென்னும் நாமம்"**

என்ற பாசுரம் நாளும் மனனம் செய்ய வேண்டிய ஒன்று. 'வாடினேன்' எனும் பாடலும் சிறந்தது.

திருமாலை முழுமுதற் கடவுளாக வைத்தேத்தும் சமயம் வைணவம். திருமாலின் திருக்குணங்களில் ஆழ்ந்து மகிழ்ந்தமையான், வைணவ அடியார்கள் ஆழ்வார்கள் எனப்பட்டனர். ஆழ்வார்கள் பன்னிருவர். இதுபொதுவான கருத்து. சிலர் பதின்மர் என்றும் கருதுவர்: நாரணனைப் பாடாது நம்மாழ்வரைப் பாடியதால் மதுரகவியாழ்வரையும், பெண் ஆனதால் ஆண்டாளையும் நீக்கி, ஏனையோரையே இவர்கள் ஆழ்வாகள் என ஒப்புகின்றனர். பன்னிரு ஆழ்வார்களும் வைணவத் தலங்கட்குச் (108) சென்று பாடியன நாலாயிரம் பாடல்கள், இதனானே இப்பாடல் தொகுதி நாலாயிர திவ்வியப் பிரபந்தம் எனப் பெயர் பெற்றது. 'அருளியச் செயல்கள்' எனவும் பெறும்.

12ஆழ்வார்கள் பாடிய 24 நூல்கள் இதில் இடம் பெறுகின்றன. 4பெரும் பிரிவுகளையுடையது. 1.முதலாயிரம் திருப்பல்லாண்டு, பெரிய திருமொழி, திருப்பாவை, ஆண்டாள் திருமொழி, பெருமாள் திருமொழி, திருச்சந்த விருத்தம், திருமாலை, திருப்பள்ளியெழுச்சி, அமலனாதி பிரான், கண்ணிநுன் சிறுத்தாம்பு என்ற 10 உட்பிரிவுகளும். 2.பெரிய திருமொழி திருக்குறுந்தாண்டகம். திருநெடுந்தாண்டவம் எனும் 3 ஐயும். 3. இயற்பாவில் முதல், இரண்டாம் மூன்றாம் திருவந்தாதிகள், நான்முகன் திருவந்தாதி, திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவெழுகூற்றிருக்கை, சிறியதிருமடல் பெரிய திருமடல் ஆகிய 10ம். 4.திருவாய்மொழி உட்பகுதிகள் ஏதுமின்றி ஒன்றாகவும் (10,3,10,1ஸ்ரீ 24)அமைகின்றன.

## 2.5 காப்பியங்கள்

பொருளால் தொடர்ந்து வரும் செய்யுள் இலக்கியமே காப்பியம் ஆகும். இக்காப்பியம் பெருங்காப்பியம், சிறுகாப்பியம் எனும் இரு பிரிவுகளைக் கொண்டது. சோழர் காலத்தில் காப்பிய அமைப்பு வளர்ச்சி பெற்றது.

### பெருங்காப்பியம்

பெருங்காப்பிய இலக்கணம் குறித்துத் தண்டியலங்காரம் கூறுகிறது. வாழ்த்து, வணக்கம், வருபொருள் என்னும் மூன்றில் ஒன்று முன்னால் வரவேண்டும். அறம், பொருள்,இன்பம்,வீடு ஆகிய நான்பொருளும் அமைய வேண்டும். காப்பியத் தலைவன் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவனாய் இருத்தல் வேண்டும். மலை,கடல்,நாடு, நகர், பருவம், ஞாயிறு, திங்கள் ஆகியவற்றின் வருணனைகளும் திருமணம், முடிசூடல். பொழில், விளையாட்டு, புனல் விளையாட்டு, மக்கட்பேறு, ஊடுதல், கூடுதல் முதிய நிகழ்ச்சிகளும், போர்ச் செயல்களும், எண்வகைச் சுவைகளும், பாவங்களும், சருக்கம், பரிச்சேதம் என்னும் பிரிவுகளும் கொண்டதாக அமைதல் வேண்டும். இத்தகைய இலக்கணங்கள் வாய்ந்ததே பெருங்காப்பியம் ஆகும்.

### சிறுகாப்பியம்

அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய உறுதிப் பொருள்களுள் ஒன்றோ, பலவோ குறைந்து பெருங்காப்பியத்திற்குரிய ஏனைய இலக்கணங்களைப் பெற்று வருவது சிறுகாப்பியம் எனப்பெறும்.

### தமிழில் காப்பியம்

கி.பி.இரண்டாம் நூற்றாண்டில் தோன்றிய சிலப்பதிகாரமே தற்போது கிடைக்கும் தமிழ்க் காப்பியங்களுள் பழமையானது. இதனைத் தொடர்ந்து மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி முதலான காப்பியங்கள் இயற்றப் பெற்றன. இவை ஐந்தும் ஐம்பெருங்காப்பியங்கள் என்றழைக்கப் பெறுகின்றன. உதயணகுமாரகாவியம், நாககுமாரகாவியம், யசோதரகாவியம், சூளாமணி, நீலகேசி ஆகியன ஐஞ்சிறு காப்பியங்கள் எனப் பெயர்பெறும்.

## 2.6 கம்பராமாயணம்

இதிகாசங்கள் என்று இலக்கிய வரலாற்று ஆசிரியர்கள் சுட்டும் நூல்கள் இரண்டு. அவற்றுள் ஒன்று இராமாயணம், மற்றொன்று மகாபாரதம். திருமாலின் அவதாரமான இராமனின் வரலாற்றைப் பல புலவர்கள் பல மொழிகளில் பாடியுள்ளனர். வடமொழியில் வான்மீகி எழுதிய இராமாயணமும், தமிழில் கம்பர் எழுதிய இராமாயணமும் தலைசிறந்த நூல்களாகத்

திகழ்கின்றன. கம்பர் தாம் எழுதிய இராமாயணத்திற்கு இராமாவதாரம் என்று பெயரிட்டார். ‘தமிழுக்குக் கதி’ என்று கம்பரையும் திருவள்ளுவரையும் குறிப்பிடும் வழக்கம் தமிழில் உண்டு.

கம்பர் தம் நூலிற்கு மூலநூலாக வால்மீகியைக் குறிப்பிடுகின்றார். கம்ப இராமாயணம் பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என ஆறு காண்டங்களையும் 118 படலங்களையும் 10,500 விருத்தப்பாக்களையும் கொண்டுள்ளது. திருத்தக்கதேவர் விருத்தப்பாவைக் காப்பியத்திற்கு அறிமுகப்படுத்திய போதிலும் விருத்தப்பாவின் எல்லையைத் தொட்டவர் கம்பரே. எனவேதான் ‘விருத்தம் என்னும் ஒண்பாவிற்கு உயர் கம்பன்’ எனப் புகழப்படுகிறார்.

சோழநாட்டுத் திருவழுந்தூரில் வாழ்ந்த கம்பர் திருவெண்ணெய் நல்லூர் சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப்பெற்று இராமாயணம் படைத்தார். சடையப்ப வள்ளல் முதலாம் குலோத்துங்கன் காலத்தவர். (கி.பி.1070 – 1120) என்பதற்கு கல்வெட்டுச் சான்று உண்டு. எனவே கம்பரின் காலம் கி.பி.12ஆம் நூற்றாண்டு எனப் பலரும் கூறுவர். சோழன் குலோத்துங்கனின் மகள் அமராவதிக்கும் கம்பனின் மகன் அம்பிகாபதிக்கும் காதல் ஏற்பட்டதாகவும் அதனை மன்னன் தடுத்ததாகவும் இறுதியில் அம்பிகாபதி இறக்க நேரிட்டதாகவும் கூறுவர். அதனால் கம்பர் சோழநாட்டை விட்டுப் பாண்டிய நாட்டில் நாட்டரசன் கோட்டைக்குச் சென்று அங்குச் சிலகாலம் வாழ்ந்து பின்னர் காலமானார் என்று சொல்லப்படுகிறது.

## 2.7.மகாபாரதம்

மகாபாரதத்தின் அடிப்படைக் கதை குரு குலத்தவரால் ஆளப்பட்டு வந்த அத்தினாபுரத்தின் ஆட்சி உரிமை குறித்து பாண்டவர்களுக்கும், கௌரவர்களுக்கும் இடையே உண்டான பிணக்கு ஆகும். திருதராட்டிரன் மற்றும் பாண்டு ஆகிய சகோதரர்களின் வழிவந்தவர்களான கௌரவர்களுக்கும், பாண்டவர்களுக்கும் இடையிலேயே இப் பிணக்கு நிகழ்ந்தது. கௌரவர்களே இவர்களுள் மூத்த மரபினராக இருந்தாலும், கௌரவர்களில் மூத்தோனாகிய துரியோதனன், பாண்டவர்களில் மூத்தோனாகிய தருமனிலும் இளையவனாக இருந்தான். இதனால் துரியோதனன், தருமன் இருவருமே ஆட்சியுரிமையை வேண்டி நின்றனர். இப்பிணக்கு இறுதியில் குருச்சேத்திரப் போராக வெடித்தது. இதில் பாண்டவர்களுக்கு வெற்றி கிடைத்தது. இப்போர் உறவுமுறை, நட்பு போன்றவை தொடர்பான சிக்கலான நிலைமைகளை ஏற்படுத்தியது. மகாபாரதம் கர்ணனின் இறப்புடனும் தொடர்ந்த அவருடைய மரபின் முடிவுடனும், பாண்டவர்கள் சுவர்க்கம் செல்வதுடனும் நிறைவடைகிறது. அத்துடன் இதன் முடிவுடன் கலியுகம் தொடங்குகிறது.

## தமிழில் மகாபாரதம்

பாரதம் பாடிய பெருந்தேவனார் எட்டுத்தொகை நூல்கள் தொகுக்கப்பட்ட காலத்தில் பாரதத்தை தமிழ்ப்படுத்தினார். இவரின் காலமும் உறுதியாகத் தெரியவில்லை. இவர் தமிழ் மொழிப்படுத்திய பாரதமும் கிடைக்கவில்லை. பின்னர் தொண்டைமண்டலத்து திருமுனைப்பாடி நாட்டு சனியூரைச் சேர்ந்த வில்லிப்புத்தூரார் தனது புரவலரான வக்கபாகை வரபதியாட்கொண்டான் வேண்டிக்கொண்டதற்கு இணங்க பாரதத்தைப் பாடினார். வில்லிப்புத்தூரார் இயற்றிய பாரதத்தில் பத்துப் பருவங்களே (மொத்தப்பாடல்கள் 4350) இருக்கின்றன. மகாபாரதத்தின் பதினெட்டாம் நாள் போரின் இறுதியுடன் தருமன் முடி சூட்டுதல், பாண்டவர் அரசாட்சி என்று முடித்து விடுகிறார். 14ஆம் நூற்றாண்டில் வில்லிபுத்தூராரால் உருவாக்கப்பட்ட வில்லிபாரதமும் 18ஆம் நூற்றாண்டில் நல்லாப்பிள்ளையால் உருவாக்கப்பட்ட நல்லாப்பிள்ளை பாரதமும் மட்டுமே முழுமையாகக் கிடைத்த பிரதிகள்.

இதன் பின்னர் மகாபாரதத்தை வேறு சிலரும் உரைநடையில் மொழியாக்கம் செய்துள்ளனர். அவற்றுள் முழுமையானதாக திருத்தமிகு பதிப்பாகக் கருதப்படுவது, 1903 இலிருந்து இருபத்தைந்து ஆண்டு காலம், ம. வீ. இராமானுசச்சாரியார் தலைமையில் பல வடமொழி தமிழ் மொழி வித்வான்களால் மொழிபெயர்க்கப் பட்ட மகாபாரதப் (கும்பகோண) பதிப்பாகும். 9000 பக்கங்களைக் கொண்ட இந்நூல் 1930களிலும் 1950களிலும் 2008இலும் பதிப்பிக்கப் பட்டன. அதைத் தவிர குறிப்பிடத்தக்கவர் இராசாசி. அவருடையது "வியாசர் விருந்து" குறிப்பிடத் தகுந்தது. அ. லெ. நடராசன் "வியாசர் அருளிய மகாபாரதம்" என்ற பெயரில் நான்கு பாகங்களாக எழுதி வெளியிட்டுள்ளார்.

பத்திரிக்கையாளர் சோ "மகாபாரதம் பேசுகிறது" என்ற பெயரில் வியாச பாரதத்தை இரு பாகங்களாக எழுதியுள்ளார். இராமகிரு்'ண தபோவனத்தின் நிறுவனர் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் வியாசரைத் தழுவி எழுதிய மகாபாரதம் குறிப்பிடத்தகுந்தது. 2013ஆம் ஆண்டு வெளியான பத்தொன்பதாம் பதிப்பு வரை 2,35,000 பிரதிகள் அச்சிடப்பட்டுள்ளன.

ஜெயமோகன் மகாபாரதத்தை வெண்முரசு என்ற பெயரில் நாவல் வடிவில் எழுதிருக்கிறார். அவரது இணையதளத்தில் 2014 ஜனவரி 1 ஆம் தேதிமுதல் 2020 ஜூலை 16 வரை தொடராகப் பதிவேற்றப்பட்டது. மொத்தம் பத்து தொகுதிகளாக வெளியிடத் திட்டமிட்டு, 26 நாவல்களும் 25000 பக்கங்களும் அது விரிவடைந்து வெளியிடப்பட்டுள்ளது.

## 2.8.பெரியபுராணம்

அருண்மொழித்தேவர் என்னும் இயற்பெயர் கொண்ட சேக்கிழாரால் இயற்றப்பெற்ற திருத்தொண்டர் புராணம் என்னும் சைவ நூல் பெரியபுராணமாகும். கி.பி.9ஆம் நூற்றாண்டில் சுந்தரமூர்த்தி நாயனார் அறுபது நாயன்மார்களுக்கு வணக்கமாகத் திருத்தொண்டத் தொகை என்னும் நூலைப் பதினொரு பாடல்களில் பாடினார். கி.பி.11ஆம் நூற்றாண்டில் நம்பியாண்டார்

நம்பி அறுபது நாயன்மார்களுடன் சுந்தரார், அவர் தந்தை சடையனார், அவர் தாயார் இசைஞானியார் மூவரையும் சேர்த்து அறுபத்து மூவராக்கி அவர்களின் வாழ்க்கை குறிப்புகளை மட்டும் அமைத்துத் திருத்தொண்டர் திருவந்தாதி என்னும் சிறுநூலை 84 பாடல்களில் இயற்றினார். சேக்கிழார் அவ்விருவரின் பாடல்களில் உள்ள கருத்துக்களை மனத்தில் கொண்டு விரிவுபடுத்தித் தொகையடியார்கள் ஒன்பது பேரையும் சேர்த்துப் பெருங்காப்பியமாக 4286 பாடல்களில் பாடி முடித்தார்.

சோழ அரசன் குலோத்துங்கனிடம் அமைச்சராக இருந்த சேக்கிழார் பெரியபுராணத்திற்குக் காப்பியத் தலைவனாகச் சுந்தரரைப் படைத்துள்ளார். சுந்தரர், கைலாயத்திலிருந்து புறப்பட்டுத் தமிழ்நாட்டில் பிறந்து வாழ்ந்து மீண்டும் கைலாயம் சென்ற கதையைக் காப்பியமாக்கியுள்ளார். பெரியபுராணக் காப்பியத்தின் பகுதிகளுக்குப் பெயர் வைப்பதில் சுந்தரரது பாடல்களின் முதல் தொடர்களைச் சேக்கிழார் கையாண்டுள்ளார்.

தொண்டர் சீர் பரவுவார் என்ற சிறப்புப் பெயர் பெற்ற சேக்கிழார் திருஞானசம்பந்தரின் வாழ்க்கை வரலாற்றை 1256 பாடல்களில் பாடியுள்ளார். பெரியபுராணத்தில் காப்பியத் தலைவரான சுந்தரரைவிட ஞான சம்பந்தருக்கே அதிக பாடல்கள் பாடப் பெற்றிருப்பதால் ‘பிள்ளைப் பாதி புராணம் பாதி’ என்ற பெயர் பெரியபுராணத்திற்கு வழங்கலாயிற்று. பெரியபுராணம் இரண்டு காண்டங்களையும் பதின்மூன்று சருக்கங்களையும் 72 புராணங்களையும் 4286 பாடல்களையும் கொண்டுள்ள நூலாகத் திகழ்கிறது.

## தொகுப்புரை

- இறை உணர்வையும், பக்தி நெறியையும் தமிழர்கள் அறிந்திருந்தனர்
- இல்லற நெறியை அறிந்து கொள்ள பக்தி இலக்கியங்கள் துணைபுரிகின்றன
- நிலையாமை தத்துவங்களும் பக்தி இலக்கியங்களில் இடம்பெறுகின்றன.
- சமுதாய மாற்றத்திற்கான காரணம் பக்தி என்பதை அறிதல்.
- அறிவியல் நோக்கில் சைவ வைணவ சித்தாந்தங்கள் இருப்பதை அறிய முடிகிறது

## அருஞ்சொற்பொருள்

1. திங்கள் - சந்திரன்
2. பரிச்சேதம் - அத்தியாயம்
3. கொண்டல் - மேகம்
4. வெகுளி - சினம்
5. சிந்தை - எண்ணம்

## பயிற்சி வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. நாலாயிரத் திவ்விய பிரபந்தங்களை தொகுத்தவர்
   அ) நம்பியாண்டார் நம்பி ஆ) நாதமுனிகள் இ) சேக்கிழார் ஈ) நாயனார்
2. சேக்கிழாரின் இயற்பெயர் என்ன?
   அ) உத்தமசோழன் ஆ) அருண்மொழித்தேவர்
   இ) தொண்டர்சீர் பரவுவார் ஈ) நந்தனார்
3. முதல் திருவந்தாதியை பாடியவர்?
   அ) பேயாழ்வார் ஆ) பூதத்தாழ்வார் இ) பொய்கையாழ்வார் ஈ) நம்மாழ்வார்
4. சைவ சமயக் கருத்துக்களை முதன்முதலாக விளக்க எழுந்த முழுமுதல் நூல் எது?
   அ) திருமந்திரம் ஆ) பெரியபுராணம் இ) திருக்கோவை ஈ) திருப்பாவை
5. ‘தன்கடன் அடியேனையும் தாங்குதல் என்கடன் பணிசெய்து கிடப்பதே’ – என்ற கொள்கையுடையவர் யார்?
   அ) திருநாவுக்கரசர் ஆ) திருஞானசம்பந்தர் இ) சுந்தரர் ஈ) மாணிக்கவாசகர்

### விடைகள்

1. ஆ) நாதமுனிகள்
2. ஆ) அருண்மொழித்தேவர்
3. இ) பொய்கையாழ்வார்
4. அ) திருமந்திரம்
5. அ) திருநாவுக்கரசர்

### பயிற்சிகள்

1. நாயன்மார்களின் பக்தி சிறப்பை முன் வைத்து பட்டிமன்றம் நடத்திப் பார்க்க.

## குறுவினாக்கள்

1. நம்மாழ்வர் பற்றி விளக்குக.
2. ஆழ்வார்களின் தமிழ்ப்பணி குறித்து எழுதுக.
3. திருமந்திரம் பற்றி குறிப்பு வரைக.

## நெடுவினாக்கள்

1. காரைக்கால் அம்மையாரின் இறையுணர்வை அற்புதத்திருவந்தாதி வழி விளக்குக.
2. முதலாழ்வார்கள் பற்றி விளக்கி எழுதுக.
3. மூவர் தேவாரம் பற்றி விளக்குக.

**பார்வை நூல்கள்**


1. பக்தி இலக்கியம்,டாக்டர் ப.அருணாசலம்,தமிழ் புத்தகாலயம்,சென்னை, முதல் பதிப்பு- 1973.
2. தமிழ் இலக்கிய வரலாறு, மது.ச.விமலானந்தம், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, முதல்பதிப்பு-1987.
3. தமிழ் இலக்கிய வரலாறு, முனைவர் சிற்பி பாலசுப்ரமணியம் பாவை பப்ளிகே'ன்ஸ், சென்னை – 600 014 இரண்டாம் பதிப்பு – 2016,
4. பன்னிரு திருமுறை வரலாறு, வித்துவான் க.வெள்ளைவாரணன்,சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,சிதம்பரம், முதல் பதிப்பு- 1969,


## இணைய இணைப்புகள்

1. https://WWW.tamildigitallibrary.in.
2. https://WWW.gunathamizh.com
3. http://bharathi261991.blogspot.com

.

# அலகு – 3

## நோக்கம்

- சிற்றிலக்கியம் தோற்றம் பற்றி விளக்குதல்
- அக்கால அரசியல் சமூக நிலையைத் தெரிந்து கொள்ளுதல்
- இயற்கை வளங்களை அறிய வைத்தல்
- சைவ சித்தாந்தத்தின் உட்கருத்தை எடுத்துரைத்தல்
- சிற்றிலக்கியங்களின் வகைப்பாடுகளை அறிதல்

## இயலில் இடம்பெறுபவை

- சிற்றிலக்கியங்கள்
- சைவ தத்துவநூல்கள்
- உரையாசிரியர்கள்
- வைணவ உரைகள்

## 3.1. சிற்றிலக்கியங்கள்

12ஆம் நூற்றாண்டிற்குப் பின் தமிழகம் அன்னியர் ஆட்சியில் இருந்தது. அவர்கள் மொழியே செல்வாக்குப் பெற, பைந்தமிழ் புறக்கணிக்கப் பெற்றது. புலவர்கள் போற்றவாரற்று - திக்கற்று நின்றனர். வாழ்வே குலைந்து நிற்கும் போது. வளமார் காவியங்களோ, வகையான இலக்கியங்களோ தோன்ற முடியுமா? செந்தமிழ்ச் சிறப்பறியா - சிற்றின்பச் சிந்தை மிக்க சிற்றரசர்கள் செல்வர்கள் கை பார்த்து இருந்தனர் கவிஞர்கள். காலத்தன் கோரப்பிடியில் சிக்கித் தவித்த கவிஞர்கள், அவர்கள் உளம் மகிழவே சிற்றிலக்கியங்கள் பல செய்து வயிற்றுப் பாட்டைக் கவனித்தார்கள். தமிழன்னையை அணி செய்யத் தரமான இலக்கியம் யாத்த நிலைபோய். தனிப்பட்டோரைப் பாராட்டிப் பயன் பெறுதற்காகப் பிரபந்தங்கள் பல பாடினார். இது காலத்தின் கோலமே தவிர, கவிஞர்கள் குற்றமன்று.

பேரிலக்கியங்கள் அறம், பொருள், இன்பம், வீடு நான்கும் உணர்த்தும், இவற்றில் ஒன்றோ பலவோ குறைந்துவரின் அவை சிற்றிலக்கியங்களாம். பிற்றை நாளில் புற்றீசலே போன்று கிளைத்த இந்நூல்கள், 96 வகையாகக் கொண்டு, இவற்றிற்கேற்ப இலக்கணம் வகுத்தனர். பன்னிருபாட்டியல், வெண்பாப் பாட்டியல், நவநீதப் பாட்டியல், இலக்கண விளக்கப் பாட்டியல் சிதம்பரப் பாட்டியல், பிரபந்தத் தரட்டு போன்றன பிரபந்த இலக்கண விளக்கப் பாட்டியல், நூல்களாம். பிரபந்தம் திரட்டு போன்றன பிரபந்த இலக்கணம் இயம்பும் நூல்களாக பிரபந்தம் என்றால் நன்கு கட்டப்பட்டது - நூல் எனப்படும். எனவேதான் இதனைச் சிற்றிலக்கியங்கள் என்கிறோம்.

பிற்காலத்தில் பல சிறு நூல்கள் எழுந்தாலும், அவையாவும் சங்க இலக்கிய இலக்கணங்களில் ஒட்டு -உறவு கொண்டே இருக்கக் காணலாம். தொல்காப்பிய வனப்பு எட்டனுள் 'விருந்து' (விருந்தே தானும் புதுவது யாப்பின் மேற்றே) வகையில் அடங்கி நிற்கக் காணலாம்.

இச்சிற்றிலக்கியங்களில் செந்தமிழ் நலம் அவ்வளவாக அமையாவிடினும், தமிழகம் பற்றிய அக்கால அரிய செய்திகள் பல தெரிய முடிகிறது. இடைக்கால பிற்கால வரலாற்றுக் கூறுகளும் விளக்குகின்றன. அக்காலக் கவிதைப் போக்கும் அறிய வருகிறது. ஆதலின் அவற்றில் சிறந்தன சிலவற்றைப் பார்ப்போம்.

## 1.அந்தாதி

அந்தத்தை ஆதியாக வைத்துப் பாடுவது. முன் பாடலின் ஈற்றில் உள்ள அடியோ சீரோ, அசையோ. எழுத்தோ, அடுத்த செய்யுளின் முதலாக அமைத்துப் பாடுவது. இறுதிப் பாடலின் முடிவும் முதற் பாட்டின் தொடக்கமும் மண்டலித்து வர, மாலை போலத் தொடுத்து முடிப்பது அந்தாரியாம். இம்முறையால் மனப்பாடம் செய்யவும், பாடவும், நினைவில் வைத்துக் கொள்ளவும் முடிகிறது தொல்காப்பியர் கூறும் ' இயல்பு' வகையில் அடங்கும். 'அந்தமும் முதலாக தொடுப்ப தந்தாதி' எனக்காரிகை, இலக்கணம் கூறுகிறது. இது வெண்பாவிலேனும் கட்டளைக் கலித்துறையாலேனும் பாடப்பெறும். 'வெண்பாக் கலித்துறை வேண்டிய பொருளிற் பண்பாய் உரைப்பந்தாதித் தொகையே' - பன்னிரு பாட்டியல், அந்தாதி, கலம்பகத்தின் ஓர் உறுப்பாக வருதல் குறிப்பிடத்தக்கது.

இவ்வந்தாதி முறையும் போக்கும், சங்க இலக்கயிம், தேவார திருவாசக திவ்வியப் பிரபந்தங்களில் அமையக் காணலாம். ஆயினும் இப்பாங்கினைப் பெருநிலையில் உருவாக்கி, இலக்கியமாகப் படைத்தது. பிற்காலத்தேதான். கடவுள், அகப்பொருள், புறப்பொருள் பற்றியனவாக இவ்வந்தாதிகள் இருக்கின்றன. அந்தாதி பாடும் திறன் அனைவர்க்கும் ஆவதன்றுளூ ஒரு சிலரே இத்திறத்தில் ஏற்ற முற்றுள்ளனர். அவ்வகையில் ஒட்டக்கூத்தர் 'அந்தாதிப் புலவனாக' அமைகின்றான்.

திருவந்தாதி (திருமழிசையாழ்வர்) திருவருணை அந்தாதி (எல்லப்ப நாவலர்) திருவரங்கந்தந்தாதி (பிள்ளைப்பெருமாளனயங்கார்) அற்புதத் திருவந்தாதி (காரைக்கால் அம்மையார்) பொன்வண்ணத்தந்தாதி (சேரமான் பெருமாள்) திருத்தொண்டர் திருவந்தாதி (நம்பியாண்டார் நம்பிகள்) சடகோபரந்தாதி (கம்பர்) கயிலை பாதி களத்தி பாதி யந்தாதி (நக்கீரர்) போன்றன அந்தாதிகளில் குறிப்பிடத்தக்கவை. மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை மட்டும் 8 அந்தாதி பாடியுள்ளார். இராசைக் கவிஞர் திருக்குறள் அந்தாதி அண்மையது. அந்தாதி இலக்கியம் வேற்று மொழயில் அவ்வளவாக இல்லை எனப்படுகிறது. மடக்கு, திரிபு, சொற்றிறம், பொருள்வளம் அமைந்தது. அந்தாதி இலக்கியம் அந்தமில் பேரின்பம் பயக்கிறது.

**‘முப்பதுட னெடுத்து மூங்கில் இலைமேலே**
**மூங்கில் இலைமேலே தூங்கும் பனிநீரே**
**தூங்கும் பனிநீரே வாங்குங் கதிரோனே**
**வாங்கும் கதிரோனை’**

எனும் ஏற்றப் பாட்டு, அந்தாதிக்கு ஏற்ற சான்றெனலாம்.

## 2.தூது

தலைவன் தலைவியர்கள் விரகத்தால் வேதனையுற்ற ஞான்று, ஒருவர், மற்றொருவருக்குத் தன் துன்பத்தைத் தெரிவிக்குமாறு உயர்திணைப் பொருள்களையேனும், அஃறிணைப் பொருள்களையேனும் தூது விடுப்பதாகப் பாடுவதாகும். தூது என்றவுடன் நமக்கு நினைவுக்கு வருவது. ‘நாராய்! நாராய்! செங்கால் நாராய்..’ என்ற சத்திமுற்றப் புலவர் பாடலே!

தூதுவிடுவதைப் பெருளாக கொண்ட செய்யுட்களே பல சங்க இலக்கியத்தில் ‘காமம் மிக்க கழிபடர் கிளவி’என்ற துறையில் வருகின்றன. இருக்கு வேதத்தில் சரமா எனும் நாய் தூது விடப்படுகிறது. குணமாலை, சீவகனிடத்தில் கிளியையும் (சிந்தாமணி) உதயணன். வாசவதத்தையிடம் மானையும் (பெருங்கதை) நளன் அன்னத்தையும் (நளவெண்பா) அங்கதன் அனுமன் தூதுக்கள் (இராமாயணம்) கண்ணன் தூது (பாரதம்) ஆகியன பெருங்காப்பியத்தில் பயின்று வருவதைப் பார்க்கலாம். தேவார, திவ்வியபிரபந்தங்களிலும் தூதுக்கள் சில தோன்றக் காணாலாம். குறளில் தூது இலக்கணம் இயம்பப்பட்டுள்ளது. இங்ஙனம் தூது முறை பண்டுதொட்டு அமைய தலைவன் தலைவியரிடையே அமையும் தூதினையே தலையாய் பொருளாகக் கொண்டு விரித்துக் கூறுவது தூதுப் பிரபந்தமாகும்.

இது கலிவெண்பாவால் இயற்றப்பெறும். ‘பயில்தரும் கலிவெண்பாவினாலே உயர்திணைப் பொருளையும் அஃறிணைப் பொருளையும் சந்தியின் விடுத்தல் முந்துற தூதென’ இலக்கண விளக்கம் இயம்புகிறது. தூது விடப்படும் பொருள்களின் பெயர்களை ஒட்டிய இவ்விலக்கியம் பெயர் பெறும். ‘இயம்பு கின்ற காலத்து, எகின மயில் கிள்ளை பயம்பெறுமேகம், பூவை, பாங்கி - நயத்தகு குயில், பேதை நெஞ்சத் தென்றல் பிரமீரம் ஈரைந்துமே, தூதுரைத்த வாங்குந் தொடை’ எனத் தூது செல்லற்குரியவை இன்னவை என இரத்தினச் சுருக்கம் எடுத்தோதுகின்றது. இப்பத்தும் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் ‘தசவிடு தூதில்’ அமைந்துள்ளன.

விதிக்கடங்கிய இப்பத்துமே யன்றி, அவ்வாக்கத்திற்கும் இடத்திற்கும் ஏற்ப வேறு பொருள்களைத் தூது விட்டதாக அமையும் நூல்கள் பல. பணம், துகிழ், சவ்வாது, நெல், விறலி, தமிழ், வசனம், புகையிலை, பழையது, பொன், கழுதை, காக்கை, ரயில், ராக்கெட் ஆகிய தூதாக விடுக்கப்பட்டுள்ளன. இராசகோபாலாசாரியாருக்கு இந்தித் திணிப்பை எதிர்த்து வெள்ளை வாரணனார் விடுத்த தூது 'காக்கை விடு தூதாகும்' பிரபந்தங்களில் தூது மிகவும் பிற்காலத்து இன்றை நாள் எல்லைவரை வளர்ந்த சிறப்பினது. கலம்பகம் அந்தாதிகளில் இ∴து ஓர் உறுப்பாக வருதல் கவனிக்கத் தக்கது. தூதுக்களில் தலைசிறந்தது. தமிழ்விடு தூதாகும்.

தூதிலக்கியம் இந்தியமொழி யனைத்திலும் உள்ளது. கோவை, உலா போன்றவற்றில் நூலுக்கு நூல் செய்தி மாறுபடுமேயன்றி, அமைப்பில், மாற்றமிராது. ஆதலால் தூதிலோ, தூதுப் பொருள்களுக்கேற்ப செய்தியும் அமையும், மாறும், ஆதலின் ஒவ்வொரு தூது நூலும், ஒவ்வொருவிதம் புதுமை பொலிய, தனிச்சிறப்பும் தனித்துவமும் பெற்றொளிரும் வடமொழியில் 'தூது காவியம்' அல்லது 'சந்தேசம்' என்பர். காளிதாசரின் மேக சந்தேசம் சிறந்தது. எல்லாத் தூதுகளும் தம் செய்தியைச் சென்று செய்யுமாறு கேட்டமைய, செப்பியதோடமையாது அவர் கருத்துணர்ந்து மீண்டு வந்து மாற்றம் கூறுமாறு அமையும் நூல்களும் உள. நாவலர் சோமசுந்தர பாரதியின் 'மாரிவயில்' புதுமைமிக்க புத்திலக்கியமாகும்.

**'பஞ்சிபாடா நூலே, பலர் நெருடாப் பாவே கீண்**
**டெஞ்சிமுக் கேறா, வியற்கலையே - விஞ்சு நிறம்**
**தோயாத செந்தமிழே, சொல்லே ருழவரகம்**
**தீயாது சொல்விளையுஞ் செய்யுளே'** (தமிழ்விடுதூது)

தமிழ் தூது போகத் தக்கது, ஏனையவை ஏற்றவையல்ல எனக் காரணம் காட்டும் தமிழ்விடுதூது பகுதி தனிச் சுவையது.

### 3.உலா

பெருங்காப்பியங்களில் பாட்டுடைத் தலைவர் பவனி வருதல் சுருக்கமாக குறிக்கப் பெறும். அதனை மட்டுமே உயிர்நாடியாகக் கொண்டு, தெய்வமே உலா வருவதும், அவ்விழாக் கண்டு ஓகை கொண்ட பலதிறப் பெண்டிர் காமுற்றதாகக் கலிவெண்பாவால் பாடுவதும் உலாவாகும். இதனை 'உலாப்புறம்' என்றும் ஓதுவர். 'ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப' என்ற தொல்காப்பிய சூத்திரமே இதற்கு அடிப்படை, இவ்வடிப்படை காப்பியங்களில் ஒரு கூறாகி பிற்றை நாளில் தனி இலக்கியமாகவே உருவெடுத்தது. பாட்டுடைத் தலைவன் பவனியே பெரிதும் சிறப்பிக்கப்படுவதால் 'உலா' என்றும் பெயர் பெற்றது. இதில் உலாத் தலைவனது குலம், குடிப்பிறப்பு, மரபு, அழகு, அறிவு, ஆண்மை, அன்பு ஆகியன கூறப்பெற்று இது முற்பகுதி, இனி பிற்பகுதியில் அவனைக் கண்ட பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை,

பேரிளம் பெண் என்ற ஏழு வகைப் பருவ (பொது) மகளிர் மால் கொள் மாண்பு முறையிலே நிரல் பட நவிலப்படும். இப்பருவ பெண்டிரின் இயல்பு, எழில், உள்ளக்கிடக்கைகள், உள்ளுணர்வுகளை அப்படியே தெள்ளிதின் உரைக்கும் அரிய திறம் வியந்து செயல் மறந்து பாராட்டற்பாலது. இதில் புலவர் திறம் பளிச்சிடும் பெதும்பை பாடுவதாகும். இதனாலேயே 'பேசுமூலாவிற் பெதும்பை புலி' எனப் பகரப்படுகிறது.

'ஆதி உலா' 'தெய்வீக உலா' எனச் சிறப்பிக்கப் பெறும் சேரமான் பெருமாள் நாயனார் செய்த 'திருக்கைலாய ஞான உலா'வே முதல் உலாவாகும். உலாப் பாடுவதில் வல்லவர் ஒட்டக் கூத்தர். இவரது 'மூவருலா' ஏற்றம் சான்றது விக்கிரமன், குலொத்துங்கள், இராசராசன் ஆகிய மூன்று சோழர்கள் மேல் அமைவது, நம்பியாண்டார் நம்பிகளின் 'ஆளுடைப் பிள்ளையார் திருவுலா மாலை' 'இரட்டைப் புலவர்களின் ஏகம்பநாதருலா' அந்தக் கவி வீரராகவ முதலியாரின் 'திருவாரூர் உலா' திருகழுக் குன்றத்துலா திரிகூடராசப்பகவிராயரின் 'திருக்குற்றால நாதர் உலா' தத்துவராயரின் 'சொக்கநாார்ரலா' திருப்பூவணநாதருலா' திருக்காளத்தி நாதருலா' தமிழன் உலா' காமராசர்உலா' போன்றன உலாக்களில் சில.

கடவுள், அரசர் , வள்ள்ல், தலைவர் ஆகியோர் மீது பாடி வந்துள்ளனர். ஒரு நாளில் ஓர் ஊாதியில் ஒரு தலைவன் வர ஏழு பருவப் பெண்கள் இதயம் நெகிழ்வது இலக்கணமாக இருக்க, ஒரு தலைவன் ஏழு நாட்களில் ஏழுவித ஊர்திகளில் வர, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பருவ மகளிர் காமுறுவதாகக் கட்டுரைக்கும் கனிவினை மதுரைச் சொக்கநாதருலாவில் காணலாம்.

'கவரு மணங்களுடன்..' எனும் மூவருலாப் பகுதி ஏழு பருவ பெண்டிர்கள் காமுற்று நின்று கனிவதை எடுத்தோதுகின்றது. பேதைப் பருவத்தாள் கண்களை இந்தப் புலவர்கள் எடுத்தோதும் அழகும் திறமும் தான் என்னே! அட்டதிக்கார் பெண்மை…' என்ற பகுதியிலே பேதைப் பருவ பெண்ணை, பேதை மிக ஓதும் திறத்தை திருப்பூவணநாதர் உலாவில் காணலாம். மங்கை ஒரு திதி பந்தாடும் பாங்கினைத் திரிகூடராசப்பகிவராயர் திருக்குற்றாலநாதருலாவில் (313-22) திறம்படச் சித்தரித்துள்ளார்.

## 4.கோவை

உரு, திரு, பருவம், குலம், குணம் ஆகியன ஒத்த தலைவனும் தலைவியும் தெய்வ அருளால் தாமே எதிர்பட்டு, களவு நிகழ்த்திப் பின் கற்பு நிலையின் இல்லறம் நிகழ்த்தும் இனிய நிகழ்ச்சிகளைக் கூறுவது. கோவையாகும். அகப்பொருட் செய்திகளை அடிப்படையாகக் கொண்டமையால் (அறநெறியில் கோவையினின்று வேறுபடுத்தவும் 'அகப்பொருட் கோவை'

என்றும், ஐந்திணை நிகழ்ச்சிகளை நிரல் படுத்தலின் ‘ஐந்திணைக்கோவை’ எனவும் அழைப்பர். அகத்துறைக் கூறுகளைக் கோவைப்படுத்திக் கூறுவதால் இப்பெயர் பெற்றது.

இக்கோவை, கட்டளைக் கலித்துறையில் 400 பாடல்களில் பாடுவதாம். ‘ஆய்ந்த கலித்துறையான் நானூறு’ (வச்சணந்தி மாலை) கோவையில், கைக் கிளை, களவு, வரைவு, கற்பு எனும் நான்கு பெரும் பிரிவுகளும் கைக்கிளை முதலிய 33 கிளவிகளும் ஒவ்வொரு கிளவியில் பல துறைகளும் அமையும், இவ்விலக்கியம் பாட்டுடைத் தலைவன், கிளவித் தலைவன் என இரு தலைவர்களைக் கொண்டது. கடவுள், அரசர், வள்ளல், ஆகியோர் பாட்டுடைத் தலைவர்களாவர். இறைவனைத் திருக்கோவையும், வள்ளலைத் ‘தஞ்சைவாணன்’ கோவையுடம் தலைவர்களாகக் கொண்டவை. பாட்டுடைத் தலைவனைப் பெறாத ஒரே ஒரு கோவை ‘அம்பிகாபதிக் கோவை’ யாகும். வெறும் காதல் துறைகளை மட்டும் விளக்கிச் சொல்கிறது.

ஒரு துறைக் கோவை, பலதுறைக்கோவை, என இருவகையது இச்சிற்றிலக்கியம், அமிர்த கவிராயர் நாணிக்கண் புதைத்தல் எனும் ஒரு துறையை யொட்டியே 400 பாடல்கள் பாடியுள்ளார். பல்துறைகள் அமையப் பாடியன: பொய்யா மொழிப் புலவரின் தஞ்சைவாணன் கோவை திருநெல்வேலி நாட்டுத் தஞ்சாக்கூர் வர்ணனைப் பற்றியது. நாற்கவிராச நம்பியின் அகப்பொருளுக்கு இலக்கியமாக அமைவது. பாண்டிக் கோவை, திருவெங்கைக் கோவை, கோடீச்சுரக் கோவை, திருவாரூர்க் கோவை போன்றனவும் உள. மகாவித்துவான் மீனாட்சிச் சுந்தரம் பிள்ளை சீர்காழிக் கோவை, திருவாவடுதுறைக் கோவை, குளத்தூர் கோவை போன்றன இயற்றியுள்ளார். கோவை பாடுவதில் திறம் படைத்தவர் ஒட்டக்கூத்தர்ளூ குலோத்துங்கன் கோவை, நாலாயிரக்கோவை இவர் பாடியன. ஆயினும் காலத்தால் முந்தியது. கவித்துவத்தால் முதன்மையது. மாணிக்கவாசகரின் திருக்கோவையார் திருச்சிற்றம்பலக்கோவையார் எனவும் வழங்கும். இந்நூற்கு ‘ஆர்’ எனும் சிறப்பு விகுதி சேர்ந்துள்ளமையால் இதன் தகவும் தனிச் சிறப்பும் விளங்கும்.

கோவை பாடுவது அவ்வளவு எளிதன்றுளூ ஏனை இலக்கியங்கள் பாடிப்புலமைத் தழும்பேறிய பெரும்புலவர்க்கே இயன்ற ஒன்று. இது கருதியே ‘யாவையும் பாடிக் கோவை பாடு’ எனும் வழக்குளது. இறைவனுக்கு உகந்த ஒன்றாக இவ்விலக்கிய வகையுள்ளது. ‘பாவை பாடிய வாயால் ஒரு கோவை பாடுக’ என இறைவனே வேண்டினர் என்றால் இதன் ஏற்றத்தை என்னென்பது? அன்றியும் சங்க காலத்திற்குப் பின் சால்புடைய அகப்பொருள் இலக்கியமாக இலங்குவன இக்கோவை நூல்களே. ஆதலின் இதனைச் சங்க இலக்கிய வாயில் எனலாம்.‘புரங்கடந்தானடி..’ ‘சிறைவான் புனறில்லை..’ ‘யாழுமெழுதி..’ ‘தெள்ளம் புனற் கங்கை..’

திருவளர் தாமரை..' (திருக்கோவையார்) 'புயலே சுமந்து பிறையே அணிந்து..' 'அளகம் திருந்தி மதிநுதல் நீவி..' (தஞ்சை வாணன் கோவை) போன்றன சிறந்த பாடல்கள்.

## 5.கலம்பகம்

பலவகை மலர்களால் தொடுக்கப்பெறும் பூமாலை போன்று. பல்வகைப் பாக்களால் தொடுக்கப் பெறும் பூமாலையாகும். கலம்பு அகம் என விரியும், கலப்பு என்பது மெலித்தல் விகாரம் கலம்பு என நின்றது. கலம்பக உறுப்பாக அமையும் துறை பலவும் கலத்தலைத் தன்னகத்தே கொண்ட நூல் எனப் பொருள்படும். கலத்தல் என்பதனையே யாப்பிலக்கண நூலிற் காணப்பெறும் பாவும் பாவினமுமாகிய செய்யுள் வகைகளும், அக-புறபொருள் கருத்துக்களும் இயைந்து ஏதுப் பெயராகவும் இயம்புவர். கலம்பகம்ஞ கலம் பன்னிரண்டு (மரக்கால்) எனப் பொருள்படும். பகம்-பாதி கலத்தில் பாதி ஆறு அல்லது கடவுளது ஆறுகுணங்களைத் குறிக்கும். ஆகக் குறிப்பாய் 12,6 என்னுந் தொகையை மாத்திரம் உணர்த்தி உவமத் தொகையாப்பு புணர்ந்து 18 உறுப்புகளுடைய பிரபந்தத்திற்குப் பெயராய் நின்றது - அகப்பொருள் கலத் தலையுடையது எனவும் இயம்புவர். நுதலிய பொருளானும் தன்மையாலும் பெயர் பெற்றது என்றறிக.

புயம், தவம், வண்டு, அம்மானை, ஊசல், பாண், மதங்கு, கைக்கிளை, சிந்து, களி, மறம், காலம், தழை, இரங்கல், சம்பிரதம், கார், தூது எனும் பதினெட்டு கலம்பகத்தின் தலையாய உறுப்புகள். பிச்சியார் போன்ற பிற உறுப்புகளும் வரலாம்ஞ ஆனால் இன்றியமையாதனவாக எண்ணப்படா, ஆசிரியப்பா, கலிப்பா போன்ற பாவினங்களும் இயந்து வர இயற்றப்படுவது இக்கலம்பக இலக்கியம் இங்ஙனம் உறுப்பும் பாவும் மிடைந்து மண்டலித்து அந்தாதித் தொடை அமையப் பாடுவது கலம்பகம்.

தேவர்க்கு 100, முனிவர்க்கு 95, அரசர்க்கு90, அமைச்சர்க்கு70, வணிகர்க்கு50, வேளாளர்க்கு 30 என்ற முறையில் செய்யுட்கள் அமைய வேண்டுமென முன்னோர் செப்பினர். இப்போது இவ்வரையறை இல்லைஞ 100 செய்யுட்களில் அமைவதாகவே உள்ளது. இக் கலம்பகம் 'விருந்தே தானும் புகுவது கிளந்த யாப்பின மேற்றே' எனும் தொல் சூத்திரத்தில் அடங்கும். இச்சிற்றிலக்கிய வகை 9ஆம் நூற்றாண்லிருந்து எழுதப்பட்டது.

இப்போதுள்ள கலம்பகங்களுள் பல தெய்வம் பற்றியனஞ சில அடியார்கள் மீது பாடப்பட்டவைஞ அரசன் மேல் அமைவன ஒரு சிலவே. 'கலம்பகத்திற்கு இரட்டையர்கள்' என்பது கொண்டு இரட்டைப் புலவர்கள் ஏற்றம் தெரியலாம். ஆயினும் காலத்தால் - சிறப்பால் முதன்மை பெற்றொளிர்வது நந்திக் கலம்பகமே! இதனையொட்டி, தில்லைக் கலம்பகம், திருவாமாத்தூர்க் கலம்பகம், திருவருணைக் கலம்பகம், கச்சிக் கலம்பகம், திருக்காவலூர் கலம்பகம் போன்றன கலம்பங்கள் தோன்றலாயின.

நந்திக் கலம்பகம் மூன்றாம் நந்திவர்மனை நிலைக்களமாகக் கொண்டு எழுந்த நூல். அவன்மேல் அறம் வைத்துப்பாடப் பெற்ற இதனை, எரியுபந்தர் மேலிருந்து கேட்டு இன்னுயிர் துறந்ததாகக் கூறப்படுகிறது. 'கலம்பகம் கொண்டு காயம் விட்ட தெள்ளாற்றை நந்தி' நந்திக் கலம்பகத்தால் மாண்ட கரை நாடறியும் என்ற செய்யுளடி சான்றாகும்.

'அம்புலியூர் என்னும்...' (தில்லை கலம்பகம்) 'இருங்குங்குமத்தேன்..' (திருவரங்கக் கலம்பகம்) 'ஒன்றேயுடம்பங் கிரண்டே..' 'மற்றொன்றினை யென்..' (மதுரைக்கலம்பகம்) 'பேச வந்த தூது..' 'வாசலுக்கிடும் பாடல்..' (திருவரங்கக் கலம்பகம்) 'மங்கையர் கண்..' (99) 'வானுறு மதியை..' (நந்திக் கலம்பகம்) போன்றன அரிய சுவையின.

### 6.பரணி

தரணியில் வீரம் நிகழ்த்தி வெற்றி பெறும் வீரனைப் பாடுவது பரணியாகும். வீரத்தை வகைப்படுத்தும் புறப்பொருள் நூல்கள் பலளூ புறம், பதிற்றுப்பத்து போன்ற முற்காலத்தன. பிற்காலத்தும் புறப்பொருள் நுதலிய பனுவல்கள் பரணி இலக்கியங்களே! புறப்பொருள்களில் போர் நிகழ்ச்சிகளையே நிலைபெறக் கொண்டவை எனலாம்.

1.ஆனை ஆயிரம் அரிமடை வென்ற மாணவனுக்கு வகுப்பது பரணி' என்றபடி போரில் ஆயிரம் யானைகளைக் கொன்ற வீரன் மேற் பாடுவது பரணி எனப்படுகிறது. 2. போர் நடைபெறுங்காலை பரண்மீதிருந்து பாடப் பெறுதலின் இப்பெயர் வந்தது தென்பர். 3.பரணி நட்சத்திர நாளில் தலைவன் வெற்றி பெற, அப்போரில் இறந்தாரின் உறுப்புகளைக் கொண்டு கூழ் சமைத்துக் காளிக்குப் படைத்துப் பேய்கள் உண்டு வெற்றி பெற்றோனை வாழ்த்தும், இது பற்றியும் இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம். 4. பரணி - யானை பிறந்த நாள். வெற்றிதரும் கொற்றவைக்கு ஏற்ற நாள். காளிக்கும் காலனுக்கும் உகந்தநாள். அந்நாளில் பிறந்தவன் பெருவீரனாக பிறங்குவான். 'பரணி பிறந்தான் தரணி யாள்வான்' என்பது கரத்து, பரணி வெற்றிக்குரிய நாள். அதுபற்றிய நூல் பரணியாகலாம்.

பரணி இலக்கியத்திற்குத் தொல்காப்பிய புறத்திணை இயலில் அமையும் வாள் மங்கலம், களவேள்வி போன்றன அடிப்படையாகலாம். அவற்றின் விரிவே இவ்வகை இலக்கியம் எனலாம். முதலில் வீர மன்னர் பற்றிய பரணி, பின்னர் ஞானாசிரியர்கள் மேலும், கடவுள் மீதும் அமைவதாயிற்று.

கடவுள் வாழ்த்து, கடைத்திறப்பு, காடு பாடியது கோவில் பாடியது, தேவியைப் பாடியது, பேய்களைப் பாடியது, இந்திரசாலம், இராசபாரம்பரியம், பேய்முறைப்பாடு, அவதாரம், காளிக்குக்

கூளி கூறியது. போர் பாடியது. களம் பாடியது என 13உறுப்புகளைக் கொண்டது பரணி. கலித்தாழிசைகளால் பாடப்பெற்றது.

‘பரணிக்கோர் செயங்கொண்டர்’ என்பது கொண்டு இவர் திறமறியாலாம். ஓசை நயமும் கற்பனை அழகும், சொல் வளமும், நலமும், சந்த இனிமையும் ஒருங்கே அமைவது கலிங்கத்துப் பரணி, கடைத்திறப்பு, காதற்சுவையும், களம் பாடியது, வீரச் சுவையும், பேய்முறைபாடு இந்திரசாலப் பகுதிகள் நகைச்சுவையும் நிரம்பியவை. கிடைக்கும் நூல்களில் காலத்தால் முந்தியது. கலிங்கத்துப்பரணி. முதற் குலோத்துங்கன் படைத் தலைவன் கருணாகரத் தொண்டைமான் கலிங்க வேந்தன் அனந்தபதுமன் மேல் படையெடுத்துச் சென்று வெற்றி நிகழ்த்திய வீரத்தை விதந்தோதுவது. செயங்கொண்டார் செய்தது.

அடுத்த சிறப்பினது ஒட்டக்கூத்தரின் தக்காயகப் பரணி. தக்கனுடைய யாகத்தை வீரபத்திர தேவர் அழித்த வெற்றி பாடுவது. இரண்டாம் இராசராசனை வாழ்த்தி அமைவது. இதுவன்றி தத்துவராயரின் அஞ்ஞவதைப் பரணியும், மோகவதைப் பரணியும், வைத்தியநாத தேசிகரின் பாசவதைப் பரணியும் பண்புகளை உருவகப்படத்தும் பாங்கின. தேவர்களைத் தலைவராகக் கொண்ட இரணியவதைப் பரணி, கஞ்சவதைப்பரணி, திருச்செந்தூர் பரணி போன்ற பல பரணி வகைகளும் உள. கண்முன் காணும் காட்சி நிலையில் உள்ள கள நிகழ்ச்சிகள் பற்றிய பரணிகள் பலவாக, கட்புலனுக்கு எட்டாத கருத்தளவில் உள்ள ஆன்மீகப் பரணியுமாகும். திராவிடத்துப் பரணி 1961 இல் இராகை கவிஞர் பாயது புதுமையான படைப்பாகும்.

‘வருவார் கொழுநர்..’ ‘செக்கச் சிவந்த..’ ‘எடுமெடு மெடுமென..’ ‘விளைகனல் விழிகளின்..’ ‘தரைமகளும்..’ ‘பூவிரி மதுகர..’ ‘கலக்கமற்ற வீரர்..’ (கலிங்கத்துப்பரணி) ‘அலகொன்று வருகங்கை…’ தக்கயாகப் பரணி போன்றன நயம் மிக்கவை.

## 7.பிள்ளைத் தமிழ்

‘பிள்ளைக்கவி’ ‘பிள்ளைப்பாட்டு’ எனவும் இயம்பப் பெறும். பாட்டுடைத் தலைவரையோ, தலைவியையோ குழந்தையாகப் பாவித்து, நற்றாயோ, செவிலித்தாயோ காப்பு முதலிய பத்து பருவங்கட்குரிய செயல்களைச் சிறப்பித்துக் கூறுவதாகப் புலவர் பெருமக்களால் பாடப்பெறுவது. கடவுள், ஆசிரியர் வள்ளல், தொண்டர், தலைவர், புலவர்களையோ, வைத்துப்பாடுதல் வழக்கு. பிறவா யாக்கையானதலின் பரமசிவன் மீது பிள்ளைத்தமிழ் பாடுவதில்லை�ளூ விநாயகர், முருகன், திருமால், உமாதேவிமேல் பிள்ளைக்கவி பலவுள�ளூ அனுமார் மீதும் பிள்ளைத்தமிழ் உண்டு. ஆசிரியரைப் பற்றியது. அம்பலவாணர் பிள்ளைத்தமிழ்ளூ சிவந்தெழுந்த பல்லவராயன் பிள்ளைத்தமிழ் வள்ளல் பற்றியது. புலவர் பற்றியது சேக்கிழார் பிள்ளைத்தமிழ்ளூ இராஜாஜி பிள்ளைத் தமிழ் தலைவர் பற்றியது.

இச்சிற்றிலக்கியம் பற்றி, ‘குழவி மருங்கினும் கிளவதாகும்’ எனத் தொல் புறத்திணையில் பேசுகிறது. இவ்விலக்கியத்திற்கு வித்து சங்க இலக்கிய மெனலாம். வள்ளுவர், ‘குழலினிது யாழினிது’ என்கிறார். பாண்டியன் அறிவுடை நம்பி, குறுகுறு நடந்து சிறுகை நீட்டி இட்டும் தொட்டும் கௌவியும், துழந்தும், நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும், மக்குறு மக்களை, எனக் குழந்தை தரும்கொள்ளை இன்பத்தை அள்ளிப் பருகி அப்படியே திருவாய் மொழியாம். பிள்ளமைப் பேரின்பத்தை முதன்முதலாக வரையறுத்துப் பாடிய பெருமை இவருடையது.

பாடற் தலைவனது 3ஆம் மாதம் தொடங்கி 21ம் மாதம் வரையிலுள்ள ஒற்றித்த பத்து மாதங்களைப் 10 பருவங்களாகக் கொண்டு ஒவ்வொரு பருவத்துக்கும் பத்து விருத்தங்கள் வீதம் பாடுவது முறை. இந்நூல் ஆண்பாற் பிள்ளைத் தமிழ், பெண்பாற் பிள்ளைத் தமிழ் என இருவகைப்படும். காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி (முதல்) ஏழு பருவங்கள் இரண்டுக்குரியனளூ இவற்றோடு சிற்றில், சிறுபறை, சிறுதேர் சேர ஆண்பாற் பிள்ளைத்தமிழாகும். கழங்கு, அம்மானை, ஊசல் இணை பெண்பாற்பிள்ளைத் தமிழாகும். சிலர் ஆண்பாற் பிள்ளைத் தமிழ் 16 ஆண்டு வரையும், பெண்பாற் பிள்ளைத் தமிழென்றால் பூப்பு நிகழும் வரையிலும் பாடவேண்டுமென்பர். அரசன் முடிகவித்தபின் இச்சிற்றிலக்கியம் பாடப்பெறாது எனப்படுகிறது.

பிள்ளைத்தழிழில் கிடைக்கும் முதல் நூல் ‘குலோத்துங்கசோழன் பிள்ளைத் தமிழேளூ ஒட்டக்கூத்தர் பாடியது இதன் சந்த அமைப்பைப் பின்பற்றியே பிற ஆசிரியர்கள் பிள்ளைத் தமிழ் பாடியுள்ளனர். பிள்ளைத் தமிழில் சிறந்தவை மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ், குமர குருபர அடிகள் அருளியவை. ‘தொடுக்குங் கடவுட்பழம்பாடல் இப்பால் கேட்டு ஒவ்வொருவனுக்கும் தெரிந்திருக்கவேண்டிய பாடல், இப்பாடல் கேட்டு மீனாட்சியம்மையே குழந்தை வடிவில் வந்து திருமலை நாயக்கர் கழுத்தகத் திருந்த முத்துமாலையை குமரகுருபரர் கழுத்தில் அணிந்து மறைந்தர் என்றால் இத்திருப்பாட்டின் திறந்தான் என்னே!

சிவஞான சுவாமிகளின் அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ், பகழிக்கூத்தரின் திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ்ளூ மீனாட்சிசுந்தரம்பிள்ளையின் அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ். இன்னும் கம்பன் பிள்ளைத்தமிழ், தமிழன்னை பிள்ளைத்தமிழ், காந்தி அண்ணல் பிள்ளைத்தமிழ், இஸ்லாமிய புலவர்களின் நபிநாயகப் பிள்ளைத் தமிழ், ஆண்டவர் பிள்ளைத்தமிழ் என எத்தனையோ பிள்ளைப் பிரபந்தங்கள் உள்ளன. காமராசர் பிள்ளைத் தமிழ், ம.பொ.சி பிள்ளைத் தமிழ் மறைமலையடிகள் பிள்ளைத் தமிழ், அண்ணா பிள்ளைத்தமிழ் அண்மைக் காலத்தவை. இந்த நூற்றாண்டிலே ‘குழந்தை இலக்கியம்’ எனப் பேசப்படுகிறது. பல நூற்றாண்டுகட்கு முன்பே ‘பிள்ளை இலக்கியத்தை’ வளர்த்துள்ளனர் பைந்தமிழர். ‘தென்னந் தமிழினன்’ (மீனாட்சியம்மை) ‘முடிவு முதிர் கனிவாய்’ ‘உலகு குளிர..’ (முத்துக்குமாரசாமி) ‘விள்ளு மலரா..’ (சேக்கிழார்) போன்றன தெரிந்திருக்க வேண்டியன.

## 8.பள்ளு

பண்டை காலந்தொட்டு உழுதொழிலில் ஈடுபட்ட பள்ளர் - பள்ளியர் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு, கூத்து வகையில், பண்ணார்ந்த பாடல்களாகப் பாமர மக்களால் பாடி ஆடப்பெற்றன. ஆடும்பள்ளி என்ற பெயரில் உழுதொழில் ஒண்மையறிந்த உழத்திதன் அரசனை வாழ்த்துவதாக அமைவது. ‘உழத்திப்பாட்டு’ பத்து செய்யுட்களைக் கொண்டது. இவற்றை யெல்லாம் கேட்டு இன்புற்ற புலவர் பெருமக்கள் இவற்றிற்கு இலக்கிய மெருகு தந்தபோது பள்ளு பிரபந்தமாக மலர்ந்தன. பள்ளன் - பள்ளியரைப் பற்றியதாதலின் இப்பெயர் பெற்றது. காப்பியர் கூறும் வனப்பு எட்டனுள் ‘புலன்’ வகையில் அடங்கும். இதன் இலக்கணம் (தொல். செய்யுளியல் சூத் - 233) ஏழை எளியவர்கள் பயிலும் மிக எளிய வழக்குச் சொற்களால் - சேரி வழக்குகள் அமையப்பாடப் பெறுவது என்பதறிகிறோம். இது நாடக வகை இலக்கியம். இசையோடு இயன்று வருகிறது.

பள்ளுப்பாட்டு ‘மருதநில நந்தா விளக்கம்’ எனலாம். மருதநில இலக்கியம் பள்ளு என்னும் வகையில், நிலமும் மொழியும் பெற்றெடுத்த பிள்ளையாகப் பள்ளுப் பனுவல் விளங்குகிறது. சிந்தும் விருத்தமும் விரவிப் பாடப்பெறுவது. காப்புச் செய்யுள் கடவுள் வாழ்த்து முதல் பள்ளியார் ஏசல், சமாதனமாகி வாழ்த்துதல் வரை பல உறுப்புகளைக் கொண்டது.

பள்ளன் ஒருவன் இரண்டு ஊர்களைச் சார்ந்த மாறுபட்ட சமயத்தைச் சேர்ந்த பள்ளியர் இருவரை மணக்கின்றான். இளையாளிடம் இவன் மோகங்கொண்டிருப்பதைக் கண்டு வெகுண்ட மூத்தாள், பண்ணை ஆண்டையிடம் இல்லாததும் பொல்லாததும் கூறிப் பள்ளனைக் குட்டையில் அடைக்கிறாள். பின்னர் இரக்கங்கொண்டு விடுவிக்கிறாள். பாய்ந்த மாட்டைப் பிடித்து பள்ளன் படுகாயமடைகின்றான். இதனையொட்டிய இரு பள்ளியரும் தத்தம் ஊரும், நாடு, நகர், சமயம் பற்றி ஏசிப் பூசலிடுகின்றனர். சண்டைக்குப் பின் சமாதானந்தானே! இருவரும் இணக்கமாகின்றனர். இது, பள்ளின் பாங்கும் போக்கும்.

இப்பள்ளு இலக்கிய வாயிலாக வரலாற்றுச் செய்திகள், பள்ளர் பெருமை, மழைக்குறி, ஆற்று வெள்ளம், பள்ளன் - பள்ளத்தியர் பேச்சு, நெல்வகை, மாட்டு வகை, ஏர்க்கால் வகை, உழுது விதைத்து, நாற்று நட்டு, அறுவடைசெய்யும் பயிர்த்தொழில் நுட்பங்களும், உழவரது வாழ்வியலும் அறியலாம். ‘நெல்லு வகையை எண்ணினாலும் எண்ணலாம். பள்ளு வகையை எண்ணமுடியாது’ என்ற முதுமொழிப்படி எண்ணரிய பள்ளுப் பாட்டுகள் உள்ளன. திருவாரூர்ப் பள்ளு, திருமலைப்பள்ளு, சிவகயிலைப்பள்ளு, சீகாழிப்பள்ளு, வடகரைப்பள்ளு, வைசியப்பள்ளு, கதிரைமலைப்பள்ளு,கண்ணடையம்மைப்பள்ளு பறாளைவிநாயகர்பள்ளு, திருவிடைமருதூர்ப்பள்ளு, திருநீலகண்டன்பள்ளு, ஞானப்பள்ளு போன்றன சான்றாகும்.

பள்ளில் பெருமை வாய்ந்தது முக்கூடற்பள்ளாகும். 17ஆம் நூற்றாண்டில் பாடப்பெற்றது. ஆசிரியர் யாரென அறியுமாறில்லை. திருநெல்வேலி மாவட்டத்தில் சித்ரா நதியும், கோதண்டராம நதியும், பொருநை நதியோடு கூடுமிடத்தில் முக்கூடல் உள்ளது. இவ்வூரில் எழுந்தருளியுள்ள அழகர் மீது பாடப்பட்டதே, 'முக்கூடற்பள்ளு' பள்ளன் அழகர் குடும்பன்ளூ மூத்தவள் முக்கூடற்பள்ளி, இளையவள் மருதப்பள்ளி, இம்மூவருக்கும் இடையே நடைபெறும் பிணக்கும் இணக்கும் பற்றிய நகைச்சுவை சித்திரமே முக்கூடற்பள்ளு. 'ஏச்சுக்குப் பிறந்தான்…' 'மறு கண்ணும்..' 'நெற்றியில் இடும்…' 'கறைபட்டுள்ளது…' 'காயக்கண்டது..' 'ஆற்றுவெள்ளம் நாளை வர…' போன்ற பாக்கள் நினைவு கூறத்தக்கவை.

## 9.குறவஞ்சி

பள்ளு மருத நிலத்தைப் பற்றியது போன்றே, குறவஞ்சி குறிஞ்சி நிலக் கலை ஓவியமாக அமைகிறது. பள்ளன் - பள்ளத்தியரது பாட்டு புலவர் கையில் பள்ளு ஆனமை போன்றே, குறவன்- குறத்தியர் கூத்து புலவர் கைவண்ணத்தால் குறவஞ்சியானது. இதுவும் முத்தமிழ் நலம் கெழுமியது. குறவஞ்சி நாடகம் குறவஞ்சி நாட்டியம் என்றும் வழங்கப்பெறும்.

முதலில், முக்காலமும் திறம்படக் குறத்தி உரைப்பதாகப் பத்துப் பாடல்களில் இருந்த குறத்திப்பாட்டு, கலம்பகத்தில் குறத்தி குறி கூறும் அளவில் ஓர் உறுப்பாகி வளர்ந்து, குறி சொல்வதற்கு முன்னும் பின்னுமாகப் சில செய்திகள் சேர்ந்து குறமாகி, பிற்கால நாடகப் போக்கும் குறவன் - குறத்தியின் வாழ்வுக் கூறுகளைக் கொண்ட குறவன் நாடகமும் கலந்து குறவஞ்சி எனும் தனிப் பிரபந்தமாகவே உருவெடுத்தது. குறத்தியின் செய்தியே மிகுதியும் கொண்டிருப்பதால் குறவஞ்சி எனும் பெயர் பெற்றது.

தலைவன் உலா வந்த காலை தலைவி கண்டு காமுற்று விரக வேதனையால் திங்களையும் தென்றலையும் பழித்துத் தலைவன்பால் பாங்கியைத் தூதனுப்ப அதுபோது மலைவளம் பாடிவரும் குறத்தியின் திறம் தெளிந்து குறி கேட்க, அவளும் குறி தேர்ந்து நல்வரவு கூறிப் பரிசில் பெற்றுச் செல்கிறாள்ளூ அதுபோது அவளைத் தேடிவரும் குறவன் புதிய ஆடை அணிகளோடு வரும் குறத்தியைக் கண்டு ஐயுற்று வினாவ, அலட்சியமாக அவள் பாதத்தில் பரப் பின் இருவரும் இதயம் ஒன்றி இறைவனை வழுத்திச் செல்வர் - இதுவே குறவஞ்சியின் அமைப்பு, இந்நிகழ்ச்சிகளை விருத்தம், அகவல், வெண்பா, கொச்சகம், கலித்துறை, கழிநெடில் ஆகியன கொண்டு, வசனம் விரவ, இடையிடையே சிந்து, கண்ணி முதலியவற்றால் - நாடகத் தமிழால் - கீர்த்தனை வடிவில் பாடப் பெறுவது.

குமரேசர் குறவஞ்சி, அழகர் குறவஞ்சி, திருவாரூர்க் குறவஞ்சி, நகுமலைக் குறவஞ்சி போன்ற பலவுள. ஆயினும் குறவஞ்சி இலக்கியத்தில் தலைசிறந்தது திருக்குற்றாலக் குறவஞ்சியே, திரிகூடராசப்பகவிராயர் தீட்டியது, எளிமை, இனிமை, எதுகை - மோனை, கற்பனை

அழகு, கவிதைச்சுவை, சந்தநலம், செந்தமிழ் வளம், ஆகிய அனைத்தும் அமைந்த அமுதக் கலசம். இதனைப் பின்பற்றி அமைந்தனவே ஏனைய குறவஞ்சிகள்.

தெய்வத்தை தலைமை கொண்டு தீட்டப்பெறும் குறவஞ்சி சிற்றிலக்கியம் நாளடைவில் மானுடரைப் பற்றிப் பாடும் நிலைக்கு மாறியது. விராவி மலைக் குறவஞ்சி இதற்கு எடுத்துக்காட்டு, அரசர்மேல் அமைத்து சரபேந்திர பூபாலக் குறவஞ்சி, கொட்டையூர் சிவகொழுந்து தேசிகர் சரபோஜிமேல் பாடியது. தமிழன்மையையே தலைவியாகக் கொண்டது புலவரேறு வரதநஞ்சையப்ப பிள்ளை படைத்த தமிழரசி குறவஞ்சி, கிருத்துவ இஸ்லாமிய பெருமக்களும் சில பாடியுள்ளனர். சங்கை வேதநாயக சாஸ்திரியளின் பெத்லகேம் குறவஞ்சி குறிப்பிடத்தக்கது. பாம்பண்ணகவுண்டன் குறவஞ்சி திருச்செங்கோட்டுக் குறவஞ்சிகளும் உள.

'அள்ளி அள்ளித் தருமமெல்லாம்..' (பெத்தலகேம்) 'இருண்டமேகம் சுற்றி..' 'செங்கையில் வண்டு..' 'சூழ மேதி இறங்கும்..' 'வானரங்கள் கனிகொடுத்து..' 'முரு சந்தனக் குழம்பு...' (குற்றாலக் குறவஞ்சி) 'குடிசை வைத்து வாழுமலை..' (சரபேந்திர பூபாலக் குறவஞ்சி) போன்றன வளமான பகுதிகள்.

## 10.சிற்றிலக்கியங்கள் சில

### மெய்க்கீர்த்தி

அரசர்களின் கீர்த்தியை அகவற்பா கலந்த சொற் சீரடியால் பாடி வாழ்த்துவதாம். இவை கோவில் சுவர்களில் கல்வெட்டுகளாகவும், செப்புப் பட்டயங்களில் சாசனங்களாகவும் வடிக்கப்பட்டன. பிற்காலத் தமிழ் வரலாற்றுக்கு நற்றுணை புரிவன மெய்க்கீர்த்திகளே.

### மடல்

காதலித்தவளைக் கிட்டாத தலைவன், பனை மடலால் செய்த குதிரைமீதிருந்து, கையில் அவளுரு தீட்டப்பட்ட கிழியை ஏந்தி, இன்பத்தை ஏந்தி, ஏனை மூன்று உறுதிப் பொருள்களையும் இழித்துக் கூறுவதாம். கலிவெண்பாவில் அமைவது. திருமங்கை மன்னனின் பெரிய, சிறிய திருமடல்கள், வருணகுலாதித்தன் மடல் போன்றன சான்றாம்.

### கீர்த்தனை (Musical Master Pieces)

கோபால கிருட்டிண பாரதியின் நந்தனார் கீர்த்தனைஞ கந்த புராண, பெரியபுராண, இராம கீர்த்தனை.

### சிந்து

அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச் சிந்து.

### இரட்டைமணிமாலை

வெண்பா, கட்டளைகலித்துறை இரண்டும் கலந்து 20 பாடல்கள் அந்தாதித் தொடையில் அமைவது. காரைக்காலம்மையரது திருவிரட்டை மணிமாலை.

### நான்மணிமாலை

வெண்பா, கட்டளைக்கலித்துறை, விருத்தம், ஆசிரியம் நான்கும் கலந்து 40 பாடல்களால் அந்தாதித் தொடையில் அமைவது. காரைக்காலம்மையாரது திருஇரட்டை சான்று.

### மும்மணிக்கோவை

அகவல், வெண்பா, கட்டளைக் கலித்துறை மூன்றும் 30 பாடல்களில் அந்தாதித் தொடையாகப் பாடப் பெறுவது. மறைமலையடிகளின் திருவெற்றியூர் முரகர் மும்மணிக்கோவை காட்டாகும்.

### ஆற்றுப்படை

சங்க இலக்கயித்தில் ஆற்றுப்படைகள் 5 உள. அதே அமைப்பு, ஆனால் பொருள் காலத்திற்கேற்ப மாற்றமடைந்து தனி இலக்கியமாகத் தழைத்தது. 'தேருனைப் புரவி..' எனத் தொடங்கும் ஏகம்பவாணன் ஆற்றுப்படை, ஆற்றுப்படைக்கு ஏற்ற இனிய காட்டாகும். சொற்பொழிவாற்றுப்படை, காதலியாற்றுப்படை, புலவராற்றுப்படை' ஆசானாற்றப்படை, மாணாக்காற்றுப்படை, செந்தமிழ்ச் செல்வியாற்றுப்படை முதலியன புதுமையும் காலத்திற் கேற்ற போக்கும் கொண்டன.

இத்துணையும் கூறிய நாம் ஒன்றை மட்டும் உளங்கொள்ள வேண்டும். ஒப்புக்கொள்ள வேண்டும். நூற்றுக்கும் மேற்பட்ட சிற்றிலக்கியங்களே பிற்காலத்தில் பல்கின. அதுமட்டுமன்று, ஒரே இலக்கிய வகையிலேயே நூறுக்கும் மேலான நூல்கள் தோன்றின. ஒரு பிரபந்த வகையில் ஒரு நூலைப் படித்துவிட்டால், பிறகு வேறு எந்த நூலையும் படிக்க வேண்டியதில்லை. எல்லாம் ஒரே அமைப்பு, கற்பனை, சொல்லடுக்கும் போக்கும் கொண்டிருந்தன. தனியொருவனைப் புகழ்ந்து பயன்பெறக் கருதிய புலவர்கள் பெயரையும் ஊரையும், மாற்றி, முன்னுள்ள பிரபந்தம் ஒன்றையே மாதிரியாகக் கொண்டு பாடித் தள்ளிவிட்டனர். தண்டவாளத்தில் ஓடும் புகைவண்டியின் போக்கினையே அவற்றில் காண வேண்டியுள்ளது. இதனால் தனித்துவமோ, பான்மையோ அற்ற வெற்றிலக்கியங்களாக, விரும்பிப் பயிலும் விழைவினைத் தூண்டாத சக்கைகளாகவே - செங்கலடுக்குளாகவே அவை அமைந்தன. இதனால் புற்றீசல்கள் மறுநாட்காலை தரையில் கொட்டிக் கிடத்தலைபோல் இச்சிற்றிலக்கியங்கள் வந்த சுவடு தெரியாது மறையலாயின. ஆயினும் இவற்றிற்கிடையே குற்றாலக் குறவஞ்சி, முக்கூடற்பள்ளு, மீனாட்சியம்மை

பிள்ளைத்தமிழ் பேன்ற சில தலை சிறந்து நிற்கின்றன தம் தனித் தன்மையாலும் திறத்தாலும்! எனவே ஆயிரக்கணக்கில் பல்கிய இப் பிரபந்தங்கள் ஆன்ற தமிழ்ச்செல்வங்காளக அமையாது அரைநெடியில் அழிந்து போயின.

பிற்கால இலக்கியங்கள் யாவை என்ற வினாவிற்குப் பிரபந்தங்கள் என்றும் பகரும் நிலை இருந்தும், நிலையான இலக்கியங்கள் இல்லாது போயினமையால், கம்பனுக்குப் பின்னும் பாரதிக்கு முன்னுமான பெரிய இடையீட்டில் பெருமைப் படத்தக்க, பேசுதற்குரிய பைந்தமிழ் இலக்கியங்கள் இல்லாத குறை எய்துகின்றோம். களப்பிரர் காலம் இருண்ட காலம் போல, நாயக்கர் காலமும், தமிழ்வானின் இருள்படர்ந்த - மருள் மிகுந்த காலந்தானா? - இலக்கிய ஆக்கத்தைப் பொறுத்த வரையில்!

## 3.2.சாத்திரங்கள்

சைவ சித்தாந்த தத்துவக் கருத்துகளை வகைப்படுத்திக் கூறுகின்ற நூல்கள் பதினான்கு ஆகும். சாத்திரம் என்ற தமிழ்ச் சொல்லுக்கு வடசொல் சாஸ்திரம் என்பதாகும். சாத்திரம் என்ற சொல்லுக்குப் பொருள் - ஒழுங்கு, கட்டளை, வேதம் என அகராதி நூல்கள் குறிப்பிடும். சாற்றுதல், சொல்லுதல் என்ற பொருளும் உண்டு. எனவே சமயக் கருத்துகளை ஒழுங்குபடத் தருகின்ற (சொல்லுகின்ற) வேதநூல்களே சாத்திரங்கள் ஆகும்.

### சாத்திர நூல்கள்

**சாத்திர நூல்கள் வருமாறு:**

திருவுந்தியார்
திருக்களிற்றுப்படியார்
சிவஞானபோதம்
சிவஞான சித்தியார்
இருபா இருப∴து
உண்மை விளக்கம்
சிவப்பிரகாசம்
திருவருட்பயன்
வினாவெண்பா
போற்றிப் ப∴றொடை
கொடிக்கவி
நெஞ்சுவிடு தூது
உண்மைநெறி விளக்கம்
சங்கற்ப நிராகரணம்

சைவ சித்தாந்த சாத்திர நூல்கள் பதினான்கையும் தொகுத்து மெய்கண்ட சாத்திரங்களாகச் சைவ சமய அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். இப்பதினான்கு நூல்களுக்கு முன்னால் ஞானாமிர்தம் என்ற நூல் வாகீசமுனிவரால் எழுதப் பெற்று இன்றைக்கும் கிடைக்கிறது. ஆனால் அந்நூலை மேலே குறிப்பிட்ட மெய்கண்ட சாத்திரங்களில் ஒன்றாகக் கொள்ளும் மரபு இல்லை. திருவுந்தியார் முதலான பதினான்கு நூல்களே சைவ சித்தாந்த சாத்திர நூல்கள் ஆகும். சைவ சித்தாந்த சாத்திர நூல்களில் மூன்றாவதாக விளங்கும் சிவஞானபோதம் மெய்கண்டாரால் இயற்றப் பெற்றதாகும். சைவ சித்தாந்த தத்துவக் கருத்துக்களை முழுமையாக வகைப்படுத்தித் தருவது இந்நூலாகும். தத்துவக் கருத்துகள் தவிர, சைவ சமய வரலாற்றுச் செய்திகளையோ, அடியார்கள் வரலாறுகளையோ இடைச் செருகலாகக் கூறாது, முழுமையும் தத்துவக் கருத்துகளையே கொண்டது இந்நூல். எனவேதான் திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் இரண்டும் காலத்தால் முற்பட்டவை என்றாலும் தத்துவக் கருத்துகளை முழுமையாக உள்ளடக்கிய சிவஞானபோதத்தைத் தந்தருளிய மெய்கண்டாரையே தலைமையாகக் கொண்டு மெய்கண்ட சாத்திரங்கள் என்று இப்பதினான்கு சாத்திரங்களும் வழங்கப் பெறுகின்றன.

## 3.3.உரையாசிரியர்கள்

தமிழ்ச்செல்வங்கள் பல, காலம் பல கடந்தமையால் அப் பனுவல்கள் பலவற்றின் பொருளறியா, மரபுணரா நிலை நேர்ந்துள்ளது. ஆதலின் சங்க இலக்கியம், தொல்காப்பியம் போன்றவற்றின் ஆழ் கருத்துக்கள் அறியாது இடர்ப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. இவ் இன்னல் போக்கிப் பண்டைப பனுவல்களின் பாங்கறியச் செய்த பெருந்தொண்டு உரையாசிரியர்களையே சாரும். இவர்களின்றேல், அக்கலைச் செல்வங்கள் கருத்தறியப் பெறாது இருண்ட இலையிலேயே இருந்திருக்கும். அவற்றிற்கு விளக்கம் தந்த ஒளிவிளக்கங்கள் உரையாசிரியர்கள் எனலாம். பண்டைச் செல்வங்களின் பற்றி அறியச் செய்த பெருமையும், இவர்களுடையதே.

பழம் நூல்களில் மூலம் அழியாது - குறையாது காத்த திறம் இவர்கட்கு உரியது. மூலப்பகுதி கிடைக்கப்பெறா நூல்கட்கு, இவர்கள் உரையின் மூலம் அமைக்க முடிந்தது. உரையிற்றினமையால் தமிழ் உரை நடைக்கு வித்திட்டனர். இவர்கள் உரையினின்றே எண்ணரிய தமிழ் நூல்களின் பெயர்களும், பகுதிகளும் நமக்குக் கிடைத்துள்ளன. பண்டைய இசை, நாடகப் பெருமை நுட்பம் இவர்கள் உரைகளாலேயே உணரமுடிகிறது. இத்தகு பெரும் பணிபற்றி உரையாசிரிகளால், மணிப்பிரவாளநடை, நடுநிலை தவறிய உரை, ஆசிரியர் கருத்தறியாது தம் காலக் கருத்தை ஏற்றிக் கூறும் அறியாமை, வடமொழி வரையறையிலாக் கலப்பு போன்ற இன்னல்களையும் நாமடைகின்றோம். இவ்வுரையாசிரியர்கள் காலம் 13ஆம் நூற்றாண்டு தொடங்கி 18வது நூற்றாண்டுவரை எனக்கொள்ளலாம்.

### இலக்கண உரையாசிரியர்கள்

**1.நக்கீரர்:** இறையனார் களவியலுக்கு உரையாத்தவர். இதுவே இன்று கிடைக்கும் பழைய உரை. கடைச்சங்க காலத்தவர் அல்லர். 8ஆம் நூற்றாண்டைய பாண்டிக் கோவை பாடல்கள்

மேற்கோளாகக் காட்டப் பட்டுள்ளமையான். அதன்பின் வாழ்ந்தவராதல் வேண்டும். கவிதை மாண்புமிகு பீடு நடையது. இவருரை. இவ்வுரையில்தான் முச்சங்கம் பற்றிய முழுவிவரம் முதன் முதல் தென்படுகிறது.

**2.இளம்பூரணர்:** உரையாசிரியர்களில் தலைமை சான்றவர். தொல்காப்பயிம் முழுமைக்கும் முதலுரை வகுத்தவர். நன்னூலை மேற்கோள் காட்டுதலால் 13ம் நூற்றாண்டினர். சமணத்துறவி. இவரது தொன்மையும், உரைத்தன்மையும் கருதி ‘உரையாசிரியர்’ என்றே அழைக்கப்பெறும் பெருமையர்.

எழுத்ததிகார உரை ஏற்றும் சான்றது. நேரிய பொருளை எளிய முறையில் தெளிவுபட வகுத்தும் தொகுத்தும் வடமொழிக் கலப்பின்றி இரத்தினச் சுருக்கமாக இவருரை அமைகிறது. வேண்டிய விவரங்களும், தேவையான மேற்கோள்களுமே கொண்டது. தமிழ் மரபினைத் தழுவிச் சொல்வது. 40நூல்களினின்றும் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. இவரை வழிகாட்டியாக வைத்தே பின்னைய உரையாசிரியர்கள் உரை எழுதலாயினர்.

**3.பேராசிரியர்:** தொல் - பொருளதிகாரம் முழுமைக்கும் உரை எழுதியுள்ளார்.மெய்ப்பாடு, உவமை, செய்யுள், மரபு இயல்கட்கே உரை கிடைத்துள்ளது. குறுந்தொகை 380 பாடல்கட்கும், திருக்கோவையாருக்கு உரை எழுதியவர். இயற்பெயர் தெரியவில்லை. மதுரை ஆசிரியர் எனவும் படுவார். ஆசிரியர் யாவரினும் சிறந்து விளங்கியதால் பேராசிரியர் எனப்பட்டார் போலும். தக்க மேற்கோளும், தகுந்த நுட்ப விளக்கமும், வரலாற்றுக் குறிப்பும் கொண்டது. இவர் உரை, தடைவிடை கூறித்தருக்க ரீதியில் அமைவது. தண்டியலங்காரத்தை மேற்கோள் காட்டுவதால் 13ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியினர்.

**4.சேனாவரையர்:** திருநெல்வேலி மாவட்டம் ஆற்றூரினர். படைத்தலைவர் போலும்! வடமொழியிலும் புலமைமிக்கவர். சொல்லுக்குத் திட்ப நுட்பம் செறிந்து சிறந்த உரை செய்துள்ளார். சொல்லுக்குச் சேனாவரையர் எனச்சொல்லப் படுகிறது. 13ஆம் நூற் பிற்பகுதியினர். சைவர், இலக்கண இலக்கியப் பயிற்சி மிக்கவர். முன்னைய உரைகளை நயமாகத் திறம்பட மறுக்கிறார். ஆனால் சிற்சில போது தமிழின் தன்மைக்கு எழாத, வடமொழி இலக்கண நெறிகளை நற்றமிழுக்கும் பொருத்திக்காட்டுகின்றனர். சிவஞான முனிவர், ‘வடநூற் கடலை நிலை கண்டறிந்து சேனாவரையர் எழுத்ததிகாரத்திற்கு உரை செய்வாராயினர். இன்னோரன்ன பொருள் அனைத்தும் தோன்ற ஆசிரியர் செய்வாராயினர். என எழுதிப் புகழ்வது காண்க.

**5.நச்சினார்க்கினியர்:** மதுரையில் பரத்துவாச கோத்திர அந்தணர் மரபில் தோன்றியவர். சைவர், சிந்தாமணி உரை எழுதிச் சமணரானவர் பல நூல்கட்கு உரை எழுதியவர். தொல்காப்பியம், பத்துப்பாட்டு, கலித்தொகை, சீவகசிந்தாமணி, குறுந்தொகை இறுதி 20 பாடல்கள் ஆகியவற்றிற்கு உரை கண்டவர். காலம் 14ம் நூற்றாண்டு. விரிவும் விளக்கமும்

உடையது இவருரை, இன்றியமையாபோது சொற்பொருளும், இலக்கணக் குறிப்பும் கொண்டுளது. தெளிவான விளக்கம், உயர்ந்த நடை, சேனாவரையர் போன்றாரைக் கண்டித்து உரை எழுதிச் செல்கின்றனர். 'உச்சிமேல் புலவர் கொள் நச்சினார்க்கினியர்' எனும் சிறப்புக் குரியவர். பாடலை நீட்டி, மடக்கி, ஒடித்து, கொண்டு கூட்டிப் பெருள் கூறுவது இவர் போக்காகும். பாட பேதங்களையும் குறித்துள்ளார். 'ஐரோப்பியர் உரை விளக்கம் போன்று அமைந்துள்ள தாம்' இவருரை.

**6.கல்லாடர், தெய்வச்சிலையார் போன்றார்:** இவர்கள் தொல்காப்பிய உரையாசிரியர்கள். புறநானூறு, பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு போன்றனவற்றுக்கு உரைகள் உள. ஆசிரியர்கள் அறியுமாறில்லை. சிலப்பதிகாரத்திற்கு அரும்பதவுரையதுளூ இயற்றியவர் பெயர் தெரியவில்லை. ஊர் நிரம்பையூர் வாழ்ந்தவிடம் திருவாரூரையடுத்த தீபங்குடி 'நிரம்பையர்காவலர்' என்ற பெயருமுண்டு.

**7.அடியார்க்கு நல்லார்:** சிலப்பதிகாரத்தின் உரையாசிரியர். கானல் வரி நீங்கலாக முதல் 19 காதைகட்கே உரை கிடைத்துள. சில இடங்களில் பதவுரையும் சிலவிடத்து பொழிப்புரையும், இன்றியமையா இடங்களில் இலக்கணக் குறிப்பும். ஏற்ற இடங்களில் முத்தமிழ்ப் பகுதிகளும் கொண்டு எதுகை மோனையுடன் அமைவது இவருரை. விசேடவுரையோடு விரிவாக அமைவது. மேற்கோள் இன் நூலினின்றும் எடுத்தாளப்படுவது என்று குறிப்பது. இவரது உரை இயல்பாகும். சோதிடக் குறிப்புகள் தெரிகின்றன. 60க்கும் மேற்பட்ட நூல்களை மேற்கோள் காட்டுகின்றார். மறைந்து போன இசை நாடகத் தமிழ் நூல்களை அறியலாம். மொத்தத்தில் செந்தமிழ் நலம் சான்றதெனலாம். கலிங்கத்துப் பரணி மேற்கோள் காட்டியமையால் இவரது காலம் 13ஆம் நூற்றாண்டாகும். இவரைப் போற்றிப் புகழ்ந்தவன் பொப்பண்ண காங்கேயன் எனும் கன்னட அரசன்.

**8.பரிமேலழகர்:** திருக்குறளுக்கு உரை வகுத்தவர். பரிபாடலுக்கும் திருமுருகாற்றுப்படைக்கும் உரை கண்டதாகத் தெரிகிறது. பதின்மர் உரையில் இவர் உரையே ஏற்றம் சான்றதாக எண்ணப்படுகிறது. 'நூலிற், பரித்த வுரையெல்லாம் பரிமேலழகன் தெரித்தவுரையாமோ?' என்ற தொண்டை மண்டல சதகச் செய்யுள் கொண்டு தெளியலாம். இவரது உரை சொற்செட்டும், தருக்க முறையிலும் அமைகிறது. திட்பநுட்பம் செறிந்தது. மேற்கோள் பொருளுரைத்த வரும்பு கட்டி இலக்கணம் வகுப்பதில் வல்லவர். ஏற்ற இடங்களில் இலக்கண குறிப்பும் இயம்புவர். வடமொழிக்கருத்தை ஒட்டி சிற்சில பொது தமிழ் மரபுக்கு மாறாக உரை வகுக்கும் குற்றத்திற் காளாகின்றார். ஆயினும் மொத்த திறமும், ஆயம் திறனும், ஆன்ற பேரறிவும் சான்றவர். இவர் காஞ்சி உலகளந்த பெருமாள்கோவில் அர்ச்சக மரபினர். வைணவர் 13ஆம் நூற்றாண்டவர்.

**9.பிறர்:** தொல்காப்பியப் பாயிரத்திற்கும், முதற் சூத்திரத்திற்கும் சிவஞான முனிவர் விளக்கமான உரை வரைந்துள்ளார். சிவஞான போதத்திற்கு 'மாபாடியம்' எனும் பேருரையும் செய்துள்ளார். நன்னூலுக்கு முதல் உரை கண்டவர். மயிலைநாதர். விருத்தியுரை தந்நதவர் சங்கர நமச்சிவாயர், காண்டிகையுரை செய்தவர் ஆறுமுகநாவலர், குறளுக்கு உரை கண்டவர்களில் மணக்குடவர், காளிங்கர், பரிப்பெருமாள் போன்றார் உரைகள் சில உள. வீர சோழியத்திற்குப் பெருந்தேவனார் உரை எழுதியுள்ளார். யாப்பருங்கலம், காரிகை இரண்டுக்கும் குணசாகரர் உரை இயற்றியுள்ளார்.

## 3.4.வைணவ உரைகள்

### 10ஆம் நூற். சமணர்.

வைணவம் உரைவளத்தால் ஏற்றம்பெற்றது என்றும், சைவம் சாத்திர வளத்தால் சிறப்புற்றது என்றும் பெரியோர்கள் பணிப்பதுண்டு. இந்த இரண்டு சமயங்களையும் நுணுகி ஆராய்வாருக்கு அது தெளிவாக புலனாகும்.

உரையாசிரியர்கள் இவர்களை வைணவப்பெருமக்கள் "வியாக்கியாதாக்கள்'' என்று குறிப்பிடுவர். நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தின் பாசுரங்களையும் அவற்றின் பொருள் சிறப்புகளையும் ஆழ்வாரிடம் நேரில் பெற்று அவற்றை உலகில் பரவச் செய்தவர் நாதமுனிகள். ஆதலின் அப்பெரியாரையே முதல் உரையாசிரியராகக் கொள்வது வைணவ மரபு. அவர் முதலாக வந்த அவ்வுரை உய்யக்கொண்டார், மணக்கால்நம்பி, ஆளவந்தார் (நாதமுனிகளின் பேரர்), பெரியநம்பிகள், திருமாலையாண்டான், ,ராமாநுசர் காலம் வரையிலும் கேள்வி வழியாகவே வழங்கி வந்து எம்பெருமானார் காலத்தில் தான் "வியாக்கியானம்' என்ற பெயரால் எழுத்து வடிவம் பெற்றது. இங்ஙனம் உரை வளர்ந்த வரலாற்றை காண்போம்.

**1. ஆறாயிரப்படி :** இராமாநுசர் திருவாய்மொழி முதலான திவ்வியப் பிரபந்தங்கள் செழித்து வளரத் திருவுள்ளங்கொண்டார். முதன்முதலாகத் திருக்குருகைப்பிரான் பிள்ளான் என்ற தம் சீடரைக் கொண்டு "ஆறாயிரப்படி" என்ற வியாக்கியானம் இட்டருளினார்.

**தெள்ளாரும் ஞானத் திருக்குரு கைப்பிரான்**

**பிள்ளான் எதிராசர் பேரருளால் -உள்ளாரும்**

**அன்புடனே மாறன் மறைப்பொருளை அன்றுரைத்தது**

**இன்பமிகும் ஆறா யிரம்.**

என்று கூறுவர் மணவாளமாமுனிகள். "ஆறாயிரப்படி" என்பது 'ஆறாயிரக் கிரந்தங்கள்' என்னும் அளவினையுடையது என்பது பொருள். ஒற்று ஒழித்து உயிரும் மெய்யுமான முப்பத்திரண்டு எழுத்துகளையுடையது ஒரு கிரந்தம் எனப்படும்.

"படி" என்பது "அளவு" என்னும் பொருளையுடையதாக இவ்வியாக்கியானம் செய்யப்பட்டதாதலின் "ஆறாயிரப்படி" என்ற பெயரைப் பெற்றது. இறைவனைப்பற்றி நுவல்கின்ற "வி'ணுபுராணம்" ஆறாயிரம் கிரந்தங்களையுடையது. இதனையொட்டி இறைவனைப்பற்றிக் கூறுகின்ற இத்திருமறைக்கும் அத்தொகையளவிலேயே இவ்வியாக்கியத்தை அருளிச்செய்தார் பிள்ளான்.

**2. ஒன்பதினாயிரப்படி : இதனை அருளிச் செய்தவர் நஞ்சீயர்.**

**தஞ்சீரை ஞானியர்கள் தாம்புகழும் வேதாந்தி**

**நஞ்சீயர் தாம்பட்டர் நல்லருளால் - எஞ்சாத**

**ஆர்வமுடன் மாறன் மறைப்பொருளை ஆய்துரைத்தது**

**ஏரொன் பதினா யிரம்.**

என்பர் மணவாளமாமுனிகள். பிரம்மசூத்திரத்திற்கு இராமாநுசர் அருளிச் செய்த "ஸ்ரீபா'யம்' ஒன்பதாயிரம் கிரந்தங்களையுடையதாதலின் அத்தொகையளவில் "ஒன்பதினாயிரப்படி" என்னும் இவ்வியாக்கியானம் எழுந்தது. இதுபற்றிய ஒரு சுவையான வரலாறு உண்டு.

**வரலாறு இது:** நஞ்சீயரின் ஆசாரியர் பட்டர். அவரிடம் ஆறாயிரப்படியை முறைப்படி கேட்டவர் நஞ்சீயர். அதனைச் சற்று விரிவாகச் செய்யத் திருவுள்ளம் பற்றினார். இதனைத் தம் ஆசாரியரிடம் விண்ணப்பித்து அவர்தம் இசைவு பெற்று ஒன்பதினாயிரப்படி என்ற இதனை அருளிச் செய்தார். பட்டர் திருநாடலங்கரித்த பின்னர் ஆசாரிய பதவி நஞ்சீயரை வந்தடைந்தது. இந்த ஒன்பதாயிரப்படியை செவ்வைப்படியாக எழுதித் தரும் பொறுப்பு இவர்தம் சீடர்களில் ஒருவரான 'நம்பூர் வரதராசர்'' என்பாருக்குத் தரப்பட்டது. அவரும் தம் ஊரில் இதனை எழுதிக் கொண்டு வருவதாகச் சொல்லி அதனை வாங்கிச் சென்றார். சென்றவர் காவிரியைக் கடந்து செல்லும்போது ஓரிடத்தில் நீரில் நீந்திச் செல்லும் நிலை வந்தது. பட்டோலையைத் தலையில் கட்டிக்கொண்டு நீந்திச் செல்லுகையில் அது எப்படியோ வெள்ளத்தில் அடித்துப் போய்விட்டது. கரையை அடைந்த இவர் அவ்விழப்புக்கு மிகவும் வருந்தினார். வீட்டினை அடைந்தவர், நித்திய கருமங்களை முடித்துக் கொண்டு தம் திருவாராதனப் பெருமாளுக்குச் செய்ய வேண்டிய அனைத்தையும் செய்து, தாம் மாத்திரம் உணவு கொள்ளாமல் சயனித்துக் கொண்டார். அந்த இரவில் திருவரங்கத்து இறைவன் அவர் கனவில் எழுந்தருளி ''அன்பனே, ஏன் வருந்துகின்றாய்? உன்னுடைய ஆசாரியனை முன்னிட்டு கொண்டு நீ எழுதத் தொடங்கினால் நாம் உனது நினைவிலிருந்து கொண்டு உதவுவோம்'' என்று கூறி மறைந்தனன்.

வரதராசரும் இறைவன் பணித்தவண்ணம் எழுதத் தொடங்கி சில நாட்களில் ஒன்பதினாயிரப்படியையும் எழுதி முடித்தார். தாம் தமிழில் கற்றுத் துறைபோகிய வித்தகராதலின் பற்பல இடங்களில் சில சிறப்புப் பொருள்களையும் எழுதினார். நிறைவு செய்த பணியை நஞ்சீயரிடம் சமர்ப்பித்து, அவரிடம் நிகழ்ந்தவற்றை அனைத்தையும் விண்ணப்பிக்க, நஞ்சியரும் அவரது கூறிய அறிவிற்கு மெச்சி அவரை ஆரத்தழுவி ''இவர் இன்று முதல் நம்முடைய பிள்ளை ,வருடைய திருநாமமும் கலி கன்றிதாசர்'', என்று அருளிச் செய்து இவரைத் தம் அணுக்கத் தொண்டராக்கிக் கொண்டார். அன்று முதல் வரதராசருக்கு "நம்பிள்ளை' என்ற திருநாமமும் வழங்கலாயிற்று.

## தொகுப்புரை

- மூவேந்தர் சிறப்பினை அறிதல்
- சொல்லாட்சித் திறனை அறிந்து கொள்ளுதல்
- பக்தி நெறி, அன்பு நெறியை உணர்தல்
- உரையாசிரியர்கள் பற்றி தெரிந்துகொள்ளுதல்
- மனிதநேயப் பண்பை உணர்தல்

## அருஞ்சொற்பொருள்

1. பீடு - வலிமை
2. பனுவல் - நூல்
3. சாத்திரம் - ஒழுங்கு
4. புரவி - குதிரை
5. மேதி - எருமை

## பயிற்சி வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. சிற்றிலக்கியங்கள் பெருமளவில் தோன்றி காலம் எது?
   அ) நாயக்கர் காலம் ஆ) சோழர் காலம் இ) பாண்டியர் காலம் ஈ) சேரர் காலம்
2. பிள்ளைத்தமிழ் இலக்கியத்திற்குத் தோற்றம் தந்தவர்.
   அ) பெரியாழ்வார் ஆ) ஆண்டாள் இ) தத்துவராயர் ஈ) ஒட்டக்கூத்தர்
3. தூது அமையும் பா வகை?
   அ) கலிப்பா ஆ) ஆசிரியப்பா இ) வெண்பா ஈ) வஞ்சிப்பா
4. திருவாய்மொழிக்கு முதன் முதலாக உரை வகுத்தவர்
   அ) சேனாவரையர் ஆ) ஆளவந்தான் பிள்ளை இ) இளம்பூரணர் ஈ) கல்லாடர்
5. தொல்காப்பியம் முழுமைக்கும் உரை எழுதியவர்
   அ) சேனாவரையர் ஆ) நச்சினார்க்கினியர் இ) கல்லாடர் ஈ) இளம்பூரணர்

### விடைகள்

1. அ) நாயக்கர் காலம்
2. அ) பெரியாழ்வார்
3. அ) கலிப்பா
4. ஆ) ஆளவந்தான் பிள்ளை
5. ஈ) இளம்பூரணர்

### பயிற்சிகள்

1. பழைய உரைகளில் காணலாகும் அரிய சொற்களைத் தொகுத்து வகைப்படுத்திப் பார்க்க.

### குறுவினாக்கள்

1. கோவை நூல் பற்றி விளக்குக.
2. வைணவ உரையாசிரியர்கள் குறித்து எழுதுக.
3. பிள்ளைத்தமிழ் குறிப்பு வரைக.

### நெடுவினாக்கள்

1. சிற்றிலக்கியங்களின் வளர்ச்சியினை விவரி.
2. சைவ சித்தாந்த சாத்திரங்கள் பற்றி விவரிக்க.
3. இலக்கண உரையாசிரியர்கள் குறித்த எடுத்தியம்புக.

## பார்வை நூல்கள்

1. தமிழ்ச் சிற்றிலக்கியங்கள், ந.வெ.செயராமன்,மணிவாசகர் பதிப்பகம்,சிதம்பரம், முதல் பதிப்பு- 1967.
2. உரையாசிரியர்கள், மு.வை.அரவிந்தன், மணிவாசகர் பதிப்பகம்,சிதம்பரம், முதல் பதிப்பு- ஜீன் 2010..
3. காவிய காலம்,எஸ்.வையாபுரிப்பிள்ளை,பாரி நிலையம்,சென்னை,முதல் பதிப்பு – 2016.

## இணைய இணைப்புகள்

1. https://www.tamilvu.org
2. https://www.tamildigitallibrary.in

# அலகு – 4

## நோக்கம்

- சமய இலக்கிய பங்களிப்பை எடுத்துரைத்தல்
- சமய இலக்கிய முன்னோடிகளை அறிமுகம் செய்தல்
- தாயுமானவர் மற்றும் வள்ளலார் பாடல் அமைப்பு முறையை விளக்குதல்
- தமிழில் இடம்பெறும் இஸ்லாம் மற்றும் கிறித்துவ இலக்கியங்களை அறிமுகம் செய்தல்
- உரைநடை இலக்கியங்களின் வளர்ச்சியினை எடுத்துரைத்தல்

## இயலில் இடம்பெறுபவை

- தாயுமானவர்
- அருணகிரிநாதர்
- வள்ளலார்
- உரைநடை இலக்கியங்கள்
- இஸ்லாம் - கிறித்துவ இலக்கியங்கள்

## 4.1.தாயுமானவர்

பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் (1706-1744) திகழ்ந்த பெரியார் தாயுமான சுவாமிகள். திருமறைக் காட்டிலே சைவ வேளாளர் குலத்திலே கேடிலியப்பப் பிள்ளையின் இரண்டாவது மகனாய்ப் பிறந்தார். திரிசிரபுரத்தில் விசயரகுநாத சொக்கலிங்க நாயக்கரின் கணக்கராகத் தந்தை பணி புரிய, வட மொழி, தென்மொழி இரண்டுங் கற்ற இவர் மௌன குரு என்பாரிடம் அறிவுரை பெற்றார். தந்தையார் இறந்தவுடன் அரசு வேலையிலமர்ந்தார் நாயக்கர் இறந்த பின் அரசி மீனாட்சி தன்பாற் காட்டிய முறையற்ற அன்பு காரணமாக ஒரு நாளிரவு ஊரை விட்டோடினார். இராமநாதபுரத்தில் தன் தமையனோடு இருந்தார். அவர் கட்டாயப்படுத்தியதால் மட்டுவார்குழலி என்ற பெண்ணை மணந்தார். கனகசபாபதி எனும் ஆண்குழந்தை ஈன்ற மனைவி மறையவே யோகஞானங்களில் சிறக்கத் துறவு பூண்டார். சைவ சித்தாந்தம், அத்வைதம் ஆகிய இரு நிலைக்கும் ஒரு வகை சமரசம் கண்டவர். ‘உபநிடதக் கருத்துகளையும் மற்ற ஞான நூல்களின் உட்பொருளையும் மிகத் தெளிவாகத் தமிழில் பாடியவர்’ என பேராசிரியர் மு.வரதராசனார் இவரைப் பாராட்டுகிறார். இவரது பாடல்கள் தமிழ்மொழியின் உபநிடதம் எனப்படுகின்றன.

ஆழ்வார்களைப் போன்று காதல் துறைகளின் வாயிலாக உயர்ந்த உண்மைகளை உலகுக்கு உணர்த்தினார். கண்ணி என்றழைக்கப்படும் இரண்டடிப் பாடல் வகையை இவர் கையாள்கிறார். இவரது பாடல்கள் அனைத்தும் தாயுமானவர் பாடல்கள் என்ற நூலாகத்

தொகுக்கப் பெற்றுள்ளன. சிற்சில இடங்களில் சித்தர் கருத்தை ஒத்துப் பாடும் இவர், தம் காலத்தில் சமயப் போராட்டங்களையும் பூசல்களையும் கண்டு மனம் வெறுத்துச் சமரச ஒளியையே அதிகம் பாடியுள்ளார். தேசோமயானந்தம், கருணாகரம், பரஞ்சோதி, பரதெய்வம் போன்ற சொற்கள் இவர்க்கே உரியவை. ''சும்மா இருக்க அருளாய்'' என்று இறைவனிடம் வேண்டுபவர்,

**எல்லோரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே**
**அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே**

(பராபரக்கண்ணி - 221)

என்று பாடுகிறார்.

**தான் செய்யும் இறைவழிபாட்டை,**

**நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம் அன்பே**
**மஞ்சனநீர் பூசைகொள்ள வாராய் பராபரமே**

(பராபரக்கண்ணி -151)

என்று கூறுகிறார். ஆனந்தக் களிப்பு, பைங்கிளிக் கண்ணி, ஆகாரபுவனம் என்பன கண்ணி வடிவில் அமைந்தவை. மொத்தம் 1452 பாக்களை 56 பிரிவுகளில் இவர் பாடியுள்ளார்.

**பொய்யுலகும் பொய்யுறவும் பொய்யுடலும்**
**பொய்யெனவே**
**மெய்யநினை மெய்யெனவே மெய்யுடனே**
**காண்பேனா - காண்**

(காண்பேனா கண்ணி - 6)

என்று ஏங்கிய இவர் 1659-இல் இராமநாதபுரத்தில் உள்ள முகவையில் நித்திய சமாதியடைந்தார்.

## பிற படைப்புகள்

- அச்சான தமிழ் நூல்களின் வகைதொகைப் பட்டியல் என்ற நூலை ஆங்கிலத்தில் ஜான்மர்டாக் (1865) எழுதி வெளியிட்டார்.
- அரபுத் தமிழ் அகராதி குலாம் காதிறு நாவலரால் வெளியிடப் பெற்றது.
- அரும்பொருள் விளக்க நிகண்டு, உசித சூடாமணி நிகண்டு, பொதிகை நிகண்டு, பொருட்டொகை நிகண்டு, ஔவை நிகண்டு என்பன இந்நூற்றாண்டில் தொகுக்கப் பெற்றுள்ளன.

- பிரபந்த மரபியல் என்னும் பாட்டியல் நூல் இக்காலப் பகுதியில் தோன்றியது. பிரபந்தங்கள் தொண்ணூற்று எனக் கூறும் முதல் பாட்டியல் நூல் இதுவே ஆகும். ஆயினும் இதில் 72 இலக்கிய வகைகளுக்கு மட்டுமே இலக்கணம் உள்ளது. இதனை இயற்றியவர் பெயர் தெரியவில்லை.

## 4.2.அருணகிரிநாதர்

திருவண்ணாமலையில் தோன்றியவர். ஒரு செட்டியார்க்கு பரத்தையிடம் பிறந்தவர் என்ப. முற்பகுதியில் சிற்றின்பத்தில் மூழ்கி நோயால் நலிந்தார். தம்மை நொந்து தற்கொலை புரிய நினைந்த காலை, முருகன் இவர் நாவில் ‘சும்மா இரு’ என்று எழுத கடல்மடை விண்டெனக் கவி பாடலாயினார். தம்மைப் பாடுமாறு பணித்த முருகனிடம் எங்ஙனம் பாடுவேனென. ‘முத்தைத் தருபத்தித் திரு நகை’ என அடியெடுத்துக் கொடுக்கப் திருப்புகழ் பாடியதாகப் கூறப்படுகிறது. ஒரு முறை சநம்பந்தாணடான், தான்பாடி தேவியை வரவழைப்பதாகவும், அருணகிரியாரைப்பாடி ஆறுமுகனை வரவழைக்க முடியுமா என்று அறைகூவல் விடுத்தான். அருணகிரியார், ‘அதலசேடன்’ எனத் தொடங்கும் திருப்புகழ் பாடக் கந்தன் காட்சி தந்தான் என்றும், சந்பந்தாண்டான் பாட தேவி தோன்றவில்லை யென்றும் கூறுப. காதையறுத்திடும் வில்லி, அருணகிரியாருடன் வாதிட்டு அவரது கந்தரந்தாதிக்கு உரை கூறிவரும்போது ‘திதத்தத்த’ எனும் பாடலுக்கு உரை உரையாது தோற்றார் என்றும், அருணகிரியார் கருணையால் வில்லியின் காதை அறுக்காது விடுத்தார் எனவும் இயம்புவ.

இவர் பாடிய திருப்புகழ் 16000: கிடைத்தவை 1307. இடைச்செருகல் மிகுதி அனைத்தும் குமரன் புகழ் கூறுபவை. தமிழகமெங்கணும் எழுந்தருளியிருக்கும் முருகனை ஏத்துபவை. ‘இன்பக்கலையினையெடுத்து விதந்து அதன் றீமை யிற்றப்பிக் கடவுணெறி தலைப்பட வேண்டுமென்று’ வற்புறுத்துவன். ‘நூல் திருப்புகழ் என்றழைக்கப்படுவதோடு, ஒவ்வொரு பாட்டும் திருப்புகழ் என்றே அழைக்கப்பெறும் அருமையது!’ ‘வாக்கிற் கருணகிரி’ ‘கருணைக் கருணகிரி’ எனப் பாராட்டியுள்ளார் தாயுமானவர். ‘ஐயா அருணகிரி அப்பா உனைப் போல மெய்யக ஒரு சொல் விளம்பினர் யார் எனப் போற்றகிறார். சந்தச் சிறப்பும், ஓசை உயர்வு மிகக் பாடல்கள்: 1307 பாடல்களில் 1008 சந்த வேறுபாடுகளினை வைத்துப் பாடியுள்ளார். தானம் போடும் முறையில் - எழுந்தையெல்லாம் எண்ணிக்கையில் வைத்துப் பாடியுள்ளார்.

**‘ஏறும்மயி லேறிவவிளை யாடுமுக மொன்றே**
**ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே**
**கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே**
**குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே**
**மாறுபடு சூரவை தைத்தமுக மொன்றே**

**வள்ளினயம ணம்புணர வந்தமுக மொன்றே**
**ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்**
**ஆதியரு ணாசலம் மர்ந்த பெருமாளே.**

'சனத்தவர் முடிக்கும்...' 'உம்பர்தரு தேனும்...' 'கைத் தல நிறைகனி...' போன்றன குறிப்பிடத்தக்கன.

**'திருப்புகழ் படிக்கும் அவர்சிந்தை வலுவாலே**
**ஒருத்தரை மதிப்பதில்லை உந்தன் அருளாலே'**

**கந்தரலங்காரம்:** 102 செய்யுட்களுடைத்து, பக்திச் சுவைமிக்கது கந்தரனுபூதி 52 கலிவிருத்தங்களைக் கொண்டது. மிகக் சிறப்பினது மந்திரி நூலாகவே மதிப்பர். நாளும் பராராயணம் செய்யின், நற்பலனிக்கும் 'கந்தரநுபூதி பெற்று கந்தரது பூதிசொன்ன, எந்தை யருள்நாடி யிருக்குநாள் எந்நாளோ' என்றேத்துகின்றார் தயுமானவர். திருவாப்பு 18 விருத்தங்களில் அமைவது. முருகனருளும் பெருமையும் பேசுவது. சுந்தரந்தாதி யமக அமைவது. முருகனருளும் பெருமையும் பேசுவது. கந்தரந்தாதி யாமம் அமைதியது .தனைப் பாடியே வில்லியை வென்றார். வேல் விருத்தம் உடற் கூற்று வண்ணம், மயில் விருத்தல், திருவெழுக் கூற்றிருக்கை இவர் பாடியன.

திருப்புகழ்பா வகையை முதன் முதல் புதிய முறையில் அமைத்தவர் சந்தப்பாவைப் புதியநெறியில் கையாண்டவர் என்பது கருதத் தக்கது. முருகவழி பாடடினை வளர்த்து அறுமுருகன் சிறுவன் எனும் எண்ணத்தைப் போக்கி, அரி அரன் ஆகியோர்க்கு ஈடானவனே என நிறுவி, ஊர்தோறும் குமரன் கோயில் தோன்றிடக் காரணமாயிருந்தவர். எனவே இவரை 'முருக நாயனார்' என்ப. சலாம், சபர்', ராவுத்தன், எனும் முகமதிய சொற்கள் கலந்து வருதல் கருதத்தகக்கது. இசை நுணுக்கங்கள், இவர் பாடல்களில் இழையோடுகின்றன.

நாயக்கர்கள் தமிழகத்தை ஆண்ட காலத்தில் இந்நாட்டின் பழம் பெருஞ் மக்களிடையில் சமயங்களான நல்ல சைவமும் வைணவமும் வளர்ச்சியைப் பெற்றிருந்தன. இசுலாமியர்கள் ஆட்சியால், இசுலாம் சமயமும் இங்குப் பரவியது. ஐரோப்பியர்களுடைய வருகையால் கிறித்தவ சமயமும் இங்குப் பரவத் தலைப்பட்டது. ஆங்கிலேயர் மக்களைக் கிறித்தவர்களாக்கத் தலைப்பட்டனர். ஆட்சியின் ஆதரவும் அவர்களுக்கு இருந்தது. இதற்கெனவே இங்கு வந்த ஐரோப்பிய பாதிரிமார்கள், பல்லாயிரக்கணக்கான மக்களைக் கிறித்துவ சமயத்திற்கு மாற்றினார்கள். சமய மாற்றம் நிகழ்கின்ற பொழுது இருவர்க்கிடையிலும் இருந்த மொழி மாறுபாட்டினை அவர்கள் உணர்ந்து கொண்டார்கள். "மக்களின் அன்பைப் பெறுவதற்கு வழி,

அவர்கள் மொழியைக் கற்று, அவர்களோடு கலந்து வாழ்தலே என்பதை நன்கறிந்த இவர்கள், தமிழ் மக்களோடு கலந்து வாழ்ந்து, தமிழ்மொழியைக் கற்று, அம் மொழி வாயிலாகத் தங்கள் சமயக்கொள்கைகளை நாட்டிற் பரப்பினார்கள். எத்தகைய இன்னல்கள் வந்துற்றபோதும் அவற்றிற்குச் சிறிதளவேனுஞ் சலியாது தங்கள் காரியத்திற் கண்ணுங் கருத்துமாயிருந்து உழைத்து வந்தமையால், கிறித்துவ சமயம் அக்காலத்தில் தமிழ் நாட்டில் வளரலாயிற்று. கிறித்துவக் குருமார்கள் சமயத்திற்குச் செய்து வந்த தொண்டு, தமிழிலக்கிய வளர்ச்சிக்குப் பெரிதும் உதவிற்றென்றே கருதக்கிடக்கின்றது”

## 4.3.இராமலிங்க அடிகள்

(1823-74) தென்னார்க்காடு மாவாட்ட மருதூரில் பிறந்தவர். சென்னை, தில்லை, கருங்குழி, வடலூர் ஆகிய ஊர்களில் வசித்து 53 அகவையில் 212 கடிகையில் வருவதாகக் கூறி மறைந்தவர். பெற்றோர் இராமையாப்பிள்ளை, சின்னம்மை, இளமையிலேயே உள்ளத்துறவு கெண்டவர். தண்ணீர் கொண்டு விளக்கெரித்தது போன்ற அற்புதங்கள் பல நிகழ்த்தியுள்ளார். இவரது ஆசிரியர் காஞ்சிபுரம் மாக வித்துவான் சபாபதி முதியார். குருவாக ஞானசம்பந்தரைக் கருதியவர். ஒன்பதாம் அகவையிலேயே பா புனையும் பாங்கு பெற்றிருந்தார். பதின் மூன்றாம் வயது தொடங்கி இளை திருப்பணியில் ஈடுபாடு கொண்டு இல்லற் பற்றொழித்து அருட்பா பாடி அருள் வாழ்வு நடத்தலாயினார். இவருடைய தாரகமந்திரம். ‘அருட் பெருஞ் சோதி, அருட்பெருஞ் சோதி! தனிப்பெருங் கருணை, அருட்பெருஞ் சோதி! என்பதாகும்.

இவர் பாடிய பாடல்கள் 6 திருமுறைகளாகத் தொகுக்கப் பெற்றன. ‘திருவருட்பா’ என இவருடைய மாணவர்களால் வழங்கப் பெற்றது. ‘தேவாரத் திருவாசங்களையே திருவருட்பா எனல் ஆகும். இராமலிங்கர் பாடல்களை அங்ஙனம் அழைத்தல் ஆகாது’ என ஆறுமுக நாவலரும் அவர் குழாத்தினரும் மறுப்பு தெரிவித்துப் பெருவழக்காடினர். ‘தேவாரம்’ போன்றன அருட்பா என வழங்கியதாகவும் தெரியவில்லை. வள்ளலாரும் தம்மால் நிகழ்வதனைத்தும் இறைவன் திருவருளினாலே எனக் கருதியமையால் மாணவர்கள் அருட்பா என்றழைத்ததை மறுத்தாரில்லை. தேவாரத் திருவாசகக் கருத்துக்களை எளிய முறையில் எல்லோரும் உணரும் வண்ணம் அமைத்துச் செல்லும் அமுதப் பாக்களாக இவை மிளிர்கின்றன. புகழ் மாலைகளாகவே அமையும் பிற்காலப் பாக்கள் போலாது சொல்வளமும் பொருள் நலனும் மிக்க - சுவை பொதிந்த கனிவு கொடுக்கும் நல்ல பாக்களாக இவை பிறங்குகின்றன. 6000க்கும் மேற்பட்ட பாடல்கள். சாதி பேதத்தையும், சமயப் பூசலையும கண்டித்து, அத்துணை பேரும் நிகராம் என்றோதுகின்றார். உருவ வழிபாட்டை ஒதுக்கி, ஒளி வழிபாட்டை உண்டாக்கினார். சமரச சுத்த சன்மார்க்க நெறி கண்டுளார். இந்நெறி பரப்ப, வடலூரில் அருட்சோதி மன்றம் அமைத்தார். திருவருட்பா தோத்திர வகையது. கற்றவர்க்கும் கல்லார்க்கும் களிப்பரளும் கல் நெஞ்சையும் கனிவிக்கும் அற்புதக் கவிகள் கொண்டது. ஜீவகாருண்ய நெறி - கொல்லா விரதம் குவலயமெல்லாம் ஓங்க விழைந்த

உயர்ந்த உள்ளத்தை. ‘வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம் வாடினேன்’ என்பது கொண்டு தெளியலாம். இசையும் அருட்பாவுக்கு உயிரூட்டுகின்றது. பிற்கால நடை எளிமைக்கு வழிகாட்டியாகவும், சமரச சன்மார்க்க, செந்நெறியாம் பெருநெறியின் தோற்றுநரகாவும் சமய மறுமலர்ச்சியாளராகவம் பிறங்குகின்றார். உரைநடை நூல்கள் பலவும் செய்துள்ளார். ‘மனுமுறை கண்ணட வாசகம்’ ‘மனுநீதி சோழன் புலம்பல்’ வாயிலாகச் செய்யக் கூடாத பாவச் செயல்களை அடுக்குகின்றார் பாருங்கள்.

**‘நல்லோர் மனத்தை நடுங்கச்செய் தேனோ**
**வேலை யிட்டுக் கூலிகுறைத் தேனோ**
**குரவை வணங்கக் கூசி னேனோ**
**கற்றவர் தம்மைக் கடுகடுத் தேனோ**
**கல்லும் நெல்லும் கலந்துவிற் றேனோ**
**தந்தைதாய் மொழியைத் தள்ளிநடந் தேனோ**
**தெய்வம் இகழ்ந்து செருக்கடைந் தேனோ...’**

ஜீவகாருண்யம் வந்தனை செய்முறையும் பயனும், விண்ணப்பம், பத்திரிகை, உபதேசம், உண்மைநெறி, ஒழுக்க ஒள‘தியின் குணானுபரவம், மெய்ம்மெரிப் பொருள் விளக்கம் போன்ற தலைப்பில் இவர் எழுதிய கட்டுரைகள் ஒவ்வொன்றும் கருத்துக் களஞ்சியமாகக் காட்சியளிக்கின்றன. ‘அப்பா நான் வேண்டுதல் கேட்டருள்புரிதல் வேண்டும், ஆருயிர்க் கெலாம் நான் அன்பு செயல் வேண்டும்’ என்பது இவருள்ளம் உணர்த்தும் ‘எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம் முயிர்போல் எண்ணி..’ ‘என்பது வள்ளலார் கண்ட நெறியினை விளக்குகிறது. ‘ஒருமையுடன்..’ ‘கோடையில் இளைப்பற்றி..’ போன்ற பாடல்கள் எவரும் அறிந்தனவே. அந்த நூற்றாண்டில் பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட்ட பாவலர் பெருமான் இவரெனலாம்

## 4.4கிறித்துவமும் தமிழும்

15ஆம் நூற்றாண்டில் இறுதி தொடங்கி மேலைநாட்டவர் வணிகத்தின் பொருட்டுத் தமிழகம் வந்தனர். அவர்களோடு சமயத்தையும் பரப்பும் நோக்குடன் பாதரிமார்களும் வரலாயினர். பன்மொழிப் புலமையும் பல்துறையறிவும் மிக்க அவர்கள், தமிழ் மக்களிடம் இரண்டறக் கலக்கவும் செல்வாக்கு அடையவும் அவர்களுடைய மொழியைப் பயில்வதே தகுந்த வழியெனத் தெரிந்து தமிழைக் கற்றனர். சமயக் கருத்துக்களை பரப்பினர். அதன் பயனாக அருந்தமிழும் பல்துறையில் பெருகி வளர்ந்தது. 1. தமிழ் மக்களது கண்களைத் திறந்து விட்டு அவர்களுடைய மொழி இலக்கிய இலக்கணப் பெருமையைப் பாட்டாலும் உரையாலும் உணருமாறு செய்தனர். 2.தமிழ்க் கருவூலங்களை யெல்லாம் பயிலும் பழக்கத்தையும் பேரார்வத்தையும் உண்டாக்கினர்.

3.ஏட்டுச் சுவடியிலிருந்த தமிழ், எல்லோரிடமும் அமையும் வண்ணம் செய்ய அச்சு இயந்திரம், அதற்குரிய தாள், மை, எழுத்துக்களைத் தருவித்து அச்சடித்து அருந்தமிழைப் பரப்பினர். 4.தமிழில் உரைநடை இலக்கியத்தை வளர்த்து ஒரு சிலரிடம் வளர்ச்சிக் கண்ட தமிழை எல்லோர்க்கும் உரிய பொதுவுடமையாக்கினர். செய்யுளில் சிக்கிய தமிழை வசனத்தில் விரிவடையச் செய்தனர். 5.தமிழ் எழுத்தில் சில மாற்றங்களைச் செய்து சில சிக்கல்களையும் சிரமங்களையும் போக்கினர். இடம்பிட்ட எழுதும் முறையினையும், பள்ளிகளிட்டுப் பிரிக்கும் பாங்கினையும் புகுத்தி எளிமையாக்கினர். 6.எளியோரும் ஏனைய நாட்டவரும் இன்தமிழை நன்கு கற்க அகராதிகளை எழுதி அத்துறைக்கு வித்திட்டனர். 7.தமிழ் இலக்கியங்களை ஏனைய நாட்டவர் படித்தறியவும், மேலை நாட்டு இலக்கியத்தை தமிழர் படிக்குமாறும் பெயர்த்துத் தமிழ்ச் செல்வத்தையும் பெருக்கினர். 8.எண்ணரிய இலக்கிய இலக்கண நூல்களைச் செய்து தமிழன்னைக்கு அணி செய்தனர். 9.விஞ்ஞானத் துறையில் வண்டமிழ் வளர வழிகோலினர். 10.தமிழ் மொழியின் அருமையினைப் பிற நாட்டவர் புரிந்து கொள்ளச் செய்த பெருமை இவர்களுடையதே. 11.தமிழை மரபு ஒட்டியே போற்றிப் பயிலும் குறுகிய நோக்கினைப் போக்கி, திறனாய்வு முறையில் அணுகும் வகையினை அருளினர். 12.தமிழில் செய்தித்தாள்கள் இலக்கியத் தாளிகைகள் பல்கி அதன்மூலம் தமிழ் வளரத் துணை நின்றனர். 13.பழமொழி இலக்கியம் பைந்தமிழ்பெருகச் செய்தனர். 14. தமிழாகிய மரம், கப்பும் கிளையுமாப் பூத்துக்குலுங்கிப் பொற்கனிகள் மல்குமாறு சிறுகதை, நாடகம், நாவல், மொழியியல் துறைகள் கிளைக்கச் செய்தனர். 15.இவர்கள் தொடர்பால் சிறந்த சொற்கள் பல செந்தமிழ்ச் சொற்கோவையுள் வந்து சேர்ந்துள்ளன. காட்டாக பட்லர், பேப்பர், சம்மன், ‘ாப், ‘ர்ட், கோட், சோப், மீட்டிங், ஜன்னல், ஸ்கூல், சாவி, ரசீது, பட்டாளடம், கோப்பை, பாதிதி போன்றன கருதுக. இத்துணை வகைகளில் இன்தமிழை ஏற்றமுறச் செய்த இவர்கள் தொண்டு மூவகையின. மேலை நாட்டவர் தொண்டு நம் நாட்டவர் தொண்டு தற்காலக் கிறித்துவர் தொண்டு - முதற்கண் ஐரோப்பியர் அருந்தமிழ்ப் பணி இயம்புவோம். மேலை நாட்டவரில் வீரமாமுனி, போப், கால்டுவெல் ஆகிய மூவரும் முதன்மை பெற்றவர்கள்.

**1.வீரமாமுனிவர் (1680-1746):** இத்தாலி நாட்டு கத்தோலிக்க மதகுரு, இற்பெயர் கான்ஸ்டான்டியஸ் ஜோசப் பெஸ்கி, முப்பதாவது வயதில சமயத்திருப்பணி யாற்றத் தமிழகம் வந்தார். பிரெஞ்சு, இல்தீன், கிரேக்கம், ஹீப்ரு, இத்தாலிய, பாரசீக ஆங்கில மொழிகளில் ஆழ்ந்த புலமை பெற்றிருந்தார். சுப்ரதீபக் கவிராயரிடத்தில் இருபது ஆண்டுகள் இன்தமிழ் பயின்றார். தெலுங்கு, வடமொழி போன்றனவும் கற்றார். இந்தத் திருப்பணிக்கிடையே இன் தமிழில் புலமை பெற்ற தோடன்றி, அம்மொழியில் சிற்றிலக்கியமும், பெருங்காவியமும், பேரகராதியும் செய்து தமிழைச் செழிக்கவும் செய்தார். பைந்தமிழுக்கு இவரர் அறிய பணி.

**1.தமிழ் எழுத்தில் (ளுஉசனிவ)** சில திருத்தங்களைச் செய்தார். தொல்காப்பியர் காலத்தில் ‘எ’ கர ‘ஒ’ கர எழுத்துகட்கு மேலே புள்ளி வைத்து எழுதப்படன. இங்ஙனம் புள்ளி பெறுவன குற்றெழுத்துகளாம். புள்ளி பெறாமல்அமையும் எகர ஒகரகங்கள்

நெட்டெழுத்துக்களாகக் கருதப்பட்டன. (மெய்யின் இயற்கைப் புள்ளியோடு நிலையில், எகர ஒகரத்தியற்கையும் அற்றே-எழு, சூ 15-16) இதனால் வேறுபாடு தெரியாது மக்கள் இடருற்றனர். இம்மருட்சியைப் போக்க, வீரமாமுனிவர் எகர ஒகரங்களுக்கு நீண்ட புள்ளியையும்,மெய்யெழுத்துகட்குக் சுழித்த புள்ளிகளையும் அமைத்து வேறுபடுத்திக் காட்டினார். இதனால் ஏ,ஓ வடிவங்கள் எழலாயின. அது போன்றே குறிலுக்கும் நெடிலுக்கும் ஒரே மாதிதியாக 'கெ' 'கொ' என்ற அமைத்து இடத்தையொட்டி குறிலா நெடிலா என்றறியுமாறு இருத்த இன்னலைப் போக்கி, குற்றெழுத்துக் கொம்புகளை மேலே சுழித்து 'கெ' ' கே' 'கொ' 'கோ' எனத் திருத்தியமைதவரும் இவரே. 'நீட்டல் கழித்தல் குறில் மெய்க்கிருபுள்ளி' எனத் தம்முடைய தொன்னூல் விளக்கத்தில் பதியும் வகுத்தார். நிறுத்துப் புள்ளி,முற்றுப்புள்ளி போன்ற குறியீடுகளை உண்டாக்கியவரும் இவரே.

**2.உரைநடை நூல்கள்:** 'வேதியர் ஒழுக்கம்' 'வேத விளக்கம்' என்பன சமய சம்பந்தமா இவரியற்றிய நூல்கள். பின்னதற்கு எதிர்ப்பாக டேனி' லூத்தரன் சங்கத்தார் வெளியிட்ட 'திருச்சபை பேதகம்' என்ற நூலுக்கு மறுப்பாக 'பேதகம் மறுத்தல்' லூத்தர் இனத்தியல்பு' எனும் இருநூல்களை எழுதினார். இவரது 'பரமார்த்த குரு கதை' எனும் நகைச்சுவை ததும்பும் நூலைத் தமிழகம் நன்கறியும். இது தமிழ்ச சிறுகதை இ.லக்கிய வளர்ச்சியில் முதலிடம் பெறும் எனவும் இயம்பலாம். ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், தெலுங்கு, கன்னடம், ஆகிய மொழிகளில் இது மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. என்றால், இதன் திறம், இயம்பவும் வேண்டுமோ? இங்ஙனம் எதுகை மோனை நாடி இடர்பட்படாது பழகு தமிழில் பாமரர்க்கும் புரியும் வகையில் உரைநடை எழுதி முனிவரை 'உரைநடை இலக்கயி முன்னோடி' எனலாம். ஞானக்கண்ணாடி 'வாமன் கதை' என்ற உரைநடை நூல்களும் இயற்றியுள்ளார்.

**3.இலக்கணத் துறையில்:** குட்டித் தொல்காப்பியம் எனப் புகழப்பெறும் 'தொன்னூல் விளக்கம்' இவரியற்றியது. ஐந்திலக்கணம் கூறுவது. பேச்சுத் தமிழ் வழக்காற்றைக் கொடுந்தமிழ் இலகக்ணம் என லத்தீன் மொழியில் யாத்துள்ளார். இந்நூல் ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இது கால்டுவேலார் ஒப்பிலக்கண நூலுக்கு பெரிதும் துணை புரிந்தாகக் கருதப்படுகிறது. போப் ஐயரும் பெஸ்கியின் ஆய்வுத்திறனைப் புகழ்ந்துள்ளார். இப்பொன்னூலுக்காகச் 'செந்தமிழ் தேசிகர்' என்ற பட்டம் அளிக்கப்பட்டது.

**4.மொழிபெயர்ப்பு:** என்ற நிலையில் குறளின் முதலிரு பால்கள் இவரால் இலத்தீன் மொழியில் பெயர்க்கப்பட்டமை குறிக்கத் தக்கது. மொழிபெயர்ப்புத் துறையில் வழிகாட்டியாக விளங்குகிறார் பெஸ்கி.

**5.அகராதித் துறையிலும்** இவர் பணி நிலையாயது. தலையாயது. பெயர், பொருள், தொகை, தொடை எனும் நான்கு பகுதியாக வகுத்து அமையும் இவரது ‘சதுரகராதி’ பின்னெழுந்த அகராதிகட்கெல்லாம் முன் மாதிரியாக அமைகிறது. தமிழில் தோன்றிய முதல் அகராதி இதுவே. இதுவன்றி 900 சொற்கள் கொண்ட தமிழ் - லத்தீன் அகராதி ஒன்றும். போர்ச்சுக்கீசியம் தமிழ், இலத்தீன், அகராதி ஒன்றும் இயற்றியுள்ளார். இம்மூன்றும் பிறநாட்டார் கற்கவும் நம்மவர் தமிழ்த் திறமறியவும் பேருதவி புரியவன.

**6.செய்யுள் நூல்கள்** சிலவும் செய்துள்ளார், சுதிர்மேரி சொன்ன வளவர் கதையைத் தேம்பாவணி எனும் தீந்தமிழ்க் காப்பியமாக தீட்டினர். கிருத்துவம் தமிழுக்களித்த பெருங்காப்பியம். அச்சமயம் பற்றி அரிய பனுவல் இது. வாடாத மாலை என்னும் பொருளது. ஏசுவின் வளர்ப்புத தந்தையாகிய தூய வளவரின் வாழ்க்கை வரலாறு விளம்புவது. காவியப் பாங்கிலே சிந்தாமணிக்கு ஒப்பானதும், கற்பனைத் திறத்திலும் காவிய நலத்திலும் கம்பராமாணத்தை ஒட்டியும் அமைகிறது. குறள்மணம் நூல் முழுவதும் கமழ்கிறது. 3காண்டங்கள், 36படலங்கள், 3615 விருத்தங்கள் கொண்டது. நற்றமிழ் இலக்கிய நூற் கருத்துக்கள் அனைத்தும் ஒருங்கே அமைந்த அருந்தமிழ்ப் பெட்டகம் இயற்கைப் புனைவும், இனிய உவமைகளும், பல்கலையறிவும் எல்லோர் இதயத்தையும் ஈர்ப்பன. இதன் சுவை தேர்ந்த மதுரைத் தமிழ்ச் சங்கத்தார். பெஸ்கிக்கு ‘வீரமாமுனிவர்’ என்ற பட்டத்தைக் கொடுத்துப் பாராட்டினர்.

கொள்ளிடத்தின் வடகரையில் ஏலாக்குரிச்சியில் மேரி மாதா வுக்குக் கோயில் கட்டி அவ்விடத்திற்கு திருக்காவலூர் எனப் பெயரிட்டார். திருக்காவலூர்க் கலம்பகமும் பாடினார். தேவமாதாவின் மீது ‘அடைக்கல நாயகி வெண் கலிப்பா’ எனற் பிரபந்தமும் பாடியுள்ளார். தேவாரப் பாங்கில் அமைந்த நூல் ‘கருணாம் பாப் பதிகம்’ ஆகும். அன்னை அழுங்கள் அந்தாதியும் இவரியற்றியதே. இன்னும் தமிழில் அமையும் நல்ல நீதி நூல்களைத் ‘தமிழ்ச் செய்யுள் தொகை’ எனத் தொகுத்து வெளியிட்டு நூல் தொகுப்பிற்கு பழிகாட்டியுள்ளார். போர்ச்சுகீசிய நட்டுவேத சாட்சியான கித்தேரியம்மாள் மீது பாடப்பட்டது. ‘கித்தேரியம்மாள் அம்மானை’ பாமரரும் படித்தின்புறும் பான்மையது. பெஸ்கி திருச்சிராப்பள்ளியை ஆண்ட சந்தா சகிப்பிடம் திவானாக இருந்ததாகவும் அவரால் பெரிதும் மதிக்கப் பட்டதாகவும் தெரிகிறது. இங்ஙனம் 37 ஆண்டுகள் தமிழகத்தில் தங்கிப் பணியாற்றிய இவ்வீரமாமுனிவர் 66ஆம் வயதில் அம்பலக் காட்டில் ஆவி துறந்தார்

## 2.டாக்டர் ஜி.யூ.போப்

(1820-1907) 1820ல் இங்கிலாந்தில் நோவா ஸ்கோரீயாவில் பிறந்தவர். ஹாக்ஸ்டன் கல்லூரியில் பயின்றவர். வெஸ்லியன் மிஷன் சார்பில் 19வது வயதில் தமிழகம் வந்தார். மகாவித்வான் இராமானுஜ கவிராயரிடம் தமிழை முறையாகப் பயின்றார். முதலில் திருநேல்வேலி சாயர்புரத்திலும் அடுத்துத் தஞ்சையிலும் பின்னர் நீலகிரியிலும் சமயபணி புரிந்தார். பெங்களூரில்

சமயக் குரவராகவும் பி‘ப் காட்டன் பள்ளித் தலைமையாசிரியராகவும் செயலாற்றினார். செல்லுமிடங்களிலெல்லாம் செந்தமிழ் இன்பத்தில் சிந்தை மறந்து இன்புற்றார். திருக்குறள் நாலடியார் போன்றவற்றில் தோய்ந்து மகிழ்ந்து அவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். புறநானூறு புறப்பொருள் வெண்பா மாலை போன்றவற்றில் சில பல செய்யுட்களை Extracts from purananuru and purapporul venba malai என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். ஒவ்வோர் ஆங்கிலப் புத்தாண்டு தினத்தன்றும் புறப்பாட்டு ஒன்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். Elementar Tamil Grammar எனத் தமிழ் இலக்கணத்தை மூன்று பாகங்களாக எழுதினார். ‘அவர்தம் இலக்கண நூல் ஒவ்வொரு மாணாக்கர் கையிலும் பொலிவதாயிற்று யான் முதன் முதல் பயின்ற இலக்கணம் டாக்டருடையதே!’ என்று திரு.வி.க கூறுவது குறிப்பிடத்தக்கது. தமிழ்ச் செய்யுட்களைத் தொகுத்து ‘தமிழ்ச் செய்யுட் கலம்பகம்’ எனவும் வெளியிட்டார். Poets of the Tamil land The lives of Tamil Saints போன்ற நூல்களையும் எழுதினார். மணிமேகலை கதையை ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். ஊட்டியில் தோடர்களோடு நெருங்கிப் பழகியறிந்து தொடர்மொழி இலக்கணத்தையும். அது போன்றே துளு இலக்கணத்தையும் உருவாக்கினார், (Royal Asiatic Quarterly, the Indian Antiquary, Indian Magazine, Siddhantha Deoika) போன்ற ஏடுகளில் தமிழ் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதினார். சிவஞான போதத்தையும் ஆங்கிலத்தில் பெயர்த்துள்ளார். மொழிபெயர்ப்புத் துறைக்கு வழிகோலியவர் இவர் எனலாம்.

1880ல் இங்கிலாந்து சென்று, ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் ஐ.ஊ.ளு மாணவர்கட்கு தமிழும் தெலுங்கும் போதிக்கும் ஆசிரியராக அமர்ந்தார். அதுபோதுதான் திருவாசகத்தில் திளைத்து. உடல்நலக் குறைவுக்கிடையே அதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துத் தமது எண்பதாவது வயதில் வெளியிட்டார். இதனைப் பாராட்டி சுழலயட யுளயைவைஉ ளுழஉநைவல தங்கப் பதக்கமும், வேத சாஸ்திரி (னு.னு) என்ற பட்டமும் வழங்கியது. ‘இருவினை கடந்த செல்வன் இசைத்த சாகசத்தையெல்லாம் வரு விளையாட்டாற் போலும் மறுமொழி யதனில் வைத்தீர்’ எனப் பேராசிரியர் ஜீலியன் வில்சன் பாராட்டியது குறிக்கத்தக்கது. 1907ல் இயற்கை எய்தினார்.

நாற்பது ஆண்டுகட்கும் மேலாக நற்றமிழ்ப் பணியாற்றினார் போப் ஐயர். தமிழின் பெருமையை உலகறியச் செய்த சிறப்பு இவருக்கே உரியது, தமிழ் மறையை எத்தனையோ பேர் மொழி பெயர்க்க ‘முனைந்தும், முழுமையும் செய்ய இயலாது இடையிலே முறிந்துபட, இவர் அதனை முழுவதும் மொழி பெயர்த்து முடித்தார். ‘ஏசுநாதரின் இதய ஒலி’ ‘மலை உபதேசத்தின் எதிரொலி’ என்றும் போற்றிப் புகழ்ந்தார்.[1] சைவத்தையும் சைவ சித்தாந்தத்தையும் புகழ்ந்துள்ளார் பாருங்கள்: Saivism is the real religion of the south India. Siddhantha Philosophy has and

deserves to have far more influence than any other 'தமிழ்ப் புலமை வறுமைக்கு வழியாம்' என்றறிந்த இவர், அறுபது ஆண்டுகட்கும் மேலாகத் தமிழ்ப் பெருங்கடலில் நீந்தி மகிழ்ந்து நல்ல தொண்டாற்றிய திறம் வியந்து செயல் மறந்து பாராட்டற் பாலது. தொன்மை போந்த ஐயரை அருந்தமிழ் பெருந்தமிழராக்கியது. அவரது தமிழ்க் காதலுக்கோர் சான்ற என்று கல்லறைக்கென்று செலவாகும் தொகையில் ஒரு சிறு பகுதியாதல் தமிழ் மக்களுடையதாய் இருத்தல் வேண்டும் என்றும் எனது கல்லறையின் மேல் 'ஒரு தமிழ் மாணவன் என்று பொறிக்கப்பட்ட வேண்டும். எப்போதும் தமிழ் மாணவனாகவே இருக்கவும் அழைக்கப்படவும் விரும்பியதும் நினைக்க நெஞ்சம் குருகுகிறது. இவரது பற்றும் பணியும் நினையும் போது தமிழராகப் பிறந்த நமக்கு இத்தகு பற்று இருக்கிறதா எனும் ஐயமே எழுகிறது.

**3.டாக்டர் கால்டுவெல்** (1815-1981) 1815இல் அயர்லாந்தில் பிறந்து, ஸ்காட்லாந்தில் கல்வி பயின்று ஆங்கிலக் கிருத்துவ சங்கத்தைச் சார்ந்தது. 23வது வயதில் சமயப் பணி புரிவான் வேண்டி தமிழகம் வந்தார். திருநெல்வேலி மாவட்ட இடையன் குடியை இருப்பிடமாகவும் கொண்டார். ஆங்குக் கோயில் ஒன்று கட்டி இலட்சத்திற்கும் மேற்பட்டவரை கிருத்துவராக்கினார். இந்தியாவில் 53ஆண்டுகள் ஒன்றி வாழ்ந்து இந்தியருள் ஒருவரானார். இவர் இலத்தீன், கிரேக்கம், ஹீப்ரு, ஜெர்மன், பிரெஞ்ச் போன்ற மேலை நாட்டு மொழிகளிலும் தமிழ், தெலுங்கு, மலையாளம், துளு போன்ற தென்னக மொழிகளிலும் போதிய அறிவும் போற்றத்தக்க புலமையும் பெற்றிருந்தார். இதன் பயனாக 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' (A Comparative grammar of the Dravidian Languages) எனும் ஒப்பிலா உயர் நூல் ஒன்றை எழுதினார். இந்நூல் மூல ஆரிய இன மொழிகள் வேறு திராவிட மொழி இனங்கள் வேறு: தமிழுக்கும் வடமொழிக்கும் எவ்வித உளவும் இல்லை. வடமொழி இன்றியே தனித்து இயங்கக் கூடியது எனத் தக்க சான்று காட்டித் தருக்கமுறையில் அறுதியிட்டு உறுதி கூறியுள்ளார்.

இந்நூலே, தமிழ் மொழி நூல் ஆய்வுக்கு முன்னோடியாக அமைகிறது. இந்திய மொழிகட்கெல்லாம் தாய் வட மொழியே என்றிருந்த காலத்தில் ஆரியத்தினின்றும் தோன்றிய தமிழ் என்ற கொள்கையை விழுக்காட்டி, முதன் முதல் மறுத்துரைத்த பெருமை கால்டுவெல்லையே சாரும். திராவிட மொழிகள் ஒரு தனியினம் அவற்றிற்குத் தாய் தமிழே என மொழியியல் பெருமை உணராது உறங்கிக் கிடந்த நமக்கு விளக்கி உலகுக்கு உணர்த்திய – மொழியியல் ஆராய்ச்சியில் நமக்கு வழிகாட்டிய விடிவெள்ளி இவரே! திராவிட மொழிகட்குப் புத்துயிர் அளித்து உத்தமர்ளூ இவருக்குத் தமிழ்கூறு நல்லுகம் என்றென்றும் கட்டுப்பாடுடையது. இவ்வொப்பிலக்கணப் பணியைப் பாராட்டி சென்னைப் பல்கலைக்கழம; (Royal Asitatic Society) இரண்டும் 'இலக்கிய வேந்தர்' 'வேத விற்பன்னர்' என்ற பட்டங்களை வழங்கிப் பெருமைப் படுத்தின. 'எத்தனையோ பேர் கூடிச் செய்ய இயலாப் பெரும்பணியை, எத்தனையோ பிறவி

எடுத்துச் செய்யும் தமிழ்த் தொண்டினை ஒரு பிறவியில் ஒருவராகவே இருந்து செய்து செந்தமிழை உலகறிய - உலகவர் தொழச் செய்தார்' என்றால் மிகையாகாது.

தமிழ் மொழியின் வேர்ச் சொற்களைக் கொண்டு, பிறமொழியில் பயின்றுவரும் சொற்கள் பல, தமிழ்ச் சொற்களின் சிதைவே எனவும் நிறுவியள்ளார். 'அரிசி என்பதன் சிதைவே சுஉைந எனும் ஆங்கிலச் சொல். 'தோகை'யின் சிதைவே ஹீப்ரு மொழி பைபிளில் உள்ள 'துகி' 'கோழி'யின் சிதையே, சிந்திய மொழியில் காணப்பெறும் 'கோரி' என்பன போன்றவை சான்றாகும். இவர் 'நற்கருணைத் தியானமாலை' 'தாமரைத் தடாகம்' 'ஞானஸ்நானம்' போன்ற உரை நூல்களும் செய்துள்ளார். பாண்டி நாட்டின் முற்கால, இடைக்கால, தற்காலத் துறைமுகங்களான கொற்கை, காயல், தூத்துக்குடி ஆகியவற்றை நன்கு ஆராய்ந்து தமது அகழ்வாராய்ச்சியால் நமக்கு அறிவித்துள்ளார். வரலாற்றக்குத் துணை புரியும் வகையில் 'நெல்லை மாவட்ட வரலாற்றைச்' செப்பமுற அமைத்து அரசரினரின் நன்கொடையாக ஆயிரம் வெண் பொற் காசுகள் பெற்றுள்ளார்.

இதற்கு திறமான பணியாற்றிய இவர். 53 ஆண்டுகள் இந்தியாவில் உறைந்தார். இடையே மும்முறை இங்கிலாந்து சென்று மீண்டார். இறுதிமுறை இங்கிலாந்து சென்ற காலை, அங்கேயே தங்கிவிடுமாறு அன்பர்கள் வேண்டியும் கேளாது 'இத்துணை காலம் இந்தியாவிலேயே வாழ்ந்தேன். இந்தியர்களுக்காகவே உழைத்தேன். இனியும் உழைப்பேன் இந்தியாவிலேயே உயிர் துறப்பேன்' என்று சொல்லி வந்தார். அவ்வாறே 77ஆம் ஆண்டில் கொடைக்கானல் மலையில் உயிர் துறந்தார்! இடையன் குடியில் இவர் எழுப்பிய கோயிலிலேயே அடக்கம் செய்யப்பட்டார். இவர் திறம் எண்ணும் போது, இதயம் நெகிழ்கிறது. இவர் பணி நினையும் போது நெஞ்சம் நன்றி நவின்ற வண்ண மிருக்கிறது.

**4.தத்துவ போதகர்** (1577-1656) இத்தாலி நாட்டவர். 1606இல் தமிழகம் போர்ந்தவர். இயேசு சபை குரு. இவரது இயற்பெயர் சுழடிநசவ னுந ழேடிடைை. உயர்சாதி வாழ்ந்தவர். வடமொழியும் தென்மொழியும் கற்றவர். மதுரையில் சபை நிறுவி சமயப்பணி புரிந்தவர். சேலம், திருச்சி மாவட்டச் சிற்றூர்கட்கெல்லாம் சென்று சமயச் சொற்பொழிவாற்றி மதம் மாற்றினார்! நூறாயிர வரை கிருத்துவராக்கினார். இறுதியில் கண்பார்வை குறையவே, சென்னை சாந்தோம் கோவில் அருகே சிறு குடிலில் வாழ்ந்து 1656 இல் ஏசுபிரான் திருவடி அடைந்தார். சமயச் சார்புடைய வடடிமாழி கலந்த பல நூல்கள் யாத்துள்ளார். அச்சேறாத காரணத்தால் பல அழிந்தன. மந்திரமாலை, ஞானோபதேசம், ஆத்தும நிர்ணயம், சகுண நிவாரணம், புனர்ஜென்ம ஆட்சேபம், நித்திய ஜீவன் சல்லாபம், தத்துவக் கண்ணாடி, ஞானதீபிகை, சேசுநாதர் சரித்திரம், தமிழ் - போர்ச்சுகீசிய அகராதி போன்றன எழுதியுள்ளார். சமயத் தொண்டிற்காகப் பிறந்த செல்வக் குடும்பத்தைத் துறந்து, பொய் வேடம் புனைந்து இன்னலுற்று இடர்ப்பட்ட இவரது தொண்டு

வாழ்வு எண்ணும்போது இரு கண்களில் நீர் மல்குகிறது. வீரமாமுனிவர்க்கு நூறு ஆண்டுகட்கு முன்னமே வந்தவர். முதல் தமிழ் உரைநடை நூலை எழுதிய பெருமைக்கு உரியவர்.

**5.சீகன் பால்கு** (1683-1719) (Ziegenbalg) ஜெர்மன் நாட்டவர். நான்காம் ∴ப்ரெட்ரிக் மன்னன் விருப்பத்திற்கிணங்க 1705இல் தமிழ் நாட்டிற்கு வந்தார். தஞ்சைக்கடுத்த தரங்கம்பாடியில் எல்லப்பா என்பாரிடம் தமிழ் கற்றார். அங்கேயே சமயப்பணியும் புரிந்தார். தரங்கையில் ஓர் அச்சுக்கூடத்தையும், அதற்குதவியாக காகிதத் தொழிற்சாலை ஒன்றும் நிறுவினார். இதன்மூலம் கிறித்துவ சமய உண்மைகளை அச்சடித்து வெளியிட்டபோது, பண்டிதரிடையே முடங்கிக் கிடந்த தமிழைப் பாமரரிடமும் பரப்பினார். பைபிளைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். தமிழ் இலத்தீன் ஒப்பிலக்கணம் (Comparative study of Tamil & Latin grammar) தமிழ் இலத்தீன் அகராதியும் இவருடைய படைப்புகள், ஐரோப்பா சென்ற ஞான்று அருந்தமிழை மறவாதிருக்க, மலையப்பா என்ற தமிழரை உடன் அழைத்துச் சென்ற ஒண்மையும், இவரது பணியினைப் பாராட்டி இங்கிலாந்தில் கிறித்துவ அறிவு விளக்க சபையார் அளித்த வாழ்த்திதழுக்கு முதலில் லத்தின். அடுத்து தமிழிலும் பதிலிறுத் தமையும், குறிப்பிடத்தக்கவை. முதன் முதலில் தமிழில் நூல்களை அச்சிட்ட பெருமை இவருக்கே உரியது.

**6.எல்லிஸ்** (1819) ஆங்கில நாட்டினின்று 1796 இல் சென்னைக்கு வந்து நிலவரி மன்றச் செயலராக இருந்து பின்னர் சென்னை நகர கலெக்டராக வேலை பார்த்த இவர் வடமொழி தமிழ் இரண்டிலும் வல்லவர்ளூ சாமிநாதப் பிள்ளை, இராமச்சந்திர கவிராயர் ஆகியோரிடம் பயின்றார். அரிய தமிழ் சுவடிகளைச் சேகரித்துப் பாதுகாத்தார். சென்னை அரசாங்கக் கல்விச் சங்கத்தை நிறுவினார். 'வீரமாமுனிவரின் வாழ்க்கை' வரலாற்றைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதச் செய்தார். வீரமாமுனிவரின் நூல்களையெல்லாம் தேடவும் ஆவன செய்தார். இவரே பெஸ்கியின் 'தேம்பாவணி' ஏட்டுப்பிரதியை ஆவூர் என்னும் சிற்றூரில் கண்டவர். திருக்குறள் முதல் 13 அதிகாரங்களுக்குப் பண்டைத் தமிழ் இலக்கிய மேற்கோள்களுடன் ஆங்கிலத்தில் அருமையான உரை எழுதியுள்ளார். சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளது. இவர் இறக்கும் போது எண்ணற்ற சுவடிகள் இருந்தன. அருமை தெரியாத கலெக்டர் பெட்ரேயின் சமையல்காரன் பல திங்கள் அவற்றை அடுப்பெரித்தானாம்.

**7.ரேனியஸ்** (1790 - 1838) (Rhenius) ஜெர்மன் நாட்டவர். போப் ஐயரின் தொண்டுக்கு முன்னோடியாக இருந்தவர். அவரால் போற்றப்பட்டவர். லூத்தரன் மீனினைச் சேர்ந்தவர். பாளையங்கோட்டையில் சமயப்பணியாற்றியவர். மகர வித்வான் முகவை இராமானுஜ கவிராயரிடத்தில் தமிழ் கற்றார். புதிய ஏற்பாட்டைத் தமிழில் தந்தார். இவர் 'வே உதாரணத்திரட்டு' தமிழ் இலக்கண நூல்' 'தமிழ் ஞான நூல்' போன்றனவும் இயற்றியுள்ளார்.

**8.லாசரஸ் :** மாணவர்கள் நலன் கருதி நன்னூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். திருக்குறள் முழுவதும் இவரால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பழமொழிகளைத் திரட்டி The Dictionary of Tamil Proverbs என வெளியிட்டுள்ளார். தமிழ் அகராதித் துறையில் இதற்கோர் தனியிடம் உண்டு.

**9.இன்னும் சிலர்:** இவர்களின்றி எண்ணரிய மேலை நாட்டவர் சிறிய ஆனால் சிறந்த பணியாற்றியுள்ளனர். திருக்குறளை கிரால் என்பவர் ஜெர்மனியிலும், ஏரியல், லேமி லேசர் இருவரும் பிரெஞ்சிலும் மொழி பெயர்த்துள்ளார். பெப்ரீயஸ் தமிழ் இலக்கியப் பேச்சு மொழிச் சொற்களை கொண்ட அகராதி ஒன்றும் ராட்லர் 37,000 சொற்களைக் கொண்ட நான்கு புகுதியுடைய அகராதி ஒன்றும், அமெரிக்க அரசின் ஆதரவில் பெர்சீவல் என்பார் திரட்டிய 67,000 சொற்கள் கொண்ட பேரகராதி ஒன்றை வின்ஸ்லோவும் 2000 பழமொழிகளைத் திரட்டி பெர்சீவல் என்பாரும் வெளியிட்டுள்ளனர்.

**10.இதுபோது பலர்:** சுமில் கவலபில், ஆண்டிரநோவ், ஹெல்கா அண்டோன், ரூதின் செம்பியன், டாக்டர் ஆ'ர் போன்றார் அருந்தமிழ் பணியாற்றி வருகின்றனர்.

கிறத்துவர்களாய் இருந்தும் தம் சமயம் பரப்ப வந்த மேல் நாட்டவர் ஆற்றிய அருந்தமிழ்த் தொண்டு கண்டோம். கிருத்துவ சமயம் சார்ந்த தமிழ் நாட்டுப் பெரு மக்கள் ஆற்றிய பைந்தமிழ்ப் பெரும் பணி காண்போம்.

**1.வேதநாயகம் பிள்ளை:** (1826-1889) தமிழகக் கிறித்துவத் தொண்டர்களில் தலையாயவர். திருச்சிராப்பள்ளி-குளத்தூரில் பிறந்தவர். 'முன்சீப்' பதவி வகித்தவர். இவரது 'பிரதாப முதலியார் சரித்திரம்' இவருக்குப் பெரும் புகழைப் பெற்றுத் தந்தது. தமிழில் தோன்றிய முதல் நாவல் இதுவேயாகும். புதிய இலக்கியப் படைப்பாளர்க்கு இ.்.தோர் வழிகாட்டியாக அமைகிறது. கிறித்துவரேயாயினும் சமரச சன்மார்க்கத்தினர். இதனையொட்டி இவர் யாத்தது 'சர்வ சமய சமரசக் கீர்த்தனை' இவரது 'நீதி நூல்' எளிமையும் இனிமையும் வாய்ந்தது. பெண்ணின் பெருமை பேசுமாற்றான். 'பெண் மதிமாலை' எழுதினார். 'சுகுண சுந்தரி சரித்திரம்' (நாவல்) தேவ மாதா அந்தாதி, திருவருள் அந்தாதி, திருவருள் மாலை, பெரியநாயகி அம்மாள் பதிகம், சத்திய வேதக் கீர்த்தனை போன்ற நூல்களையும் இயற்றியுள்ளார். சிறந்த பல தனிப் பாடல்களும் செய்துள்ளார். மொத்தம் 16 நூல்கள் இயற்றியுள்ளார்.

செய்யுள், உரைநடை ஆகியவற்றில் எளிமையும் தெளிவும் கொண்டு எழுதி பாரதிக்கு முன்னோடியகாத் திகழ்ந்தார். நாயகம். நற்றமிழில் நகைச்சுவை நிரம்பச் செய்த பெருமைக்கு உரியவர். தமிழிசைக்கு உயிரூட்டிய பெருமை தமிழ் நாவல் துறைக்கு வித்திட்ட சிறப்பு இவரையே சாரும். தமிழ் நாவலின் தந்தை என்ற போற்றுதலுக்குரியவர்.

**2.ர்.யு.கிரு'ணபிள்ளை:** (1827-1900) 'கிறித்துவ கம்பர்' என அழைக்கப்படுபவர். திருநெல்வேலி ரெட்டியா பட்டியில் வைணவ வேளாளர் மரபில் தோன்றி, கிருத்துவராக மாறியவர். ஜான்பன்யன் எழுதிய ிடைபசஅைள ிசழபசநளள என்ற நூலை 'இரட்சண்ய யாத்திரீகம்' எனத் தமிழ்ப் படுத்தியுள்ளார். பெருங்காப்பியம். இதனையொட்டி இதுவரைத் தமிழ் பணியன் என்றழைக்கலாயினர். இவரது இன்னொரு நூல் 'கிறித்துவர்களின் தேவாரம்' எனப்பெறும் இரட்சண்ய மனோகரம், இவ்விரண்டிலும் திவ்விய பிரபந்தத்தின் மணமும், தாயுமானவர் போன்றோரின் சாயலும் கம்பரின் கனிவும், தேவாரத்துடிப்பும் காணலாம். 'இரட்சண்ய குறள்' ' இரட்சண்ய சமய திர்ணயம்' போன்றனவும் இயற்றியுள்ளார்.

**3.வேத நாயகி சாஸ்திரியார்:** (1774-1864) திருநெல்வேலியிலே பிறந்து, தஞ்சையிலே சமய செந்தமிழ் பணிபுரிந்தவர். இவரியற்றிய 'பெத்தலகேம் குறவஞ்சி' ஏசு நாதரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டது. இதனையொட்டி எழுந்தது 'சென்னை பட்டணப் பிரவேசம்' இவையிரண்டும் நாடக வகையின. ஏற்றப்பாட்டின் வாயிலாக ஞானத்தை ஊட்ட 'ஞானதச்சன நாடகம்' எழுதினார். 'ஞானக்கும்மி, ஆதியானந்தும், பராபரன் மாலை, பேரின்பக் காதல், ஜெபமாலை, ஞான உலா, வண்ண சமுத்திரம், தியானப் புலம்பல்,? அறிவானந்தம், ஆரணாதிந்தம் முதலிய பதினோரு நூல்கள் இயற்றினார். சரபோஜியால் புரக்கப்பட்டவர். இசைப் புலமை வாய்ந்தவர்.

கிருத்துவ தமிழ்த் தொண்டர்களில் இம்மூவரே தலையானவர்கள். இவர்களன்றி வேறு சிலரும் உளர். 4.வீரமாமுனிவர் காலத்தவரான அந்தோணிக் குட்டி அண்ணாவியார் மீது எண்ணரிய பாடல்கள் பாடியுள்ளார். 5.இன்பக் கவி, கச்சேசரி முதியார் குறவஞ்சி நாடகத்தை இயற்றியுள்ளார். 6.முத்துசாமிப் பிள்ளை ஊர் புதுச்சேரி, எல்லிஸ் துரை ஏற்படுத்திய சென்னைப் கல்விச் சங்கத் தவைர். ஏட்டுச் சுவடிகளைத் திரட்டியவர். வீரமாமுனிவரின் வாழ்க்கை வரலாற்றை ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் எழுதியவர். 'திக்காரம்' எனும் மறுப்பு நூல் எழுதியவர். 7.வித்துவான் சாமிநாதப் பிள்ளை புதுச்சேரியில் பிறந்தவர். எல்லிஸ்துரைக்கு ஆசிரியர். இவரியற்றியவை: நரசைக் கலம்பகம், சாமினாதன் பிள்ளைத் தமிழ், ஞானதிக்கராயர் காப்பியம். 8.சாமுவேல் பிள்ளைவ. 'தொல்காப்பிய நன்னூல்' எனும் இவர் நூலில், இரு விலக்கணங்களின்' ஒப்புட' உறழ்வும் உணர்த்தப்படுகின்றன. 9.சற்குணம் வின் பிராட் ஐயர், பன்யனின் Holy war எனும் நூலைத் தமிழாக்கியவர். தாவீது அரசன் அம்மானை, ஹீர மகத்துவம், இரத்தினாவளி நாடகக் கதை இவரியற்றிய நூல்கள். 10.நாயனப்ப முதலியார் புதுச்சேரியினர்ளூ சிற்றம்பல் கோலை, நாலடியார். திவாகரம் சூடாமணி நிகண்டு ஆகியவற்றைச் சுவடியினின்று அச்சேற்றியவர். வில்லிப் புத்தூர் பாரத பதிப்புக்குழு பதிப்பாசிரியர். 11.சாமுவேல் பவுல் ஐயர் நற்போதக இதழாசிரியர். பரதேசி மோட்சப் பிரயாணம் போனற் நூல்களை மொழிபெயர்த்துள்ளார். 12.பவர் ஐயர் ஆங்கில இந்தியர் சாஸ்திரம். ஐயர் எனும் சமணப்

புலவரிடம் தமிழ் கற்றவர். விசுவாசப் பிரமாண விளக்கம், நியாயப் பிரமாண விளக்கம், வேத அகராதி, தர்ம சாஸ்திரம் சாரம் ஆகிய நூல்களின் ஆசிரியர். சீவக சிந்தாமணியின் சில பகுதிகளை 1886 லேயே அச்சிட்டுள்ளார். 13.கிருத்துவக் கல்லூரிப் பேராசிரியர் சற்குணர்.

**தஞ்சை ஆபிரகாம் பண்டிதர்:** தமிழருக்கு இசை இல்லை எனும் வசை போக்க வந்த அறிஞன், திருநெல்வேலி சாம்பூர் வடகரை சொந்த ஊர். தமிழ் இலக்கியங்களை ஆய்ந்து, மேலைநாட்டு இசைக்கும் தமிழிசைக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைஞு வடநாட்டு தென்னாட்டு இசை இரண்டின் மாறுபாடு இவற்றை ஆய்ந்து, ‘கருணாமிர்த சாகரம்’ எனும் இசைப் பேரிலக்கியம் யாத்துள்ளார். மங்கி மடிந்து மறைந்த தமிழிசைக்கு உயிரூட்டி உண்மை நிறுவிய ஒண்மையார். யாழையும் செய்து செயல் முறையில் தமிழ்ப் பண்களின் திறமுணர்த்தினார். எந்நாட்டவரிடத்தும் இல்லாத 8000 ஆண்டுகட்கு முந்தையது தமிழிசை என நிறுவினார். இவரது திருமகனார் ஆ.வரகுண பாண்டியனார் ‘பாணர் கைவழி’ எனும் நூலை எழுதியுள்ளமை குறிப்பிடத் தகக்து. தமிழ் மருத்துவத் துறையிலும் ஆக்கப் பணிகள் பல செய்துள்ளார். தனபாண்டியன் என்பா சென்னை வானொலியில் பணிபுரிகிறார். இசை வல்லவன். இவ்வாறு சொல்லாலும் செயலாலும் செந்தமிழுக்குச் சிறக்கப் பணியாற்றினர். கிறித்துவத் தமிழ்த் தொண்டர்கள். இன் தமிழை உலக அரங்கில் இடம் பெறச் செய்த, உலகினர் பார்வைக்கு கொண்டு சென்ற பெருமை கிறித்துவ சமயத்திற்கே உரியது.

மேலை, தமிழ்நாட்டுக்க கிறித்துவர்களேயன்றி, ஈழ நாட்டுக் கிறித்துவர்கள் எண்ணரிய பணிகள் இயற்றியள்ளனர். பெருமைக்குரியவர் 1.நல்லூர் ஞானப் பிரகாசர்ஞு பன்மொழிப் பேரறிஞர். மொழி நூலாராய்ச்சியின் முன்னோடியாக இவரது Comparative Etymoligical & Lexicon, Studies in Tamil Etymology எனும் நூல்கள் துணை நிற்கின்றன. 2.கனகசபைப் புலவர் யாழ்பாணத்தவர் அழகர் சாமி மடல், திருவர்குப்புராணம் இவர் நூல்கள் 3.குமார குலசிங்க முதலியார், யாழ்பாணம் பதிவிரதை விலாசம் போன்றன எழுதியுள்ளார். 4.தாளிகை சதாசிவம் பிள்ளை து.யுஆர்னால்ட் என்றழைக்கப் பெறுபவர். ‘உதய தாரகை’ தாளிகை ஆசிரியர். திருச்சதகம் நன்னெறி மாலை, வெல்லையந்தாதி, வான சாஸ்திரம், உலக சாஸ்திரம், நன்னெறிக் கொத்து, சத்போத சாரம், இல்லற நொண்டி, நன்னெறி கதா சங்கிரகம், பாவலர் சரித்திரத் தீபகம் ஆகியன இயற்றியுள்ளார், 5.சிதம்பரம் பிள்ளை நியாய இலக்கணம். தமிழ் வியாகரணம், இலக்கிய சங்கிரம் யாத்துள்ளார். 6.பிலிப்பு - தெ - மெல்லோ மதகுருவாக இருந்தவர். சத்தியத்தின் ஜெயம், மருதப்பக் குறவஞ்சி, சில மத நூல்கள் இயற்றியுள்ளார்.

மலேயா பல்கலைக்கழக இந்தி மொழித் துறைத் தலைவராக இருந்த டாக்டர். தனிநாயக அடிகளின் தொண்டு தலைமேற் கொள்ளத் தக்கது. ஞாலமெல்லாம் தமிழ் பரப்பும் நற்பணியாற்றினார். வுயஅடை ஊரடவரசந எனும் ஆங்கில இதழை நடத்தினார். அதனையொட்டிக்

கழகம் ஒன்றும் இயங்கி வருகிறது. Academy of Tamil Culture என்ற பெயரில்ளூ தமிழ்த்தூது Nature in Ancient Tamil poetry போன்றன எழுதியுள்ளார்.

இது போதும் எண்ணரிய கிருத்துவர்கள் இன்தமிழ்ப் பணியாற்றி வருகின்றனர். ரம்போலா மாஸ்கரேனஸ், சாமிமுத்து, வ.மீ.ஞானப் பிரகாச அடிகள், சங்.இராசமாணிக்கம், வளனரசு, சாலமன் பாப்பையா, அடைக்கலசாமி, அருளானந்தம், பொன்னரசு, கிரேஸ் செல்வராஜ், சத்தியசாட்சி, சாமுவேல் தாசன், தேவதாசன், அபிரகாம் அருளப்பன், மோசஸ் பொன்னையர், ஜேசுதாசன், டேவிட் அதிசயநாதன், தேவராசன், ஜான் சாமுவேல், பால் சாமுவேல், பால்பாண்டியன், டாக்டர் இஸ்ரேல்.ஏசுதாசன்.

## 4.5. இஸ்லாமியமும் தமிழும்

ஏனை மதத்தவர் போலவே, இசுலாமியர்களும் இன் தமிழுக்குச் செய்யுள், உரைநடை இரு வகையில் எண்ணரிய நூல்கள் இயற்றியுள்ளார். இசுலாமியர் தொண்டுக்கு ஏனையோர் தொண்டுக்கும் உள்ள ஒரு பெரு வேற்றுமை, சமண பௌத்த சைவ சமயத்தவர் போல் பிற சமயக் காழ்ப்போ - கண்டனமோ, கிறித்துவம் போன்று அனைவரையும் மதம் மாற்றும் சமயப் பிரச்சாரமோ செய்திலர். தம் சமயக் கருத்தையும் பரப்பும் பெரு நோக்கே கொண்டிருந்தனர். இஸ்லாமிய தமிழிலக்கியம், தமிழில் எழுதியன. அரபு மொழியில் எழுதியன என இரு பிரிவில் அடங்கும். இஸ்லாமியக் கோட்பாடுகளைக் கொண்டவை. சமயத் தொடர்பில்லாதவை என இரு போக்கில் உள்ளது. அது போன்றே தொண்டு தமிழை வளர்த்த புலவர்களும் அவர்கள் நூல்களும் ஆதரித்த புலவர்களும் என இருமுறையில் அமையும் இவ்வகையில் சீதக்காதியும், உமறுப்புலவர், மஸ்தான் சாகிபு மூவரும் முஸ்லீம் தமிழ்ப் பணியில் தலை சிறந்து விளங்குகின்றனர். இனி முகம்மதியர் தமிழ்ப பணி நிலை பகர்வாம்.

**1.காப்பிய வகை:** இசுலாமிய தமிழ் இலக்கியங்களில் முதன்மையானது. பெரியது. சீறாப்புராணம். காப்பியம் சீறா - சீரத் எனும் அராபிய சொல்லின் திரிவுளூ வாழ்க்கை என்பது பொருள். முகமது நபியின் வாழ்க்கையை விளம்புவதாகும். வலாதத்து (பிறப்பு) நுபுவத்து (தரிசனம்) ஹிஜ்ரத்து என மூன்று காண்டங்களையுடையது. சபை அலங்காரப் படலம் முதல் ஹணிக் கூட்டத்தார் விடப் பெரியது. கம்பராமாயணத்தை விடச் சிறியது. ஆனாலும், சிறந்தது. கம்பர், திருத்தகக் தேவர் சாயலும் செல்வாக்கும் கொண்டது. அமைப்பிலும், வருணனை வரம்பிலும் தமிழ் மரபு குலையாது செல்வது. இதனை இயற்றியவர் உமறுப்புலவர். 17ஆம் நூற்றாண்டையர், கீழக்கரையில் பிறந்தவர். எட்டயபுர அரசவைப் புலவர் கடிகை முத்துப் புலவரிடம் நான்காண்டுகள் நற்றமிழ் பயின்ற நிறைந்த புலமை பெற்றார். வடநாட்டு ‘வலை வாரிதி’ என்பானுடன் வாதிட்டு வென்று தம் ஆசிரியருக்குப் பின் அவைக்களப் புலவரானவர். செத்தும் கொடை கொடுத்த சீதக்காதி மரைக்காயர் வேண்டுகோட்கிணங்க, சீறாப்புராணம் எழுதி, அவருடைய நண்பர் அப்துல் மரைக்காயர் பார்வையில் அரங்கேற்றினார்.

**2.சிற்றிலக்கிய வகை:** பிற்றை நாளில் பைந்தமிழில் பல்கிய பிரபந்தங்களைப் பின்பற்றி இசுலாமியப் புலவர்கள் பல நூல்கள் இயற்றினார்.

**1.அம்மானை:** 'நபி அவதார அம்மானை' முகமது நபியின் பிறப்பினைப் பற்றியது. சீறாப்புராணம் அவதாரப் படலத்தை அடிப்படையாகக் கொண்டது. கண்ணிகளால் அமைந்தது. உமறுப் புலவரின் மகன் 'கவிக்களஞ்சியப் புலவர்' பாடியது. 'பப்பரத்தியார் அம்மானை' பாடியவர் செய்யிது மீறாப்புலவர். நபியின் மருமகனான காலிப் அலியைத் தலைவராகக் கொண்டது. கண்ணிகளால் ஆயது. போரில் வெல்வது. இளவரசி பப்பரத்தியாரை மணப்பது. இருவருக்கும் மகன் பிறப்பது பற்றி இந்நூல் பேசுகிறது.

**2.அந்தாதி:** 'திருமதீனத் தந்தாதி' (முகம்மது நபி - மதினா நகரைப் பற்றியது பிச்சை இபுறாகிம் புலவர் இயற்றியது. திருமக்காத் திரிபந்தாதி' குலாம் காதிறு நாவரால் இயற்றப்பட்டது. மக்கா நகரைப் பொருளாகக் கொண்டது. நபியின் திருப்போதனைகள் நிறைந்துள்ளது. செய்து அப்துல் காதிறு நயினார் 'நாகை யந்தாதி' பாடியுள்ளார். நாகூர் - ஆங்கு அடக்கமான ஆண்டவர் புகழ் பாடுவது.

**3.ஆற்றுப்படை:** குலாம் காதிறு நாவலர் 'மதுரைச் சங்கத்துப் புலவர் ஆற்றுப்படை' பாடியுள்ளார். தற்காலப் போக்கினது. புகை வண்டி ஓடுவது மரவட்டை ஊர்வது போன்றுளதாகக் காட்டுகின்றார். பாண்டித்துரைத் தேவரின் சங்க நடப்புகள் நன்கு நவிலப்பட்டுள்ளது. நயமும் நகைச்சுவையும் நிரம்பிய நூல்.

**4.பிள்ளைத் தமிழ்:** செய்யது அனபியா சாகிபு. நபிகள் நாயகத்தின் பெருமை 'பிள்ளைத் தமிழ்' பாடியுள்ளார். முகம்மது நபியின் பிள்ளமைப் பருவத்தின் வெற்றிகள் பேசப்படுகின்றன. 'முகைதீன் ஆண்டவர் பிள்ளைத் தமிழை செய்யிது முகியத்தீன் கவிராயர் இயற்றியுள்ளார். முகைதீன் ஆண்டவர் பற்றியது. நாகூர் பிள்ளைத் தமிழ் நாகூராண்டவரைக் குழந்தையாகக் கொண்டது. ஆரிபு பிள்ளைத் தமிழ் நாயத்தின் மகளைக் குழந்தையாகக் கொண்டு பாடிய 'பெண்பாற் பிள்ளைத் தமிழ்'

**5.கோவை:** சீதக்காதிமேல் உமறுப்புலவர் பாடியதாக ஒரு நூல் உளது.

**6.நொண்டி நாடகம்:** இசுலாமியர் தமிழில் புதுவதாகப் புனைந்த இலக்கிய வகை இது. 'திருக்கச்சூர் நொண்டி நாடகம்' முதலிய இதில் அடங்கும்.

**3.இசுலாமிய இலக்கிய வகை:** அரேபியா பாரசீக இலக்கியங்களைப் பின்பற்றித் தமிழில் இல்லா இசுலாமிய புதிய இலக்கிய வகைகளைப் படைத்துத் தமிழ் இலக்கியச் செல்வத்தைப் பெருக்கினர். இசுலாமியத் தமிழ் இலக்கியத்திற்கே உரிய படைப்புகள் இவை.

**1.படைப்போர்:** இஸ்லாமியருக்கும் ஏனையோருக்கு மிடையே நடந்த போரைப் பற்றியது. இதனை றுயச டீயடடயனள எனலாம். 'ஐந்து படைப்போர்' அரசனிப் புலவரால் இயற்றப்படது. நபின் மருமகன் அலியின் திறம் பாடுவது. 'செய்தத்துப் படைப்போர்' ஹீசைன் படைப்போர். இரண்டையும் முறையே குஞ்சு முசுப் புலவர், காளை அசன் அலிப்புலவர் பாடியுள்ளார்.

**2.முனஜாத்து:** அல்லா அருள் நாடி விண்ணப்பிப்தாகும். 'முன ஜாத்து மாலை' 12 நூல்களைக் கொண்டது. செய்யின் முகம்மது ஆலிம் இயற்றியது.

**3.கிஸ்ஸா:** கதை கூறுதலாகும். ஐயம்பேட்டை மதாறு சாகிபு புலவர் 'யூசுபு நபி கிஸ்ஸா' பாடியுள்ளார். அப்துல் காதர் சாகிபு யெ்தூன் கிஸ்ஸா யாத்துள்ளார்.

**4.மசலா:** கேள்விகள் அல்லது பிரச்சனைகள் என்பது பொருள். 'நூறு மசலா' என்ற நூலின் ஆசிரியர் தெரியவில்லை. ஆயிரம் தலை வாங்கிய அபூர்வ சிந்தாமணி கதை போன்றது. 'ஆயிர மசலா' வண்ணப் பரிமளப் புலவராலும் 'வெள்ளாட்டி மசலா' செய்து அப்துல் காதிறு லெப்பையாலும் பாடப்பட்டவை முன் ஜாத் கிஸ்ஸா மசலா மூன்றும் அரபுப் பெயரன.

**5.நாமா:** நூல், வரலாறு எனப் பெருள்படும் முகமது நபியின் அருஞ்செயல் கூறும். 'மி.்.ராஜீ நாமா' வைப் பாடியவர் மதாறு சாகிபு புலவர் 'நூறு நாமா' செய்யிதகமது மரைக்காயர் பாடியதாகும். நாமா பாரசீகப் பாவகையாகும.

**4.மக்கள் இலக்கிய வகை:** பாமரரும் படித்து இன்புறும் வகையில் எளிய இனிய நூல்களும் இயற்றினர். எளியனவாயினும் இவை நாடோடி இலக்கியங்களைக் காட்டிலும் தரம் வாய்ந்தவை.

**1.மாலை:** மலர்கள் மாலையாவது போல காக்கள் மாலை போல் சேர்க்கப்படுவதாம். 'முதுமொழி மாலை' நபியின் புகழ் பாடுவது. உமறுப்புலவர் பாடியது. 'ரசூல் மாலை' சாமு நயினா லெப்பை இயற்றியது. கந்தூரி போனற் விழாக்களின் போது ஓதப்படுவது. 'ஓசியத்து மாலை' மின்னாநூறுதீன் புலவர் பாடியது. ஒசியத்து என்றால், இறக்கும் தறுவாயிலிருக்கும் ஒருவரின் கடைசி மொழிகள் என்பதாகும். முஸ்லீம் மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் போற்றுவன. இராஜாமணி மாலை 'முகியத்தீன் மாலை' இரண்டையும் செய்தவர் மதாறுப்புலவர். நபியின் தோழரான கொத்தலகாண் புலவர். 'பலுலூன் அசுகாபி பற்றிய மாலை' இயற்றியுள்ளார். இஸ்லாத்தின் 2வது

காலிப்பாகிய உமறு, நீதியை நிலைநாட்டத் தன்மகன். அபு'குமாவைத் தண்டித்தமை கூறுவது. செய்தக்காப் புலவர் பாடியது. 'அபூ'துமா மாலை' யாகும். இனி இசையோடு கூடிய சில நூல்களைக் காண்போம்.

**2.ஏசல்:** தமிழில் எட்டுக்குடி ஏசல், வள்ளித்தெய்வயானை ஏசல் போன்றன உள. அவை காதல் பற்றியன. ஆனால் இஸ்லாமிய ஏசலோ, சமயக்கோட்பாடுகள் கூறுவன. 'நபி நாயகம் பேரில் ஏசற் கண்ணிகள்' 'முகயத்தீன் ஆண்டவர் போல் தாய் மகள் ஏசல்' இரண்டும் சாகுல் அமீதுப் புலவர் இயற்றியவை.

**3.சிந்து:** நயினா முகம்மது ஒலியுல்லரிவின் புகழ்பாடி சினிக்காதிறு முகிதீன் 'நவநீத ரத்னால்நகாரச் சிந்து' பாடியுள்ளார். முகம்மது நபி, முகைதீன் ஆண்டவர். மீரான் சாகிபு ஆகியோர் பற்றிய சிந்து நாவல்களின் தொகுதியே காளை அசன் அலி புலவர் பாடிய 'பூவடிச் சிந்து' ஆகும்! காவடிச் சிந்து மெட்டுக்களே இதில் அமையும்.

**4.கும்மி:** முகைதீன் நாவலர், 'மாப்பிள்ளை லெப்பை ஆலிம் சீவிய சரித்திரக் கும்மி' பாடியுள்ளார். 'செய்கு மஸ்தபா ஒலியுல்லா காரண அலங்காரக் கும்மி' பாடியவர் முகம்மது சாசிம் புலவர். மதுரகவி மதாறு புலவர் பாடிய 'திருக்காரணசிங்காரக் கும்மி' நாகூர் ஆண்டவரைப் புகழ்வதாம்.

**5.தாலாட்டு:** ஞானத் தாலாட்டு, சுகானந்தத் தாலாட்டு, மணிமந்திரத் தாலாட்டு, மீறான் தலாட்டு, பாலகர் தாலாட்டு ஆகிய ஐந்தும் அடங்கியது. 'பஞ்சரத்தினத் தாலாட்டு' காளை அசலனிப் புலவர் படைப்பு.

**6.திருப்புகழ்:** 'முஸ்லீம் மக்கள் திருப்புகழ்' நபியின் ஆமல் பாடியவர் காயற்பட்டண காசிம் புலவர். அருணகிரியார் திருப்புகழ் போன்றது. 'நவரத்தினத் திருப்புகழை' முகிதீன் கவிராயரும் பாடியுள்ளார்.

**7.கீர்த்தனை:** 'சீறாக் கீர்த்தனை' சிறந்த ஒன்று செய்யிது அபுபக்கர் புலவர் செய்தது. சீறாப் புராணத்தை அடிப்படையாகக் கொண்டது. 'ஆதி நூதன அலங்காரக் கீர்த்தனை' நபிகள் நாயகம் பற்றியது, செ.மு.முகம்மது இபுராகிம் பாடியது. அல்லா நபி, போன்றோர் புகழ்பாடுவன. 'சங்கீத சிந்தாமணி' 'ஆனந்த சாகித்தியம்' இரண்டுமாகும். இவற்றைத் தொகுத்தவர் செய்யது முகியித்தீன் கவிராயர்.

**8.ஆனந்தக் களிப்பு:** ‘மென்னான ஆனந்தக் களிப்பு’ குறிப்பிடத்தக்க ஒன்றாக பாடியவர் முகம்மது லெப்பை ஆலீம். இவையன்றி தெம்மாங்கு, ஊஞ்சற் பாட்டு, தோழிப் பெண் பாட்டு என எண்ணரிய இலக்கிய வகைகளை எடுத்தாண்டுள்ளனர்.

**9.ஞானப் பனுவல்:** தமிழிலக்கியத்தில் தத்துவப் பெரியார்களின் பங்கு பெரிது. அதுபோன்றே இசுலாமியத் தமிழ்த் தொண்டில் பெரும்பகுதி இசுலாமிய ஞானியருடையதாகும். முப்பெரும் ஞானிகள் முதன்மை பெறுகின்றனர்.

**1.தலையாயவர்:** குணங்குடி மஸ்தான் சாகிபு. இயற்பெயர் சுல்தான் அப்துல் காதிறு லெப்பை ஆலிம். மஸ்தான் - ஞானி என்பது குறிக்கும். இவருடைய பாடல்கள் மஸ்தான் சாகிபு திருப்பாடல்கள் என்றே வழங்குகின்றன. தாயுமானர் பாடல்கட்கும் இவற்றிற்கும் நெருங்கிய ஒற்றுமை உள்ளன. 2.காலங்குடி மச்சரேகைச் சித்தன் செய்யிது அப்துல் வாரிது ஆலிம் மவ்லானா ஐதருஸ் பாடிய திருப்பாடல்கள் பத்து பிரிவின். 3.தற்கலை பீர் முகம்மது சாகிபு ‘ஞானமணிமாலை’ ‘பிஸ்மில் குறம்’ ‘ஞானப் பகழ்ச்சி’ ‘ஞானக் குறம்’ ஞான ரத்தினக் குறவஞ்சி’ ‘திருமெஞ்ஞான சரநூல்’ ‘ஞானச்சுடர் பதிகங்கள்’ ஞான நடனம்’ ‘ஞானப் பால்’ ‘ஞானப் பாட்டு’ ‘ஆனந்தக் களிப்பு’ ஆகிய இயற்றியுள்ளார். இவை ஞானப் பாடல்கள் எனப்படும் இம்மூன்வரன்றி அப்துல்கனி சாகிபு, செய்குமுஸ்தாபா, செய்யது முகம்மது காதிரி, செய்து அப்துல் காதிறு, வாலை மஸ்தான் சாகிபு, குன்னாளி செய்கு முகைதீன் சாகிபு, செய்கு முகம்மது அப்துல்லா சாகிபு, செய்யது அலி வாலை குரு மஸ்தான் ஆகிய எழுவரும் தத்துவப் பாடல்களும் பனுவல்களும் பாடியுள்ளனர்.

**6.வசன வகை:** சமய மாறுபாட்டாலும் இலக்கிய சர்ச்சைகளும் உரைநடை நூல்கள் பல தோன்றலாயின. அரபு நூல்களில் மொழி பெயர்ப்பாகவும் உருது நூல்களில் தழுவலாகவும் சமயக் கோட்பாடுகள் சட்ட திட்டங்கள் பற்றியனவாகவும் இருக்கின்றனவே தவிர இலக்கிய மணம் மிக்க நூல்கள் மிகக் குறைவென்றே கூற வேண்டியுள்ளது. ‘முஸ்லீம் அத்வைத மூலமொழி’ முகம்மது அப்துல் ரகுமான் இயற்றியது. ‘உலூமுத்தீன்’ செய்யது அகமது கபீர் செய்தது. ‘பஞ்ச வரலாற்று விளக்கம்’ காதிறு கனிப் புலவராலும் ‘கிறித்துமத திரியேத்துவ மறுப்பு ‘முகம்மது சம்சுதீன் சாகிபுவாலும் எழுதப்பட்டவை. ‘இஸ்லாமிய ஞான பேதம்’ தாவுத் ‘ா இயற்றியது. இவை சமய சம்பந்தமானவை. சீறாப்புராண உரை பற்றிய வாத நூல் சீறா நபியவதாரப் படல உரைக் கடிலகம். கதிறு அசனா மரைக்காயர் இயற்றியது. கதை கூறுமாற்றான் கிளைத்த உரை நடை நூல்கள் ‘காளியாருக்கும் கள்ளனுக்கும் நடந்த கிஸ்ஸா’ ‘ஹீர்முஜ் கதை’ ‘ முகையித்தீன் ஆண்டவர் சரித்திரம் ‘மௌலானா நூமி சீவிய சரித்திரம்’ போன்றன மதத் தலைவர்கள் பற்றியன. ‘பைலுல் ரகுமான்’ பத்திஹீல் தய்யான், ‘தறீக்குல் ஜன்னா’ ‘சன்மார்க்க இலகு போத வினாவிடை போன்ற இஸ்லாமிய சட்டம் பற்றிய நூல்கள்.

**7.ஒழுக்க நூல் வகை:** இஸ்லாத்தை மையமாகக் கொண்டு நூல்கள் அமையினும் இலக்கிய நோக்கே கொண்டு இயற்றப்பட்ட இஸ்லாமிய நூல்களும் இல்லாமலில்லை. 'ஆசாரக்கோவை' அப்துல் மஜ்ஜீது பாடியது. 'திருநெறி நீதம்' பாடியவர் பீர் முகம்மது சாகிபு.

**8.சமய நூல் வகை:** பொது மக்களும் இசுலாமியச் சமயத்தைப் புரிந்து கொள்ள 'வேத புராணம்' 'மா அரிபத்து மாலை' 'மீசான் மாலை' 'சு.அபில் ஈமான்' போன்றன முறையே ஒலியுல்லா பீர் முகம்மது செய்கு முஸ்தபா ஜமாலூதீன் ஆகியோரால் இயற்றப்பட்டன. இவையின்றேல் இஸ்லாமியத் தமிழர்க்கே இஸ்லாம் பற்றி அறிய முடியாது போயிருக்கும்.

**9.உரை வகை:** நயினா முகம்மது பாவலர். பீர் முகம்மது சாகிபு பாடல்கட்கும் குலாம் காதிறு நாவலர் சீறாப்புராண நபியவதாரப் படலத்துக்கும் உரையெழுதியுள்ளார். இன்னும் சதாவதானி செய்கு தம்பிப் பாவலர் போன்ற உரையாசிரியர்களும் இருக்கின்றனர்.

**10.சொல் வகை:** 17,18 ஆம் நூற்றாண்டுகளில் தமிழகத்தில் நவாப் ஆட்சி நிலவியது. அரசு மொழியாக பாரசீகமும் உருதும் அமைந்தன. குராஅன் போன்ற மத நூல்களை தெய் மொழியாகிய அரபிலேயே படிக்க வேண்டும் என்ற நம்பிக்கையும் இருந்தது. ஆகவே வேதத்தைப் பயில அரபு மொழியையும், அரசியலை நடத்த உருது - பாரசீக மொழிகளையும் முஸ்லீம் மக்கள் பயின்றார்கள். அதன் பயனால் பல சொற்கள் தமிழில் கலந்தனளூ ஆயினும் பேச்சில் அதிகமாகவும், இலக்கியங்களில் குறைவாகவும் சேர்ந்தன. மதச் சார்பான நூல்களில் மிகுதியான சொற்கள் உள்ளன. இசுலாமியத்தால் இன் தமிழில் இரண்டறக் கலந்து, விலக்க வொண்ணா வகையில் இன்றியமையாச் சொற்களானவை 1500க்கும் மேற்பட்டவை. அவற்றுள் சில: அசல், அமல், அனாமத்து, அமீனா, அல்வா, ஆஜர், கச்சேரி, கஜானா, கரார், கைதி, சவால், சாமான், தகரார், டபேதார், தாலுகா, நகல், பராரி, பிர்கா, பைசல், மசோதா, மராமத்து, மஹால், மாசுல், மாமுல், மாஜி, முகாம், முன்சீபு, மைதானம், ரத்து, ராஜிநாமா, ருஜு, லாயக்கு, வாக்காலத்து, வக்கீல், வசூல், வாயிதா, வாரிசு, ஜப்தி, ஜவாபு, ஜாமீன், ஜாஸ்தி, ஜில்லா, சர்பத், கம்மி, சரம், கிஸ்தி, குமாஸ்தா, சர்க்கார், சிப்பந்தி, சுமார், தயார், தஸ்தாவேஜீ, திவான், பந்தோபஸ்து, படுதா, பாரா, பே', மனு, ரஸ்து, வாபஸ், ஜமீன், ஜோர், தண்டா, தபால், பட்டுவடா, பர்த்தி, குரமா, பிரியாணி, கூஜா, அண்டா, உ'ார், ஜாக்கிரதை, சபர்', கப்ஸா, உடான்சு, சௌடால், வத்தி, சர்க்கா, கல்தா, கோதா, முஸ்தீபு. இங்ஙனம் எத்தனையோ துறையில் இஸ்லாமியர் பணியாற்றியுள்ளதோடு, எண்ணற்ற புலவர்களும் இத்தமிழ்த் தொண்டு இயற்றியுள்ளனர். சிறந்த சிலரைச் செப்புவாம்.

**சேகணாப் புலவர்:** ஊர் காயல், 'குத்பு நாயகம்' என்ற பெயரில் முகய்தீன் ஆண்டவர் வரலாறு பாடியுள்ளார். நாக, அட்ட, கமல பந்தங்களும் பாடியுள்ளார். நாகை யந்தாதி, திருப்புகழ், மாலை நூல்களும் இயற்றியுள்ளார்.

**ஜவ்வாது புலவர்:** சீட்டு, சரம கவிகளும், நபியின் மீது பிள்ளைத் தமிழும் பாடியுள்ளார். பாப் புனைந்தே பெரும்பொருள் ஈட்டிய பெருமையர்.

**சையது முகம்மது அண்ணாவியார்:** தம் நண்பர் கதிர்வேலு உபாத்தியார் பழனிக்குக் காவடி எடுக்கச் செல்வதறிந்த அச்ணாவியார் 'பழனிக்குப் போக வேண்டா முருகனை இங்கேயே வரவழைப்போம்' எனக் கூறி, 'சுப்பிரமணியர் பிரசன்னப் பதிகம், படித் தமிழ் முறைகளை வரவழைத்த முகம்மதியர். பத்து புராணங்களும், 'அலி நாமா' போன்ற நூல்களும் இயற்றியுள்ளார். 'மதுர கவி' என்ற சிறப்புக்குரியவர்.

**வண்ணக் களஞ்சியப் புலவர்:** இராமநாதபுரம் என்ற ஊரில் பிறந்த இவரது இயற்பெயர் அமீது இபுராகீம் வண்ணக்கவிகளை விரைந்து பாடும் திறம் கண்ட நாகூர் மக்கள். 'வண்ணக் களஞ்சியம்' என்ற பட்டமளித்துப் பாராட்டினர். அவ்வூர்ப் பத்தானை மரக்காயர் தம் மகளை இவருக்கு மணம் முடித்தார். இவர் நாவன்மையில் மயங்கி! சுலைமான் நபியின் வரலாற்றை 'இராச நாயக்' எனற் பெயரில் புராணமாக 2240 விருத்தங்களில் வடித்துள்ளார். 'தீன் விளக்கம்' அலி பாது'ா நாடகம்' போன்றனவும் இவர் இயற்றினவே.

**ஐதுறூசு நயினார்ப் புலவர்:** ஆத்ம ஞானி, நகைச்சுவையாகப் பாடுபவர். 'புலவர் வரி' என ஏற்படுத்தி, பொது மக்கள் அத்தொகையை இவருக்கு வழங்கியவர். இவர் பாடியன 'பாடல் திரட்டு' என்ற பெயரில் இருக்கிறது. இவருக்குப் பொடிப் பைத்தியம் உண்டு. அதனை யொட்டி இவரது பாட்டைப் பாருங்கள்,

> **'பொடிதனை மடியில் வைத்துக் கேட்பவர்க்கு இல்லை யென்றால்**
> **அடிதனில் மூலம் தள்ளி அநியாயமாய்ச் சாகுவாரே'**

**குலாம் காதிறு நாவலர்:** பிறப்பகம் நாகூர், மும்மணிக்கோவை, நாகூர்க் கலம்பகம், மதுரைக்கோவை போன்ற நூல்களின் ஆசிரியர், நூலாசிரியர் மட்டுமன்று, உரையாசிரியரும் கூட அவையோர் ஐயங்கட்கு உடன் தக்க விடை தரும் திறத்தார். இவரது 'புலவர் ஆற்றுப்படை' போற்றுதற்குரியது.

**செய்கு ஆலிப் புலவர்:** முகமதிய சமய வரலாற்றை 743 செய்யுட்களில் 'மிகுறாக மாலை' எனப் பாடினார். ஓர் அந்நகரின் உதவியால் இந்நூலை அரங்கேற்றிய காலை. ஆண்டவரின் காட்சி கிடைத்தோடு அரங்கேற்றத்திற்கு உதவி அச்செல்வருக்குக் கண்பார்வையும் கிடைத்ததாம். 'அலிப் புலவர். 'தலைமுழுக ஐந்தாறு கொக்கு கீழே விழ' என்றாராம். உடனே கொக்குகள் செத்துக் கீழ் விழுந்தனவாம்.

**சர்க்கரை, சவ்வாது புலவர்கள்:** மைத்துனர்கள், நகையாடுவதில் வல்லவர்கள். ஒரு முறை பள்ளி வாசலில் தொழுது கொண்டிருந்தார் சர்க்கரைப் பலவர். அப்போது சவ்வாது புலவர் உள்ளே நுழைந்தார். உடனே சர்க்கரைப் புலவர். பள்ளி வாசலில் இருக்கக்கூடாத சவ்வாது எப்படி உள்ளே வந்தது என்றார். சட்டெனச் சவ்வாதுப் புலவர். சர்க்கரைத் தொண்டை மட்டும் சவ்வாது கண்ட மட்டும்' என்று கூறி அனைவரையும் சிரிப்பில் ஆழ்த்தினார் சர்க்கரைப் புலவர் 'மெப்தீனா அந்தாதி'யும் சவ்வாதுப் புலவர் 'முகைதீன் ஆண்டவர் பிள்ளைத் தமிழும் பாடியுள்ளார்.

**செய்கு தம்பிப் பாவலர்:** தலைசால் இஸ்லாமியத் தமிழ்க் கவிஞர். பெரும்புகழுக்குரியவர். நாஞ்சில் நாட்டவர். இந்த நூற்றாண்டில் இருந்து (1969) மறைந்தவர். 'சம்சுத்தாசீம் கோவை, நாகைக் கோவைத் கோட்டாற்றுப் பிள்ளைத் தமிழ், திருநாகூர் திரிப்நதாதி திருக்கோட்டாற்றுப் பதிற்றப் பத்தந்தாதி, கல்வத்து நாயகம் இன்னிசை மாலை' போன்ற பனுவல்கள் பாடியவர். ஒரே சமயத்தில் நூறு அலுவல்கள் ஆற்றும் ஒண்மையர். அம்முறையில் இவர் சென்னை விக்டோரிய மண்டபத்தில் திரு.வி.க போன்றோர் முன்னிலையில் 'சதாவதானி' என்ற பட்டம் பெற்றார். கவிமணியவர்கள்.

**'ஓரவ தானம் ஒரு நூறு செய்திந்தப்**
**பாரில் புகழ் படைத்த பண்டிதனைச் - சீரிய**
**செந்தமிழ்ச் செல்வனைச், செய்கு தம்பிப் பாவலனை**
**எந்நாள் காண்போம் இனி' எனப் பாடியுள்ளார்.**

**ஈழநாட்டு இஸ்லாமியத் தமிழ்த் தொண்டர்கள்:** கண்டி செய்கு முகமது லெப்பை ஆலிம். அப்துல் காதிர் புலவர். அசனா லெப்பை ஆலிம். மாத்துறை முகம்மது காசிம். உதுமான், உமர்ஹசரத்து, எம்.எம்.உவைஸ், ஏ.ஆர்.ஆம். ஸலீம், அப்துல் காதர் லெப்பை, சுபைர், நல்ல தம்பிப் பாவலர், அப்துல் ஸமது, அப்பாஸ், 'ர் புன்னிஸா பேகம், புகாரி போன்றார் பல் துறையில் பைந்தமிழ்ச் சீர் பரவி வருகின்றமை ஈண்டு எண்ணத் தக்கது. இற்றை நாளில், தாவுத் 'ா அப்துல் ஜபார், அப்துல் சமத், அப்துல் ரஹீம், ஆர்.பி.எம்.கனி, முஸ்தபா உசைன், சகூல், கமாலுதீன், மதுரை காதிறு, முகைதீன், அப்துல் கபூர், அப்துல்காதர், நயினார் முகம்மது, சத்தார் அமீது, சாலி பருக், அப்துல் ரகுமான், திருச்சி வானொலி நிலைய அயூப் போன்றாகும். திருவையாறு

ஆ.சு.கவிப்புலவர் அப்துல் கபூர் சாகிபு அவர்களும் இன் தமிழ்த்தொண்டு இயற்றும் இஸ்லாமிய அன்பர்களாவர்.

## தொகுப்புரை

- இக்காலக் கிறித்தவக் கவிதைகளின் தன்மைகளையும் போக்குகளையும் அறிந்து கொள்ளலாம்.
- பிற சமயக் கவிஞர்களும் இயேசுவிடம் ஈடுபாடு கொண்டு பாடியுள்ள சமய வேறுபாடற்ற பண்பினை அறிந்து கொள்ளலாம்
- கிறித்தவ வழிபாடுகளில் பயன்படுத்தப்படும் பாடல்களின் வரலாறு, வகைகள், பண்புகள் போன்றவற்றையும் விளங்கிக் கொள்ள முடியும்.
- இஸ்லாம், கிறித்துவ சிந்தனைகள் தழுவிய படைப்புகளின்வழி பல செய்திகளை அறிய முடிகிறது
- மேற்காணும் செய்திகளின்வழி பக்தி உணர்வையும், சமுதாய உணர்வையும் அறிந்துகொள்ளலாம்

## அருஞ்சொற்பொருள்

- பார் - உலகம்
- தண்டா – அரசியல்
- கல்தா – வணங்குதல்
- பண்டிதன் - கற்றவர்
- சுகந்தம் - வாசைன

## பயிற்சி வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. திருப்புகழ் இயற்றியவர்?
   அ) தாயுமானவர் ஆ) அருணகிரிநாதர் இ) குமரகுருபரர் ஈ) இராமலிங்க அடிகள்
2. குமரகுருபரர் பாடிய சிற்றிலக்கியங்கள் எத்தனை?
   அ) 10 ஆ) 11 இ) 12 ஈ) 13
3. வீரமாமுனிவர் தமிழ் பயின்றது யாரிடம்?
   அ) வேதநாயகம் பிள்ளை ஆ) சுப்ர தீபக் கவிராயர்
   இ) தனிநாயகம் அடிகள் ஈ) உமறுப்புலவர்
4. கிறிஸ்தவக் கம்பன் என்று அழைக்கப்படுபவர் யார்?
   அ) எச்.ஏ.கிருட்டிணப்பிள்ளை ஆ) வீரமாமுனிவர்
   இ) போப்பையர் ஈ) கால்டுவெல்
5. பிச்சை இபுகிராம் புலவர் எழுதிய மாலை நூல்கள்
   அ) முகைய்தீன் ஆண்டவர் ஆ) திருக்காரணப் புராணம்
   இ) நாகூர்ப் புராணம் ஈ) மும்மணிக்கோவை

## விடைகள்

1. ஆ) அருணகிரிநாதர்
2. ஈ) 13
3. ஆ) சுப்ர தீபக் கவிராயர்
4. அ) எச்.ஏ.கிருட்டிணப்பிள்ளை
5. அ) முகைய்தீன் ஆண்டவர்

## பயிற்சிகள்

1. சமயங்கள் தமிழுக்குச் செய்த பங்களிப்பிற்கு அட்டவணை ஒன்றைத் தயார் செய்க.

## குறுவினாக்கள்

1. நபிகள் நாயகம் நிகழ்த்திக் காட்டிய அற்புதங்களைக் கூறுக.
2. கிறித்துவச் சிற்றிலக்கியங்களின் பண்புகள் எழுதுக.

## நெடுவினாக்கள்

1. கிறித்துவ இலக்கிய வரலாறு குறித்து கட்டுரை வரைக.
2. இஸ்லாமிய இலக்கியங்களில் மனிதநேயம் குறித்து எழுதுக.
3. பிற்கால அருள்நூல்கள் குறித்து எடுத்துரைக்க.

## பார்வை நூல்கள்

1. புதிய தமிழ் இலக்கிய வரலாறு, பதிப்பாசிரியர்கள்- சிற்பி பாலசுப்பிரமணியம், நீல பத்மநாபன்,சாகித்திய அகாதெமி,புது தில்லி, முதல் பதிப்பு – 2013.

2. வகைமை நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு,பாக்கியமேரி,பூவேந்தன் பதிப்பகம்,இரண்டாம் பதிப்பு,2022.

3. தமிழ் இலக்கிய வரலாறு, ஸ்ரீசந்திரன்,பத்மா பதிப்பகம்,சென்னை,முதல் பதிப்பு – 1965.

4. புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு,தமிழண்ணல்,மீனாட்சி புத்தக நிலையம்,சென்னை,இரண்டாம் பதிப்பு - 2022

**இணைய இணைப்புகள்**

1. https://temple.dinamalar.com
2. https://kamadenu.hindutamil.com
3. https://WWW.tamildigitallibrary.in
4. https://testbook.com

# அலகு – 5

## நோக்கம்

- நவீன தமிழ் இலக்கியத்தை அறிமுகம் செய்தல்
- கவிதை, சிறுகதை,நாடகம், நாவல், மொழிபெயர்ப்பு இலக்கியம் முதலியனவற்றை ஆழ்ந்து கற்கத் தூண்டுதல்
- படைப்பாளர்களை அறிமுகம் செய்தல்
- காலந்தோறும் இலக்கியம் அடைந்துவரும் வளர்ச்சி மாற்றங்களைக் கற்பித்தல்.
- தமிழ் மொழியின் இன்றைய சிறப்புகள், நோக்கு போக்குகளை அறிதல்.

## இயலில் இடம்பெறுபவை

- சிறுகதை
- புதினம்
- கட்டுரை
- வாழ்க்கை வரலாறு
- தன்வரலாறு
- நாடகம் (கவிதை, உரைநடை)
- மரபுக்கவிதை
- புதுக்கவிதை
- சென்ரியூ
- ஹைக்கூ
- இலக்கிய ஆய்வுமுறைகள்
- நாட்டுப்புறவியல்
- மக்கள் தொடர்பியல் - தொடர்புடைய பிற துறைகள்

## 5.1. சிறுகதை

நம் காலத்தில் தோன்றிச் சிறக்கும் இலக்கியப் பிரிவு, சிறுகதையாகும். வேறு துறையில் முன்னேறியுள்ளதோ என்னவோ, இத்துறையில் நந்தமிழ் நல்வளர்ச்சி பெற்றுள்ளது எனலாம். கதைகளில் இல்லாமல் இதழ்களா? கதையின்றி ஏடுகள் எடுபடுமா? ஏற்றமுறுமா? என்ற அளவிற்குக் கதைகள் பல்கியுள்ளன. இதற்குரிய ஏதுக்கள் மாந்தனின் கதையார்வமும், தாளிகைகளில் மிகுதியுமே எனலாம். ஒருவன் உணர்வுடன் வாழத்தெரிந்து, தன் வாழ்க்கை அனுபவத்திற்கு எழுத்து உரு கொடுக்கும் திறமும் பெற்றிருப்பானேயாயின் அவனால் கதைகள் எழுத இயலும் என்பது அறிஞர்கள் கருத்து.

எதுவும் சிறுகதைக்கு அடிப்படையாகலாம்: கரு, பண்பு, உணர்வு போன்றவற்றால் கதை அமையலாம். இதற்கென்று இலக்கணம் கூறுவது இயலாது. சிறந்த சிறுகதையொன்றையே காட்டாக கொள்ளலாம். அழகுக்கு இலக்கணம் சொல்ல முடியுமா? அழகான பொருளைத்தானே காட்ட முடியும்! சிறுகதை யென்பது ஒரே தடவையில் படித்து முடிக்கக் கூடியதாக (Capable of

being read in on siting) அரைமணி நேரம் முதல் இரண்டு மணி நேரத்திற்குள் படிக்கக் கூடியதாக இருக்க வேண்டும். என்கிறார் எட்கார் ஆலன்போ - சிறுகதை இலக்கியத் தொடக்குநர் (Edger allen Poe - the pioneer in the short story writing) ஒரே பொருள், ஒரே கரு, ஒரே நோக்கு, ஒரே செய்தி, ஒரே முடிவு உரையாடலுமே கொண்டு தெளிவுபட உள்ளத்தில் பதியுமாறு சொற்செட்டோடு எழுதப்பட்டிருத்தல் வெண்டும்.

'சிறு கதையின் எடுப்பும்முடிப்பும் குதிரைப் பந்தயம் போல் விறுவிறுப்பும் ஈர்ப்பும் இனிமையும் பெற்றிருக்க வேண்டாம்' என்கிறார் செட்ஜிக்விக். 'சிறு கதையின் முதல் வாக்கியம் படிப்பவரின் முழு கவனத்தையும் இழுத்துப் பிடிக்கவில்லையாயின் அக்கதை பயனற்றது' என்கிறார் ஆலன்போ. மொத்தத்தில் படிப்போர்க்கு மனநிறைவு தோன்றும் வண்ணம். 'சிறுகதை வாமன அவதாரம் போன்றது' என்கிறார் ராஜாஜி. குறுகியதானும் பெருகிய ஆற்றல் இருத்தல் வேண்டும். சிறுகதை ஒரு சிறு காந்தக் கல் எனலாம். கருவை மையமாகக் கொண்டவை.

தொடக்க காலத்தில் நாவலின் சுருக்கமே என்று சொல்லப்பட்டது. அளவில் சிறியதாக இருப்பின் அது கருதி சிறுகதை என்றும் செப்பினர். ஆனால் இன்று அது தனி வகை இலக்கியமாக கருதப்படுகிறது. ஆகலின் சிறுகதை வேறு நாவல் வேறு எனத் தெளிதல் நன்று.

உலகம் ஒரு மணிக்கு 25000 மைல் வேகத்தில் சுழல்கிறது. அதனோடு ஒட்டி ஓட்டமும் நடையுமாக, நிற்கவும் காலமில்லாது நினைக்கவும் நேரமின்றி பம்பரமாகச் சுழல்கின்றனர் மாந்தர். இந்த விரைவுலகத்தில் ஓய்வு கிடைப்பதே அரிது�ளூ அப்படிக் கிடைத்தாலும் சில பல மணித்துளிகளே கிடைக்கும். இச்சிறு பொழுதில்தான் தன் அயர்ச்சியைப் போக்க வேண்டும்ளூ அதற்கேற்றன சிறுகதைகளே. எனவேதான் இற்றை நாளில் கால்மணி நேரத்தில் ஏன் 5 நிமிடத்தில் படிக்கக் கூடிய கதைகள் பெருகி வருகின்றன.

இத்தகு வேகத்தில் வளர்ந்தோங்கி வரும் சிறுகதை இலக்கியம் மேலை நாட்டவர் தொடர்பால் தமிழில் அமைத்து உரைநடை வளர்ச்சிகள் பயனாக ஒளிரும் புதிய இலக்கிய வகையாகும். அண்மைக்காலத்தில் அரும்பியது. உலகில் இது தோன்றி ஒரு நூறுயாண்டுகளே ஆகின்றனளூ அதன் பிறப்பகம் அமெரிக்கா, வித்திட்டவர் எட்கார் ஆலன்போ. அதன் பின்னரே ஆங்கிலத்தில் ஓ ஹென்ஹி, செஸ் டர்டன், பிரெஞ்சு மொழியில் மாப்பசான்ளூ ருஷ்ய மொழியில் டால்ஸ்டாய், செகாவ் போன்றார் அதனைப் போற்றி வளர்த்தனர். இந்தியாவுக்கு வந்தது. இந்நூற்றாண்டில்தான்ளூ ரவிந்திரநாத்தாகூர் இதன் தோற்றுநராவர். தமிழில் தொடங்கி வைத்த முதற் பெருமைக்குறியவர் வ.வே..சு.ஐயர் (1881 - 1925)

அங்ஙனமாயின் அருந்தமிழில் இன்சுவைக் கதைகள் இதற்கு முன் இருந்ததில்லையென்றும் இயம்பிவிட முடியாது. தொல்காப்பியரது 'பாட்டிடை வைத்த

குறிப்பினாலும்..' எனும் நூற்பாவால் சிறுகதை போன்றவற்றைக் குறிக்கிறார். இரட்டைக் காப்பியங்களில் ஏழு பத்தினிகள் கதை, குரங்கு தேவனான கதை, ஆபுத்திரன் கதை போன்ற எண்ணற்ற கதைகள் வழங்கி வருகின்றன.

வ.வே.சு.ஐயர் எழுதிய 'குளத்தங்கரை அரசமரம்' 'மங்கையர்கரசியின் காதல்' போன்றன எக்காலத்தும் எடுப்புடன் அமைவன. இவரது கதை மாந்தர்கள் உயிருடன் நிலவும் ஒண்மையர். பல நாட்டுப் பாத்திரங்களையும் தமிழில் உணர்வு குன்றா வகையில் திறம்படப் படைத்துள்ளார்.

இவரோடு பாரதியாரும் ஆங்கில, பிரெஞ்சு மொழிக் கதைகளை பின்பற்றி சமுதாய சீர்திருத்த கதைகள் (திண்டிம சாஸ்திரி, ஸ்வர்ண குமாரி) பல எழுதினார். தாகூரின் கதைகளையும் தழுவி எழுதியுள்ளார். ஆயினும் இவற்றில் சிறு கதைக்குரிய உருவம் சிறப்பாக அமையவில்லை.

கு.பா.ரா உயிருள்ள மாந்தர்களை உருவாக்குவதில் வல்லவர். அன்றாட சாதாரண செய்திகளையும், சுவைப்பெருகச் சித்தரிக்கும் சிறப்பினர். எளிய இனிய சொற்களால் இதயத்தைப் பிணிப்பவர்.

கல்கி, நிகழ்ச்சிகளை நேரில் காண்பது போன்று சுவை படச் சொல்லும் ஆற்றலர். நகைச்சுவை விருந்தளிப்பவர். கதை படிக்கும் ஆர்வத்தினைப் பெருகச் செய்த பெருமைக்குரியவர். 'திருடன் மகன் திருடன்' 'காதறாக் கள்வன்' சிறந்த கதை 'வீணை பவானி' கலை நோக்கினது.

சிறுகதை யுலகில் தனக்கென ஒரு தனிப் பாதையை வகுத்துக் கொண்டவர் புதுமைப்பித்தன் (1906-48) சொந்த வாழ்வில் அல்லலுற்ற இவர் சமுதாயத்தின் இருளடைந்த பகுதிகளை இழிநிலைகளை வாழ்க்கை அனுபவம் தோன்றத் தீட்டும் திறமையர். மூட நம்பிக்கைகளை பழக்கங்களை எள்ளி நகையாடும் தன்மையர். 'கவந்தனும் காமனும்' 'காலனும் கிழவியும்' 'காஞ்சனை' 'கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும்' 'சிற்பியின் நகரம்' 'சாப விமோசனம்' போன்றன குறிப்பிடத்தக்கவை. இவர் 100க்கும் மேற்பட்ட கதைகள் எழுதித் தனித்துவம் பெற்றுள்ளார்.

பிச்சமூர்த்தியின் 'பதினெட்டாம் பெருக்கு' போன்றவற்றில் ஆழ்ந்த கருத்துகளும் லா.ச.ராமாமிர்தத்தின் 'ஜனனி' இதழ்கள் ஆகியவற்றில் குடும்பச் சூழலும், அழகிரிசாமியின் 'சிரிக்கவில்லை' 'தவப்பயன்' ஆகியனவும் சிறப்பானவை

## 5.2.நாவல்

மேலை நாட்டவர் தொடர்பால் தமிழில் வளர்ந்த மற்றொரு துறை புதினத் துறையாகும். பிறநாடுகளில் 18ம் நூற்றாண்டு தொடங்கி நாவலிக்கியம் சிறப்புற்றது. ஸ்காட், டிக்கன்ஸ், தாக்கரே, 'ார்டி, டூமாஸ், விக்டர் ஹியுகோ, டால்ஸ்டாய், சர்.ஆர்தர்கானன் டாயில், ஆஸ்டின் போன்றார் புகழ் மிக்கவர் புதின ஆசிரியர்கள்

தமிழ் நாவல் இலக்கியம் பிரதாப முதலியார் சரித்திரத்திலிருந்து தொடங்குகிறது. இதுவே தமிழில் அமையும் முதல் நவீனம். இதனையாத்தவர் 'வேத நாயகம் பிள்ளை' இத்துறைக்கு வித்திட்ட இவர் 'சுகுண சரித்திரம்' எனும் நாவலும் எழுதியுள்ளார். படித்து முடித்து விட வேண்டுமெனும் விருப்பும் விடா நகைப்பும் ஊட்ட வல்லவை. வாழ்வு நிலைகளை விளக்கி, சமுதாய செப்பமுறச் செய்யும் சால்பின.

இம்முதல்வர்களை யடுத்து அச்சமூட்டும் சூழ்நிலைகளும் அதிர்ந்திடச் செய்யும் நிகழ்ச்சிகளும் கொண்ட வாழ்வுக்கு சம்பந்தமில்லாக் கதைகளையும் படைத்தவர் மூவர். ஆரணி குப்புசாமி முதலியார், 'கற்பகச் சோலை' 'கற்கோட்டை' 'அற்புதக்கொலை' 'மஞ்சள் அறையின் மர்மங்கள்' போன்ற பல. வை.மு.கோதைநாயகி அம்மையார் சமூக வீட்டு நிலையினை சித்தரிக்கும் கதைகளை நூற்றுக்கு மேல் எழுதியுள்ளார். வடுவூர் துரைசாமி ஐயங்கார் துப்பறியும் நவீனங்கள் தந்துள்ளார்.

நடேச சாஸ்திரியார் 'தீனதயாளு' என்ற சிறந்த புதினத்தையும் வில்லியம் பொன்னுசாமிப் பிள்ளை 'கமலாரீ' சிவகுமாரன் போன்ற ஆறு நவீனங்களையும் எழுதியுள்ளார்.

மறைமலையடிகள்: 'கோகிலாம்பாள் கடிதங்கள்' 'குமதவல்லி அல்லது நாக நாட்டரசி' எனும் நவீனங்களை எழுதியுள்ளார்.

தமிழ் புதினத் துறையில் புதிய பாதை வகுத்து தனக்கென ஒரு தனியிடம் பெற்றவர் கல்கியாவார். நாவலுக்கு நல்லுயிரும், நவ்வடிவமும் பல்சிறப்பும் நல்கியவர். 'வரலாற்று நாவலியக்க வழிகாட்டி' எனலாம். சமுதாயக் கதைகளும் யாத்துள்ளார். 'தியாகபூமி' 'பொய்ம்மான்காடு' 'மகுடபதி' போன்றன இத்திறத்தன.

எதையும் தமிழில் எழுதமுடியும் என்பதை மெய்பித்துக் காட்டியவர். இவரைப் பின்பற்றி சாண்டில்யன், அரு.ராமனாதன், நா.பார்த்தசாரதி, கோவி.மணிசேகரன், போன்ற வரலாற்று புதினங்களை படைத்துள்ளனர்.

பெரும்பாலும் நடுத்தர குடும்பப் பெண்களே நாவல்கள் படிப்பதால் அவர்கட்கு ஏற்ற புதினங்கள் புனையப்பட்டன. லட்சுமியின் ‘பெண்மனம்’ மாயாவியின் ‘சங்கமம்’ ‘அன்பின் ஒலி’ க.நா.சுப்பிர மணியனின் ‘பொய்த்தேர்வு’ இவ்வகையின.

இன்றை நாளில் ரா.கி. ரங்கராஜன், சாவி, சுவர்ணலதா, சேத்தூர் கூத்தன், மணிவண்ணன், பி.வி.ஆா.ராஜம்கிரு'ணன், எஸ்..ஏ.பி.சூடாமணி, மாயாவி, மணியன் போன்றோரின் புதினங்கள் சிறப்பானவை.

உலகின் முதல் நாவல் ஜப்பானிய மொழியில் உளது. முரசாக்கி சீமாட்டீ யாத்த கெஞ்சி கதை.

ஆங்கிலத்தில் சுஉைாயசனளழெ எழுதிய பாமெல்லே (1740) ஏழு தொகுதிகள்ளு காதல் பற்றியது. கடித வடிவினது.

இந்திய மொழிகள் முதன் முதல் தோன்றியது வங்க மொழியில் தான். 1865 இல் பங்கிம் சந்திரா் எழுதிய துர்கேச நந்தினி. இரண்டாவது பெருமைக்குரியது தமிழ் மொழி. 1879 பிரதாப முதலியார் சரித்திரம், தெலுங்கில் 1880ல் வீரேசலிங்கம் பந்தலு எழுதியது ராஜசேகர சரித்திரம்.

தமிழ் நாவல் இலக்கியம் தோன்றி ஒரு நூற்றாண்டு ஆகிறது. இதுவரை கிட்டத்தட்ட 3000 புதினங்கள் தோன்றியுள்ளன. ஏறத்தாழ 50 புகழ்பெற்ற சாதனை நாவலாசிரியர்களும், ஓரிரு நவீனம் படைத்தோர் 75 பேரும் உள.

## 5.3. நாடகம்

நந்தமிழ் முத்தமிழ் எனப்படுகிறது. இயல், இசை, நாடகம் எனும் முப்பிரிவினதாதலின் இங்ஙனம் இயம்புகின்றனர். இவ்வகை இணைந்த பகுப்பு வேறு எம் மொழியிலும் இல்லை. ஆகலின் ‘முத்தமிழ்’ என்பது நற்றமிழ் ஒன்றுக்கே உரியது. வரிசை படுத்தலின் இ∴து இறுதியாக இருப்பினும் இயலையும் இசையையும் தன்னுள்ளேயே கொண்டிருப்பதால், நாடகத்தின் முதன்மையை நன்கறியலாம்.

நாடு + அகம் - நாடகமாகும். நாட்டின் முக்கால நீர்மையையும் தன்னுள்ளே பொதுளிக் காட்டுதல், அகத்தை -உள்ளத்தை, நாடு - உணர் (அகம் நாடு) எனப்பலவாகப் பொருள்படும், இயலிசையால் காதுக்கும் கூத்தால் கண்ணுக்கும் இன்பம் பயக்கும் இக்கலையினைக் ‘கலைக்கரசு’ நாகரிகத்திற்குக் கண்ணாடி ‘பாமர மக்களின் பல்கலைக் கழகம்’ என்கிறார் கலைஞர் டி.கே.சண்முகம்.

இத்தகு அரிய கலையைத் தமிழ் கலை அன்று ‘ஆரியரோடு கலந்த பின்னரே தமிழர்களிடத்தில் நாடக தமிழ் உண்டாகியிருக்க வேண்டும்’ என்கின்றனர். எது, நாடகம் என்ற சொல் வட சொல்லாம்! இதற்கு பரிதிமாற் கலைஞரே மறுப்பு தருகிறார். இக்கூற்று வடமொழியில் வாய் என்பதற்கு தக்க சொல்லில்லாமையால் வட மொழியாளர்க்கு வாய் இல்லை என்பது போலும் அ.்.தன்றியும் கூத்து என்ற சொல்லே ஆதியில் தமிழர்களால் வழங்கப்பட்டது.

பாண்டு நாட்டியமும் நாடகமும் ஒன்றாகவே எண்ணப்பட்டன. தனிப் பாடல்களுக்கு அபிநயம் பிடித்து ஆடுவதை ‘நாட்டியம்’ என்றும் ஏதேனும் ஒரு கதையைத் தழுவி வேடம் புனைந்து ஆடுவதை நாடகம் என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

பிறர் செய்வதைப்போலவே நாமும் செய்து காட்டுவது எனும் விளையாட்டுணர்ச்சியின் விளைவே நாடகம். தொடக்கத்தில் ‘மரப்பாவைக் கூத்தாக பரிணமித்தது. பொம்மலாட்டமாகவும், தோற்பாவை கூத்தாகவும் வளர்ந்து ‘நிழற் பாவைக்’ கூத்து சிறந்தது. இறுதியில் உயிரற்ற பொம்மைகள் இயங்குதற்கு மாறாக உயிருள்ள மனிதர்களே வேடம் புனைந்து ஆடும் நிலைக்கு வந்து ‘வேடம் கட்டி விளையாடுவது’ ‘விளையாட்டு’ என நாடகத்தைச் சொல்கின்றனர்.

தொல்காப்பியத்தில் ‘நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்’ ‘வாடா வாயவர் ஏத்தும் வள்ளி’ (கூத்தும்) என வருதலான் அக்காலத்தில் நாடகம் நன்னிலை பெற்றிருக்க வேண்டும் எனத் துணியலாம். ஆனால் அக்காலத்தில் நாடகம் எதுவும் நமக்குக் கிடைக்கவில்லை. இக்கலை பற்றி விளக்கம் தரும் நூலாகாச் சிலப்பதிகாரம் விளங்குகிறது. அடியார்க்கு நல்லார், பரதம், அகத்தியம், முறுவல், சயந்தம், செயிற்றியம், குணநூல், பஞ்சமரபு, பரத சேனாதிபதியம், மதிவாணர் நாடகத் தமிழ் போன்ற நாடகத்தமிழ் பற்றிய நூற்கள் இருந்தன. அழிந்து விட்டன என்கிறார்.

அன்றியும் சிலம்பு - சிலம்பு உரைகள் வாயிலாக நாடக அரங்கின் அமைப்பு நுட்பங்களும், தூண் நழில் விழா வண்ணம் விளக்குகள் அமைத்த வகையும், இற்றை நாளில் உள்ள Eyebrow Pencil போன்ற மை தீட்டும் கருவிகள் அந் நாளில் இருந்த அருமையும், ஒருமுக-பொருமுக - கரந்துவரல் எழினிகள் (Screens) இன்னின்னார் இந்த இடத்தில் அமரவேண்டும் என்ற வரிசை முறையும், கூத்துக்களின் வகைகளும் பிறவும் நுட்பமுடன் நிவலப்பட்டுள்ளன என்றால் அந்நாளில் தமிழ் நாடகம் தலைசிறந்து திகழ்ந்தமை தெரிய வரும்.

19ம் நூற்றாண்டில் நாடகம் புத்துயிர் பெற்றது. பல்வகை நாடகங்கள் தோன்றின. 1. சாதி பற்றியன. கோவிந்த கவிராயர், ஒட்ட நாடகமும், கிரு்ணசாமி செட்டியார் கார்காந்த நாடகமும் இயற்றினர். 2.நாடோடிகள் கதைகள் நாடகமாக்கபட்டன. பரசுராமகவி சித்திராங்கத விலாசமும்

அழகிய சுந்தரம் பிள்ளை மதுரை வீரன் விலாசமும் மீனாட்சி சுந்தரனார் ஆரவல்லி சூரவல்லியும் எழுதப் பெற்றன. 3.வரலாற்று கதைகள் அப்பாவுப் பிள்ளை சோழ விலாசமும், முத்துக்கவி தேசிங்குராச விலாசமும் இயற்றினர். 4.இராமாயணத்தையொட்டி சீதா கல்யாணம், திரௌபதி துகிலுரிதல், கீசக விலாசம், தரும நாடகம் போன்றன தோன்றின.

இஸ்லாமும் இனிய பல நாடகங்களை அளித்துள்ளது: முகம்மது இப்ராஹிம், அப்பாசு நாடகமும் வண்ணக் களஞ்சியப் புலவரின் அல்லி பாது'ா நாடகமும் எழுதியுள்ளனர்.

சேக்ஸ்பியரின் வெனிஸ் வர்த்தகன், வேணுகோபலாச்சாரியராலும் வேனிற் காலத்து நள்ளிருட் கனவு, நாராயணசாமிப்பிள்ளையாலும் சிம்பலின், சரசாங்கி என்ற பெயரில் சாசலோசன செட்டியாராலும் வெரோணா நகரத்து இரு கனவான்கள் போன்றவை மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

பரிதிமாற் கலைஞர் வடமொழி நாடக நெறியினை தழுவி தமிழ் மரபினையொட்டி நாடகவியல் எனும் நாடக இலக்கண நூலை ஒன்றை யாத்ததோடு, அதன்படியே ரூபாவதி, கலாவதி, மானவிஜயம் எனும் நாடகங்களையெழுதி நல்லாற்றுப்படுத்தினார். நாடக ஆராய்ச்சிக்கு அடிக்கல் இட்டவர் இவரே. மறைமலையடிகள் சாகுந்தல நாடக ஆராய்ச்சியும் விபுலானந்த அடிகளின் ‘மதங்க சூளாமணி’யும் இவ்வகைக்கு உரமூட்டும்.

இனி 20ம் நூற்றாண்டு நாடக வளர்ச்சி எண்ணுவாம். இங்கே சங்கரதாஸ் சுவாமிகள் பம்மல் சுந்தரம் பிள்ளை இந்த நூற்றாண்டில் வாழ்ந்து பணியாற்றியதை மறந்து விடலாகாது. எத்துணைதான் முந்தைய நூற்றாண்டில் நாடகத் தமிழ் ஓங்கியிருந்து நடிப்பவர்கள் கூத்தாடிகள் என்றே எண்ணப்பபட்டனர். நாடகக்காரர்கள் என்றால் நம்பி குடியிருக்க வீடே கொடுக்கப் பயந்தார்கள். தமிழ் நாடகத்திற்கு பெருமை ஊட்டியவர் பம்மல் சம்பந்த முதலியார். தமிழ் நாடகத் தந்தை’ பத்ம பூசன் விருது பெற்றுள்ளார். இவரது மனோகரா, அமரத்துவம் பெற்ற நாடகம், இதுவும் இரண்டு நண்பர்களும் கற்பனை நாடகங்கள். இரத்னாவளி, மாளவிகாக்கினி மதிதிரன் மகபதி விரும்பியவேதம் போன்ற உரைநடை நாடகமாகும் சபாபதி, சாரங்கதாரன், காதலர்கண்கள், ஊர்வசியின் சாபம், வள்ளி மணம், நல்லதங்காள் , பு'பவல்லி, சந்திரஹரி, போன்றன குறிப்பிடத்தக்கன.

1914ல் சங்கரதாஸ் சுவாமிகள் சமரச சன்மார்க்க நாடக சபை தொடங்கினார். இதில் எஸ்.ஜி.கிட்டப்பா நடிகராக இருந்தமை குறிப்பிடத்தக்கது. 1922ல் சதாவதானி தெ.பொ.மீ அவர்களின் தமையனார் பல மனோகர சபா தோற்றுவித்து ‘ராஜாபர்த்ருஹரி , கதரின்வெற்றி போன்ற நாடகங்களை நடத்தினர்.

1944ல் சந்திரோதயம் எனும் முழுப் பிரசார நாடகத்தின் மூலம் நாடக உலகில் நுழைந்தார். அறிஞர் அண்ணா, இவரது ஓர் இரவு, வேலைக்காரி, சந்திரமோகன், நீதிதேவன் மயக்கம், என்னும் சீர்திருத்த நாடகங்கள் சிறந்தன.

வானொலி மூலம் நாடகங்களும், ஓரங்க நாடகங்களும் பல்கிப் பெருகி வருகின்றன. சுகி.சுப்பிரமணியம், மாறன், துறைவன், மாயாவி போன்றோர் இத்துறையில் பெரும்பணி புரிகின்றனர்.

தமிழகத்தில் இன்று இரு மாவட்டங்களில் நாடகக் கலையினை போற்றிப் காக்கும் கலைக்குடும்பங்கள் உள.

**மதுரை:** ஏறத்தாழ 450 குடும்பங்கள். இவர்களுக்கென தமிழ்நாடு நாடக நடிகர் சங்கம், சுண்ணாம்புக்காரத் தெருவில் உள்ளது. உடையப்பா, எம்.என்.கண்ணப்பா, மஜீத் நாகராஜ் பாகவதர், ஏ.எஸ்.மகாதேவன், சித்ராதேவி, தாராபாய், ரேணுகா தேவி போன்றோர் குறிப்பிடத்தக்கோர். டி.ஆர்.மகாலிங்கம் திருச்சி லோகநாதர் போன்றோர் விழாக்காலங்களாகிய நான்கு திங்கள் இங்கு வந்து இணைந்து நடிப்பர். மாசி சிவராத்திரி முதல் ஆவணி முடிய உரிய பருவம் அனைத்தும் இசை நாடகங்களே. 10,12 சுற்றுப்புற ஊர்களின்று வந்து குழுமுவதால் விடிந்தே ஊர் திரும்ப முடியுமாதலால், விடிய விடியத்தான் நடத்த வேண்டும்.

**சேலம்:** ஏறத்தாழ 100 குடும்பங்கள் திருவிழாக்களை இங்கு ‘நோன்பி’ என்கின்றனர், இந்த நோன்பி நடக்கும் போதெல்லாம் புரட்டாசி தொடங்கி 5 திங்கள் அடுத்தடுத்து ஒவ்வொரு ஊரிலும் நாடகங்கள் நடைபெறுகின்றன. இசை நாடகங்கள் தான். வள்ளித் திருமணம், லவகுசா, கர்ணன் சண்டை, ஆரவல்லி சூரவல்லி, ஹரிச்சந்திரா, சக்களத்தி போராட்டம், சம்பூர்ண ராமாயணம், ஒட்டநாடகம் போன்றன. அனைவரும் பாடி நடிக்கின்றனர். சேலம் மகாலட்சுமி குழுவினர் குறிப்பிடத்தக்கோர்.

இந்த நாடகங்களுடன் சமுதாய நாடகங்களும் ஊர் பொதுமக்களால் நடிக்கப் பெறுகின்றன. நாடக மன்றங்களும் அமைத்துள்ளனர். நாடாப் பதிவு செய்து அடிக்கடி ஒலிபரப்புவும் செய்கின்றனர்.

## 5.4. நாட்டுப்புற இலக்கியம்

இது பற்றித் தனியார்வம் தோன்றியுள்ளது. முதுகலை வகுப்பிற்குப் பாடமாக அமைந்துள்ளது. வானொலியும் ஏடுகளும் முக்கியத்துவம் தந்து வருகின்றன. இத்துறையில் ஈடுபாடு கொண்டு சலியாது உழைப்போர் நாடோடி இலக்கிய வளர்ப்புத்தந்தை கி.வா.ஜ., தமிழண்ணல், வீரபாகு, மு.அருணாசலம், சே.அன்னகாமு, அ.மு.பரமசிவானந்தம், ஆறு அழகப்பன்,

ஆர்.அய்யாசாமி, நா.வானமாமலை, மு.வை.அரவிந்தன், சு.சண்முகசுந்தரம், தி.சி.கோமதி நாயகம், கு.சின்னபாரதி, நடராஜன் ஆறு.இராமநாதன், சா.வளவன், அ.சாந்தா, நிர்மலபாய்.

நாட்டுப்புற இயல் ஓர் அறிமுகம், நாட்டுப்புற இலக்கியத்தன் செல்வாக்கு (சண்முக சுந்தரம்) ளுவரனநைள ைெ குழடம டுவைஇ தமிழ் நாடடுப் பாமரர் பால்கள், (வானமாமலை) கொங்கு நாட்டுப் பாமரர் பாடல்கள் (சின்னபபாரதி) தலாட்டுப் பாடல்கள் நாட்டுப்பறப் பாடல்கள் திறனாய்வு (அறு.அழகப்பன்) தமிழ்வில்லுப் பாட்டுகள் (கோமதிநாயகம்) தமிழில் விடுகதைகள் (ச.வே.சு) வாய்மொழி இலக்கியம் (அ.மு.ப) நாடோடி இலக்கியம் கஞ்சியிலும் இன்பம், மச்சுவீடு (கி.வாஜீ) தமிழக நாட்டுப் பாடல்கள் (மா.வரதராசன்) போன்றன நூல்கள்.

South Indian Folk (Charles E.Gover) The songs of the forest (Elvin) Meet My people (Sathyarthi) Folklore of Tamil Nadu (Simalay) போன்றன ஆங்கில ஆய்வுகள்.

மதுரைப் பல்ககலைக் கழகம், வீரபாண்டிய கட்டபொம்மன் கதைப் பாடல், முத்துப்பாட்டன் கதை, காத்தவராயன் கதைப் பாடல், கான் சாகிபு சண்டை கட்டபொம்மக்கூத்து போன்ற நூல்களை பதிப்பித்ததோடு 1978 மே திங்களில் நாட்டுப்புறவியல் கோடை வகுப்பும் நடத்திற்று. இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்ற கருத்தங்களில் ஆய்வுக் கோவைகள் இத்துறை பற்றிய கட்டுரை இடம் பெறுகின்றன.

Folk lore of Tamil nad (P.R. Subramanian) Folklore of Nanjilannd (N.P.S.Hameed) கேரள பல்கலைக்கழக ஆய்வுகள்.

## 5.5.கட்டுரை இலக்கியம்

கட்டுரை வரைவதனைக் கலையாக வளர்த்தனர் மேலை நாட்டினர். அடிசன் ஸ்டீல், ஹாஸ்லிட், லாம்ப் போன்றார் சான்றாவர். தமிழில் கலைப் பயில தெளிவும், கட்டுக்கோப்பும் செறிவும் மிகக் கட்டுரைகளைப் பலர் வடித்தனர்.

மறைமலையடிகள் (சிந்தனைக் கட்டுரைகள், அறிவுரைக் கொத்து) திரு.வி.க (தமிழ்ச்சோலை) நாவலர் நாட்டார் (கட்டுரைத் திரட்டு) நாவலர் பாரதியார் (தமிழும் தமிழரும்) பண்டிதமணி (உரைநடை கோவை) அ.சிதம்பராநத சேட்டியா (முன்பனிக்காலம்) ர.பி.சேதுப்பிள்ளை (தமிழ் இன்பம்) சாலை இளந்திரையன் (தமிழுக்காக, சிந்தனைக்கு உலகம் ஒரு குடும்பம், கூட்டின் அமைதி குலைகிறது) ராஜாஜி, கல்கி, புதுமைப்பித்தன், அண்ணா கட்டுரை வளர்த்தவர்கள்.

## 5.6.வாழ்க்கை வரலாற்று இலக்கியம்

வாழ்க்கை, வரலாறு என்னும் இரு சொற்களின் இணைப்பாக இப்பெயர் அமைகின்றது. பொதுமக்களிடையே கலை, அரசியல், இலக்கியம், அறிவியல் என ஏதாவது துறையில் புகழ் பெற்றவர்களின் வாழ்க்கையையோ, சுவையான அனுபவங்களையோ சுவைபடத் தொகுத்து அளிப்பது வாழ்க்கை வரலாறு இலக்கியம் ஆகும்.

ஆனந்தரங்கம் பிள்ளை நாட்குறிப்பு, விநோத ரசமஞ்சரி, வண்ணச் சரபம், தண்டபாணி சுவாமிகளின் புலவர் புராணம், தமிழ்நாவலர் சரிதை, குருபரம்பரைப் பிரபாவம், சேய்த்தொண்டர் புராணம் என்பவற்றை வாழ்க்கை வரலாற்று இலக்கியத்தின் முன்னோடிகள் என நாம் கொள்ளலாம்.

வாழ்க்கை வரலாற்று இலக்கியம் பிறர் வரலாறு, தன் வரலாறு எனும் இருபெரும் பிரிவுகளை உடையது என்கிறார் ச.வே.சுப்பிரமணியன். இவ்விரு வகைப் பிரிவிலும் உரைநடை, கவிதை, கடிதம், நாடக வடிவில் நூல்கள் உள்ளன.

### பிறர் வரலாறு கூறும் நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 | டாக்டர் உ.வே.சா. | - | மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் சரித்திரம் |
| 2 | மு.நமச்சிவாயம் | - | காசி முதல் தாஷ்‘கண்ட் வரை |
| 3 | சி.ஞானமணி | - | எழுத்தாளர் ம.பொ.சி |
| 4 | திரு.வி.க | - | மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் |
| 5 | மு.வ | - | அறிஞர் பெர்னாட்ஷா |
| 6 | ரகுநாதன் | - | புதுமைப்பித்தன் வரலாறு |
| 7 | கல்கி | - | மாந்தருக்குள் ஒரு தெய்வம் |
| 8 | மறை. திருநாவுக்கரசு | - | மறைமலையடிகள் வரலாறு |
| 9 | சோ.சிவபாத சுந்தரம் | - | கௌதம புத்தர் அடிச்சுவட்டில் |
| 10 | கௌசிகன் | - | டாக்டர் ராதாகிரு‘ணன் |
| 11 | சோமலெ | - | பண்டிதமணி |
| 12 | அ.லெ. நடராசன் | - | ஏழைப்பங்காளன் லெனின் |

| | | | |
|---|---|---|---|
| 13 | பி.ஸ்ரீ | - | பாரதி - நான் கண்டதும் கேட்டதும் |
| 14 | ம.பொ.சி | - | வீரபாண்டிய கட்டபொம்மன் |
| 15 | ரா. கணபதி | - | அறிவுக்கனலே அருட்புனலே |

ஒருவர் தன் வரலாற்றினைத் தானே எழுதிக் கொள்ளுதல் தன்வரலாறு ஆகும். பாரதியின் பாரதி அறுபத்தாறு என்ற நூலைத் தன்வரலாற்றிலக்கிய முதல் நூல் எனலாம். பம்மல் சம்பந்த முதலியாரின் நாடகமேடை நினைவுகள் நீண்டதாக ஆறுபகுதிகள் கொண்டமைகிறது. உ.வே.சாவின் என் சரித்திரம், நான் கண்டதும் கேட்டதும், நினைவு மஞ்சரி என்பன குறிப்பிடத் தக்கன.

- **பிற குறிப்பிடத்தக்க நூல்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு.வி.க | - | வாழ்க்கைக் குறிப்புகள் |
| 2 | நாமக்கல் கவிஞர் | - | என் கதை |
| 3 | வ.உ.சி | - | சுயசரிதை |
| 4 | கண்ணதாசன் | - | வனவாசம் |
| 5 | ஜெயகாந்தன் | - | நினைத்துப் பார்க்கிறேன் |
| 6 | ச.து.சு யோகியார் | - | ஆத்ம சோதனை |

## 5.7.தன்வரலாறு

தன்வரலாறு அல்லது சுயசரிதை (autobiography) என்பது ஒரு நபர் தானே எழுதிய அவரது வாழ்க்கை வரலாறு ஆகும். Autobiography என்ற ஆங்கில மொழிச் சொல்லை முதலில் ”மந்த்லி ரிவியூ” என்ற இதழில் 1797 ஆம் ஆண்டில் வில்லியம் டெய்லர் என்பவர் பயன்படுத்தினார். அவர் அதனை இன்றைய பொருளில் பயன்படுத்தவில்லை. அடுத்து இராபர்ட் சௌதி என்பவர் 1809 ஆம் ஆண்டில் இச்சொல்லை இன்றைய பொருளில் பயன்படுத்தினார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே இதற்குப் பெயரிடப்பட்டாலும், தானே தன் வரலாற்றை எழுதுவது மிகப் பழங்காலத்திலேயே தொடங்கியது. ராய் பாசுக்கல் என்பவர் தன்வரலாறு என்பதைக் காலத்துக்குக் காலம் எழுதப்படும் சொந்த நினைவுக் குறிப்புக்களில் இருந்தும், நாட்குறிப்புக்களில் இருந்தும் வேறுபடுத்துகிறார். ”தன்வரலாறு என்பது, குறிப்பிட்ட ஒரு

தருணத்தில் இருந்து கடந்தகால வாழ்க்கையை மீளாய்வு செய்வது என்றும், நாட்குறிப்பு தொடர்ச்சியான பல தருணங்களில் எழுதப்பட்ட நினைவுகள் என்றும் அவர் குறிப்பிடுகிறார்".

எனவே சுயசரிதை, அது எழுதப்படும் காலத்தில் இருந்துகொண்டு எழுதுபவரின் வாழ்க்கையைத் திரும்பிப் பார்க்கிறது. வாழ்க்கை வரலாறு எழுதுபவர்கள் பொதுவாக பலவிதமான ஆவணங்கள் மற்றும் கண்ணோட்டங்களில் தங்கியிருக்கும்போது, சுயசரிதை முற்றிலும் எழுத்தாளரின் நினைவின் அடிப்படையில் அமைந்திருக்கலாம். "நினைவுக் குறிப்பு" வடிவம் தன்வரலாற்றோடு நெருக்கமான தொடர்புகளைக் கொண்டுள்ளபோதும், பாசுக்கல் குறிப்பிடுவது போல் நினைவுக் குறிப்பை எழுதுபவரின் வாழ்க்கையைப் பற்றிய மீளாய்வில் அவரைப் பற்றிக் குறைவாகவும், மற்றவர்களைப் பற்றிக் கூடுதலாகவும் காணப்படும்.

## தன்வரலாற்றை வரையறுத்தல்

அமெரிக்க சுயசரிதை பற்றிய ஒரு கட்டுரையில் ஜேம்ஸ் எம். காக்ஸ் என்பவர் சுயசரிதை என்பதற்குப் "பொதுவான ஒரு" வரையறையை அளித்தார் அக்கூற்றின்படி "தன்னைப் பற்றி எழுதப்பட்ட ஒரு நபரின் கதையே சுயசரிதை" என்று அவர் கூறுகிறார்.

## தன்வரலாற்றின் இயல்பு

சுயசரிதைப் படைப்புகள் இயல்பாகவே தன்னுணர்வு சார்ந்தவை. துல்லியமாக நினைவுகளை மீட்டுக் கொண்டுவருவதற்கு இயலாமை அல்லது விருப்பமின்மை காரணமாகச் சுயசரிதைகளில் பிழையாக வழிநடத்துகின்ற அல்லது பிழையான தகவல்கள் தரப்படுகின்றன. சில சமூகவியலாளர்களும் உளவியலாளர்களும், சுயசரிதை அதை எழுதுபவர்களுக்கு வரலாற்றைத் திருப்பி எழுதுவதற்கான வல்லமையை வழங்குகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

## ஆன்மீக தன்வரலாறு

ஆன்மீக சுயசரிதை என்பது அதை எழுதியவரின் கடவுளை நோக்கிய பயணம் அல்லது போராட்டத்தினதும், தொடர்ந்த மாற்றம், அதாவது பெரும்பாலும் பின்னடைவுத் தருணங்களுடன் கூடிய மத மாற்றம் ஆகியவற்றினது விபரிப்பு ஆகும். தெய்வீகத்துடனான சந்திப்புக்களின் ஊடான தெய்வீக விருப்பத்தின் வெளிப்பாடாகத் தனது வாழ்க்கையை ஆன்மீகச் சுயசரிதை ஆசிரியர் மீளமைப்புச் செய்கிறார். ஆன்மீக சுயசரிதையின் மிகப் பழைய எடுத்துக்காட்டு ஆகஸ்டீனின் "ஒப்புதல்கள;" (Confessions) ஆகும். எனினும் மற்ற மத மரபுகளைச் சேர்ந்த சாகித் ரொகாரியின் "ஆன் ஸ்டோபோகிராபி" மற்றும் "பிளாக் எலெக் ஸ்பீக்ஸ்" போன்ற படைப்புகளையும் உள்ளடக்கும் வகையில் நமது மரபுகள் விரிவாக்கம் பெற்றுள்ளன. ஆன்மீக சுயசரிதை அதை எழுதியவரின் மதத்துக்கான அவரது அங்கீகாரமாகச் செயற்படுகிறது.

## நினைவுக் குறிப்புகள்

நினைவுக் குறிப்பு, சுயசரிதையிலும் சற்று வேறுபட்ட இயல்பைக் கொண்டது. ஒரு சுயசரிதை பொதுவாக எழுத்தாளருடைய ”வாழ்க்கையிலும் காலத்திலும்” கவனம் செலுத்தும் போது, நினைவுக் குறிப்பு, அவரது நினைவுகள், உணர்வுகள் மற்றும் உணர்ச்சிகள் மீது குறுகிய, மேலும் நெருக்கமான கவனத்தைச் செலுத்துகின்றது. தமது பொதுச் சாதனைகளைப் பதிவு செய்வதற்கும் வெளியிடுவதற்குமான ஒரு வழியாக அரசியல்வாதிகளும் இராணுவத் தலைவர்களும் நினைவுக் குறிப்புகளை எழுதினர். ஜூலியஸ் சீசரின் ”காலிக் போர்களின் வர்ணனைகள்” இதற்கான ஒரு ஆரம்ப எடுத்துக்காட்டு ஆகும். இந்த ஆக்கத்தில், காலிக் போர்களில் அவர் உள்ளூர்ப் படைகளுடன் சண்டையில் ஈடுபட்டிருந்த ஒன்பது ஆண்டுகளில் இடம்பெற்ற சண்டைகளை விபரிக்கிறார். அவரது இரண்டாவது நினைவுக் குறிப்பு, ”உள்நாட்டுப் போரின் வர்ணனைகள்” என்பது. இது கினேயசு பொம்பியசுவுக்கும், ஆட்சிக்குழுவுக்கும் எதிராக கிமு 48க்கும் 49க்கும் இடைப்பட்ட காலத்தில் நிகழ்ந்த உள்நாட்டுப் போரின் நிகழ்வுகளை விபரிக்கிறது.

லியனோர் லோபஸ் டி கோர்டோபா (1362-1420) எசுப்பானிய மொழியின் முதல் சுயசரிதையை எழுதினார். ஆங்கிலேய உள்நாட்டுப் போர் (1642-1651) இவ்வகையான பல ஆக்கங்கள் உருவாவதற்குத் தூண்டியது. சர் எட்மண்ட் லுட்லோ, சர் ஜான் ரிரெஸ்பி ஆகியோரின் படைப்புகள் இவற்றுக்கு எடுத்துக்காட்டுகள். அதே காலப்பகுதியைச் சேர்ந்த பிரெஞ்சு எடுத்துக்காட்டுகளுள் கார்டினல் டி ரெட்ஸ் (1614-1679), டுக் டி செயிண்ட்-சைமன் ஆகியோர் எழுதிய நினைவுக் குறிப்புக்கள் அடங்கும்.

## கற்பனைச் சுயசரிதை

‘‘கற்பனைச் சுயசரிதை” என்ற சொல், கற்பனைக் கதாபாத்திரம் ஒன்று தன் சுயசரிதையை எழுதுவது போல் எழுதப்பட்ட ஒரு கற்பனைப் புதினம் ஆகும். இதில் குறித்த கதாபாத்திரம் தன்மையில் கதை சொல்வதுடன், அது பாத்திரத்தின் உள் அனுபவத்தையும், வெளி அனுபவத்தையும் எடுத்துச் சொல்கிறது. டேனியல் டெபோவின் மோல் ப்ளாண்டர்ஸ் (Moll Flanders) இதற்கு ஒரு தொடக்ககால எடுத்துக்காட்டு. சார்லஸ் டிக்கன்சின் டேவிட் காப்பர்.·.பீல்ட் இன்னொன்று. ஜே.டி.சலின்கரின் தி கச்சர் இன் தி ரய் (The Catcher in the Rye) என்பது நன்கு அறியப்பட்ட தற்கால கற்பனைச் சுயசரிதை. அசல் பதிப்பின் முதல் பக்கத்தில் குறிப்பிட்டபடி, சார்லோட் ப்ரோண்டேயின் ஜேன் ஐர் கற்பனைச் சுயசரிதையின் இன்னொரு எடுத்துக்காட்டு. உண்மையான பாத்திரங்களின் சுயசரிதைகளாக இருப்பதாக கூறப்படும் புனைகதைப் படைப்புக்களுக்கும் இந்தச் சொல் பொருந்தும், எ.கா., ராபர்ட் நேய்சின் நினைவுக் குறிப்பான லார்ட் பைரோன்.

### ஆரம்பகால சுயசரிதைகள்

இஸ்லாமிய சமுதாயத்தின் முதல் சுயசரிதை 11 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கிரனாடாவின் கடைசி சிரித் மன்னரான அப்தல்லா இபின் புலுகின் என்பவரால் எழுதப்பட்டது.

15 ஆம் நூற்றாண்டில், ஸ்பானிய பிரபுத்துவப் பெண் லியனோர் லோபஸ் டி கோர்டோபா, அவரது நினைவுக் குறிப்புக்களை எழுதினார், இது ஜப்பானிய மொழியின் முதல் சுயசரிதை ஆகும்.

தெற்காசியாவின் முகலாய வம்சத்தை நிறுவிய சஹிர் உத்-தீன் முகம்மது பார்பர், பாபர்நாமா என்னும் நினைவுக் குறிப்புப் புத்தகம் ஒன்றைப் பேணி வந்தார். இது 1493 ஆம் ஆண்டுக்கும் 1529 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டது.

மறுமலர்ச்சிக் காலத்தின் மிகச் சிறந்த முதல் சுயசரிதைகளில் ஒன்று 1556 ஆம் ஆண்டுக்கும் 1558 ஆம் ஆண்டுக்கும் இடையில் சிற்பியும் பொற்கொல்லருமான பென்வெனுட்டோ செலினி (1500-1571) என்பவரால் எழுதப்பட்டது. இதற்கு அவர் எளிமையாக ”வாழ்க்கை” (ஏவைய) எனப் பெயரிட்டிருந்தார். ”எப்படியானவராக இருந்தாலும், ஒவ்வொருவரும் ஏதாவது சாதனைகளைச் செய்திருப்பர். அவர் உண்மையையும், நல்லதன்மையையும் போற்றுபவராக இருந்தால் அவர் தனது வாழ்க்கையின் கதையைத் தன் கையால் எழுதவேண்டும். ஆனால், நாற்பது வயதைக் கடக்குமுன் எவரும் இந்த முக்கியமான வேலையில் ஈடுபடக்கூடாது”ஜ4ஸ என்று நூலின் ஆரம்பத்தில் செலினி கூறுகிறார். சுயசரிதத்துக்கான இந்த விதிகள் பொதுவாக அண்மைக்காலம் வரை நிலைத்திருந்தன. அடுத்த மூன்று நூற்றாண்டுகளில் எழுதப்பட்ட முக்கியமான சுயசரிதைகள் அவற்றிற்கு இணங்கவே எழுதப்பட்டன.

இந்த காலத்தின் மற்றொரு சுயசரிதை இத்தாலிய கணிதவியலாளரும், மருத்துவரும், சோதிடருமான ஜெரோலாமோ கார்டானோ (1574) என்பவரால் எழுதப்பட்ட டி வைட்டா பிராப்பிரியா ஆகும்.

ஆங்கிலத்தில், மிக முந்தியதாக அறியப்பட்ட சுயசரிதை 15 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுதப்பட்ட மார்கெரி கெம்பே நூல் (Book of Margery Kempe) ஆகும். பிற விடயங்களுடன், கெம்பேயின் புனித நிலத்துக்கும், ரோமுக்குமான யாத்திரை பற்றி இது விவரிக்கின்றது. ஆகக் கூடியது இதை ஒரு பகுதிச் சுயசரிதை எனலாம். ஆனாலும், கூடுதலாக இது ஒரு மத அனுபவங்களின் நினைவுக்குறிப்பாகவே உள்ளது. கையெழுத்துப்படியாகவே இருந்த இந்நூல் 1936 வரை வெளியிடப்படவில்லை.

17 ஆம் நூற்றாண்டின் ஏனைய குறிப்பிடத்தக்க ஆங்கில சுயசரிதைகளுள் சேர்பரி ஹெர்பர்ட் பிரபு (1643, 1764 இல் வெளியானது), ஜான் புன்யன் (1666), ஆகியோர் எழுதிய சுயசரிதைகளும் அடங்கும்.

## 5.8.மரபுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்

மரபுக் கவிதையின் வளர்ச்சியை வடிவம், பாடுபொருள் என்ற இரு நிலைகளில் பகுத்துக்காணலாம். உலகமொழிகளுள் காலந்தோறும் ஏராளமான இலக்கிய இலக்கண நூல்கள் தோன்றி சிறந்து விளங்கிய தமிழ்மொழியில் அரிய நூல்கள் பல கடற்சீற்றத்தாலும், போற்றிப் பாதுகாப்பார் இன்மையானும், சமையச் சண்டைகளாலும், ஆற்றிலும், தீயிலும் இட்டுக் கொளுத்திய மூடத்தனத்தாலும் அழிந்தவை போக எஞ்சி நிலைத்தவை சில. அவற்றுள் முதன்மையானதாகவும், தொன்மையானதாகவும் விளங்குவது ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுப் பழமை வாய்ந்த தொல்காப்பியம் என்னும் இலக்கண நூல்.

### தொன்மையான இலக்கிய வடிவம்

இத்தொல்காப்பியத்தில் செய்யுள் தொடர்பான எழுத்து, சொல் பற்றியும், அகம்-புறம் என்னும் பாடுபொருள் குறித்தும், யாப்பு, அணி பற்றிய வரையறைகள் குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளதை எண்ணிப் பார்க்கும்போது செய்யுள் என்னும் (மரபுக்கவிதை) கவிதை வடிவம் எத்துணைத் தொன்மையுடையது என்பதை உணரலாம்.

### மரபுக்கவிதையின் தொன்மையும் மறைந்துபோன தமிழ் நூல்களும்

ஆசிரியப்பா, கலிப்பா, பரிபாடல்,வெண்பா ஆகிய பா வகைகளைக் குறித்த இலக்கணங்களைத் தொல்காப்பியம் எடுத்துரைக்கின்றது. மேலும் முதுகுருகு, முதுநாரை, களரியாவிரை, கலி, குருகு, வியாழமாலை, வெண்டாளி, சிற்றிசை, பேரிசை முதலிய சங்கமிருந்தகாலத்து மறைந்து போன தமிழ்நூல்களும் மரபுக்கவிதையின் தொன்மையை எடுத்துரைக்கின்றன.

### செய்யுளின் உறுப்புக்கள்

‘மரபு’ என்னும் சொல் தொன்று தொட்டு வரும் முறைமையை உணர்த்தி நிற்கின்றது. எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என செய்யுளின் உறுப்புக்கள் அமையப்பெற்று, ஓசை நயம் அமைந்த பாடல்களை இலக்கண நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ள பாவடிவங்களில் அவற்றின் மரபு மாறாமல் காலந்தோறும் கவிதைகள் இயற்றப்பட்டு வந்துள்ளன. இவ்வாறு பாவகைகளை அடுத்துப் பாவினங்களும், அவற்றையடுத்துக் கும்மி, சிந்து போன்றனவும் தோன்றி ஒரு பாடல் இவ்வாறுதான் பாடப்படவேண்டும் என்னும் வரையறைப்படி பாதுகாக்கப் பெற்றுக் காலந்தோறும் இம்முறை பின்பற்றப்பட்டு வருகின்றது.

சங்க இலக்கியம், நீதி நூல்கள், பக்தி இலக்கியம், காப்பியங்கள், சிற்றிலக்கியம், தனிப்பாடல்கள் என்னும் யாவும் மரபுக் கவிதைகளால் ஆனவையே ஆகும்.

### பாடுபொருள்

மரபுக்கவிதை, சங்க காலத்தில் மன்னர்களோடு தொடர்புடையதாக இருந்தது. மன்னர்களின் வீரம், வெற்றி, கொடை, ஆட்சிச் சிறப்பு ஆகியவற்றைப் புகழ்வதாகவும், துணிச்சலுடன் புலவர்கள் அறிவுறுத்துவதாகவும் அமைந்தன. அரசவையிலோ, சங்கம் போன்ற தமிழ் அவைகளிலோ ஒன்று குழுமிய புலவர்கள் அகப்பொருள் பாடி இன்புறுத்துவதாகவும் அறிவுறுத்துவதாகவும் அமைந்தன. பிற்காலத்தில் பக்தி இலக்கிய மறுமலர்ச்சியின் காரணமாகப் பாடுபொருள் இறைவனைப் பற்றியதாகவும், திருத்தலங்களின் சிறப்பை உணர்த்துவதாகவும் அமைந்தது.

சித்தர் இலக்கியம், தத்துவம், மருத்துவம், அரசர்களையும் குறுநில மன்னர்களையும் மகிழ்வுறுத்தும் சிற்றிலக்கியங்கள் என அடுத்தடுத்த காலங்களில் பாடுபொருள்கள் அமைந்தன.

கவியரங்கம், வரையறுக்கப்பட்ட தலைப்பு, இயற்கை, சமூக அவலம் என இன்றைய நிலையில் மரபுக்கவிதையின் பயன்பாடு அமைகின்றது.

சங்க இலக்கியத்தில் அகவலும், நீதி இலக்கியத்தில் வெண்பாவும், பிற்காலக் காப்பியங்களில் விருத்தமும், குறவஞ்சி, பள்ளு முதலியவற்றில் சிந்துப் பாடலுமாக மரபுக்கவிதை வடிவம் சிறந்து வந்துள்ளது.

இலக்கிய இதழ்களில் வல்லமை படைத்த மரபுக் கவிஞர்களின் படைப்புகளும், போட்டிக் கவிதைகள் பலவும் இன்றும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. கவியரங்குகளில் மரபுக் கவிதைகள் சிறப்பிடம் பெறுகின்றன.

## 5.9.புதுக்கவிதை

இந்த நூற்றாண்டில் இன் தமிழ் 1930-40களில் கிளைத்த ஒன்றே புதுக்கவிதை. ஆங்கிலத்தில் இத்தோற்றுநர் வால்ட் விட்மன் - புல்லின் இதழ்கள் (Leave of Grass) மூலம் பேணி வளர்த்தவர். எஸ்ரா பவுண்டு (Ezra pound) கவிதை இயக்கத்தையே தொடங்கி வைத்தார். பாடு பொருளை நேராகவே நோக்குதல். தேவையற்ற சொற்களைத் தவிர்த்தல், சொற்றொடர்களின் இசை நீட்சி - இவற்றிற்கே முக்கியத்துவம் தந்து புதுக்கவிதையை வளர்த்தார். 1912 அளவில் அவரைப் புதுக்கவிதை பிரம்மா எனலாம். இவர் அடிச்சுவட்டை பின்பற்றி வு.ளு.நுடழைவ பரப்பினர். பாழ்நிலம் (Waste Land) இவருக்கு நோபல் பரிசு பெற்றுத் தந்தது. இவரது போக்கும், நோக்கும், உகல மொழிகளில் செல்வாக்கும் தாக்கமும் பெற்றன.

**தமிழின் புதுக்கவிதையின் புறப்பாடு:** நந்தமிழில் புதுக்கவிதை முன்னோடியாக - முதல்வராக திகழ்பவர் ந.பிச்சமூர்த்தி அவர்கள். இப்புதுக் கவிதை முயற்சிக்கு விட்டமனின்

'புல்லின் இதழ்கள்' வித்திட்டது. அதைப் படித்தபோது கவிதையின் ஊற்றுக்கண் எனக்குத் தெரிந்தது. (காட்டுவாத்து - எதிர் நீச்சு முன்னுரை) கு.பராவும் உறுதுணை புரிந்தார். மணிக்கொடியும் புரந்து போற்றியது. இப்புதுத் துறையை அயராது பேணிக்காலூன்றச் செய்து காத்தவர் சி.சு.செல்லப்பா அவர்கள் தன் எழுத்து ஏட்டின் மூலம் புதுக்குரல்கள் வெளியீட்டின் வாயிலாகவும் இவர் எலியட், எஸ்ரா பவுண்டு இருவரையும் அடியொற்றினர். மேல் நாட்டவர் முகிழ்ந்து புதுக்கவிதையினைத் தமிழ் மண்ணில் பயிரிட்ட இவ்விருவரும் இரு சுடர்கள் எனலாம்.

இவ்விருவருக்கும் முன்பே இத்துறையில் சோதனை செய்து சாதனை புரிந்தவர் பாரதியார், சப்பானியர், வெற்று வார்த்தைக்கு குப்பைகளை விலக்கி, நறுக்குத் தெறித்தாற் போல் சொற்செட்டுடன் சுருக்கமும் இறுக்கமும் கொண்டு கவிதை யாப்பதனைப் பாராட்டியவர். ஒரு சப்பானியக் கவிஞரின் வீடு தீப்பற்றிச் சாம்பலான போதும் தாம் சோம்பி மடியாது சலனமற்றிருந்த சால்பினைத்,

**தீப்பட்டெரிந்தது**
**வீடு மலரின் - அமைதியென்னே!**

என்ற கவிதையில் கண்டு கனிந்துருகினர். இதனால் இவ்விருவருக்கும் முன்பே பாரதி புதுக்கவிதைக்கு வரவேற்பு கூறியவர். விட்மன், தாகூர் கவிதைகளில் திளைத்தவர் என்றும், தேசீயம் இவருக்குத் தூண்டுதல் தந்தது என்பதும், வசன கவிதையினைத் தொடங்கி வைத்தவர் எனவும் உணர வேண்டும்.

தொடக்கத்தில் மிக்க எதிர்ப்புக்கும் மிகுந்த கேலிக்கும் உரியதாக அமைந்து வன்மையான கண்டனத்துக்கும் உரியதாயிற்று புதுக்கவிதை. என்றாலும் புதியன புகுவதனை யாராலும் தடுக்க முடியுமா? வளரவே செய்தது. இங்கிலாந்து அமெரிக்காவில் தோன்றிய படிமக் கொள்கையர் இயக்கம் (Imagist movement) உந்து சக்தியாக அமைந்தது. காலத்தின் இன்றியமையாத் தேவை. புதிய தேவைகளை - போக்குகளைப் பழைய யாப்பு முறையில் வெளியிட இயலாமை. பிறமொழிப் பிரயோகங்களை வசனத்தில் கையாள்வது போல் செய்யுளில் முடியாமை, போன்ற காரணிகளால் புதுக்கவிதை புது வேகம் பெற்றது. புதுக்கவிதை பாரதிக்குப்பின் தமிழ்க்கவிதைப் பெருவழியில் தோன்றிய திருப்பம் உணர்த்தும்.

அகவய உளைச்சல் தத்துவமான பிராய்டிசமும் மார்க்கீசியமும் பாடு பொருளாகவும் - ஊடு பொருளாகவும் அமைந்தன. நேறு றுயளந - புது அலைகள் எனும் முறையில் பாலியல் கவிதைகள் படர்ந்தன. எ.கா:

**மேலாக்கு வானம்**
**இழுத்து மூட இயலாத**
**இயற்கை முலைகளா, சூரியச் சந்திரன்?** (உதய நிழல் - எஸ்.வைத்தீசுவரன்)

கி.அ.சச்சிதானந்தன், மா.தட்சிணாமூர்த்தி, நகுலன் கா.ராஜாராம் கவிதைகள் இத்தகையன. நமபிக்கை வறட்சியும் (Frustration) நிழலாடின.

**பயம் கணக்கும் நெஞ்சக் கூண்டில்**
**படபடக்குது நொண்டிச் சீவன்**
**நேற்றைக்கும் நாளைக்கும் நடுவில்**
**நின்று நின்று தவிக்கிறோம்** (உதய நிழல்)

தி.சோ.வேணுகோபாலின் சிறை, கி.அ.சச்சிதானத்தத்தன் ‘முடிவில்’ ந.பிச்சமூர்த்தியின் ‘ஆத்ததூரன் மூட்டை’ சரசுவதி ராம்நாத்தின் ‘என்உயிர்’ என்பன இப்போக்கின.

**ஏடுகள்**: இப்புத்திலக்கியத்திற்கு வாழ்வு ஊக்கிய, ஊக்கியவரும் இதழ்கள் தாமரை, தீபம், கணையாழி, கண்ணதாசன், சதங்கை, செம்மலர், மனிதன், ஞானரதம், வானம்பாடி, வேள்வி, கார்க்கி, பிரச்சினை, உதயம், மெய்ப்பொருள், நீ, பிரக்ஞை, விவேகசித்தன், காற்று, கசடதபற, நடை, சிகரம், எழுத்து, இலக்கிய வட்டம், ஏன், சுவடு, அ:்க், புத்தக விமர்சனம், தெறிகள், நாணல், தொடுவானம், சோதனை, சிவந்த சிந்தனை, வண்ணங்கள்.

**பிறநாட்டுக்கவிதைகள்**: தாகூர், கலில் ஜிப்ரான், இக்பால், சிலிநாட்டுக் கவிஞர் பாப்லோ நெருடாளூ வங்கக் கவி வி‘ஷ்ணுடே, சோவியத் நாட்டு மக்கள் கவிஞன் மயா கால்ஸ்கி, சினக் கவிஞன் மாயோ, ஜெர்மனியக் கவிஞர் ஹான்ஸ் மாக்னங் என் சென்ஸ் பர்கர்.

**புலவர்களும் புதுக் கவிதையும்**: தடுக்கவொண்ணா - தவிர்க்க இயலா புதுக்கவிதையின் வேகமான வளர்ச்சி தமிழ்ப் புலவர்களை ஊடுருவி உலுக்கவெ செய்தது. மரபுக் கவிதை விடுத்து ஓர் அலை எழுந்தது. இதன் முதல்வராக திகழ்பவர் நா.காமராசன், பழமை பெருமை ஏற்கும் பாங்கின் முதற்பிரதிநிதி. இதனால் புதுக்கவிதைப் புத்தொளி பெற்றது. புது மெருகுற்றது.

**வந்தது வானம்பாடி**: சிந்தனைத் தீவிரம் கொண்ட இளைஞாகள் கோவையில் 1970 இல் தொடங்கியது. கட்சி சார்பற்ற முற்போக்குச் சிந்தனையுடைய - சமுதாய நோக்கில் இலக்கியப் பணிபுரியும் கவிதை இயக்கம். தமிழ்க் கவிதை உலகக் கவிதையின் உரம் பெற்றுப் பலம் பெறச் செய்தது. இவர்கள் நோக்கம் ‘வெட்ட வெளியில் பந்தாலும், பூமித்தாய் முற்றத்தில் புதுக்கோலம் போடும் - உலக இலக்கியத்தின் ஒலிம்பிக் பந்தயங்களில் தங்கப் பதக்கம் பெற்ற தமிழ்க் கவிதையயை உயர்த்ப் பாசறைப் பயிற்சி பெறும் பருவ மேகங்கள்ளூ ஜீவமகரந்தம்

சுமந்து செழுந்தேன் பிலிற்றும் சிவப்பு ரோஜாக்கள்ளூ கனைத்துக் கறுத்த சேரிப் புறாக்களுக்காகக் கீதாஞ்சலி புனையும் புல்லாங்குழல்கள்ளூ சூனிய வாழ்வினைச் செர்க்கபுரி ஆக்குகின்ற தேனீக்கள்.

**வானம்பாடிகள்**: தத்தவப் படியில் வேரூன்றிய ஞானி, சுந்தரம், பழமையின் பிடியில் காலூன்றிய புவியரசு, இளமுருகு, புதமையின் பிடிப்பில் கருத்தூன்றிய அக்னிபுத்திரன், முல்லை, ஆதவன், காதல் பொதுவுடைமையின் ஊடாடும் முற்போக்குவாததி மீ.ரா, கம்யூனிச புரட்சிக் கவி இன்குலாப், சிந்தனையில் சிறகடிக்கும் சிற்பி, ககைத் கவிதையில் கனிந் தமிழன்பன், முற்போக்கு மிகக் கங்கை கொண்டான் போன்றவர் குறிப்பிடத் தக்கவர். மொத்தத்தில் மானுடம் பாடும் வானம்பாடிகள் இவர்கள் புதுக்கவிதையில் புதிய சகாப்தம் படைத்தவர்கள்.

**புதுக்கவிதையின் பாங்கு**: கருத்துகளை அழகாக - அழுத்தமாக உள்ளத்தில் தைக்கும் வண்ணம் - உலுக்கும் வகையில் உணர்த்துகின்றன. யாப்புச் சிறையில், தவிக்காது தங்கு தடையின்றி நேரே நெஞ்சில் ஊடுருவுகின்றது. சமுதாய யதார்த்தம். விமர்சனம் முறையில் தரப்பட்டுள்ளது. கவிதை கவிதையாகவே என்ற பயனில் போக்கின்றி கவிதை சமுதாய மேம்பாட்டுக்காகவே எனும் நிலையில் சமுதாயப் பார்வையோடு இலக்கியத்தை வளர்க்கிறது.

**பயன்:** புதுக்கவிதையின் வேகத்தால் மரபுக் கவிதைகள் அருகி வருகின்றன. புவியரசு புகலுவது போலே. ‘ஓர் அப்பளத்தின் மரணம் போல்’ நொறுங்கிவிட்டது. பண்டிதர் கூடாரத்திலிருந்து பாமரர் வட்டாரத்திற்குக் கவிதையைக் கொணர்ந்து மக்களுக்காக மக்களால் மக்களுக்கென ஆக்கப் பெறும் நிலை அடைந்தது.

**இலக்கணம்**: புற பாதிப்பால் அடிமனத்தில் தாக்குண்டு எழுகின்ற பல்வேறு கனவுநிலை உணர்வுகளையும் எண்ண ஓட்டங்களையும் அவற்றின் நுண்ணுணர்வுகளையும் எழுச்சி அலைகளையும் உணர்ச்சிப் பாதிப்புகளையும் யாப்பு முறைகட்கு கட்டுப்படாமல், இலக்கணக்காரரின் தம்மூப்பான விதிகளுக்குச் செவி சாய்க்காமல் பிறந்த மேனியாகத் தருவதே புதுக்கவிதை (தாமரை - சூன் 1967) ‘ஓசையால் மலிபு படுத்தப்படாமல், மனநிழல் சித்திரங்களைப் படிமச் சிற்போடும், சிந்தனை கனத்தோடும் படைப்புத் திறனோடும் வெளியிடுவதே - புதுக்கவிதை.

**உருவமும் உள்ளடக்கமும்**: உள்ளடக்திற்கேற்ற உருவம் பெற்றும் கவிதையே கவிதைளூ இன்றேல் அது கவிதையன்றுளூ கழுதை! கருத்துக்கு வடிவம்தான் அடிப்படைளூ என்றாலும் பின்னதைவிட முன்னதே இன்றியமையாதது ஏனெனில் கருத்தற்ற வெற்றிச் சொற்கோவை கவிதையாக! புதுக்கவிதைக்கு இரு கண்களாக இலங்குவன இவையிரண்டும். சரியான

வடிவத்தில் அறிவு சிறந்த கருத்துக்களைச் சரிவர அமைக்கும் பொழுது சிறந்த கவிதை உருவாகும்.

**புரியாமையும் இருண்மையும்:** புதுக்கவிதை புரியவில்லையே! எனப் புலம்புகின்றனர். புரிகின்ற படி எழுதுவதெல்லாம் கவிதை ஆகிவிடுமா? Modern art என ஓவியத்திலும் சிற்பத்திலும் கலையினைக் கண்டு ரசிக்கவில்லையா? நமக்குள் கவிதை பற்றிய ஒரு கருத்தை வைத்துக் கொண்டு அணுகுவோமானால் வெறுப்புடன் நெருங்குவோமானால் எப்படிபுரியும்?

புதுக்கவிதை புரியாது போவதற்கு இறுக்கம், செறிவு, திட்பநுட்பம், தேவையற்ற நீக்கம், உலகப் பொருட்தொடர்பு, சுற்றுப்புற நிகழ்ச்சி போன்றன காரணமாகும். சிலசமயம் குறியீடுகள் (Sumols) புரியாவிடில், கவிதையே புரியாது போய்விடும். கவிதையில் வரும் இலக்கிய மேற்கோள் அல்லது கதைகள் (allusions) தெரியாவிடிலும், கவிதை முழுவதுமே புரியாது.

**எடு ஒரு கல்**
**ஏசு வரு முன்**
**வீசி எறி**

பரத்தையைக் கல்லெறியப்படாது ஏசு காத்த கதை தெரிய வில்லையேல் இங்கு ஒன்றும் புரியாதே. இப்படித்தான் ராஜாராமின் பூனைகள், சி.மணியின் நகரம் போன்றனவும். ஏனெனில் 'Even in a single line or epithet, the poet lives'

எனவே தான் இருண்மை தவிர்க்க முடியதா ஒன்று. ஏனெனில்கவிஞன் - வாசகன் எழுத்துப் பரிமாற்றத்தில் ஏற்படும் தோல்வி, சிக்கல் நிறைந்த சிந்தனைகளை அப்படியே வெளிப்படுத்தலின் ஏற்படும் மொழியின் தோல்வி (Communication is never perfect) கவிஞனின் முட்டி மோதி முழங்கிவரும் மனோ வேகத்திற்கேற்ப வாசகர் உயர முடியாமை அவையின் கருத்துகளை ஏற்று சீரணிக்கு முடியாத போழ்து அங்கே இருண்மை உருவாகியே தீரும். சிற்சிலபோது செறிவான படிமங்களும் புரிய முடியாது செய்துவிடும். பழமையின் எளிமையில் புதுமையின் அருமை இருண்மை ஆதலும் உண்டு. இவற்றிற்குச் சான்றகள்.

**சூளைச் செங்கல் குவியலிலே**
**தமிக்கல ஒன்று சரிகிறது (ஞானகூத்தன்ளூ அன்று வேறு கிழமை)**
**பூமித் தோலில்**
**அழகுத் தேமல்**
**பாதி புணர்ந்து**
**பாட்டும் வந்து**
**இருளின் சிறகைத்**
**தின்னும் கிருமி**

**வெளிச்சச் சிறகில்**
**மிதிக்கும் கருவி (தாமு - விடிவு)**
**பத்துகஜ தூரத்தில்**
**இரண்டும் பஸ்ஸ்டேஜ்**
**முதலில் இறங்குகிறவன்**
**அட்டண்டர்**
**இரண்டாவதில் (ராமி:வேறுபாடு)**
**விழியுள்ள கனவான்**
**சமூகக் கொடியேற்ற,**
**வெறும் கைதட்டலுடன்**
**வெள்ளிவிழா வென்று**
**களித்தனர் - சுற்றி நின்ற**
**கண்ணற்றவர் (காலப்பிரியா - குரடர்பள்ளியில் கொடியேற்றம்)**

**படிமம் (Image):** ஒருகண நேரத்தினுள் உண்டாம் அறிவு பூர்வமான உணர்ச்சிமயமான பழம் அனுபவம் - அல்லது அடங்கி முடங்கிக் கிடக்கும் கிடக்கும் படிமம், எஸ்ரா பவுண்டு ‘’ என்கிறார். புதுக்கவிதையின் புதுமைப் பொலிவுக்கே. உள்ளடக்கத்துடன் படிமத்தை ஊடவைத்து உணர்த்துவதான் காரணம் இதன்கண் மரபாகக் கூறும் உவமை உருவகங்களோடு பிறவும் அடங்கும் - படிமவியல் கவிஞர், தருமசிவராம்,

**பூவின் இதழ்ச் சுவருள்**
**வண்டு குரல் ஒலிகள்**
**மோதி மடிகிறது**
**முத்தத் திரைமறைவில்**
**பேச்சு புதைகிறது (புதுக்குரல்கள்)**

இங்கே கட்புலனாக நுண்பொருள் (Abstract) பருப்பொருளாகப் பரிணமித்து நிற்றல் காணக். எஸ்.வைத்தீஸ்வரன்.

**பூமியை நக்கிப் பார்த்த**
**வான் நாயின் கடைவாயில்**
**வழிந்தொழுகும் மாலை ஜொள்ளு (உதய நிழல்)**

**புதுக்கவிதையின் போக்கு:** மொத்தத்தில் புதுக்கவிதையின் சுவையறிய ஒரு சில காட்டுகள் காண்போம்.

**இரவிலே வாங்கினோம்**

**இன்னும் விடியவில்லை** (சுதந்திரம் - அரங்கநாதன்) எத்தனைப் பெரிய தத்துவத்தை இத்தனை எளிமையுடன் இனிமைபட அத்துணை நுட்பமாக நவின்றுள்ளார் பாருங்கள்! கற்பனையில் நெடுந்தூரம் செல்ல வைக்கிறது.

**சமூகம் கெட்டுப் போய்விட்டதடா**
**சரி சோடாப்புட்டிகள் உடைக்கலாம் வாடா (ஞான கூத்தன்)**

இறுக்கத்தில் இழையோடும் அங்கதம் எண்ணுக.

**அவனைப் பள்ளியில் சேர்க்குமட்டும்**
**ஓயாமல் கேள்வி கேட்பான்,**
**பதில்தர நான் தவிப்பேன்,**
**அவனைப் பள்ளியில் சேர்த்த பின்னால்,**
**ஓய்ந்தால் கேள்வி கேட்கிறேன்**
**பதில்தர அவன் தவிக்கிறான்**

இங்கே தொனி (Suggestive Hint) தனியானனொரு அலாதி இன்பம் அளிப்பது அறிக. எழுத்துக்கள் மூலமாகவே உருவம் தரும் போக்கினை,

**கி**
**யு**
**வி**
**லே**
**ஒரே கூட்டம்**

என்பதில் காண்க: இதனைப் பார்வைப் படிவம் (Visual image) என்பாம். கேலியும் கிண்டலும் (Sarcasm) கவிதைக்குச் சுவையூட்டுவதனை.

**ராமன்**
**கல்லைத் தொட்டான்**
**அகல்யை வந்தாள்ளூ**
**வில்லைத் தொட்டான்,**

**ஜானகி வந்தாள்ளு**
**ஜானகியைத் தொட்டு**
**லவகுசர் வந்தர்ளு**
**அவள் கற்பையே தொட்டான்**
**நெருப்பு வந்தது. (தீபம்: 71மே)**

'நாங்கள் நிர்வாணத்தை விற்பனை செய்கிறோம் ஆடை வாங்குவதற்காக: நாங்கள் மன்மத அச்சகத்தில் மலிவுப் பதிப்புகள்' - விலைமகளிர் பற்றி காமராசர் கூறுவன.

புதுக்கவிதையின் புதுமைகள் புகுத்தி, புகழ் மிகப் பெற்றவர் புதுமைப்பித்தன். சப்பானிய பாரசீக மொரிகளில், செறிவு மிகு சிறு - குறுங்கவிதைகள் சிறந்துள்ளனவாம். குறுக்கம், கூர்மை, இறுக்கம், இனிமை, கற்பனை நலன், கருத்துவளம், (உருவகம், குறியீடு போன்ற) கலைத்திறன், உள்ளடக்கத்தின் உணர்த்தலியே ஒலி நயம். மரபுக்கு முரணான வடிவம் - வடிவச் சிதைவு, சொற்சொட்டு படிம ஆட்சி நிறைந்தனவே புதுக்கவிதை. இதுபற்றி அறிய வல்லிகக்ண்ணனாரின் புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் (அகாதமி பரிசு பெற்றது) பயில்க.

## 5.10.தமிழில் ஹைக்கூ கவிதைகள்

### அறிமுகம்

**'ஹைக்கூ என்பது விடுகதையால்**
**சிலேடையுமில்லை,**
**ஹைக்கூ என்பது**
**புனைவு இலக்கியமல்ல**
**அது உணர்வு இலக்கியம்'**

ஹைக்கூ வடிவம் ஜப்பான் மொழியின் மூலம் தமிழுக்குக் கிடைத்தது. நம்மிடையே அதிகம் அறிமுகமாகி வருவதும் மாற்றான் தோட்டத்து மல்லிகைதான். எனினும் 'மலர் மணமே தேவை' என்பது பாமர மக்களின் ரசனையான மனநிலை ஒவ்வொரு ஹைக்கூவையும் விளங்க அல்லது விளங்கிக்கொள்கிற முயற்சியில் பிறக்கிற வரிகள்கூட புதிய அர்த்தங்களோடு மிளிர்கின்றன. பல வருடங்களுக்கு முன் வெளிவந்த ஒரு ஆங்கில நாளிதழில் பாசோ என்ற மேதை சில ஹைக்கூக்களை எழுதுவதற்கு இரண்டு வருடங்கள் எடுத்துக் கொண்டார் என்ற செய்தியை 'ஹைக்கூ வரலாறு' என்ற தலைப்பில் வெளியிட்டிருந்தது.

ஹைக்கூ என்பதற்குக் கிளிஞ்சல் என்று பொருள். ஒவ்வொரு கிளிஞ்சலிலும் கடலும் ஒளிந்திருக்கிறது. கடல் பற்றிய எண்ணங்கள் கடலின் அனுபவங்கள் கிளிஞ்சலின் உடலில்

ஒட்டிக் கொண்டிருக்கின்றன. கிளிஞ்சல்கள் கடல் தள்ளி அபரிமிதங்கள் அல்லது உபரிகள். ஒரு கிளஞ்சலைக் காதுக்குள் வைத்தால் கடலின் ஓசை தெரிவது போல் ஒரு ஹைக்கூவில் வாழ்வின் அழத்தை அறிந்து கொள்ளலாம்.

ஹைக்கூக் கவிதைகள் பத்து அல்லது பதினொரு சொற்களுக்குள் எழுதப்படுகின்றன. இளங்கவிஞர்களுக்கு இவை சிறந்த வரமாக விளங்குகின்றன. தலைப்பைக் கொண்டு பொருள் உணரப்படுமாறு கவிதைகள் உள்ளன.

## தமிழில் ஹைக்கூ கவிதைகள்

குறுகிய அடியோடு அதாவது மூன்றடியோடு கூடி அமையும் கவிதைகள் ஹைக்கூ எனப்படும். புதுக்கவிதையின் இன்னொரு வடிவமாகத்தான் தமிழில் ஹைக்கூ கவிதைகள் அமைகின்றன. இதனை அய்கூ என்றும் எழுதுவர். மேலும் இதனை ஹைக்கூ, ஹைகு, ஹைய்கு, ஹைக்கூ என்றும் குறிப்பிடுகின்றனர். தமிழில் துளிபா (சிறுதுளி), மின்மினிக் கவிதைகள், வாமனக் கவிதைகள் என்றும் வழங்குவர்.

கட்டுப்பாடின்மை என்னும் பொருள் கொண்ட ஹைக்கூ என்ற ஜப்பானியர் சொல் ஆங்கிலத்தில் ஹைகை (haikai) என்று கூறப்படுகிறது. ஜப்பான் நாட்டிலுள்ள சென் பௌத்த அறிஞர்கள் மிகச் சிறிய அளவில் பௌத்தக் கருத்துக்களை விளக்கும் கவிதைகளைப் படைப்பதில் வல்லவர்கள். இவர்கள் மூன்றடியளவில் கவிதைகள் எழுதினர். கி.பி. பதினாறாம் நூற்றாண்டளவில் இத்தகைய கவிதைகள் ஜப்பானில் பேரளவில் தோன்றின. சோகி. மாரிடாகே, சோகன் ஆகியோர் இதன் முன்னோடிகளாவர். இவற்றின் பெருமையை அறிந்து பாரோ என்பவர் உலகுக்குப் பறைச்சாற்றினார். ஹைக்கூக் கவிதைகளை மகாகவி பாரதியார் பாராட்டி எழுதியுள்ளார். எனவே அவர் காலத்திலேயே தமிழகத்தில் இவற்றின் தடயம் பதியலாயிற்று எனலாம். சப்பானில் 16 ஆம் நூற்றாண்டின் இறுதியில் இக்கவிதைகள் மிகுதியாகத் தோன்றின. தற்கால இதழ்களில் இக்கவிதைகள் மிகுதியாகத் தோன்றின தற்கால இதழ்களில் பரவலாக ஹைக்கூக் கவிதைகள் வெளியிடப்படுகின்றன. இவை மூன்றடிகளில் ஏழு அல்லது எட்டுச் சொற்களுக்குள் ஒடுங்கிவிடுகின்றன. மிக அரிதாக நான்கடிக் கவிதைகள் சில காணப்படுகின்றன. இறுதியடி கவிதையின் பொருளைப் புரிய வைக்கிற உயிர்த்துடிப்பாக உள்ளது. தொடக்க காலத்தில் கணையாழி நடை தீபம் முதலிய இலக்கிய இதழ்கள் ஜப்பானிய ஹைக்கூக் கவிதைகளை மொழிபெயர்த்து வெளியிட்டன. அமுதபாரதி புள்ளிப்பூக்கள் என்று தலையிட்டு ஹைக்கூக் தொகுதியை வெளியிட்டார். இதுவே தமிழில் வெளியிடப்பட்ட முதலாவது ஹைக்கூக் கவிதைத் தொகுப்பாகும்.

அமுத பாரதியைத் தொடர்ந்து தமிழில் இக்கவிதைகள் பற்றி மிகுதியாக ஆராய்ச்சி செய்தவர் டாக்டர். லீலாவதி ஆவார். 1987இல் 142 கவிதைகள் அடங்கிய சப்பானிய் ஹைக்கூவை வெளியிட்டுள்ளார். இவரே ஹைக்கூக் கவிதைகளை விரிவாக ஆய்வு

செய்தவராவார் ஹைக்கூக் கவிதைகள் சமூக அமைப்பு, அரசியல், பொருளியல் முதலிய துறைகளிலுள்ள சீர்கேடுகளை எள்ளி நகையாடுதலில் தனிச் சிறப்புடையவை.

தமிழில் ஹைக்கூக் கவிதைகள் பெருகி வருகின்றன. புல்லின் நுனியில் பனித்துளி, சின்ன நதிகள், சின்னம் நிறைய ஹைக்கூ, சூரியப் பிறைகள், இயைுதிர்காலம் நிரந்தரமல்ல இன்னும் மக்கள், ஐக்கூ அந்தாதி என ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட தொகுதிகள் அச்சேறி வெளிவந்துள்ளன.

### ஹைகூ கவிதைகளும் சமுதாயமும்

ஜப்பானிய மொழியில் தோன்றிய ஹைகூ தமிழிலும் வளரத் தொடங்கிற்று இன்றைய இலக்கிய வடிவமான ஹைக்கூ, காலத்தைக் காட்டும் கண்ணாடியாகச் சமுதாயப் பிரதிபலிப்பாக விளங்கி வருவதை இப்பகுதியில் காணலாம்.

### வறுமை

வறுமைத் துயர் நீங்க வேண்டும். மனிதன் நலமுடன் வறுமை நம்மைவிட்டு நீங்க வேண்டும் வாழ்வோடு பின்னிப் பிணைந்திருக்கும் வறுமையினை ஹைகூ கவிதைகள் படம்பிடித்துக் காட்டியுள்ளன.

**“இலையை எங்கே போட**
**எதிரெதிராய் எதிர்பார்ப்புடன்**
**நாயும் மனிதர்களும்’** ( செ. ஆடலரசன்)

மனிதனின் வாழ்க்கை சம்பள நாளிலும் கடனோடு விடிவதை ஹைக்கூ அழகாகக் குறிக்கின்றது.

**“கடனோடு**
**விடியும்**
**சம்பள நாள் (ரவி)**

என்பது உணரத்தக்கது.

### அரசியல்

தேர்தலுக்குத் தேர்தல் வாக்குறுதிகள் திரும்பிய பக்கமெல்லாம் பிச்சைக்காரர்கள். இன்றைய தேர்தலில் நிலவும் கள்ளவோட்டுப் பற்றி ஹைக்கூ கவிதைகள் கட்டிக் காட்டுகின்றன.

**‘ஓட்டுப் போட்டுவிட்டுத்**
**திரும்பி வந்த பிணம் திடுக்கிட்டது**

**தனது கல்லறையிலே வேறொரு பிணம்’ (தமிழன்பன்)**

மந்திரி தொகுதிக்கு வந்தார். மக்களைப் பார்க்க அல்ல, தான் கட்டும் வீட்டைப் பார்க்க எனப் புதுக்கவிதை தெரிவிக்கும்.

## பெண்கள் நிலை

எனக்கு எந்தப் பெண்ணுமே கிடைக்கவில்லை. மதிப்பெண்ணும்தான் என்பது போலப் பெண்களின் பலதரப்பட்ட நிலைகளை ஹைக்கூ கவிதைகள் உரைக்கின்றன.

**“அம்மாவுக்கு் 15ல்**
**அக்காவுக்கு 25ல்**
**எனக்கு 35ல்”** (ரவி)

என் முதிர் கன்னிகளின் அவல நிலையைச் சுட்டுகின்றது.

**“கறுத்த பெண்**
**புகுந்தகம் வந்தாள்**
**கலர் டி.வி. யோடு”** (முருகேஷ்‘)

என்ற ஹைக்கூ கவிதை விலை உயர்ந்த பொருள்வரின் நிறம் ஒரு தடையில்லை என்பதை எடுத்துக்காட்டுகிறது.

## கல்வி

கல்வி குறித்தும் ஹைக்கூ கவிதைகள் எடுத்துரைக்கின்றன.

**“விடுமுறையே வேண்டாம்**
**பள்ளிக்கூடம் போகிறோம்**
**நண்பகல் உணவு”** (தமிழ் நெஞ்சன்)

பள்ளிக்குச் சென்றால் அறிவு பெறுகிறோமோ இல்லையோ, இலவச உணவானது பெறலாமே என வறிய நிலையை எடுத்துக்காட்டுகிறது இந்த ஹைக்கூ கவிதை.

## பிற

**“எல்லா ரத்தமும் சிவப்பு**
**இதிலும்**
**எத்தனை கருப்பு”**

என சாதி வேறுபாட்டைச் சாடுகின்றது ஹைக்கூ கவிதை.

**“கொடி கொடுத்தீர்**
**குண்டூசி தந்தீர்**
**சட்டை!”**

என்ற ஹைக்கூ கவிதையும் சிந்திக்கத்தக்கது.

ஜப்பானிய ஹைக்கூவில் தத்துவம் முதலிடம் பெற, தமிழ் ஹைக்கூவில் சமுதாயம் முதலிடம் பெறுவதை இதன்வழி அறிய முடிகிறது.

## 5.11.சென்ரியூ

மரபுக்கவிதையின் எளிமைப்படுத்தப்பட்ட வடிவம் புதுக்கவிதை. ஹைக்கூவின் தத்துவ இறுக்கம் குறைந்த வடிவம் சென்ரியூ. சென்ரியூ என்னும் புனைபெயர் கொண்ட கராய்ஹச்சி மோன் என்னும் ஜப்பானியரின் கண்டுபிடிப்பே சென்ரியூ. புழைமை, இறுக்கம், மரபு என்னும் கட்டுபாடுகள் தகர்க்கப்படவேண்டும் என்னும் கண்ணோட்டத்தில் குறும்பும் நகைச்சுவையும் மிக்க கவிதைகளை சென்ரியூ எனப் பதிப்பித்தார். அக்கவிதைத் தொகுப்பு அப்பதிப்பாசிரியரின் பெயராலேயே ‘சென்ரியூ’ எனக் குறிக்கப்பட்டது. இத்தகைய கவிதைகளுக்கும் அதுவே பெயராயிற்று.

### சென்ரியூவின் வரையறைகள்

- மரபுக் கட்டுப்பாடற்றது
- சுதந்திரமானது
- நகைச்சுவை கொண்டது
- ஆழமற்றது
- வேடிக்கையானது
- விடுகதை போன்றது
- பொன்மொழி போன்றது
- அங்கதம் பேசுவது

### ஹைக்கூ - சென்ரியூ

அங்கதம் பேசுவது, இயற்கைப் பொருள்கள், உயிரினங்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு கருத்துக்களைக் கூறமுனைவது ஹைக்கூ.

மானுடம் பற்றி பாடுவது சென்ரியூ

ஈரோடு தமிழன்பனின் ‘ஒரு வண்டி சென்ரியூ’ என்னும் நூல் தமிழின் முதல் சென்ரியூ தொகுப்பாக விளங்குகிறது.

**‘தொகுதிதான்**
**முடிவாகவில்லை**
**தோல்வி முடிவாகி விட்டது’**

என்னும் சென்ரியூ அரசியல் அங்கதத்தை வெளியிடுகிறது.

**“ஆயிரம் பேரோடு**
**வேட்பு மனுத்தாக்கல்**
**ஐம்பது வாக்குகள்”**

**“சட்டம் ஒழுங்கைக்**
**காப்பாற்ற முடியவில்லை**
**சட்ட சபையில்”**

போன்ற கவிதைகளும் அரசியல் அங்கதத்தையே புலப்படுத்துகின்றன.

**“மழைநாள் கவலை**
**காளான்களை எண்ணுவதா?**
**கட்சிகளை எண்ணுவதா?”**

என்பது இயற்கையின் வழிப்பட்ட அரசியல் அங்கதம்.

**“கல்லூரியிலிருந்து**
**மகன் கடிதம்**
**கடன்களால் படிக்கும் அப்பா”**

என்னும் சென்ரியூ நிகழ்கால நடுத்தர வர்க்கப் பொருளாதாரப் போராட்டத்தைப் படம்பிடிக்கிறது.

## இலக்கிய ஆய்வு முறைகள்

ஒரு இலக்கிய ஆய்வு என்பது ஒரு குறிப்பிட்ட வி'யத்துடன் தொடர்புடைய அறிவார்ந்த படைப்புகளின் ஆழமான ஆய்வு ஆகும் தலைப்பு. இது தற்போதைய ஆராய்ச்சி பற்றிய உங்கள் அறிவை விரிவாக்க உதவுகிறது மற்றும் முக்கிய கோட்பாடுகள், முறைகள் மற்றும் ஆராயப்படாத பகுதிகளைக் கண்டறிய உதவுகிறது.

### அணுகுமுறை வகைகள்

அணுகுமுறை என்பது இலக்கியம் பற்றிய மற்றும் சமூகம் பற்றிய பார்வைக் கோணத்தை அடித்தளமாகக் கொண்டதாகும். அந்த அடிப்படையில் அணுகுமுறைகள், பல வகைகளாக அமைந்திருக்கின்றன. மேலும் ஓர் இலக்கியத்திற்கே கூட அதன் தேவையையும் பண்பையும் ஒட்டி, ஒன்றிற்கும் மேற்பட்ட அணுகுமுறைகள் தேவைப்படக் கூடும் என்று வெயின் பூத் என்ற அறிஞர் கூறுகிறார். இக்கூற்றின் மூலம், அணுகுமுறைகள் பல வகைகளாக அமைந்திருக்கின்றன என்ற செய்தியை உணரமுடிகின்றது.

### பல்வேறு அணுகுமுறைகள்

வில்பர் ஸ்காட் (Wilbur scott) எனும் அறிஞர், திறனாய்வில் ஐந்து அணுகுமுறைகளை இனங்கண்டறிந்து சொல்கிறார். இலக்கியத் திறனாய்வின் ஐந்து அணுகுமுறைகள் (Five Approaches of literature) என்பது அவரது புகழ்பெற்ற நூல். அதில் அவர் கூறும் ஐந்து அணுகுமுறைகள் பின்வருவன :

(1) அறிவியல் அணுகுமுறை ( அறிவியல் குறிக்கோள்களும் இலக்கியமும்)

(2) உளவியல் அணுகுமுறை (உளவியல் கோட்பாட்டு வெளிச்சத்தின் இலக்கியம்)

(3) சமுதாயவியல் அணுகுமுறை ( சமுதாயக் குறிக்கோள்களும் இலக்கியமும்)

(4) உருவவியல் அணுகுமுறை (அழகியல், அமைப்புப் பார்வையில் இலக்கியம்)

(5) தொல்படிமவியல் அணுகுமுறை (தொன்மங்களின் ஒளியில் இலக்கியம்)

இவ்வாறு வில்பர் ஸ்காட், ஐந்து அணுகுமுறைகளைப் பேசுகிறார். ஆனால் இவ்வைந்து முறைகள் மட்டுமே அணுகுமுறைகள் என்று சொல்லமுடியாது. இவற்றைத் தவிரவும் பல அணுகுமுறைகள் உண்டு. இலக்கியத்தின் தேவைக்கேற்ப இவை அமைகின்றன. அவை :

(1) வரலாற்றியல் அணுகுமுறை

(2) இலக்கிய வகைமையியல் அணுகுமுறை

(3) மானுடவியல் அணுகுமுறை

(4) மார்க்சிய அணுகுமுறை

(5) தத்துவவியல் அணுகுமுறை

(6) அழகியல் அணுகுமுறை

(7) மொழியியல் அணுகுமுறை

(8) பகுப்பியல் அணுகுமுறை

(9) ஒப்பியல் அணுகுமுறை

(10) அமைப்பியல் அணுகுமுறை

(11) பின்னை அமைப்பியல் அணுகுமுறை

(12) பின்னை நவீனத்துவ அணுகுமுறை

(13) தலித்திய அணுகுமுறை

(14) பெண்ணிய அணுகுமுறை

மேற்கூறிய வகைகள், அணுகுமுறைகளை விரிவாகப் பேசுபவை ஆகும். திறனாய்வின் தேவையையும் வளர்ந்து வருகின்ற காலத்தின் சூழலையும் அடிப்படையாகக் கொண்டு இவற்றில் சில குறையலாம் கூடலாம்.

## அணுகுமுறை அமையும் விதம்

திறனாய்வுக்கு அணுகுமுறை இன்றியமையாததென்றால், அந்த அணுகுமுறை பொருத்தமானதாக இருக்கவேண்டும். பொருத்தமாக அமையவில்லை என்றால் அது பிழைபட்ட முடிவுகளையே தரும். அவ்வாறானால் பொருத்தமான அணுகுமுறை எதனடிப்படையில் அமையும் என்பது குறித்துக் காண்போம்.

(1) இலக்கியத்தின் பொதுவான தன்மைகளும், இலக்கியம் எழுந்த சூழலமைவுகளும்

(2) குறிப்பிட்ட இலக்கியத்தின் போக்கு அல்லது செல்நெறி

(3) இலக்கியத்தின் பாடுபொருள்

(4) இலக்கியத்தில் மையமாக இருக்கின்ற குறிப்பிட்ட கொள்கை அல்லது கோட்பாடு

(5) இலக்கியத்தின் கலை மற்றும் உருவவியல் உத்திகள்

இவற்றைத் தவிர, திறனாய்வு செய்கின்றவனுடைய சில பண்புகள் அல்லது திறன்கள் அவனுடைய அணுகுமுறைத் தேர்வுக்குப் பெரிதும் உதவுகின்றன. அவை :

(1) திறனாய்வாளனுடைய தேவையும், நோக்கமும்

(2) திறனாய்வாளனுடைய தேர்ச்சியும், பயிற்சியும்

(3) திறனாய்வாளன் அறிந்துள்ள இலக்கியக் கோட்பாடுகள்

(4) திறனாய்வாளனுடைய உலகக் கண்ணோட்டம்

என்பனவாகும்.

### திறனாய்வாளனின் கண்கள்

மேலும் அணுகுமுறையின் தேர்வு மட்டுமில்லாமல், திறனாய்வுக்குரிய இலக்கியத் தேர்வும் இதனடிப்படையிலேயே அமைகிறது. பொருத்தமான இலக்கியம், பொருத்தமான அணுகுமுறை இவ்விரண்டும் திறனாய்வாளனுடைய இரண்டு கண்களாகும்.

### கைலாசபதியின் அணுகுமுறை

சான்றாக, கலாநிதி கைலாசபதி அவர்கள் சங்க இலக்கியத்தை ஆராய்வதற்கு அறிவியல் பூர்வமான சமுதாயவியல் அணுகுமுறையை மிகப் பொருத்தமான முறையில் தேர்ந்தெடுத்தார். இதன் காரணத்தினால், அன்றைத் தமிழர்தம் வாழ்க்கையை இதுவரை யாரும் சொல்லாத வகையில் புலப்படுத்தியிருக்கிறார். அதுபோல அவர் தமிழ் நாவல் இலக்கியத்தை அதன் பல்வேறு பரிமாணங்கள் வெளிப்படும் வகையில் வரலாற்றியல் அணுகுமுறை மூலம் ஆராய்ந்திருக்கிறார் என்பதைச் சுட்டலாம்.

### அணுகுமுறையும் திறனாய்வும்

சரியான அணுகுமுறையைத் தேர்ந்தெடுப்பதே சரியான திறனாய்வுக்கு அடிகோலுகிறது. திறனாய்வின் வெற்றி, ஏற்கனவே நாம் சொன்னது போன்று பொருத்தமான அணுகுமுறையிலிருந்துதான் தொடங்குகிறது. அணுகுமுறைகள் பல திறத்தன என்று சொல்வோம். அவற்றை இனி, விரிவாகப் பார்க்கலாம். முதலில், அழகியல் அணுகுமுறை பற்றி இந்தப் பாடத்தில் பார்க்கலாம்.

### மக்கள் தொடர்பியல் - தொடர்புடைய பிற துறைகள்

கணிப்பொறி சிக்கல்களுக்கு தீர்வு காண உதவும் ஒரு சாதனம். அது தரவுகளையும் கட்டளைகளையும் பெற்று, அந்தக் கட்டளைகளின்படி செயல்பட்டு, தகவல்களை உருவாக்குகிறது.

பல்வேறு வகைகளிலும் திரட்டப்படும் அடிப்படைச் செய்தித் துணுக்கு தரவு எனப்படும். தரவுகளை நினைவில் வைக்கவும் அலசி ஆராய்ந்து புதிய தகவல்களைப் பெறவும் முடியும். எனவே, தரவு என்பது

- நினைவில் வைக்கப்பட்ட செய்திகள்
- நேரடிப் பயன் தராதது
- தொழில்நுட்பம் சார்ந்தது
- பல்வேறு வகைகளில் பெறப்பட்டது.

தகவல் என்பது நமக்கு எளிதில் பயன்படும் வகையில் உருவாக்குப்படுபவை. இவை பல செய்திகளை உடனடியாக நமக்கு உணர்த்தும். இவற்றை வைத்து நாம் பல முடிவுகளை எடுக்க முடியும். தகவல் என்பது உரை, எண், படம், சலனப்படம் என்று பல வகைகளில் இருக்கலாம்.

ஒரு எடுத்துக்காட்டினைப் பார்ப்போம். ஒரு நாட்டில் உள்ள ஒவ்வொருவரின் ஆண்டு வருமானமும் ஒரு தரவு. இந்த எல்லாத் தரவுகளையும் சேர்த்து, ஆராய்ந்து கணக்கிட்டு, சராசரி வருமானத்தைக் கணக்கிடலாம். இந்த சராசரி வருமானம் அந்த நாட்டின் வருமானத்தைக் குறிக்கும் ஒரு தகவல்.

எனவே, தகவல் என்பது,

- ஆராய்ந்து செயல்பட்டு உருவாக்கப்பட்டவை
- நேரடிப் பயன் தருவது
- வணிகத்திற்கு உகந்தது
- தரவுகளிலிருந்து மாற்றிப் பெறப்பட்டவை.

செயல்முறை என்பது ஒரு கணிப்புக்கான செயல்கூறுகளை வரிசைப்படுத்தி, அவற்றை எவ்வாறு செய்வது என்று கூறுவதாகும். அதாவது, ஒரு செயலைச் செய்வதற்கான கட்டளைகள் வரிசைப்படுத்தப்பட்டு கொடுக்கப்படுகிறது. இந்தக் கட்டளைகள் துல்லியமாக, கணிதக் கோட்பாடுகளுக்கு உட்பட்டு இருப்பவை. இவற்றை கணிப்பொறி மொழிக்கு மாற்றி, தரவுகளை அலசி ஆராயப் பயன்படுத்தலாம்.

ஒரு கணிப்பொறி நிரல் என்பது, ஒரு குறிப்பிட்ட சிக்கலைத் தீர்க்க உருவாக்கப்பட்ட கட்டளைகளின் தொகுப்பு, எடுத்துக்காட்டாக, கொடுக்கப்பட்ட இரு புள்ளிகளைச் சேர்க்கும் நேர்கோட்டின் நீளத்தைக் கணக்கிட எழுதப்படும் நிரல்.

ஒரு நிரலர் கொடுத்த சிக்கலுக்கு எந்த மாதிரித் தீர்வு வேண்டும். அவற்றை அடையும் வழி என்ன என்பதை ஆராய வேண்டும். அடுத்து அதற்கான கட்டளைகளை ஒரு உயர்நிலை மொழியில் எழுத வேண்டும். இந்த கட்டளைகள் கொண்ட நிரல், கணிப்பொறி மொழியில் மாற்றப்பட்டு, செயல்படுத்தப்பட்டு தேவையான தீர்வுகள் கிடைக்கும்.

எனவே, சிக்கலைத் தீர்ப்பது என்பது சிக்கலின் தன்மைகளை அறிந்து, அதற்கேற்ற தீர்வு முறைகளை உருவாக்குவதுதான். இதற்கு முதலில் சிக்கலில் உள்ள தரவுகளுக்கு இடையே

உள்ள உறவுகளை நன்கு அறிந்துகொள்ள வேண்டும். தேவையான விடைகளை எவ்வாறு படிப்படியாகக் கணிப்பது என்பதைக் கண்டறிய வேண்டும். இதற்கு நிரலரின் பட்டறிவும், உள்ளுணர்வும் பெரிதும் பயன்படும்.

## தொகுப்புரை

- கவிஞர்களின் நூல்கள் வாயிலாக அவர்களின் கவித்துவம், சமூக மேம்பாட்டுக் கருத்துக்கள் வெளிப்படுகினறன.
- பிறநாட்டவர் பண்பாடு, வாழ்க்கை முறையை கவிதைகளின்வழி அறிய முடிகிறது
- வாழ்க்கை முன்னேற்ற நெறிமுறைகளை இலக்கிய வகைமைகள் எடுத்தியம்புகின்றன
- நாவல் மூலம் இலக்கிய இன்பம் நிலை எடுத்துரைக்கப்பட்டுள்ளது
- தொழில்நுட்பத்தின் மூலம் தமிழின் வளர்ச்சியை அறிந்துகொள்ள முடிகிறது

## அருஞ்சொற்பொருள்

1. மரபு - பாரம்பரியம்
2. புனைவு - கற்பனை
3. படிமம் - காட்சி
4. பாமரர் - அறிவில்லார்
5. ஒப்புதல் - அங்கீகாரம்

## பயிற்சி வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. சங்க இலக்கியத்தை மக்களிடையே பரப்பிய முதல்வர் யார்?
   அ) மறைமலையடிகள் ஆ) உ.வே.சா இ) பரிதிமாற்கலைஞர் ஈ) வையாபுரிப்பிள்ளை
2. மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் முதன்முதலில் தங்கத்தோடா பெற்றவர்?
   அ) சீனிவாச ஐயங்கார் ஆ) ந.மு.வேங்கடசாமி நாட்டார்
   இ) சிவராஜப்பிள்ளை ஈ) முடிநாகராயர்
3. புதுக்கவிதை முன்னோடி முதல்வராக திகழ்பவர்?
   அ) நா.பிச்சமூர்த்தி ஆ) பாரதியார் இ) கவிமணி ஈ) நா.காமராசன்
4. “இரவில் வாங்கினோம் இன்னும் விடியவில்லை”-கவிதையின் ஆசிரியர்?
   அ)அரங்கநாதன் ஆ) மேத்தா இ) பிச்சமூர்த்தி ஈ) சுரதா
5. வசன நடை வளர்த்த வள்ளளார் யார்?
   அ) வாணிதாசன் ஆ) அப்துல்ரகுமான் இ) வீரமாமுனிவர் ஈ) கால்டுவெல்

## விடைகள்

1. அ) மறைமலையடிகள்
2. ஆ) ந.மு.வேங்கடசாமி நாட்டார்
3. அ) நா.பிச்சமூர்த்தி
4. அ)அரங்கநாதன்
5. இ) வீரமாமுனிவர்

## பயிற்சிகள்

1. “மழை” என்ற தலைப்பில் மரபு கவிதை ஒன்றை எழுதுக.
2. உங்களை ஈர்த்த ஹைக்கூ கவிஞர் யார்? அவர் முன் வைக்கும் இயற்கை குறித்தான சிந்தனைகளைத் தொகுக்க.

## குறுவினாக்கள்

1. இருபதாம் நூற்றாண்டு இலக்கிய வளர்ச்சி குறித்து விவரி.
2. சிறுகதை வளர்ச்சி குறித்து எழுதுக.

## நெடுவினாக்கள்

1. புதுக்கவிதையின் தோற்றம் வளர்ச்சி குறித்து கட்டுரை எழுதுக.
2. நாடக இலக்கியம் பற்றி நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.
3. இசைத்தமிழ் பற்றிய செய்திகளை விளக்குக.

**முடிவுரை**

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றிய மூத்த குடி என்று சிறப்பிக்கப்படுவது தமிழ் மொழி. தமிழ் மொழியில் பல்வேறு பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு இலக்கியங்கள் தோன்றி வளம் செழிக்கின்றன. அவ்வகையில் சங்க காலத்திலும் சங்கம் மருவிய காலகட்டத்திலும் படைக்கப்பட்ட கவிதையாக்கங்களை செவ்வியலிலக்கியங்கள் என்றழைக்கப்பட்டன. அத்தோடு சிலப்பதிகாரம் , மணிமேகலை போன்ற செவ்வியல் காப்பியங்களும் உருவாக்கப்பட்டன. சைவ சமயக் கருத்தை நிலைநாட்டுவதற்கு ஏற்ப பன்னிரு திருமுறைப்பாடல்களும் வைணவம் சார்ந்த ஆழ்வார்களின் பாசுரங்களும் ராமாயண இதிகாசக்கருத்தைத் தழுவிய கம்பராமாயணக் காப்பியம் போன்றவையும் தமிழ்மொழியைச் செழிக்க வைத்துள்ளன. சைவ சித்தாந்தக் கருத்துக்களை வெளிப்படுத்தியும் பாடல்கள் இயற்றப்பட்டுள்ளன. இலக்கண இலக்கிய உரையாசிரியர்களின் பங்களிப்பையும் சாலச் சிறந்தது. தெய்வங்களையும் ஆட்சியாளர்களையும் குடிமக்களையும் போற்றிப் பாடல்களாக்கிய சிற்றிலக்கியங்கள் திகழ்கின்றன. அருள் பாடல்கள் அடங்கிய நூல்களும் பிற சமயத்தினராகிய இஸ்லாமிய கிருத்துவ நூல்களும் தமிழில் பல்கிப் பெருந்துள்ளமை சமயப் பொறைக்குச் சான்றாகின்றது. சிறுகதை, புதினம் , கட்டுரை , வாழ்க்கை வரலாறு , தன் வரலாறு போன்ற உரைநடை இலக்கியங்களும் நாடகங்களும் படைக்கப்பெற்றுள்ளன. பண்முறைக் கவிதையாக்கங்களும் தமிழ் சிறப்புச் செய்கின்றது. நாட்டார் வழக்காற்றியலும் பிறதுறை சார்ந்த நூல்களின் புதுமை பெறுகின்றன. இவ்வாறு தமிழின் இலக்கிய வரலாறு பன்முகத் தன்மை பெற்று விளங்குகின்றது.

**பார்வை நூல்கள்**


1. புதுக்கவிதையின் நோக்கும் போக்கும், நா.சுப்புரெட்டியார்,பாரி நிலையம்,சென்னை, முதல் பதிப்பு – 1983.
2. தமிழ் நாவல் இலக்கியம், க.கைலாசபதி,காலச்சுவடு பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு – 2018
3. தமிழ்ச் சிறுகதை தோற்றமும் வளர்ச்சியும்,சிட்டி, சிவபாதசுந்தரம், பாரி நிலையம்,சென்னை, முதல் பதிப்பு – 2016.
4. தற்காலத் தமிழ் இலக்கியம், ரா.தண்டாயுதம், பாரி நிலையம்,சென்னை, முதல் பதிப்பு – 1985.


**இணைய இணைப்புகள்**

1. Tamil Heritage Foundation- www.tamilheritage.org
2. Tamil virtual University Library- www.tamilvu.org/ library http://www.virtualvu.org/library
3. Project Madurai - www.projectmadurai.org.
4. Chennai Library- www.chennailibrary.com < www.chennailibrary.com>